
உன்னைப்
பொன்னெனக்
கண்ட பொழுதிலே!
உமா பாலகுமார்

## நூல் விவர அட்டவணை


| | |
|---|---|
| நூலின் பெயர் | : உன்னைப் பொன்னெனக் கண்ட பொழுதிலே! |
| ஆசிரியர் | : உமா பாலகுமார் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : டிசம்பர், 2007 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 320 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருண் பதிப்பகம் 107/8, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை: ரூ.100.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் சென்னை-18. ✆:94441-01753 |
| அச்சிட்டோர் | : கே.வி.எஸ். ஆப்செட் சென்னை-14. ✆:28480166 |


# உன்னைப் பொன்னெனக் கண்ட பொழுதிலே!

# உன்னைப் பொன்னெனக் கண்ட பொழுதிலே!

## 1

சுட்டும் விழிச் சுடராய், சூரியன் சுட்டெரித்துக் கொண்டிருந்த ஒரு மதிய நேரம்!

கோடை வெயிலால் தகித்திருந்த பூமியுடன், திடீரென்று தூறலால் ஆறுதல் வார்த்தை பேசி சிநேகமாய் புன்னகைக்க ஆரம்பித்தது, கார்மேகக் கூட்டம்!

தொடர்ந்த மழைச் சாரலின் தாக்குதலால் குளிரைத் தத்தெடுத்த பூமியில் சுருதி லயத்தோடு உதிரத் துவங்கின... பாதையோரத்திலிருந்த சரக்கொன்றை மரத்து மஞ்சள் மலர்கள்!

மெல்ல மிதந்து, மண்ணின் மடி தொட்ட அந்த மலர்கள், தங்களுக்கும் பூமிக்குமான ஒரு சிநேக உணர்வை, இனிதாய்ப் புதுப்பிக்க ஆரம்பித்தன.

வெளிநாட்டுப் பயணிகளும், உள்நாட்டுப் பயணிகளும் ஆரவாரத்துடன் நிறைந்திருந்த மீனம்பாக்கம் இண்டர்நேஷனல் ஏர்போர்ட்டில், மனம் கனத்து நின்றிருந்தாள் ஹம்சத்வனி.

முதன் முதலில் விமானத்தில் பறக்கப் போகின்ற... புதுவித அனுபவத்தை எதிர்நோக்கியபடி, அவளுடைய தாய் ருக்மணி கையில் குழந்தையை ஏந்தி நின்றிருந்தார்.

வெளிநாடு செல்லப் போகும் அனுபவத்தை சுவாசித்தபடி, பலர் உற்சாகத்துடன் உரையாடிக் கொண்டிருந்தனர்.

அவர்களை வழியனுப்ப வந்திருந்த பரணியின் மனதிலும், சிறு சோகம் விரவிப் பரவியிருந்தது.

அவன், ஹம்சத்வனியுடன் ஒரு வருடமாகப் பணி புரிபவன்... அவளுடைய நன்மையை நாடுபவன்... அவளைப் பற்றி நன்றாக அறிந்தவன்!

அவர்களுடைய விமான எண்ணுக்கு நேராக 'செக் இன்' என்ற வாசகம் ஒளிர, ''டேக் கேர் ஹம்சத்வனி!'' என்றபடி அவன் கையசைத்து மூவருக்கும் விடை கொடுத்தான்.

பிறகு 'செக் இன் பாகேஜ்'களை எடை பார்த்து அனுப்பி விட்டு ஹேண்ட் லக்கேஜுடன் இமிக்ரேஷன் செக் முடிந்து, மூவரும் விமானத்தில் சென்று அமர்ந்தனர்.

''அம்மா!'' என்றபடி குழந்தை அவளிடம் தாவ, அவனை ஆவலுடன் அணைத்துக் கொண்டாள் ஹம்சத்வனி.

''த்வனி! எவ்வளவு நேரம் ஆகும்... நாம சிங்கப்பூர் போறதுக்கு?'' மெதுவாகக் கேட்டார் ருக்மணி.

''ம்... மூணரை மணி நேரம் ஆகும்மா? ஏன் போரடிக்குதா?''



''இல்லை! இவனை வெச்சி சமாளிக்கணுமே!''

அவர் கூறும்போதே சீட் பெல்ட்டை போட்டுக் கொள்ளும்படி மைக்கில் அறிவிப்பு வர, ஒரு ஏர்ஹோஸ்டஸ் அதை டெமான்ஸ்ட்ரேட் செய்து காண்பிக்க ஆரம்பித்தாள்.

''கொஞ்சம் பயமாத்தான் இருக்கு... முதல் தடவையா... அதான்!'' என்றபடி ருக்மணி சீட் பெல்ட்டை மாட்டிக் கொண்டார்.

''ஒண்ணும் பயமில்லைம்மா! டேக் ஆஃப் ஆகும் போது லைட்டா பின் பக்கம் சாயற மாதிரி இருக்கும்... கொஞ்சம் வித்தியாசமான ஒரு உணர்வு வரும்... அவ்வளவு தான்! மத்தபடி இறங்கும்போதுதான் அடி வயித்தில கொஞ்சமா ஒரு ஜெர்க் இருக்கும்.. அது கூட அவ்வளவாத் தெரியாது!'' அம்மாவுக்கு தைரியம் கொடுத்தாள்.

குழந்தை அவள் மார்பிலேயே சாய்ந்து உறங்க ஆரம்பித்துவிட, ப்ரியத்துடன் அவன் முடியை மென்மையாகக் கோதி உச்சந்தலையில் முத்தமிட்டபடி சாய்ந்து கொண்டாள்.

பிறகு வெளியே பார்த்தபோது, விமானம் கடலின் மேல் பறக்கத் துவங்கியிருந்தது.

கீழே சிற்றலைகளுடன் தெரிந்த ஆழ்கடல், அழகிய நீல நிறப் பளிங்குக் கல்லாய் ஒளிர்ந்தது.

மனம் எங்கோ தத்தித் தாவிச் செல்ல, சூரியனை நேசிக்கும்... அவன் முக தரிசனத்திற்காக ஏங்கித் தவித்து முகமலர்த்தி நிற்கும் சூரியகாந்தியாய், ப்ரஜனிடம் நினைவுகள் தாவிச் சென்றன.

"இப்போது நீ இந்தப் பிரபஞ்ச வெளியில் எங்கிருக்கிறாய் என்னவனே? ஏன் என்னை விட்டுப் பிரிந்து போனாய்?" உள்ளத்தில் குமுறலாய் பல கேள்விகள்!

சரியாக இரண்டரை வருடங்களுக்கு முன்பு, தான் முதன் முதலாக சிங்கப்பூருக்குச் சென்றதும்... அங்கு ப்ரஜுனை சந்தித்ததும் இனிய சாரலாய் மனதில் பரவின.

ஞாபகப் பறவை... கூட்டை விட்டு வெளியேறி, கடந்த கால வானில் சிறகடிக்க ஆரம்பித்தது...!

பழைய கூட்டிற்கு மீண்டும் சென்று வசித்து, நினைவுகளை மெல்ல மெல்ல சுவீகரித்தது.

* * *

அப்போது, ஹம்சத்வனி ஒரு சாஃப்ட்வேர் நிறுவனத்தில் *சீனியர்* சாஃப்ட்வேர் இஞ்சினியராகப் பணி புரிந்து கொண்டிருந்தாள்.

ஆறு மாத ஒப்பந்தத்தில், கம்பெனியே ஒரு ப்ராஜெக்டிற்கென அவளை சிங்கப்பூருக்கு அனுப்பியது.

அன்று, முதல் முறையாக விமானத்தில் பறக்கப் போகிறோம் என்ற உணர்வே பெரும் சிலிர்ப்பைத் தர, அவள் பரவசத்துடன் அமர்ந்திருந்தாள்.

ஜன்னலோரம் அமர்ந்து வெளியே பார்த்தபோது, விமானம் பயணிக்க ஆரம்பித்த சிறிது நேரத்தில், மேகங்கள் அருகிலேயே மிதந்தன.

பஞ்சுப் பொதியாய் அழகுறத் தெரிந்த மேகங்களை மஞ்சமாக்கி, அதிலேயே அமர்ந்திருப்பது போல் அவளுக்குள் ஒரு உணர்வு!

சில திரைப்படங்களில் தேவலோகத்தை செயற்கையாக செய்து காண்பித்திருப்பார்களே, அது போன்ற ஒருவித உணர்வை ஜனிக்கச் செய்தது.



ஆனால், இங்கு தேவர்களையும் முனிவர்களையும் காணவில்லையே என்று குறும்பாக நினைத்துப் புன்னகைத்தாள்.

பிறகு மேகங்களுக்கு மேல் பறக்க ஆரம்பித்த விமானத்திலிருந்து குனிந்து பார்த்தபோது, வானத்திற்கு பதிலாய் நீலக் கடலும், முன்பு மேலே மிதந்த மேகங்கள் இப்போது வெகு கீழே மிதப்பதும், சிலிர்க்க வைக்கும் புதுவித அனுபவமாய்!

பயணத்தை ரசித்தபடி, ஏர் ஹோஸ்டஸ் அளித்த பானத்தை சுவைத்தவளுக்கு, அங்கு சிங்கப்பூரில் தான் செய்யப் போகின்ற வேலை எப்படி இருக்குமோவென்ற, சிறு தவிப்பு!

முதல் முறையாக, தாய் தந்தையின் பாதுகாப்புக் கூட்டிலிருந்து விலகி இரை தேடி வெளியுலகத்தைத் தரிசிக்கப் போகும் சிறு பறவையாய் அவள்!

புது வேலையைப் பற்றிய எண்ணங்களுடனும், தாய் தந்தையைப் பிரிந்து முதன் முதலாகச் செல்லும் அனுபவத்தையும் அசை போட்டபடி சாய்ந்தவள், அப்படியே உறங்கிப் போனாள்.

பிறகு சாப்பிடுவதற்காக ஏர்ஹோஸ்டஸ் அவளை உசுப்பி எழுப்ப, தொடர்ந்து வந்த கணங்கள் பெரும் எதிர்பார்ப்பிலும் தவிப்பிலும் கழிந்தன.

மனதிற்குள், சிலிர்ப்பாய் மகிழ்ச்சித் தூறல்கள்...!

* * *

விமானம் சிங்கப்பூரை நெருங்கியபோது, இருட்டி விட்டது.

அங்கு இப்போது ஏழரை மணி என்றார்... அருகில் அமர்ந்திருந்தவர்!

நமக்கும் அவர்களுக்கும் இரண்டரை மணி நேர வித்தியாசம் என்பது அப்போதுதான் தெரிந்தது.

சிங்கப்பூரை நெருங்கியவுடன், மேலிருந்து பார்த்த போது அழகிய தங்க நிற விளக்குகள் ஒளிர, அந்த நகரே ஒரு பூலோக சொர்க்கமாய்!

விமானத்திலிருந்து இறங்கி 'இமிக்ரேஷன் செக்' முடிந்து லக்கேஜ்களை ட்ராலியில் ஏற்றி வெளியில் சென்றாள்.

இதயம், ஏதோ ஒருவித எதிர்பார்ப்பிலும் புது உலகைத் தரிசிக்கப் போகின்ற உற்சாகத்திலும் அவஸ்தையாய் படபடத்தது.

தன்னை வரவேற்க யாராவது வருவார்களாவென்ற ஆராய்ச்சியுடன், பார்வையைச் சுழல விட்டாள் அவள்.

அங்கு, "ஹம்சத்வனி" என்று தமிழில் எழுதிய சிறு போர்டைத் தாங்கியபடி, ஒரு வயதானவர் நின்றிருந்தார்.

சட்டென்று பரவிய நிம்மதியுடன், அவர் அருகில் சென்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள் அவள்.

"வெல்கம் டு சிங்கப்பூர் மேடம்! நான்... செல்வராஜ்! உங்களை அழைச்சிட்டுப் போய் கெஸ்ட் ஹவுஸ்லே தங்க வைக்கிறதுக்காக வந்திருக்கேன்.. வாங்க!"

நட்புடன் புன்னகைத்தபடி அவளை அழைத்துச் சென்றார் அவர்!

கார் கிளம்பிச் சென்றபோது, வழியெங்கும் பெரிய அடுக்குமாடிக் கட்டிடங்கள் வரிசையாக நிறைந்திருந்தன.



பிறகு அவர் காரை நிறுத்திய இடத்தில், "சொராங்கூன் கார்டன்" என்ற போர்டு தெரிந்தது.

காரைப் பார்க் செய்துவிட்டு, அவளை அருகிலிருந்த தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார் செல்வராஜ்.

முன்புறம் அழகிய புல்வெளி விரிந்து தெரிய, சிறு காட்டேஜ் போல் அந்த வீடு நேர்த்தியாக அமைக்கப் பட்டிருந்தது.

காற்றில் ஏதோ ஒருவித நறுமணமும், மெலிதான குளிரும் கலந்து தெரிந்தன.

வீட்டின் உள்ளே, முழுவதும் கார்ப்பெட் பரப்பிய தரையுடன் ஹால், இரு படுக்கை அறைகளும், சமைய லறையும் நவீனமாக அமைக்கப்பட்டிருந்தன.

ஒரு அறையில் பொருட்களை வைத்தவர், அவளுக்கு வீட்டை சுற்றிக் காண்பித்தார்.

கிச்சனில், சமையல் செய்யும் பொருட்கள் சிலவும் இருந்தன.

"நீங்க விரும்பினா இங்கேயே சமைச்சிக்கலாம்... இல்லை வெளியேயும் சாப்பிடலாம்! இங்கே நிறைய 'ஃபுட் கோர்ட்' இருக்கு... எல்லா வகையான சாப்பாடும் கிடைக்கும்..! 24 மணி நேரமும் திறந்திருக்கற கடையும் இருக்கு... நான் அறிமுகப்படுத்தி விடறேன்" என்றார் பரிவுடன்!

சிறு புன்னகையுடன், "தேங்க் யூ" என்றபடி தலை யசைத்தாள் அவள்.

பிறகு ஓய்வெடுத்துவிட்டு, நூடுல்ஸ் மட்டும் செய்து சாப்பிட்ட பிறகு தன் டயரியை எடுத்தாள்.

கல்லூரி நாட்களிலிருந்தே... தன்னை பாதித்தவற்றை... மனதிற்குப் பிடித்தவற்றை, உடனே டயரியில் எழுதி விடுவது அவள் வழக்கம்!

இன்று சிங்கப்பூரில், தான் முதன் முதலில் காலடியைப் பதித்த உணர்வுகள், பரவச அனுபவப் பதிவுடன் அதில் வார்த்தைகளாயின.

புத்தம் புது இடமும், அனுபவங்களும், அவளை வரவேற்கத் தயாராயின.

காலையில் எட்டு மணிக்கு செல்வராஜ் காருடன் வந்து விடுவதாகக் கூறியிருந்தது நினைவு வர, அலாரம் வைத்துவிட்டு உறங்கிப் போனாள் த்வனி.

## 2

காலையில், சீக்கிரமே எழுந்து தயாராகிக் காத்திருந்த போது, செல்வராஜ் சரியான நேரத்துக்கு வந்து விட்டார்.

அழகிய இளநீலநிற சுடிதாரில் தேவதையாய் சென்று 'ஆங் மோ கியோ'விலிருக்கும் அலுவலகத்தில் இறங்கியபோது, பிரமிப்பாக இருந்தது.

இது நிஜம் தானா என்று, தன்னையே கிள்ளிப் பார்த்துக் கொள்ளத் தோன்றிற்று.

லிஃப்டில் பயணித்து மாடிக்குச் சென்றபோது, அவளை நட்புடன் வரவேற்று கை குலுக்கி உள்ளே அழைத்துச் சென்றான், ஒரு சைனீஸ் இளைஞன்.



அவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டபோது, அவனுடைய பெயர் புதிதாய் 'ஷாங் குயென்' என்பது போல் ஒலித்தது.

இந்த சைனீஸ் அக்செண்டில் அவர்கள் ஆங்கிலம் பேசுவது, தனக்குப் புரியுமாவென்ற பயமும், தவிப்பும் புதிதாய் மனதில் மொட்டு விட்டன.

பிறகு பலருடன் அறிமுகம் முடிந்து, ப்ராஜெக்ட் பற்றிய டிஸ்கஷனுக்காக, அவள் அந்த நிறுவனத்தின் தலைமை அதிகாரியிடம் அனுப்பப்பட்டாள்.

பயந்து கொண்டே உள்ளே சென்றவளுக்கு, எதிரில் அமர்ந்திருந்த அந்தத் தமிழ் இளைஞனைப் பார்த்தவுடன், சட்டென்று சுவாசம் சீராகி முகம் புன்னகையில் விரிந்தது.

அவனும் அவளைக் கண்டதும் மகிழ்வுடன் எழுந்து கை நீட்டியபடி, ''வாங்க மிஸ் ஹம்சத்வனி... உங்க பெயரை நான் சரியா உச்சரிச்சேனா? கொஞ்சம் வித்தியாசமான பெயர்.. இல்லை?'' தூய தமிழில் கேட்டான்.

''ம்!... நைஸ் மீட்டிங் யூ சார்... உங்க நிறுவனத்தில் வேலை செய்யறதை, நான் பெருமையா நினைக்கிறேன் சார்!'' என்றபடிப் புன்னகைத்தவளுக்குள், ஏனோ அவனை வெகு காலமாய்ப் பார்த்துப் பழகிய ஒரு விநோத உணர்வு!

''நான் ப்ரஜேந்திரன்! நண்பர்களுக்கு 'ப்ரஜன்!' இங்கே உங்களுக்குத் தங்கும் இடமெல்லாம் வசதியா இருந்ததா?'' அக்கறையுடன் விசாரித்தான் அவன்.

''இருந்தது சார்... தேங்க் யூ!'' மெல்லிய குரலில் அவள் கூற, முதலில் அவளை அமரும்படிக் கூறினான் அவன்.

"நீங்க நல்லாத் தமிழ் பேசறீங்க... அதுவும் ஆங்கிலக் கலப்பு அதிகம் இல்லாம! சந்தோஷமா இருக்கு..." ஏனோ, சட்டென்று கூறிவிட்டாள்.

"ம்... இங்கே பலர் அப்படித் தான்! தமிழ், பேசும்போது, தேவைன்னா மட்டுமே ஆங்கிலம் கலந்து பயன்படுத்து வோம்! ஆங்கிலமும் அப்படித்தான்!"

இயல்பாகக் கூறியவன், பிறகு வேலையைப் பற்றி அவளுக்கு விவரிக்க ஆரம்பித்தான்.

ஆழ்ந்த குரலில், ஒருவிதத் தெளிவும் தீர்க்கமுமாய் அவன் பேசப் பேச, ஆச்சர்ய விகசிப்பு அவளிடம்!

தான் மேற்கொண்ட பணியில் அவன் எவ்வளவு சாமர்த் தியசாலி என்பதை அவனுடைய தெளிவான பேச்சும், உறுதியான திட்டங்களும் உணர்த்தின.

அவள் வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, "ஏன்.. கொஞ்சம் படபடப்பாத் தெரியறீங்க? ஆர் யூ ஓகே?" மெதுவாகக் கேட்டான் அவன்!

"இல்லை சார்... அப்படி எல்லாம் எதுவும் இல்லை.. நீங்க சொல்லுங்க."

அவள் முடிக்கும் முன்பே "நோ! இந்த சார் எல்லாம் வேண்டாமே! கார்ப்பரேட் கல்ச்சர் உங்களுக்குத் தெரியும் இல்லையா? என்னை 'ப்ரஜன்'னே அழைக்கலாம்!" சிறு முறுவலுடன் கூறினான்.

பிறகு இனிய நட்புணர்வுடன் இருவரும் வேலை தொடர்பாக விவாதிக்க, தனக்குள் இருந்த பயமும் தயக்கமும் முதல் நாளே... அவனைப் பார்த்துப் பேசிய முதல் நிமிடமே தொலைந்து போனதை, ஒருவித சிலிர்ப் புடன் உணர்ந்தாள் அவள்.



அன்றிரவு, அறைக்குள் வந்தவுடனே சென்னைக்கு போன் செய்து பேசிவிட்டு, தன் டைரியை எடுத்து, அன்றைய நிகழ்வுகளை வரிசைப் படுத்தினாள்.

முதன் முதலாக, அதில் ஒரு ஆண் மகனைப் பற்றிய எண்ணங்கள் ஆர்வத்துடன்... பிரமிப்புடன் பதிவு செய் யப்பட்டன.

இன்று, ஏனோ புதிதாய் பிறந்ததுபோல் ஒரு உணர்வு!

முதல் பார்வையில்... முதல் சந்திப்பில் ஒரு மனித னால் தன்னை இவ்வளவு சலனப் படுத்த முடியுமென் பதையே, அவள் இன்றுதான் உணர்ந்தாள்.

* * *

பிறகு வந்த நாட்களில், அங்கு இயல்பாய் பொருந்திப் போனாள் அவள்!

காலையில் எழுந்து, ப்ரட், பால், கெல்லாக்ஸ் என்று ஏதாவது சாப்பிட்டுவிட்டு அலுவலகத்திற்குக் கிளம்பு பவள், மதியம் அலுவலகத்திலுள்ள ஃபுட் கோர்ட்டில் சாப்பிடுவாள்.. இரவு மட்டும் ஏதாவது நூடுல்ஸ் போல செய்து கொள்வாள்!

சில நாட்கள் வீட்டிற்கு வரும்போதே ஏதாவது வாங்கி வந்து, மைக்ரோ வேவ் அவனில் சூடு செய்து உண்பது வழக்கமாயிற்று.

அந்த ஊரின் சுத்தமும், சட்டம் ஒழுங்கும், சீராகச் செயல்பட்ட போக்குவரத்தும், மக்களுக்காகச் செயல்படு கின்ற பல துறைகளின் நேர்மையும், அவளை மிகவும் கவர்ந்தன.

நம் நாடும் இது போலானால் எப்படி இருக்குமென்ற ஏக்கம், மனதில் வந்தது.

அன்றிரவு டயரி எழுதி விட்டுப் படுத்தவுடனே ப்ரஜனின் நினைவுகள் ஏனோ அதிகமாய் தாக்க ஆரம்பிக்க, இதழில் கசிந்த ரகசியப் புன்னகையுடன் உறங்கத் துவங்கினாள் அவள்.

வெளியே, காற்று இரவுடன் உஸ்ஸென்று ரகசியம் பேச ஆரம்பித்திருந்தது.

* * *

அந்த வாரத்தில் ஒரு நாள்... அன்று அவள் சாமர்த்தியமாக செய்த அந்தச் செயலை அவன் மிகவும் பாராட்ட, ஏதோ பெரிய வெற்றியை சாதித்தது போல்!

இப்போதெல்லாம், இருவரும் பெரும் நட்புணர்வுடன் பேசிப் பழக ஆரம்பித்திருந்தனர்.

ஏனோ அவனுடன் சில நாட்களே பழகி இருந்தாலும், அவனுடன் கேலி செய்து பேசுவது பெரும் இதமாய்!

ஒரு ஞாயிறன்று, அவள் ஓய்வாக அமர்ந்து தலை குளித்து ட்ரையரில் உலர வைத்தபடி அமர்ந்திருந்தாள்.

சாப்பாட்டு வகைகளில், சைனீஸ் உணவு வகைகள் அவளைக் கவர்ந்தாலும், சில வகைகளில் அவர்கள் ஏனோ ஒரு விதப் பொடியை சேர்த்து விடுவதால், அந்த வாசனை அவளுக்குப் பிடிப்பதில்லை...

இப்போது மிங்கின் துணையிருப்பதால், எது நன்றாக இருக்கும் என்பதைத் தெரிந்து சாப்பிட முடிந்தது.

'நாசி ஹுலமாக, ரோஜாக், கேரட் கேக், ரொட்டி ஜான், மீ ஹோரிங்' என்று சில உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்து உண்ணத் துவங்கியிருந்தாள்.

நம் ஊர் உணவுகளான இட்லிக்கும் தோசைக்கும், நாக்கும் உணர்வுகளும் ஏங்க ஆரம்பித்திருந்தன.



இங்குள்ள இந்தியன் ரெஸ்டாரெண்ட் எதையாவது பழக்கப்படுத்திக் கொண்டு, ஞாயிறுகளில் மட்டுமாவது செல்ல வேண்டும் என நினைத்துக் கொண்டாள்.

அப்போது, திடீரென்று அவளுடைய செல் ஒலிக்க, எடுத்தால் புதிய எண்ணாக இருந்தது.

குழப்பத்துடன் ''ஹலோ!'' என்றபோது, ''ஹாய் ஹம்சத்வனி... நான் ப்ரஜன்! உனக்கு இன்னிக்குச் சாயங்காலம் வேற ஏதும் வேலை இல்லைன்னா என் கூட டின்னருக்கு வர முடியுமா?'' ஆவலுடன் கேட்டான் அவன்.

''ம்... வேலை ஒண்ணும் இல்லை... ரெஸ்ட் எடுக்கலாம்னு நினைச்சேன்!''

தயக்கத்துடன் அவள் நிறுத்த, ''ஏன்... மதியம் ஓய்வெடுத்துக்க! ஏழு மணிக்கு தயாரா இருந்தாப் போதும்... நானே வந்து உன்னைப் பிக்கப் பண்ணிக்கிறேன்... ஓகே?'' அழுத்தமான குரலில் கேட்டான்.

''சரி!'' என்றபடி லைனைத் துண்டித்தபோது, முதன் முறையாகத் தனியே ஒரு ஆணுடன் ஹோட்டலுக்கு செல்வதை எண்ணி, சிறு பயம் கிளர்ந்தது.

ஆனால், இதுவரையில், அவளறிந்த வகையில்... அவனிடம் தவறான ஒரு பேச்சோ பார்வையோ கண்டதில்லை.

நேரே... முகம் பார்த்து கண்களை ஊடுருவிப் பேசும் அவனுடைய அந்த நேர்மையான செய்கை, அவளை எப்போதுமே கவரும்!

அதை விட, அவன் தன் மனதைக் கொள்ளையடித்து விட்ட செய்தியை, மெதுவாகக் காதோரம் கூறியது... மனசாட்சி!

* * *

அன்று மாலையில் எந்த உடை அணிவது என்ற கேள்வி, அப்போதே பரபரப்பாய் மனதில் பரவ, உடனே வார்ட்ரோபிடம் சென்றாள்.

தான் இங்கு வந்ததிலிருந்து, இதுவரை புடவையே அணிந்ததில்லை என்பது நினைவு வந்தது.

உடனே, இளம் பிங்க் நிற கிரேப்பில் வெள்ளி ஜர்தூசி வேலை செய்த டிசைனர் புடவையை எடுத்து வைத்தாள்.

இதயம், சிறுவர்கள் கையில் அகப்பட்ட தும்பியாய் படபடத்தது.

மதியம், அவள் உறங்காத நிமிடங்களில், வெளியே மழை பொழிய ஆரம்பித்தது.

சிறு வயதில் ஜன்னலோரம் அமர்ந்து பிரமித்துக் களித்த அந்தப் பொழுதுகள் மறக்க முடியாமல் ஞாபகம் வர, இன்றும் அமர்ந்து ரசிக்க ஆரம்பித்தாள் அவள்.

எவ்வளவு பெரிய மனிதனாக இருந்தாலும், அவன் இயற்கைக்குக் கட்டுப்பட்டவன் என்பது புரிந்தது.

மழை... மனிதனுக்குள் பெரும் பிரமிப்பை தூண்டுவதாய்... கவிதையாய் பரவியது.

உலகமே வியக்கும் பெரிய தலைவனாக இருந்தாலும், சூரியனும், காற்றும் இயற்கையும் அவனால் கட்டுப் படுத்த முடியாததாகவே இருப்பது, விந்தையாய்!

அங்கு தினமும் மழை பொழிந்தாலும், சிறிதளவு நீர்கூடத் தேங்காமல் காய்ந்து விடுகின்ற அதிசயத்தை... அதற்கான செயல்பாடுகளை மெச்சத் தோன்றியது.

அப்போது, திடீரென்று செல் ஒலிக்க ஆரம்பித்தது.

எடுத்தபோது, ப்ரஜன்தான் பேசினான்.



''ஹம்சத்வனி! உனக்கு இந்தியன் ரெஸ்டாரண்டுக்குப் போகணுமா? இல்லை... காண்டினென்டல் ஃபுட் வேணுமா? சாரி... காலையிலே கேக்க மறந்துட்டேன்!'' மென் குரலில் கேட்டான்.

''எனக்கு இண்டியன் ஃபுட்தான் வேணும்... தினம் ஃபுட் கோர்ட்டுலே சைனீஸ் ஐட்டம்ஸ்தானே சாப்பிட் டுட்டிருக்கேன்!''

''சரி! ஏழு மணிக்கு தயாரா இரு... நான் வந்திடுறேன்'' உற்சாகக் குரலில் கூறிவிட்டு உடனே வைத்தான் ப்ரஜன்.

அவன் உரிமையுடன் ஒருமையில் விளித்துப் பேசுவது, ஏதோ ஒரு இனம் புரியா நட்பு உணர்வையும், தெம்பையும் தருவதாய்!

## 3

ப்ரஜன், மாலையில் அவளை அழைக்க வந்தபோது, டிசைனர் புடவையில் தயாராகிக் காத்திருந்தவளைப் பார்த்தவுடன், அவனால் இயல்பாகவே மூச்செடுக்க முடியவில்லை என்பதை, அவன் பிறகு கூறியபோது, அவள் தெரிந்து கொண்டாள்.

தேரில் வருகின்ற உற்சவத்து சிற்பமாய், அவன் கண் முன் அவள் உருவம்!

''நீ புடவையிலே ரொம்ப அழகா இருக்கே ஹம்சத்வனி! இவ்வளவு அழகா தேவதை மாதிரி ஒரு பொண்ணை, டின்னருக்கு நான் இதுவரைக்கும் அழைச்சிட்டுப் போனதில்லை'' ஆழ்ந்த குரலில் கூறினான்.

''அப்போ... நிறைய பெண்களை அழைச்சிட்டுப் போயிருக்கீங்களா?''

சட்டென்று கேட்டுவிட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டாள் அவள்.

''ம்... சில ஃப்ரெண்ட்ஸ் கூட... அப்புறம் அஃபிஷி யலா! ஆனா டின்னர் மட்டும்தான் போயிருக்கேன்!''

'மட்டும்தான்' என்பதில் அழுத்தம் கொடுத்துக் கூறி விட்டு, குறும்புடன் திரும்பி, அவளையே நோக்கினான்.

தன் கேள்வியை அவன் புரிந்து கொண்டதை உணர்ந்து, உடனே விழிகளைத் தழைத்துக் கொண்டாள் அவள்.

அவன் காரை நிறுத்தி இறங்கியபோது, 'முத்தூஸ் கர்றி' என்ற அந்த ரெஸ்டாரெண்ட், நவீனமான அழகுடன் எதிரில் தெரிந்தது.

ஏதோ யோசனையிலிருந்தவன் திடீரென்று அவள் புறம் திரும்பி, ''உனக்கு கான்டினென்டல் ஃபுட் பிடிக் கும்னா... ஏதாவது த்ரீ ஸ்டார் ஹோட்டலுக்கு அழைச் சிட்டுப் போகலாம்னு நினைச்சிட்டிருந்தேன்'' என்றான்.

''இல்லை! இது நல்லா ஹோம்லியா இருக்கு... இப்படி இருந்தாத்தான் எனக்கும் பிடிக்கும்...''

''ஹூம்... சர்ப்ரைசிங்! எனக்கும்தான்! இந்த மாதிரி எல்லா விஷயங்கள்லேயும் நாம ஒத்துப் போயிட்டா ரொம்ப நல்லது!''

புரியாத குரலில் அவன் முடிக்க, ''அப்படின்னா?'' கூர்மையுடன் கேட்டாள் அவள்.

''அப்படின்னா..? அஃபிஷியலா... ம்... அதுக்கும் மேல நட்பான்னு அர்த்தம்! நட்பு செய்யறதுக்கு ஒரே லெவ்



லெங்த்துல இருக்கறதுதான் நல்லது இல்லையா? போச் சுடா... உன்னோட சேர்ந்து நானும் இப்பல்லாம் தங்கி லீஷ்லே பேசறேன்.''

''ஓ..!'' என்றபடி அவள் திரும்ப, இருவரும் உள்ளே சென்றனர்.

அவர்களுக்காக ரிசர்வ் செய்யப்பட்டிருந்த மேசையில் அமர்ந்தபோது, முதன் முறையாக தனியே ஒரு ஆணுடன் வந்திருப்பது, சிறு சஞ்சலமாய்!

அதை அவள் முகமே தெளிவாய் அறிவிக்க, ''ஏன் ஹம்சத்வனி... ரொம்ப ரெஸ்ட்லெஸ்ஸா இருக்கே?'' யோசனையுடன் கேட்டான் அவன்.

''இல்லை... முதல் தடவையா, ஒரு ஆண் கூடத் தனியா ஹோட்டலுக்கு வந்திருக்கேன்... அதான்!''

''ஏன்... உன் ஃப்ரெண்ட்ஸ் கூடப் போனதில்லை?''

''ம்... போயிருக்கேன்... கூட்டமா! இது மாதிரித் தனியா... தெரியாத ஒருத்தரோடப் போனதில்லை...''

சட்டென்று, அவன் முகம் சுருங்கி இறுகியது.

''ம்... அப்ப நான் யாரோ ஒரு முகம் தெரியாத அந்நியனா? ஆனா என்னால உன்னைப் பத்தி அப்படி நினைக்க முடியலையே!''

சிறு கோபத்துடன் வந்தது அவன் குரல்!

விழிகளில் கேள்வியுடன், அவள் நிமிர்ந்தாள்.

''உன்னை ஒரு நல்ல தோழியாத்தான் என்னாலே நினைக்க முடியுது... அதைச் சொன்னேன்.''

அவன், ஆழ்ந்த குரலில் அவள் முகத்தையே ஊடுரு வியபடிக் கூறினான்.

அதைக் கேட்டு ஏதோ குற்றம் செய்துவிட்ட உணர்வு இழை கோர்க்க, அவள் தர்ம சங்கடத்துடன் மௌனமாக அமர்ந்திருந்தாள்.

''நீயும் என்னை ஒரு நண்பனா ஏத்துக்கனும்னா, நாம ரெண்டு பேரும் ஒருத்தரைப் பத்தி ஒருத்தர் நல்லாத் தெரிஞ்சக்கனும்! அதுக்குத்தான் இந்த டின்னர்!''

அவளுடைய அழகு முகத்தையே, ரசனையுடன் தன் பார்வையால் வருடியபடி அவன் முடித்தபோது சர்வர் வர, இருவரும் மெனு கார்டைப் பார்த்து ஆர்டர் செய்தனர்.

பிறகும், அவளையே குறுகுறுப்புடன் பார்த்திருந்தவனைக் கூச்சத்துடன் ஏறிட்டவள், ''முதல்லே நீங்க உங்களைப் பத்தி சொல்லுங்க'' ஆவலுடன் கேட்டாள்.

''ம்... ஓகே! எங்களுக்குப் பூர்வீகம் தமிழ்நாட்டுல தஞ்சாவூர்னு அப்பா சொல்லுவாங்க... ஆனா, நான் இதுவரைக்கும் இந்தியா வந்ததில்லை... எங்க குடும்பம் மூணு தலைமுறைக்கு முன்னாடியே இங்கே வந்து செட்டிலானவங்க...

''எங்கப்பா இங்கே ஒரு மெடிகல் கம்பெனியும் டிபார்ட் மெண்டல் ஸ்டோர்ஸும் நடத்திட்டிருந்தாங்க... அவங்களது லவ் மேரேஜ்! எங்கம்மா ஒரு சைனீஸ் லேடி!

''அந்தக் காலத்துல நம்ம தமிழ்க் குடும்பங்கள்லே ஒரு பழக்கம் இருந்தது... சைனீஸ் பெண் குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்க்கற ஒரு பழக்கம்! அது போல, குழந்தையில்லாத ஒரு தமிழரோட தத்தெடுக்கப்பட்ட வாரிசு, எங்க சைனீஸ் பாட்டி!

''தன் கம்பெனிக்கு வேலைக்கு வந்த எங்கம்மாவைக் காதலிச்சு, தன் குடும்பத்தை எதிர்த்துக்கிட்டு எங்கப்பா கல்யாணம் செஞ்சுக்கிட்டாங்க...



''எங்க அம்மாவும் அப்படித்தான்... ஆனா அப்புறமா அவங்க அப்பா அம்மா மட்டும் அவங்களை ஏத்துக்கிட்டாங்களாம்! ப்ச... ஆனா, இப்ப அந்த தாத்தா பாட்டியும் உயிரோட இல்லை! பிஷானிலேயும், ஆங் மோகியாவிலயும், எங்களுக்கு வீடு இருக்கு...

''எங்க அம்மா பாக்கத்தான் சைனீஸ் மாதிரி! புடவை கட்டறதுலே... தமிழ் பேசறதுலே... பழக்க வழக்கங்கள்லே எல்லாம் உங்களை மாதிரித்தான்!

''நான் கம்ப்யூட்டர் இன்ஜினியரிங் எம்.எஸ். முடிச்சிட்டு இந்தக் கம்பெனியிலே இருக்கேன்.

''என்னோட அப்பா இப்ப உயிரோட இல்லை... மூணு வருஷத்துக்கு முன்னாடி இறந்துட்டாங்க.

''எனக்குன்னு அவ்வளவா ஃப்ரெண்ட்ஸ் சர்க்கிள் கிடையாது! வேலை, வேலை தான் எப்பவுமே! அதான் என் உயிர் மூச்சே!

''நான் ரொம்ப 'செக்ரிடிவ் அண்ட் சென்சிடிவ்'னு அம்மா சொல்லுவாங்க! இருக்கலாம்... இதான் நான்!'' கண்களில் சிறு மின்னலுடன் முடித்தான் அவன்.

அதுவரை அவன் பேசுவதையே வியப்புடன் கேட்டிருந்தவள், ''ஆச்சர்யமா இருக்கு... நீங்க உங்க அம்மாவைப் பத்திச் சொன்னதும்! ஆனா நீங்க அப்படியே தமிழர் மாதிரி இருக்கீங்க?'' பிரமிப்புடன் கேட்டாள்.

''ம்... நான் அப்படியே அப்பா மாதிரி! ஒரே பையனாப் போயிட்டதாலே, அம்மா மாதிரி வேற குழந்தை வர வாய்ப்பில்லாமப் போச்சு...

''ஆனா ஒரு சைனீஸ் இளைஞனா, உன் முன்னாடி நின்னு சுத்தத் தமிழ்லே நான் பேசியிருந்தா என்ன செஞ்சிருப்பே?'' குறுநகையுடன் கேட்டான்.

''ம்... ரொம்ப ஆச்சர்யப்பட்டிருப்பேன்... எனக்கு உங்க அம்மாவைப் பார்க்கணும் போலருக்கு'' மெதுவாகக் கூறினாள்.

''எப்படி இருந்தாலும் ஒரு நாள் பாத்துத் தானே ஆகணும்! அடுத்த வீக் எண்ட்... உன்னை எங்க வீட்டுக்கு அழைச்சிட்டுப் போறேன்!'' இடுங்கிய கண்களுடன் கூறினான்.

''ம்ஹூம்... வீட்டுக்கெல்லாம் வேணாம்!''

சட்டென்று பதட்டத்துடன் தடுத்தவளை, விநோதமாக ஏறிட்டவன், ''ஏன்? உன் கூட வேலை செய்யற... உன் பாஸ் வீட்டுக்கெல்லாம் நீ போக மாட்டியா?

''நாங்கல்லாம் என்ன டைனோசரா, இல்லை ஷார்க்கா... உன்னை அப்படியே முழுங்கிடுவோம்னு பயப்படறதுக்கு?'' கண்ணோரம் இயல்பான கேலியில் சுருங்கக் கேட்டான்.

''அதில்லை! இது வரைக்கும் நான் ஃப்ரெண்ட்ஸ் வீட்டுக்கெல்லாம் போனதில்லை. அப்பாவும், அம்மாவும் ரொம்ப ஸ்ட்ரிக்ட்... அனுப்ப மாட்டாங்க!''

''அப்போ எப்படி.. தங்களோட செல்லப் பொண்ணை இப்படி சிங்கப்பூருக்கு தனியா அனுப்பினாங்களாம்! என்னை மாதிரி யாராவது ஒருத்தர் அப்படியே கடிச்சி முழுங்கிட்டா?''

அவன் சீரியஸான குரலில் கேட்க, முதலில் சட்டென்று ஒருவித விதிர்ப்பும், பிறகு தாங்க முடியாத சிரிப்பும் வந்தது அவளுக்கு!

''ம்... கிண்டலா? அப்பா முதல்லே ரொம்ப எதிர்ப்புத் தெரிவிச்சாங்க... அம்மா தான் சமாதானப்படுத்தி அனுப்பி வைச்சாங்க.''



''ஓகோ! அப்போ... உங்க அம்மாவைப் பேசிச் சரிக்கட்டினாப் போதும்!'' குறும்புடன் கூறினான் அவன்.

''எதுக்கு?'' புரியாமல் அவள் விழித்தாள்.

''ம்... எங்க வீட்டுக்கு உன்னை... அழைச்சிட்டுப் போறதுக்கு...! உங்கம்மா சொன்னா நீ கேப்பே இல்லையா? அதான் சொன்னேன்!''

அவன் விழிகள் மட்டும் புன்னகைத்தன... முகம் எந்த வித உணர்ச்சியுமின்றி இருந்தது!

''ம்... என்ன... அவ்வளவு மைல் தாண்டி ரெகமெண்டேஷனா?''

''ஆமாம்... என்னைப் பார்த்துப் பழகினா, அப்புறம் அவங்க அவ்வளவுதான், தெரியுமா? இந்த நல்ல பையனை கடைசி வரைக்கும் விட்டுடாதே...''

சிலீரென்று அடி வயிற்றில் ஒருவிதக் குளிர் பரவியது.

அவன் முடிக்கும் முன் முறைத்தவளை, இடைமறித்தான் அவன்.

''இரும்மா... நான் முடிச்சிடறேன்! இந்த நல்ல பையனை விட்டுடாதே... நல்ல நண்பனா வச்சிக்கன்னு உங்கம்மா சொல்லுவாங்கன்னு சொல்ல வந்தா, ஏதோ காளி அவதாரம் எடுக்கிறே? ப்ச்... கஷ்டம்தான்!'' சலிப்புடன் முடித்தான்.

''யாருக்கு..?''

''ம்... உன்னைக் கல்யாணம் செஞ்சுக்கப் போற அந்த அப்பாவிக்குதான்! பாவம் அவன்!'' ஏனோ குறும்புடன் நகைத்தான்.

''அதைப் பத்தி அவன்தானே கவலைப்படணும்.. உங்களுக்கென்ன?''

"ம்... நான் உன் நண்பன் இல்லையா? நான் கவலைப் படாம, வேற யார் கவலைப்படுவாங்களாம்!"

அவன் கூறி முடித்தபோது தாங்க முடியாத சிரிப்புடன், பெரும் வியப்பும் வந்தது அவளுக்குள்!

செம்புலம் சேர்ந்த நீராய், கன்னத்தில் இளஞ்சிவப்பு பரவியது.

எவ்வளவு இயல்பாக இவனுடன் பேசிச் சிரிக்க முடிகிறது... எப்படி இது சாத்தியமானது? இவனைப் பார்த்து ஒரு மாதம் கூட ஆகவில்லையே..?

எனக்கு என்ன ஆகிவிட்டது? வார்த்தைக்கு வார்த்தை எதிர் வாதம் செய்து கேலியாக இவனுடன் மல்லுக் கட்டும்போது, ஏன் இவ்வளவு சுகமாக இருக்கிறது?

தன்னையே சோதனைக் களமாக்கி... எண்ணங்களை உரசிப் பார்த்தது மனது!

## 4

கனவுகளில் சிலிர்த்துப் போய் ஆழ்ந்திருந்தவளை, கண் முன் சொடுக்குப் போட்டு அழைத்தான் அவன்.

"என்னாச்சு? திடீர்னு அப்படியே உறைஞ்சு போயிட்டே? நான் பயந்து போயிட்டேன்.. நீ இப்படி பனிச் சிற்பமா ஆகிட்டா, யார் என்னை... ம்.. நான் யார் கிட்டே வேலை வாங்கறதுன்னு ரொம்பத் தவிச்சுப் போயிட்டேன்" விழிகள் குறுகுறுக்கக் கூறினான்.

"இல்லை... நான் யார் கிட்டயுமே இவ்வளவு இயல்பா... க்ளோஸா கிண்டல் செஞ்சு பேசினது கிடையாது...



பழகினதும் கிடையாது... அதான் யோசிச்சேன்!" தாழ்ந்த குரலில் பகர்ந்தாள்.

"ம்... நான் கூட அப்படித்தான்! இவ்வளவு உரிமையோட யாரையும் கிண்டல் செஞ்சதில்லை...

"மனசுக்கு நெருக்கமா இதுவரைக்கும் யாரும் இது மாதிரி வந்ததில்லை... எனக்கே ஆச்சர்யம்தான்... நான் இவ்வளவு பேசறது...

"அம்மா பாத்திருக்கணும்... நம்ம பையனுக்கு என்னாச்சின்னு பயந்து போயிருப்பாங்க..." தலையைப் பின்னால் சரித்து சிரித்தபடிக் கூறினான் அவன்.

கோதுமை நிறத்துடன், ஆறடிக்கும் மேல் உயரத்தில்... களையான முகத்தில் கண்கள் கூர்மையுடன் அலை பாய, அடர்ந்த மீசையும் அலை பாயும் சிகையுமாய் அவனைப் பார்த்தால், இப்போதெல்லாம் அவளுக்குள் பெரும் சலனம் வர ஆரம்பித்திருந்தது.

'எத்தனை ஆண்களைப் பார்த்திருக்கிறேன்... இவனிடம் மட்டும் ஏன் ஓடிச் சென்று சரணடைகிறது என் மனது?

'என்னை அப்படியே உனக்குள் பொத்தி வைத்துக் கொள்ளேன் என்று அவனிடம் கெஞ்ச வேண்டும் போல் ஏன் பரிதவிக்கிறேன்?'

நெஞ்சுக்குள் விடை தெரியாத பல கேள்விகளுடனும், விழிகளில் ஒளிரும் மின்னலையும் சுமந்தபடி பிரமிப்புடன் அமர்ந்திருந்தவளை, அவன் குரல் உசுப்பியது!

"என்னாச்சு ஹம்சத்வனி! அப்பப்ப இங்கே என்னைத் தனியா விட்டுட்டு எங்கேயோ காணாமப் போயிடறே? ம்... அப்படி யாராவது ஸ்பெஷலா... இந்தியாவிலே இருக்காங்களா என்ன?"

கேட்கும்போதே, அவன் குரலில் பெரும் அலைப்புறுதலும், முகத்தில் சிறு சஞ்சலமும் தெரிந்தன.

ஏனோ, அந்த நிமிடம் அவனைக் கேலி செய்து சீண்ட வேண்டும் போல்!

"ம்! ஒருத்தர் இருக்காங்களே!" குறும்புடன் தலை சரித்துக் கூறினாள் அவள்.

திடீரென்று, அவனுடைய கை முட்டிகள் வெண்மையாகி இறுகி, முகம் கசங்கி சுருங்கியது.

"ஓ..."

ஒற்றை வார்த்தையுடன் அவன் அமைதியிலாழ்ந்த போது, சர்வர் சாப்பாட்டு வகைகளை எடுத்து வந்து பரிமாற ஆரம்பித்தார்.

அவர் அங்கிருந்து செல்லும் வரை, அங்கு அசாத்தியமான ஒரு அமைதி நிலவியது.

அந்த இடைப்பட்ட நிமிடங்கள்... சொல்ல வேண்டிய சொற்களைத் தேடித் தேடி யுகமானது போன்ற ஒரு உணர்வு அவளுக்குள்!

மெதுவாக இருவரும் சாப்பிட ஆரம்பிக்க, "அது யாருன்னு கேட்க மாட்டீங்களா?" சிரிப்பை அடக்கியபடிக் கேட்டாள்.

யோசனையுடன் "ம்.. சொல்லு!" என்றவனின் குரலில் பெரும் சலிப்பு தெரிவது போல்!

"அவர் பெயர் ஆதிராஜ்!"

"ஓ! உன்கூட வேலை செய்யறவரா?" அவன் அலட்சியமாகக் கேட்டான்.



"ஹூம்... என்னை இந்த உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்... என்னோட அப்பா!"

அவள் நமட்டுச் சிரிப்புடன் கூறியவுடன், அதுவரை அவன் முகத்தில் படிந்திருந்த கரிய நிழல் சட்டென்று விலகி ஒரு ஒளி வர, கண்கள் சோம்பலாய் இடுங்கின.

"என்ன... இப்படிச் சொன்னா என்ன பயமுறுத்திடலாம்னு நினைச்சியா?" ஒருவிதக் கூர்மையுடன் வினவினான்.

"எனக்கு முக்கியமான ஒருத்தர் இந்தியாவில இருக்கிறதா நான் சொன்னா, அதுக்கு நீங்க ஏன் பயப்படணும்?"

ஒன்றுமே தெரியாதவள் போல், சாதுவாக முகத்தை வைத்தபடிக் கேட்டாள்.

"ம்... அதானே! அதுக்கு நான் ஏன் பயப்படணும்?"

பாறையாய் இறுகிய முகத்துடன், தோள்களைக் குலுக்கிக் கைகளை விரித்தபடிக் கேட்டவன், மறுகணமே அமைதியாகி சாப்பிட ஆரம்பித்தான்.

சில நிமிடங்கள் வரை, அங்கு நிசப்தம் மெழுகாய்க் கரைய, அவளுக்குத்தான் பெரும் தர்மசங்கடமாய்!

அவனுடைய மௌனக் கோபம் அவளை தூசு தூசாய் உடைத்து சிதறடிக்க, த்வனி மெதுவாக நிமிர்ந்தாள்.

"சாரி... நான்.. சும்மா உங்களைக் கேலி செய்யறதுக்காக... அப்படிச் சொன்னேன்!" மென்று விழுங்கியபடிக் கூறினாள்.

"ம்... என்னைக் கேலி செய்யறது இருக்கட்டும்... உன்னைப் பத்தி நீ ஒண்ணுமே சொல்லலியே... உன் குடும்பம்... அம்மா, அப்பா...?" ஆவலுடன் மெதுவாக நிறுத்தினான்.

அவனுடைய கோபம் இன்னும் குறையவில்லை என்பதை, அவன் குரலும், உடல் மொழியும் உணர்த்தின.

மனம் சட்டென்று சோர்ந்தாலும், மெதுவாகப் பேச ஆரம்பித்தாள் அவள்.

''எங்கப்பாவுக்கு, சேலம் மாவட்டத்திலே பெத்த நாயக்கன் பாளையத்துக்கு பக்கத்துல ஒரு கிராமம்!

''பாக்குத் தோட்டம், வயல், வெத்திலைக் கொடிக்கால், தென்னந் தோப்புன்னு ஒரு விவசாயக் குடும்பம் எங்களுது!

''அப்பாவுக்கு ஒரே தம்பி... இப்ப, அவங்கதான் எங்க பண்ணையையும் பாத்துக்கறாங்க! அப்பா பெயர் ஆதிராஜ்... அம்மா ருக்மணி!

''அப்பா சென்னையிலே ரியல் எஸ்டேட் பிசினஸ் செய்யறாங்க.. ரொம்பக் கோபக்காரங்க.

''அண்ணனைக் கோபப்படுத்திட்டா, எங்க குல சாமியை நேரிலே பார்த்திடலாம்னு சித்தப்பா எங்ககிட்டே எல்லாம் கேலியா சொல்லுவாங்க!

சட்டென்று, அவன் குரல் யோசனையாய் இடைமறித்தது.

''அப்போ கூடிய சீக்கிரமே நான் உங்க குலசாமியைப் பாக்கப் போறேன்... ம்?''

இலகுவான கேலியுடன் அவன் கூற, அவனுடைய கோபம் குறைந்தது புரிந்து, அவள் மனமும் எடையற்று லேசாவது போல்!

''ம்... நீங்க எதுக்கு?''

அவள் யோசனையுடன் கேட்கும்போதே, அவன் மீண்டும் நத்தையாய் தன்னை சுருக்கிக் கொண்டான்.



''இன்னும் கொஞ்ச நாளிலே இந்தியா வந்தாலும் வருவேன்... அப்போ உங்கப்பாவை பாக்கற சந்தர்ப்பம் கிடைக்கும் இல்லையா? அதைச் சொன்னேன்!

''ஏன்... உன் வீட்டுக்கு என்னைக் கூப்பிட மாட்டியா?''

மீண்டும் பழைய குற்றம் சாட்டும் குரல் அவனிடம் வந்திருந்தது.

''எப்போ வருவீங்க?'' உடனே ஆவலுடன் விசாரித்தாள் அவள்.

திடீரென்று, வானத்தையே வசப்படுத்திய பரவசம் வந்தது அவளுக்குள்!

''ம்... 'ஆல் இஸ் வெல்... தட் எண்ட்ஸ் வெல்'னு நான் விரும்பற மாதிரி... எதிர்பார்க்கிற மாதிரி எல்லாம் நடந்திட்டா வருவேன்... நீ சொல்லு!''

''ஓ! அப்புறம் என்ன? வீட்டுக்கு நான் ஒரே பொண்ணு! ரொம்ப செல்லம்! அதுவும் அப்பா செல்லம்! இங்கே வரதுக்கு அவர்கிட்டே பர்மிஷன் வாங்கறதுக்குள்ளே போதும் போதும்னு ஆயிடுச்சி!

''எனக்கு கல்யாணம் பண்ணி, குடும்பச் சிறைக்குள்ளே தள்ளிடணும்னு அவருக்கு ரொம்ப ஆசை... அம்மாவுக்கும் தான்! நிறைய வரன் வந்தது... நான் தான் தள்ளிப் போட்டிருந்தேன்!

''இப்போ இந்த ப்ராஜெக்ட் வந்தவுடனே, ஆறு மாதத்துக்கு அந்த தொணதொணப்பு இல்லாம தப்பிச்சிருக்கேன்னு பெரிய சந்தோஷம்!'' சிறு முறுவலுடன் முடித்தாள்.

''அதே தொணதொணப்பு இங்கே ஆரம்பிச்சா..?'' கேள்வியாக நிறுத்தினான் அவன்.

''இங்கே அப்படி யாரும் இல்லியே?'' இலகுவாகக் கூறியவளுக்குள் சிறு ஆராய்ச்சி!

சட்டென்று ஒலித்த அவன் குரலில், ஆழம் காண முடியாத ஒருவித மென்மை தெரிந்தது.

''ஹம்சத்வனி! நான் எத்தனையோ பெண்களைப் பாத்திருக்கேன்! ஆனா உன்கிட்டே தெரியற அந்தக் கரிசனம்.. அன்பு.. எளிமை, நிமிர்வு எல்லாமே, ரொம்ப வித்தியாசமானவளா உன்னை எனக்கு அறிமுகப்படுத்திடுச்சு..

''நானே எதிர்பார்க்காத அளவுக்கு நீ ரொம்ப அழகாவும் இருக்கே! இங்கே உன்னை யாராவது ப்ரபோஸ் பண்ணினா?''

''யாராவதுன்னா?''

''ம்.. அதோ போறாரே ஒரு சைனீஸ்... அவர் மாதிரி யாராவது ஒருத்தர்னு அர்த்தம்!''

''நான் ஒண்ணு சொல்லட்டுமா? எனக்கு ஆண்கள் வெள்ளையா குள்ளமா... கண்ணாடி போட்டுக்கிட்டு ரொம்ப ஞானப்பழம் மாதிரி இருந்தாப் பிடிக்காது..

''சாரி... நான் யாரையும் புண்படுத்த இதைச் சொல்லலை..! என் மனசுக்குப் பிடிச்சதை என் எதிர்பார்ப்பை சொன்னேன்...''

''ஓ! அப்ப எந்த மாதிரிப் பிடிக்கும்... என்னை மாதிரியா?'' சீண்டலாகக் கேட்டான் அவன்.

''ம்...! அப்படி ஒண்ணும் இல்லை.. டால்... டார்க்... ஹேண்ட்சம்... எனக்கு ரொம்பப் பிடிக்கும்.. அதோட மேன்லியா இருக்கணும்!''



''ஓ! அப்போ என்னை உனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கணுமே... நீ சொல்ற மாதிரி தானே நான் இருக்கேன்.

''என்ன... டார்க்கின்ற இடத்துல கொஞ்சம் மாடரேட்லி ஃபேர்னு போட்டா ஓகேயா?'' குறும்புடன் கேட்டான் அவன்.

''ப்ச்... அதெல்லாம் ஒண்ணுமில்லை! அப்படிப் பாத்தா உலகத்துல நான் சொல்ற மாதிரி எத்தனையோ லட்சம் பேர் இருப்பாங்க.. நான் எல்லாரையுமா நேசிக்க முடியும்?'' சிணுங்கலாகக் கேட்டாள்.

''அதான் சொல்றேன்... அவ்வளவு தேடி கஷ்டப்பட வேண்டாம்... உன் கண்ணெதிர்லேயே நான் இருக்கேன்னு சொல்றேன்! எனக்கும் உங்கப்பாவை... உங்க குல சாமியாப் பார்க்க ரொம்ப ஆசையா இருக்கு!'' சிறு கண் சிமிட்டலுடன் நிறுத்தினான்.

''ப்ரஜுன்... ப்ளீஸ்! போதும் உங்க கேலி!''

அவள் கெஞ்ச, ''ஓ.கே... ஓகே! இட்ஸ் ஜஸ்ட் ஃபார் ஃபன்... தப்பா எடுத்துக்காதே! இன்னிக்கு உன்னை இதோட விட்டுடறேன்... ஏன்னா, என்னை திடீர்னு நீ ரொம்ப குஷி மூடுக்குக் கொண்டு போயிட்டே!'' என்றான் புரியாத குரலில்!

''நானா..? என்ன செஞ்சேன்?'' தனக்குள் யோசித்தபடி அவள் புரியாமல் கேட்டாள்.

''ம்... 'ப்ரஜுன்' அப்படின்னு முதல் தடவையா செல்லமா என்னைக் கூப்பிட்டே இல்லியா?... அதான்!'' எத்தனை தடவை சொல்லி இருப்பேன்... அப்படி அழைக்கச் சொல்லி! இன்னிக்கு தான் முதல் தடவை!''

''ஓ...!'' உதட்டைக் கடித்தபடி, அவள் தவித்தாள்.

''நல்லா மாட்டிக்கிட்டியா? என் பேரை சொல்றதை எவ்வளவு கவனமாத் தவிர்ப்பே? நானும் நீ எப்பதான் சொல்லப் போறேன்னு பாத்திட்டிருந்தேன்... இன்னிக்கு உன் பிடிவாதம் பொடிப் பொடியாயிடுச்சே!'' சிறு குறும்புடன் ஆர்ப்பரித்தான்.

''அப்படி எல்லாம் ஒண்ணுமில்லை... கூப்பிடற மாதிரி. அப்போ எதும் தேவை இருந்திருக்காது... அவ்வளவுதான்!''

''ஓ... அவ்வளவு தானா? சரி... நம்பறேன் வா'' என்றபடி எழுந்தான் அவன்.

''தேங்க்ஸ் ப்ரஜன்... நல்ல சாப்பாட்டுக்கும்... இனிமையாப் பொழுது போனதுக்கும்!''

''வெல்கம்! இப்பவாவது புரிஞ்சிக்கிட்டியே... என் அருகாமையிலே பொழுது இனிமையாத்தான் கழியும்னு! இந்த ஒரு மாசமா என்னை எவ்வளவு அவாய்ட் பண்ணி யிருப்பே?''

அவன் ஒருவிதப் புரியாத பாவத்துடன் கூற, திக் கென்று மனம் அதிர்ந்தாலும், வெளிக்காட்டாமல் அமைதியாக அவனைப் பின் தொடர்ந்தாள் அவள்.

முத்தை மறைத்த சிப்பியாய்... இதயம் மூடியிருக்க, அது முகிழ்த்து வெளிவரும் நாளை அறியாது மௌனச் சிறைக்குளிருந்தது நேசம்!

## 5

காரில் ஏறியதும், ஏனோ இருவருமே எதுவும் பேச வில்லை.



அவரவர் நினைவுகளில் சுகமாய் சஞ்சரித்திருக்க, சிங்கப்பூர் ரேடியோவில் ஒலித்த இனிய தமிழ்க் குரல், அவளைக் கலைத்தது.

அழகிய தமிழில் தொகுப்பாளினிகள், பேச இனிய தமிழ்ப் பாடல்கள் சாரலாய் செவியை நனைத்தன... இனம் புரியாக் கவிதை உலகிற்கு கவர்ந்து சென்றன!

கெஸ்ட் ஹவுசின் வாசலில் அவன் காரை நிறுத்திய வுடன் இறங்கியவள், ''தேங்க்யூ.. ப்ரஜன்... தேங்க்ஸ் ஃபார் எவ்ரிதிங்!'' கிசுகிசுப்பான குரலில் முணகினாள்.

''வெல்கம்...'' என்றவனின் குரலிலும் புரியாத பல உணர்வுகள் நிறைந்திருந்தன.

அன்றிரவு, அவளுடைய டைரி மகிழ்ச்சிப் பக்கங் களால் நிரம்பியது... கரையில்லா கடலாய் உணர்வுகள் தடையின்றிப் பெருகின!

பரஸ்பரம் புரிதலும், மனதிற்கு நெருக்கமான ஒருவித அற்புத உணர்வும் அவளுக்குள் நீரூற்றாய்ப் பீறிட, அவனை ஆகர்ஷிக்கத் துவங்கியது நெஞ்சம்!

தன் தனிமை உலகத்தை தவிர்க்க வந்த தேவன் அவனோவென்று கூடத் தோன்றியது.

நாம் கேட்காமலே கிடைக்கின்ற அன்பும் நட்பும், எவ்வளவு இதமானதென்று புரிவதாய்...

எழப் போகும் கேள்விக்காகவே... உதட்டில் ஜனித்துக் காத்திருக்கும் பதிலாய் மனம் எதிர்பார்ப்புடன் தவித் திருந்தது.

* * *

பிறகு வந்த நாட்களில், இரவு ஏன் வருகிறதென்று சலிப்பு தோன்ற, காலையில் எழுந்ததிலிருந்து உறங்கும் வரை, அவனுடைய ஞாபகங்களே அவளை வதைத்தன.

இருவரிடமும் இனம் புரியாத ஒரு நட்பிழையும், நேசமும், அன்யோன்ய உணர்வும், இப்போது கை கோர்க்க ஆரம்பித்திருந்தன.

ப்ராஜெக்ட்டில் அவளுடைய ஈடுபாடும், திறமையும், எந்த சிக்கலையும் அனாயாசமாக சமாளித்துச் சரி செய்து தீர்வு காணும் தன்மையும், ப்ரஜனைப் பெரிதும் கவர்ந்தன. அதைப் பற்றி, அவளிடம் ஒரு நாள் அவனே கூறும்படி நேர்ந்தது.

அன்று இருவரும் வேலை முடித்துக் கிளம்பும்போது, அவனே அவளைக் காரில் அழைத்துச் சென்றான்.

செல்லும் வழியில், விழி விரித்து வேடிக்கை பார்த்தபடி வந்தவளின் கவனத்தை, நம் ஊரைப் போன்ற டெண்ட் அடித்த நடைபாதைக் கடைகள் சட்டென்று கவர்ந்தன.

''ப்ரஜன்! இது என்ன..? இங்கே கூட ப்ளாட்ஃபார்ம் கடைகள்லாம் இருக்கு.'' வியப்புடன் கூவினாள்.

''ஆமாம்! அதுக்கு 'பசர்மலாம்'முன்னு பேரு! நிறைய சைனீஸ் இது போல வாரக் கடைசியிலக் கடை போடு வாங்க! சாப்பிடற பொருட்கள், கிஃப்ட் ஆர்ட்டிகிள்ஸ், துணிகள், இது மாதிரி கிடைக்கும்! விலை மலிவாவும் இருக்கும்! பாக்கறியா?''

''ம்... உங்களுக்கு ஏதும் வேலை இருந்தா, என்னை இங்கேயே ட்ராப் பண்ணிட்டு நீங்க கிளம்புங்க... நான் ஏதும் டாக்ஸி பிடிச்சிப் போயிக்கறேன்!''

''இல்லை... இப்ப ஏதும் வேலை இல்லை... வா! உனக்கு இன்னும் எங்க ஊரே சரியாப் புரிபடலை... அதுக்குள்ளே தனியா டாக்ஸியில போயிடுவியா?'' நக்கலாகக் கேட்டான்.



''இல்லை... மிங் தான் சொன்னா! இங்கே டாக்ஸி காரங்க ரொம்ப ஜெனியூனானவங்க... ஏமாத்த மாட்டாங்க... எங்கயாவது வழி தவறிட்டோம்னா, நாம போக வேண்டிய இடத்தைச் சொன்னா, கரெக்டா கொண்டு போய் சேத்துடுவாங்கன்னு!''

''அது சரிதான்! ஆனாலும் நீ இங்கே புதுசாச்சே... உன்னைத் தனியா விட்டுட்டுப் போயிட்டு, அப்புறம் நீ எப்படிப் போய் சேர்ந்தியோ என்னாச்சோன்னு நான் கவலைப் பட்டுட்டே இருக்க முடியாது... அதுக்கு இதான் பெட்டர்!''

''எவ்வளவு நாள் என் கூடத் துணைக்கு வருவீங்களாம்! நான் இந்தியா போனப்புறம்... ம்?'' தலை சரித்துக் குறும்பாகக் கேட்டாள் அவள்.

''ம்... அது முடியாது தான்..! அங்கே உனக்கு நல்லாப் பழகின இடம்... நீ பிறந்து வளர்ந்த ஊர்...

''அதுக்காக, நான் இங்கே ரிஸ்க் எடுக்க முடியாது.. சில நேரம் நான் சொல்றதையும் கொஞ்சம் கேட்கலாம் தப்பில்லை... வரியா?''

சற்றே ஆழமான குரலில் கூறிவிட்டு, அருகிலிருந்த பார்க்கிங் ஏரியாவை நோக்கிக் காரைத் திருப்பினான் அவன்.

* * *

காரைப் பார்க் செய்துவிட்டு கம்பீரமாக இறங்கி நடந்தவனைத் தொடர்ந்தபோது அவன் பெரும் பிடிவாதக் காரனென்பதையும், தான் நினைத்ததை சாதிப்பவனென்பதையும், முதன் முதலாக உணர்ந்து கொண்டாள் அவள்.

அங்கு சென்று சில பீங்கான் பொருட்கள், கைத் துண்டுகள், அலங்காரப் பொருட்கள் என வாங்கிக் கொண்டு திரும்பினர்.

காருக்கு வரும்போது, சாப்பிடுவதற்கு நக்கெட்ஸும், வோஃபுல்ஸும் நன்றாக இருக்குமென்று கூறி வாங்கித் தந்தான் அவன்.

அதை மெதுவாக ரசித்து உண்டபடி நடந்தபோது, இப்படியே இங்கேயே இவனுடனே இருந்து விடலாமென்று தோன்ற ஆரம்பித்த மனதை மிகவும் சிரமப்பட்டு அடக்கினாள் அவள்.

"என்ன... பிடிச்சிருக்கா? இங்கேயே இருந்திடலாம்னு நினைக்கிறியா..?"

திடீரென்று அவன் குரல் கலைக்க, தான் மனதில் நினைத்தது அவனுக்கு எப்படித் தெரிந்தது என்ற எண்ணத்தில், அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"ஹேய்.. என்ன? வோஃபுல்ஸ் நல்லா இருக்குமே... உனக்குப் பிடிச்சிருக்கான்னு கேட்டா, இப்படித் தூக்கிப் போடுது! சரியான பயந்தாங்குளி... உன்னை வெச்சி எப்படித் தான் மிச்ச காலத்தை சமாளிக்கப் போறேனோ தெரியலை..:.

"என்னது..?"

சிறு கோபமும் ஊடலுமாய் அவள் கேட்க, "ஈஸி... ஈஸி ஹம்சத்வனி! இன்னும் மிச்சம் இருக்கிற அஞ்சு மாசமும் உன்கிட்டே எப்படி வேலை வாங்கி சமாளிக்கப் போறேனோன்னு சொல்ல வந்தா... அதுக்குள்ளே நீ எங்கேயோ போயிட்டே போலருக்கு."

அவன் குரல் கேலியாக வர, கண்கள் இடுங்க முகம் உணர்ச்சிகளைத் தொலைத்திருந்தது.

பிறகு, காரில் இருவருமே அமைதியாக வர, மனம் அவனுடன் தன் இறுதி மூச்சு வரை வாழும் பாக்கியத்தை எனக்கு அளித்து விடேன் என்று இறைவனிடம் இறைஞ்சியது.

திடீரென்று அவன் அழைத்தான்.

"என்ன மேடம்! ஏதோ தீவிர யோசனை போலருக்கு... சாமி கிட்ட ஏதும் பெரிய கோரிக்கையோ?"

அவன் கேட்டவுடனே அதிர்ந்தவளை ஓரக் கண்ணால் நோக்கியபடி, "என்ன நான் கேட்டது சரிதானே? என்ன... என்னைப் பத்தி ஏதாவது வேண்டுதலா? இந்த முரட்டுப் பையன் கிட்டயிருந்து உன்னை சீக்கிரமே காப்பாத்தி இந்தியாவில பத்திரமா சேர்த்துடுன்னு ஆண்டவனை வேண்டிக்கிறியா?" குறுஞ் சிரிப்புடன் கேட்டான்.

உடனே மனம் திடுக்கிட்டது..!

இவன் எப்படி என் உள் மனதை, அதில் ஓடும் எண்ணங்களை... கண்ணாடியாய் வாசித்து விடுகிறான் என்ற பயமும், யோசனையும் வந்தன.

"ஆமாம்..." கிண்டலாகக் கூறிவிட்டு, அவள் உள்ளூர ரசித்துச் சிரித்தாள்.

"ம்... பாப்போம்... என்கிட்ட இருந்து தப்பிச்சி எப்படி நீ போறேன்னு! உன்னை விட்டாத்தானே?"

விளையாட்டாகக் கூறியபடி, எதிரே சாலையில் பார்வையைச் செலுத்தினான் ப்ரஜன்.

அவனைத் திரும்பிப் பார்த்தபோது, பக்கவாட்டில் தெரிந்த செதுக்கியது போன்ற கம்பீர முகமும், ஸ்டியரிங் வீலில் ஆழமாகப் பதிந்திருந்த நீண்ட விரல்களும்,

அவனுடைய பிடிவாத குணத்தையும் அவன் கலா ரசிகனென்பதையும், அழுத்தக்காரனென்பதையும் தெளிவாகப் பறை சாற்றுவதாய்!

சட்டென்று திரும்பியவன், அவளுடைய ஆராயும் விழிகளைக் கண்டு கொண்டான்.

''என்ன.. என்னைப் பத்தி என்ன கணிச்சே? உன் ஆராய்ச்சியோட முடிவு என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?'' ஆழமான குரலில் கேட்டான்.

அதே நேரம், அவளுடைய கெஸ்ட் ஹவுஸ் வந்துவிட, சடன் பிரேக்குடன் சட்டென்று கார் நின்றது.

அவள் இறங்க முயல, அவனுடைய கை வலிமையாகப் பற்றப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டது.

ஒரு விதிர்ப்புடன் திடுக்கிட்டுத் திரும்பியவளை, ''என்ன... பதில் சொல்லாமப் போறே? என் கேள்விக்கு என்ன பதில்?'' ஒற்றைப் புருவம் உயர்த்தி ஏளனமாகக் கேட்டான் அவன்.

''கட்டாயம் தெரிஞ்சுக்கணுமா? கேட்டா அப்புறம் ரொம்ப வருத்தப்படுவீங்களோன்னு நினைச்சேன்...

''ஓகே! நீங்க ரொம்ப அழுத்தமானவர்... பிடிவாத குணமுடையவர்... தான் நினைச்சதை சாதிச்சே ஆகணும்னு நினைக்கிற ஆதிக்க மனப்பான்மை நிறைஞ்சவர்... சரியா?''

அவள் கேட்டவுடனே, சட்டென்று தலையை பின்னால் சரித்து சிரிக்க ஆரம்பித்தான் அவன்.

பிறகு இயல்பானவனின் விழிகள் கூர்மையுடன் அவளிடம் பதிந்தன.



''ஓ! சரியாக் கணிச்சிருக்கே? இவ்வளவு கண்டு பிடிச்சவ... அந்த இரும்பு மனசுக்குள்ளே கொஞ்ச நாளா ஒரு... அழகுப் பொண்ணு காந்தம் மாதிரி ஒட்டிக்கிட்டு போக மறுத்து அடம் பிடிக்கிறாளே... அவளைப் பத்தி ஒண்ணுமே சொல்லலையே?''

கண்கள் மட்டும் இடுங்க சீரியஸான முகத்துடன் கேட்டான்.

''ம்... அது தெரியலையே? யாரு... இப்ப புதுசா ஜாயின் பண்ணியிருக்காங்களே உங்க செகரெட்டரி... நிர்மலா... அவங்களா?'' அவள் குறும்புடன் கேட்டாள்.

நிர்மலாவுக்கு நாற்பது வயதுக்கு மேலிருக்கும்... வேண்டுமென்றே தான் அவள் அப்படிக் கூறினாள்... அவனை சீண்டினாள்!

''ம்... உனக்கு கண்ணு நல்லாத் தெரியும்னு நினைச்சிட்டிருந்தேன்..! முதல்லே 'ஐ செக்கப்'புக்கு உன்னை அழைச்சிட்டுப் போகணும்... அவ்வளவு பேரிளம் பெண் எனக்கு வேண்டாம்ப்பா! அதோட அவங்க கணவர் என்னை உதைக்க வந்திடுவாரு!... நான் சொன்னது ஓரளவு சின்னப் பெண்! நல்லா யோசிச்சு வை! நாளைக்கு கரெக்டா சொல்றியான்னு பார்க்கறேன்...''

''ம்! நான் என்ன ஜோசியம் பாக்கறவளா! என்கிட்டே கேட்டா...? எனக்கு அதெல்லாம் தெரியாது'' உதடு பிதுக்கி அவள் மெதுவாகக் கூறினாள்.

''சரி அதை விடு! உனக்கு என்னென்ன மொழிகள் தெரியும் ஹம்சத்வனி?''

அவளைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வம் தெரிந்தது அவன் குரலில்!

''ம்.. தமிழ், இங்கிலீஷ், ஜெர்மன் தெரியும்.''

''அதென்ன ஜெர்மன்..?''

அவன் கேட்க, ''என் ப்ரெண்டோட அம்மா ஜெர்மன் டீச்சர்... அதான்!'' என்றாள் அவள்.

''ஹூம்! ஜெர்மன்லாம் தெரியுது... மத்தவங்க மனசுலே என்ன இருக்குன்னு மட்டும் தெரியலை..!'' சிணுங்கலாகக் கூறினான் ப்ரஜன்.

''ம்! அந்த மனசைப் படிக்கிற மொழி எல்லாம் நான் படிக்கலை!'' அவளும் கேலியாக முடித்தாள்.

''ஓ.கே.! பை..! டேக் கேர்'' என்றபடி அவளிடம் விடை பெற்றான் அவன்.

அவனுடைய முதல் ஸ்பரிசம், அழுத்தமாய் தன் முத்திரையை அவள் கைகளில் பதித்திருந்தது... அவன் தீண்டியதுமே, அந்தரத்தில் உறைந்து நின்ற அருவியாய் உள்ளம் உறைந்திருந்தது.

அவனுடைய கார் வெகு தூரம் சென்று மறையும் வரை பார்த்திருந்தவளுக்கு, தன் நெஞ்சைப் பந்தாடி, பார்வையாலேயே தன்னைத் துண்டாடியவனை, உணர்வுகளிலிருந்தும் உயிரிலிருந்தும் விலக்குவது, இனி முடியாதென்பது புரிவதாய்!

உடனே உள்ளே சென்று தன் டைரியை எடுத்து எழுத ஆரம்பித்தாள் அவள்.

முதல் சந்திப்பிலேயே மனதிற்கு மிக அருகில் வந்து விட்டவனை... அவனுக்காக யுகம் யுகமாகக் காத்திருந்தாற் போன்ற வித்தியாசமான உணர்வை... காதலின் முதல் துளி தன் மேல் விழுந்த மாயத்தை ஒரு வித லயிப்பும் பிரமிப்புமாய் உணர்ந்து ரசித்து எழுதினாள்.



எழுதும் போதே... நினைவில் பொக்கிஷமாய் அவனுடைய முகம் வர, கவிதையில் கூட அவன் பெயரை குத்திக் கிழிக்க மனம் வரவில்லை... அவளுடைய பேனா முனைக்கு!

**நான் சுமந்த**

**முதல் கரு...**

**கவிதை!**

**என் இதயம்**

**சுமந்த...**

**முதல் கவிதை**

**நீ!**

என்று எழுதி முடித்தாள்.

## 6

அன்றிரவு, வெகு நேரம் அவளுக்கு உறக்கமே வரவில்லை.

இரவின் இழையாய் கனத்த இருட்டு கருமையாய் வெளியே நெய்யப்பட்டிருக்க, அனைவரும் ஆழ்ந்து உறங்கும் அந்த நடுநிசியில், அந்தப் பெண்ணுள்ளம் மட்டும் மயங்கித் தவித்து தனித்திருந்தது.

ஏனோ, முதல் சந்திப்பிலேயே அவன் தன் மனதில் சுகமாக நிறைந்தது புரிந்தது.

யாரும் அறியாமல், தன் காதலை மனக் குளத்தில் அவள் பத்திரப்படுத்தியிருந்தாள்.

மேலே படர்ந்திருந்த பாசாங்குப் பாசிகளை விலக்கிப் பார்த்தால், ஒரு பொக்கிஷமாய் அது உள்ளே நிறைந்திருப்பதும் தெரிவதாய்!

இது வெறும் நட்பு மட்டுமல்ல என்பது தெளிவாகப் புரிந்தது.

நட்பு, தன் சக நண்பர்களை மகிழ்வித்து உறவு கொண்டாடி மனம் பகிர்ந்து... வரையறையுடன் விலகி நிற்கும்.

ஆனால் காதல் மட்டுமே, ஒருவரை மற்றவருக்காக உருகி ஏங்கித் தவிக்க வைத்து, தன் இணையை தனக்குள் ஆளுமையுடன் புதைத்து தன் உயிரில் பதுக்கி வைக்கும்!

அதன் வித்தியாசம் இன்று புரிந்தது.

தன் இதயம் பாரம் தாங்க முடியாமல் எழுந்து ஜன்னல் வழியே பார்த்தபோது, வெளியே கடும் அமைதியாய்!

எல்லா நடுநிசி இரவுகளுமே, ஆரவாரமில்லாத ஒரு ஆழ்கடல் போல் இப்படித் தான் நிசப்தத்தில் ஆழ்ந்திருக்குமோவென்ற யோசனை, அந்த நிமிடம் வந்தது.

இந்த நேரம் ப்ரஜன் என்ன செய்து கொண்டிருப்பான் என்று அறிய வேண்டும் போல்!

அவனும் என்னைப் பற்றியே நினைத்தபடி தவித்திருப்பானா... இல்லை... உறங்கியிருப்பானா... மனதிற்குள் கேள்விகள் ஊஞ்சல் கட்டி ஆடின.

காட்டாற்று வெள்ளத்தின் வேகத்துடன் நெஞ்சம் அவனிடம் சென்றது...

ஆனால், எதற்கும் விடை தெரியாமல் சோர்வுடன் சாய்ந்து உறங்க ஆரம்பித்தவளை, கனவுகள் சுகமாய் சுவீகரித்துக் கொண்டன.



மெல்லிய புகை படர்ந்த பனியும்... பல வண்ண ரோஜாக்களும்... குளிர் நிலவும்... நாசியை நிறைக்கும் இனிய மலை மணமும் ஆட்சி செய்யும் மலைப் பிரதேசத்தில், அவள் தனித்திருக்கிறாள்...

திடீரென்று, அவளுடைய விழிகள் ஒரு வலிய கரம் கொண்டு மூடப்படுகின்றன.

உடனே யாரென்று உணர்ந்து கைகளை விலக்கி ஆவலுடன் திரும்பினால், அங்கு யாரையுமே காணவில்லை... பதறித் தேடுகிறாள்...

எங்கோ இசையாய் எதுவோ அழைக்கிறது...

திடுக்கிட்டு விழித்தால் விடிந்திருக்க... அலாரம் ஒலித்துக் கொண்டிருந்தது.

உடலெங்கும் வியர்த்திருக்க, தான் அவனை இழந்து விடுவோமோவென்ற பயமும், நடுக்கமும் நெஞ்சை ஒருவித இறுக்கத்துடன் ஆக்கிரமித்தன.

தலையைக் குலுக்கி பயத்தை தூர விரட்டியவள், உடனே எழுந்து குளித்துத் தயாராகிக் கிளம்பினாள்.

ஏனோ, அவனை உடனே பார்க்க வேண்டும் போல் ஒரு உணர்வு!

* * *

ஆனால், அன்று ப்ரஜன் அலுவலகத்திற்கு வரவில்லை...

ஏனென்று யாரிடமும் கேட்க முடியவில்லை... யோசித்து யோசித்து தலைவலியே வந்து விட்டது.

ஆனால், மிங் அவளுடைய சோர்வையும் தேடலையும் கண்டு பிடித்து விட்டாள்.

"என்ன த்வனி! டல்லா இருக்கே? பாஸ் வரலைன்னா?" குறுகுறுப்பாய் கேட்டாள்.

உள்ளூர அதிர்ந்தாலும் அதை வெளிக்காட்டாமல், "ப்ச்... இல்லை... எனக்கு லேசா தலை வலிக்குது... அதான்!" தலையைத் தாங்கியபடிக் கூறினாள்.

"ஒரு நிமிஷம் இரு... என்கிட்ட ஒரு சைனீஸ் ஹெர்பல் டீ இருக்கு... அதைப் போட்டுத் தரேன்... உன் தலைவலி உடனே சரியாயிடும்!" என்றபடி ஹாட் ப்ளேட்டில் நீரைக் கொதிக்க வைத்து கஷாயம் போல் ஏதோ வைத்துத் தந்தாள்.

அதைப் பருகிய சிறிது நேரத்தில் தலை பாரம் குறைந்து இயல்பானாலும், முணுக் முணுக்கென்று அரித்துக் கொண்டிருந்த மனவலி மட்டும் ஏனோ குறையவில்லை.

ஆனாலும், வேலையில் ஆழ்ந்தபோது மற்றதெல்லாம் மறந்து விட்டது.

"என்ன த்வனி... தலைவலி பரவாயில்லையா?" என்பறடி மதியம் சாப்பாட்டு நேரத்தில் சரியாக வந்து கேட்டாள் மிங்.

"ம்... சாரி... உனக்கு ஒரு தேங்க்ஸ் கூட சொல்லலை... உடனே சரியாயிடுச்சு. தேங்க் யூ சோ மச்..."

"ஓ! வெல்கம்! எங்க சைனீஸ் ஹெர்பல் எல்லாமே அப்படித்தான்... எல்லாத்துக்குமே இதிலே மருந்து இருக்கு... நாங்க எல்லாரும் முக்கால் வாசி இதைத்தான் சாப்பிடுவோம்" பெருமையுடன் கூறினாள்.

நம் தமிழ் முறை சித்த மருத்துவம், இப்போதெல்லாம் அழிந்து வருவது மனதோரம் சிறு வருத்தத்துடன் நினைவு வந்தது.



"ஆமாம்... சாப்பிட வரலியா? கம்... லெட்ஸ் கோ!" என்று எழுப்பினாள் அவள்.

கம்ப்யூட்டரை ஷட்டௌன் செய்துவிட்டு எழுந்த போது, செல் அழைத்தது.

அதில் ப்ராஜனுடைய செல் நம்பர் தெரிய, உற்சாகமாக எடுத்துப் பேசினாள்.

"ஹலோ ஹம்சத்வனி! நான் ப்ராஜன்" என்றவனின் குரலில் ஏதோ ஒரு மாற்றம்... இனம் புரியாத சிறு சோகம் தெரிவது போல்!

"ப்ராஜன்... என்னாச்சு... ஆபீஸுக்கும் வரலை... குரலே ஒரு மாதிரி இருக்கு... ஏதும் ப்ரச்னையா?" அக்கறையுடன் விசாரித்தாள்.

"ம்... இன்னிக்கு அப்பாவோட டெத் ஆனிவர்சரி... அம்மாவுக்கு கொஞ்சம் பி.பி. அதிகமாகி மயக்கம் வந்துடுச்சி... மைல்ட் பால்பிடேஷன்! அதான் ஹாஸ்பிடல்லே அட்மிட் பண்ணினேன்...

"இப்போ டிஸ்சார்ஜ் செய்யப் போறேன்.. அதான்! இன்னிக்கு ஒரு நாள் நான் இல்லாம சமாளிச்சிடுவியா?" மெதுவாகக் கேட்டான்.

"ம்... நான் மேனேஜ் பண்ணிக்கிறேன்... நீங்க கவலைப் படாதீங்க... அம்மாவைப் பாத்துக்கங்க... நான் வேணா வரவா? ஏதாவது ஹெல்ப் வேணுமா?"

"ம்... ஹெல்ப் ஒண்ணும் வேணாம்.. வீட்டில ஒரு கேர் டேக்கர் லேடி இருக்காங்க.. அம்மாவைப் பாத்துப்பாங்க! ஆனா எனக்கு... நீ வந்தா கொஞ்சம் நல்லாருக்கும் போலருக்கு.. வரியா?" என்று கேட்டபடி, அட்ரஸைக் கூறிவிட்டு போனை வைத்தான்.

என்ற வார்த்தைகள்... தனக்கான தேவையை அவன் உணர்ந்திருப்பதை தெளிவுபடுத்தின.

மனம் துள்ளியது..!

திடீரென்று அவள் முகத்தில் பூத்த மகிழ்ச்சியை கவனித்த மிங், "யாரு... பாஸா?" என்றாள் குறும்புடன்.

உடனே, ஆமென்று தலையசைத்துவிட்டு சாப்பிடச் சென்றபோது, அவனுடைய தாய் குணமடைய வேண்டுமென்று இதயம் ப்ரார்த்தித்தது.

அன்று மாலையில் வேலை முடிந்ததும், அருகிலிருந்த டிபார்ட்மெண்டல் ஸ்டோரில் பழங்களும், ஹார்லிக்ஸும் வாங்கியவள், ஒரு டாக்ஸியை அமர்த்திக் கொண்டாள்.

ஏனோ, அவன் வருத்தப்பட்டால் தன்னால் அதைத் தாங்க முடியாதென்பதை உள்ளம் பரிபூரணத் தெளிவுடன் உணர்ந்தது.

# 7

'பிஷானி'ல் இருக்கும் அவனுடைய வீட்டிற்குச் சென்றபோதுதான், அதன் பிரம்மாண்டமும், அவன் எவ்வளவு வசதியானவனென்பதும் தெரிந்தன.

சிறு வியப்புடன் இறங்கி டிரைவரிடம் நன்றி கூறிவிட்டு, முன்புறத் தோட்டத்தை ரசித்தபடி உள்ளே சென்று, காலிங் பெல்லை அழுத்துவதற்குள் கதவு திறந்தது.

அவள் ஆச்சர்யத்துடன் நிமிர, "ஹாய்... ஹம்சத்வனி... வெல்கம்! எப்படி பார்... சரியா நீ வந்து காலிங் பெல்லை அழுத்தறதுக்குள்ளே திறந்துட்டேன் பாத்தியா?

"அந்தக் காலத்து சங்க இலக்கியத்திலே 'கதவாகி நின்றாள் மாது'ம்பாங்களாம்... இப்ப இருந்திருந்தா, 'கதவாகி நின்றான் ப்ரஜன்னு' புது இலக்கியம் சொல்லியிருப்பாங்க இல்லை..?" என்றபடிக் குறும்புடன் புன்னகைத்தான்.

அவனுக்கு இதெல்லாம் கூடத் தெரியுமாவென்ற பெரும் வியப்பு அவளுக்குள்!

"ம்... இப்படி வழி மறிச்சி நின்னு என்னை வாசல்லயே வச்சுப் பேசி திருப்பி அனுப்பிடலாம்னு நினைப்பா?"

சிறு சலுகையுடன் சிணுங்கலாகக் கேட்டாள் த்வனி.

"ஓ... சாரி! உன்னைப் பாத்தவுடனே அப்பப்ப இப்படி ஃப்ரீஸ் ஆயிடறேன்... வெல்கம் டு மை டைனாஸ்டி!" என்றபடித் தலை குனிந்து அவளை வரவேற்றபடி, விலகி வழி விட்டான்.

சிறு முறுவலுடன் அவள் உள்ளே நுழைந்தபோது, அந்தப் பெரிய ஹாலின் செழுமையும், உயர்தர இன்டீரிய அலங்காரமும், அவளை மிகவும் கவர்ந்தன.

"உக்காரு! அம்மா கிட்டே சொல்றேன்... ரொம்ப ச தோஷப்படுவாங்க..." என்றபடி உள்ளே சென்றான்.

நன்றாக அமுங்கி மென்மையாய் தன்னை உள்வாங்கி கொண்ட சோபாவில் அமர்ந்தவளுக்குள், ப்ரஜனுடை தாய் எப்படிப் பழகுவாரோவென்ற சிறு யோசனை கவலையும் வந்தன.

ஆனால், கனிவான புன்னகையும், நிமிர்வும அமைதியே வடிவாய் நடந்து வந்தவரைப் பார்த்தபோ தன்னையறியாமல் எழுந்து நின்றாள் அவள்.

ஒரு நோயாளி என்றே கூற முடியாமல் நன்கு உடுத்தியிருந்த அவர் தோற்றமும், பிறரைச் சார்ந்திருப்பதை விரும்பாத தனித் தன்மையும், அவளை மிகவும் கவர்ந்தன.

''வாம்மா ஹம்சத்வனி! உன்னைப் பத்தி ப்ரஜன் நிறைய சொன்னான்... எப்படி இருக்கே?''

பரிவுடன் அவர் விசாரித்தபோது, ஏனோ அவளுக்குள் சொந்த வீடு வந்த இதம் பரவியது!

அவன் தன்னைப் பற்றி, அப்படி என்ன கூறியிருப்பானென்ற எதிர்பார்ப்பு, குறுகுறுப்பாய் உள்ளே பரவுவதாய்!

உடனே எழுந்து சென்று, ஆவலுடன் அவருடைய கைகளைப் பற்றி அழைத்து வந்து அமர வைத்தாள் அவள்.

''நீங்க எப்படிம்மா இருக்கீங்க? உடம்பு இப்ப பரவாயில்லையா?'' கனிவுடன் விசாரித்தபடி பழங்களைக் கொடுத்தாள்.

''ம்.. நல்லாயிருக்கேன்மா! நீ அழகா இருப்பேன்னு எதிர்பார்த்தேன்... ஆனா இவ்வளவு அழகா இருப்பேன்னு நினைக்கலை.''

பெருமையுடன் அவர் சிலாகித்தபோது, தர்ம சங்கடத்துடன் தலை குனிந்து கொண்டாள் அவள்.

''என் பையன் ஒரு பெண்ணைப் பத்தி விடாமப் பேசறது இதுதான் முதல் தடவை... அதுவே, உன்னைப் பாக்கணும்கிற ஆர்வத்தை எனக்குள்ளே அதிகமாக் கிடுச்சி!''

அவர் பேசும்போதே இடை மறித்தான் ப்ரஜன்.



''அம்மா! போதும்... அவங்க பயந்துடப் போறாங்க... ரொம்ப ஓவரா சொல்லாதீங்க... நான் ரெண்டு தடவை பேசியிருப்பேனா இவங்களைப் பத்தி...!''

''ஆமாம்.. தினம் ரெண்டு தடவை...! ஆனா, வேற யாரைப் பத்தியும் இந்த அளவு கூட நீ பேசினதேயில்லை யேப்பா!''

சிறு புன்னகையுடன் கூறியவரின் அருகில் அமர்ந்து, அவருடைய கையை ஆதரவாகப் பற்றிக் கொண்டான் அவன்.

மெதுவாக ''வேறே ஏதாவது பேசுங்களேம்மா... என் புராணம் எதுக்கு?'' என்றான் சலுகையாக.

அவனுடைய தலையைக் கோதியபடி அவர் சிரிக்க, அவர்களுடைய அன்யோன்யமும் பாசமும், ஒவ்வொரு அசைவிலும் தெரிந்தன.

''டாக்டர் என்ன சொன்னாங்கம்மா?'' மெதுவாகக் கேட்டாள் அவள்.

''ம்! பிளட் பிரஷர் கொஞ்சம் அதிகமாகி படபடப்பா வந்துடுச்சி... இப்ப பரவாயில்லை...! ப்ரஜன் தான் பயந்துட்டான்... எனக்கு ஒண்ணும் ஆகாது! இவன் குழந்தைகளோட விளையாடற அளவு நான் ஃபிட்டா இருக்க வேண்டாமா? ஐயம் ஆல் ரைட் நௌ...''

அவர் முடிப்பதற்குள் ஒரு மத்திய வயதுத் தமிழ்ப் பெண்மணி ஒரு ட்ரேயில், கேக், டோநட், பிஸ்கட் என்று எல்லாவற்றையும் எடுத்து வந்து கொடுத்தார்.

''சாப்பிடும்மா!'' என்று அவர் கூற, மெல்ல எடுத்துக் கொறிக்க ஆரம்பித்தாள் அவள்.

''ப்ராஜன் தான் கல்யாணம்னாலே ஓடறானே... பாப் போம்! கூடிய சீக்கிரமே ஒரு முடிவுக்கு வந்திடுவான்னு எதிர்பார்க்கிறேன்.''

பூடகமாகச் சிரித்தபடி அவர் கூற, அவனுக்கு பெண் எதுவும் பார்த்து வைத்திருப்பாரோவென்ற சஞ்சலம், அவளுள் விரவிப் பரவியது.

''அம்மா... என்னைப் பத்திப் பேசினது போதும்... அவங்களுக்கு போரடிக்கப் போகுது... வேற ஏதாவது பேசுங்களேன்...''

''சரி! உங்க அப்பா அம்மா எல்லாரும் நல்லாருக்காங் களாம்மா?'' அக்கறையுடன் விசாரித்தார் அவர்.

''ம்... நல்லாருக்காங்கம்மா! நேத்து நைட் கூடப் பேசினாங்க! நீங்க இந்தியாவுக்கு ஒரு தடவை வரணும்... வந்தா எங்க வீட்டிலத்தான் தங்கணும்'' உரிமையுடன் அழைத்தாள்.

''நிச்சயமா வரேன்... அதுக்கான சந்தர்ப்பம் அமைஞ்சா கட்டாயம் வரவேண்டியது தானே? உனக்கு எங்க ஊர் சமையலெல்லாம் பிடிச்சிருக்காம்மா?''

''ம்... சில வகைகள்லே ஷ்ரிம்ப் பேஸ்ட் சேத்திடற தாலே, அந்த வாசனை பிடிக்கிறதில்லைம்மா! அது கலக்காத ஃபுட் எல்லாம் சாப்பிடறேன்!''

''ஆமாம்! இங்கே டேஸ்ட்டுக்காக எல்லாவித சமை யல்லேயும் அதைக் கலந்திடுவோம்... எங்களுக்கெல் லாம் ரொம்பப் பிடிக்கும்! நல்லா பழகிடுச்சி!''

''இன்னிக்கு உனக்காக ஸ்பெஷலா சமைக்க சொல்லி இருக்கேன்... நீ சாப்பிட்டுட்டுத்தான் போகணும்!'' உரிமை யுடன் கூறினார்.



''இல்லைம்மா! நான் இப்ப கிளம்பணும்... லேட்டாயிடுச் சின்னா, டாக்ஸியிலத் தனியா போகணும்... எனக்கு இங்கே இன்னும் அதிகமாப் பழக்கம் ஆகலை... அதான்! தப்பா நினைச்சிக்காதீங்க... இந்த டிபன் போதும்...''

அவள் கூறியதுமே ஒற்றைக் கை உயர்த்தி அவளைத் தடுத்தான் ப்ராஜன்.

''நான் உன்னை ட்ராப் பண்றேன்... அதனால, இங்கே சாப்பிட்டுட்டே போகலாம்! நோ எக்ஸ்கியூசஸ்'' அழுத்த மான குரலில் முடித்தான்.

''இல்லை... வேண்டாம்! நீங்க அம்மா கூடத் துணைக்கு இருங்க... அவங்களுக்கே பாவம் உடம்பு சரியில்லை... நான் போயிடுவேன்...''

அவள் தர்ம சங்கடத்துடன் கூற, ''ஷ்..! அம்மாவை ஜோதி பாத்துப்பாங்க.. ஒரு மணி நேரத்துல எதுவும் ஆகிடாது ஹம்சத்வனி!... நான் சொல்றதுக்கு எப்பவுமே எதிர்ப்பு சொல்லணும்னு இல்லை... கொஞ்சம் நான் சொல்றதையும் கேட்கலாம்...''

அவன் குரலில் சிறு கோபம் தெரிய, மறுப்பேதும் கூறாமல் மௌனமாக அமர்ந்திருந்தாள் அவள்.

''ஏம்ப்பா இப்படி பயமுறுத்தறே? ஹம்சத்வனிக்கு வீட்டை சுத்தி காண்பிச்சிட்டு வா! நான் போய் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கறேம்மா!'' என்றபடி எழுந்து தன் அறைக் குள் சென்றார் அவர்.

''வாங்க மேடம்.. வீட்டை சுத்திப் பாக்கலாம்... அம்மா வோட உத்தரவு... அதை மீற முடியாது... கம்!'' என்றபடி எழுந்தான் அவன்.

மறுக்கத் தோன்றினாலும், அவள் உடனே எழுந்த போது, சிறு குறும்புப் புன்னகையொன்று அவன் இதழோரம் கசிந்தது.

நான் என்ன... உன் விழியசைவில் ஆட்டுவிக்கப் படுகின்ற பொம்மலாட்ட பொம்மையா வென்று, அவளுள் ஒரு புதிர்க் கேள்வி எழுந்தது.

## 8

அந்த வீடு, ஒரு ட்யூப்ளக்ஸ் வீட்டைப் போலிருந்தது. கீழே ஹால், டைனிங், கிச்சனும், ஒரு அறையும் இருக்க மாடியில் இரு படுக்கையறையும் ஒரு ஸ்டடி ரூமும் இருந்தன.

உட்புறமே வளைவாக உயர்ந்த படிகளில் ஏறியபடி ஜன்னல் வழியே பார்த்தபோது, பக்கவாட்டுப் பகுதியில் விரிந்து தெரிந்த அழகிய புல்வெளி ரம்யமாக இருந்தது.

மாடியிலிருந்த அவனுடைய அறைக்குள் நுழையும் போதே, ஏனோ அவளுக்குப் பெரும் தயக்கமாய்!

ஒரு புறம் பெரிய படுக்கையும், மறுபுறம் சிறு சோபா செட்டும் பெரும் செல்வச் செழிப்புடன் தெரிந்தன.

ப்ரெஞ்ச் ஜன்னல் வழியே வெளியே பார்த்தபோது, அழகிய பூந்தோட்டத்தில் பூக்கள் கண் மலர்த்தி சிரிக்க, அவனுடன் தனியே... அதுவும் ஒரு படுக்கையறையில் இருப்பது பெரும் படபடப்பைத் தந்தது.

ஆனால் அதை மறைத்து இயற்கையை ரசிக்க முயன்றாள் அவள்.



எதிரே... இறைவனின் பரிசளிப்பாய் புதிதாய் மொட்டு விட்ட மலர்கள் நிறைந்திருந்தன.

''ஹேய்! எப்படி இருக்கு என் பெட்ரூம்... அதுவும் இந்த பேச்சலர் ரூம்... ம்?''

அவள் காதருகே குனிந்து மென் குரலில் கேட்டான் அவன்.

காது மடல்கள் சிலிர்ப்பாய் குறு குறுக்க, விதிர்த்துப் போய் அவள் திரும்ப, ''ஆர் யு ஆல் ரைட் ஹம்சத்வனி?'' குறும்பாகக் கேட்டான் அவன்.

''ம்... ரொம்ப அழகா இருக்கு!'' கிசுகிசுப்பான குரலில் முணுமுணுத்தாள் அவள்.

சிறிது நேரம் அவளையும், சிவந்திருந்த அவளுடைய கன்னங்களையும் உற்று நோக்கியவன், ''உனக்குப் பிடிச்சிருந்தா சரி!'' ஆழ்ந்த குரலில் கூறினான்.

அவன் குரலில், புதிராய் ஏதோ ஒரு புரியாத செய்தி!

''என்ன...?'' திடுக்கிட்டு நிமிர்ந்தாள் அவள்.

''ஏன்னு கேக்கறியா? உன்னோட ரசனைகள், எப்பவுமே ரொம்ப நல்லாருக்கும்... உன்னோட ட்ரஸ் சென்ஸ், சாப்பாட்டு விஷயங்கள், பழகற விதம், பேச்சு எல்லாமே!

''நான் பல சமயங்கள்லே உன்னை ரொம்ப அட்மையர் பண்ணியிருக்கேன்! என் ரூம் உனக்குப் பிடிச்சிருந்தா... நிச்சயமா அது நல்லா இருக்குன்னு தானே அர்த்தம்! அதான் சொன்னேன்.''

விழிகள் குறுகுறுக்க நிறுத்தினான்.

''ஓ...!'' என்றவளின் குரலில், சிறு ஏமாற்றம் தொக்கி நிற்பது போல்!

உடனே அவளைத் தீண்டாமல், தன் கைகளைக் கவனமாய் அவளுக்கு இருபுறமும் ஊன்றிக் குனிந்தவன், ''ஏன்... வேற ஏதாவது சொல்வேன்னு எதிர்பார்த்தியா!'' கூர்மையாகக் கேட்டான்.

சட்டென்று அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''இல்லை!''

கோபக் குரலில் கூறிவிட்டு அவள் திரும்ப, மெல்ல அவளுடைய தோள் பற்றி அழைத்து வந்து சோபாவில் அமர்த்தினான் அவன்.

அவளுடைய முகம் ஊடலில் கசங்கியிருக்க, அவனுக்குள் சிறு பொறி மெல்லச்சுடர் விட ஆரம்பித்தது.

அவளுக்குள் ஓடுகின்ற எண்ணங்களை சுலபமாக வாசித்தறிந்தவனுக்கு. அவளுடைய இறுக்கம் தாங்க முடியாத ஒன்றாய்!

ஏனோ தன் மீதே கோபம் வர, சூழ்நிலையை இயல் பாக்க முயன்றான்.

''ஹேய்... ஜஸ்ட் ஃபார் ஃபன்! கோபிச்சுக்காதே! நீ இப்படி இருந்தா ரொம்பக் கஷ்டமா இருக்கு... என்னு கேக்க மாட்டியா?''

''கோபமா இருந்தா முகம் ரொம்ப கேவலமா இருக்கு! எனக்குப் பாக்கக் கஷ்டமா இருக்கு இல்லையா?... அதைச் சொன்னேன்...''

அவன் கூறிவிட்டு முகத்தில் உணர்ச்சியின்றி சிரிக்காமல் இருக்க, அவளுக்குள் சிரிப்பு ஊற்றாய்ப் பீறிட்டது.

அடக்க மாட்டாமல் அவனும் இணைந்து நகைக்க, சட்டென்று அவளுக்குப் புரையேறியது.



உடனே இரும ஆரம்பித்தவளை, தலையில் மெது வாகத் தட்டிவிட்டு, அருகிலிருந்த ஜக்கிலிருந்து தண் ணீரை டம்ளரில் நிறைத்துக் கொடுத்தான் அவன்.

''தேங்க் யூ...'' என்றபடி அதை வாங்கிப் பருகியவள், மெதுவாகத் தன்னை அமைதிப் படுத்திக் கொண்டாள்.

''உனக்கு என்னென்ன பிடிக்கும் ஹம்சத்வனி?''

அவன் திடீரென்று கேட்க,

''ம்... மெலோடியஸ் ம்யூசிக் பிடிக்கும்... நிறைய புக்ஸ்... தமிழ் நாவல்கள் பிடிக்கும்... பனிக்கால விடியல்... தூறல் மழை... விடியல்லே வர்ற வானவில்... கவிதைகள்... மழலைகள்... மலையரசி... இப்படி நிறையப் பிடிக்கும்.''

''அப்புறம் ஒண்ணு சொல்லட்டுமா? இவ்வளவு நீளமா என் பெயரை கஷ்டப்பட்டு சொல்றதை விட்டுட்டு 'த்வனி'ன்னு ஷார்ட்டா நீங்க கூப்பிட்டா ரொம்பப் பிடிக்கும்!''

அவள் உதடுகளைச் சுழித்தபடிக் கூறினாள்.

''ம்... எனக்கு உன் பெயரை 'த்வனி'ன்னு சுருக்கப் பிடிக்கலை! வேற மாதிரி ஷார்ட் பண்ணிக் கூப்பிட ணும்னு தோணுது... ஆனா, அதுக்கு நீ ஒத்துப்பியான்னு தெரியலையே?''

''ஏன்... நான் அதெல்லாம் ஒண்ணும் சொல்ல மாட்டேன்... என்னன்னு கூப்பிடுவீங்க... ஹம்சான்னா?''

''உன் பெயரை வேற மாதிரி சுருக்கிக் கூப்பிடவே முடியாதா?''

கூர்மையுடன் அவளையே ஊடுருவியபடிக் கேட்டான் அவன்.

''ம்.. வேற எந்த மாதிரி?... தெரியலையே...''

உதடு பிதுக்கி அவள் கூற, அவன் பதில் கூறு முன்பே இன்டர்காம் அழைத்தது.

அவன் உடனே அதை எடுத்தபோது, நளினி அவர்கள் இருவரையும் சாப்பிட அழைத்தார்.

அவளிடம் திரும்பியவன், ''கீழே போகலாம்! அம்மா உன்னைச் சாப்பிட அழைச்சிட்டு வரச் சொன்னாங்க!'' என்றபடி அழைத்துச் சென்றான்.

* * *

பெரிய டைனிங் டேபிள், பல வகையான உணவு வகைகள் வைக்கப்பட்டிருந்தன.

''வாம்மா... ஹம்சத்வனி! உக்காரு... சாப்பிடலாம்!'' என்று அழைத்தார் நளினி.

''ஏம்மா எனக்காக இவ்வளவு சிரமம்? நான் உடம்பு சரியில்லாத உங்களைப் பார்க்க வந்தா... நீங்க எனக்கு விருந்து செய்யறீங்க? கஷ்டமா இருக்கு'' தர்ம சங்கடத்துடன் கூறினாள்.

''ஒண்ணும் கஷ்டமில்லை! பரோட்டாவும், இடியாப்பமும் கடையிலருந்து வாங்கி வந்தாச்சு... லக்ஸாவும் 'நாசி கோரிங்'கும், உனக்காக ஜோதி செஞ்சா!.. ஷ்ரிம்ப் பேஸ்ட் போடாம!.. அவ்வளவுதான்...'' என்றபடி அவளை உட்கார வைத்துவிட்டு, அவரும் அமர்ந்தார்.

மறுபுறம் ப்ரஜன் அமர, ஜோதி பரிமாறினார்.

நளினி இடியாப்பம் மட்டும் எடுத்துக் கொள்ள, மற்ற வகைகளை த்வனி ருசித்துச் சாப்பிட ஆரம்பித்தாள்.



எல்லா உணவு வகைகளுமே நல்ல ருசியுடன் இருந்தன... ஏனோ தாய் வீடு வந்த இதம் வந்தது அவளுக்குள்!

ஒரு பாதுகாப்பான பாசக் கூட்டுக்குள்ளிருக்கின்ற உணர்வு உள்ளே பரவியது.

''ஹம்சத்வனி! உனக்கு எங்க ஊரிலே என்னெல்லாம் பிடிச்சிருக்கு? இந்தியாவுக்கும் சிங்கப்பூருக்கும் நிறைய வித்தியாசம்... இல்லை?'' ஆவலுடன் கேட்டார் நளினி.

''ஆமாம்மா! இங்கே நிறைய விஷயங்கள் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!

''முதல்லே இந்த நாட்டுலே கடைப்பிடிக்கற சுத்தம்... ஒழுங்கு... ரெகுலேட்ட் ட்ராபிக்... ரோட்டுல வாகனமே வரலைன்னாலும், காத்திருந்து சிக்னல் கிடைச்சப்புறம் க்ராஸ் பண்ற மக்கள்... பொல்யூஷன் குறைவா இருக்கறது...

''பச்சைப் பசேல்னு அழகா இருக்கற ஊர்... தேனி மாதிரி சுறுசுறுப்பான மக்கள்... எல்லாத்துக்கும் மேல, நல்ல பஸ், ட்ரெயின் வசதி.. பிரமிப்பா இருக்கு!'' சிறு புன்னகையுடன் நிறுத்தினாள்.

''ஏன்... உங்க இந்தியாவிலே இதெல்லாம் கிடையாதா?'' யோசனையுடன் கேட்டான் ப்ரஜன்.

''ம்... அதென்ன உங்க இந்தியா... நீங்க இந்தியரில்லையா?... இந்தியா வேற மாதிரி! இந்த அளவு சுத்தம் அங்கே எதிர்பார்க்க முடியாதுதான்...! ஏன்னா ஏரியா ரொம்பப் பெரிசு... நிறைய பாப்புலேஷன்! கண்ட்ரோல் பண்றது கொஞ்சம் கஷ்டம்!

''ஆனா அங்கே மனித நேயம் ரொம்ப அதிகம்... மத்தவங்களுக்கு ஒண்ணுன்னா துடிச்சிப் போய் உயி

ளையே குடுக்கற மக்கள்... எப்பவுமே மிலிட்டரி ரூல்ஸை கடைப்பிடிக்கற மாதிரி இல்லாம, கொஞ்சம் ரிலாக்ஸ்டா இருப்பாங்க!

"வாழ்க்கையில எப்பவுமே ஒரு ரொட்டீன் இருந்தா, அதை ப்ரேக் பண்றதுகூட ஒரு வித சுகம் இல்லையா? அது மாதிரிதான் நாங்க!

"ஓரளவு ட்ராபிக் ரூல்ஸ் பார்ப்போம்! சிட்டியில பொல்யூஷன் அதிகம் தான்! ஆனா எங்க கிராமங்கள் ரொம்ப அழகு!

"இது ஒரு ஹைடெக் சொர்க்கம்னா... அது ஒரு அழகான பூப்பூத்த நந்தவனம் மாதிரி...! ரொம்ப ஹோம்லியா... எந்தவித பிரம்மாண்டமும் நம்மைப் பாதிக்காம, இயல்பா... ஆரவாரமில்லாம பயணிக்கிற ஒரு சிற்றோடை மாதிரி எளிமையா... ஆனா எல்லாத்திலேயுமே ஒரு லைவ்லி ஃபீல் இருக்கும்!

"எனக்கு எப்படிச் சொல்றதுன்னு தெரியலை... எங்க சமூகம் சில கலாச்சாரங்கள், கோட்பாடுகள், வரை முறைகளுக்கு உட்பட்டது...!

"அன்பும், அனுசரணையும், குடும்பக் கட்டுக்கோப்பும் அங்கே அதிகம்..! இதான் நாங்க!" விழிகளில் சிறு மின்னலுடன் முடித்தாள்.

"ம்... விட்டுக் குடுக்க மாட்டியே.. இதுக்குப் பெயர்தான் தாய்நாட்டுப் பாசமா? ம்..?" சீண்டலாகக் கேட்டான் ப்ரஜன்.

"ஆமாம்! நம்மோட அம்மா, ஆயிரம்தான் ஊனமா இருந்தாலும்... அவங்ககிட்டே சில குறைகள் இருந்தாலும், நம்மாலே விட்டுக் குடுக்க முடியாதில்லையா? அது மாதிரி தான்!



"நம்மைப் பெத்து வளர்த்த அம்மா மாதிரி தானே, நம்மைத் தன்னோட மடியில் வளர்த்து சுவீகரிச்ச தாய் திலமும்! என்னால எதுக்காகவும் என் தாய் நாட்டை விட்டுத்தர முடியாது" பெருமையுடன் கூறினாள்.

சட்டென்று கை தட்டியவனின் முகத்தில் பெரும் பெருமிதமும், புரியாத சிறு ஆராய்ச்சியும்!

"அப்போ... எதுக்காகவும் உன் தாய் நாட்டை விட்டுட்டு வர மாட்டே...?"

"அப்படின்னா...?" குழப்பத்துடன் கேட்டாள் அவள்.

"இல்லை.. யாராவது உன்னை வெளி நாட்டில் இருந்து வந்து பெண் கேட்டு கல்யாணம் செஞ்சிக்கிறேன்னா...? நம்ம ஆபீஸிலே இருக்கற குவான் ஃபாங் மாதிரின்னு வெச்சுக்கயேன்... உடனே நோ சொல்லிடுவியா?"

"ம்! ஆமாம்... என்னால முடியாதுதான்!"

"சரி... அப்ப அவரே இந்தியா வந்திடறேன்னா...?"

ஒருவிதத் தீவிரமான முக பாவத்துடன் கேட்டான் அவன்.

"என்ன... கிண்டலா? பாருங்கம்மா!" சலுகையுடன் அவள் சிணுங்க, அவளைப் பரிவுடன் அணைத்துக் கொண்டார் நளினி.

அங்கு அழகிய இனிய பாசச் சூழல் ஒன்று உருவாகியிருக்க, அந்த நேச மழையில் சுகமாய் நனைந்தது, அவள் இதயம்!

அவன் மேல் காதல் வந்த நொடியிலிருந்து, தான் மீண்டும் ஒரு முறை ஜனனமெடுத்து, இரு முறை உயிர் கொண்ட தருணத்தைப் பற்றி அவனிடம் கூறும் தருணத்தை எதிர் நோக்கிக் காத்திருந்தாள் அவள்.

# 9

அன்று விருந்து முடிந்து அவள் கிளம்பும்போது, அழகிய அட்டைப் பெட்டியொன்றைப் பரிசாக அளித்தார் நளினி.

பிறகு அவரிடம் விடைபெற்று, உடல்நிலையைக் கவனித்துக் கொள்ளும்படிக் கூறிவிட்டு அவள் கிளம்பினாள்.

காரில் திரும்பி வருகையில் இருவருமே ஒருவித மோன நிலையில் திளைத்திருக்க, வாய்மொழிகள் அங்கு பயனற்றுப் போயின.

மெல்லிய சிதாரின் ஒலி மட்டும், அந்த சிற்றிடத்தை ஆக்ரமித்திருக்க, இருவருமே ஒருவித லயிப்புடனிருந் தனர்.

அப்போது, மெதுவாகத் திரும்பி ஓரக்கண்ணால் அவளைப் பார்த்தான் பிரஜன்.

மெல்ல மெல்ல அழிந்து கொண்டிருக்கும் நம் பண் பாட்டுத் தடயங்களைப் பொக்கிஷமாய் பாதுகாக்க வந்த தேவதையாய்... அந்த நிமிடம் அவளைப் பார்த்தபோது தோன்றியது அவனுக்கு!

நெஞ்சம் வெகுவாக நெகிழ்ந்திருந்தது...

வெளியில் மெதுவாக மழை தூற ஆரம்பித்தது!

பிறந்து வளர்ந்த ஊர்தான் ஒவ்வொரு மனிதனையும் எவ்வளவு சலனப்படுத்துகிறது!

தன் பூர்வீக மணத்தை அவர்களுள் பரவச் செய்து, வேர்களாய் விரவி இதமாக்குகிறதென்பதை இன்று உணர்ந்து கொண்டான் அவன்.

ஏனோ, அவளும் தனக்குள்ளேயே உறைந்து போய் மௌனமாகவே வந்தாள்.

கெஸ்ட் ஹவுஸ் வாசலில் அவன் காரை நிறுத்தியதும், இருவரும் இறங்கினர்.

பிறகு, மெல்லிய மழைச் சாரலில் குடையின் துணை யின்றி அந்தப் பாதையில் தோள்கள் உரச நடந்தபோது தான், அன்பின் சுகம் அவளுக்குப் புரிந்தது.

அவனுடைய அடர்ந்த மீசைக்குள்ளிருந்து, ஆதர்சப் புன்னகையொன்று அழகாய் பூத்தது.

சிறு வயதில் வானத்து நட்சத்திரங்களைப் பார்க்கும் போது, அங்கு அப்படி என்ன தான் இருக்கும்... ஒரு நாள் போய் பார்த்துவிட்டு வர வேண்டும் என்று மனதில் ஆசை ஆசையாய் எழுந்த கனவுகள், இன்று நினைவு வந்தன.

மறுகணமே, அதை ப்ரஜனுடன் சேர்ந்து செய்ய வேண்டும் என்ற தவிப்பும் ஏக்கமும் எழுந்தன.

பரவசத்துடன் அப்படியே நிமிர்ந்து பார்த்தபோது மழை மூட்டத்தில், புகை படிந்த அகல் விளக்காய் விண்மீன்கள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன... வெள்ளைக் காகிதங் களாய் மேகங்கள்!

அந்த நிமிடம், வானத்து நிலவை நோக்கி தன் முகம் நிமிர்த்தி நிற்கின்ற அல்லியின் நினைவு தான் வந்தது, ப்ரஜனுக்கு!

அப்படியே, அவளுடைய முகத்தை இரு கைகளிலும் ஏந்த வேண்டும்போல் துறுதுறுத்த கைகளை அடக்கிக் கொண்டான், அவன்!

"இன்னிக்கு நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன் ஹம்சத்வனி! தேங்க் யூ" உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கூறினான்.

"ம்... நானும்தான்... தேங்க்ஸ் ப்ராஜன்" அவளும் மெதுவாக முணுமுணுத்தாள்.

"வீட்டு நினைப்பு வந்திடுச்சா..? அப்படியே பறந்து தாய் நாட்டுக்கு ஓடிப் போயிடணும்னு தோணுதா?" குறும்புடன் அவள் காதருகில் கேட்டான்.

"இல்லை.. ஏனோ இங்கேயே இருக்கணும்னு தோணுது!"

"ஏன்...?"

'ஏனென்றால் நீ இங்கேதானே இருக்கிறாய் என்னவனே! அதனால் தான்!' நெஞ்சம் சப்தமின்றிப் பேசியது.

"என்ன... பதிலே காணோம்..?"

"ம்... இந்த இடமும் எனக்குப் பிடிச்சிருக்கு... அதான்!" உள்ளத்தை மறைத்து பொய் பகர்ந்தாள்.

"ஓ... அப்ப நான் கிளம்பவா?"

சிறகாய் வருடுகின்ற குரலில் கேட்டான், அவன்.

"சரி... அம்மா தனியா இருப்பாங்க... நீங்க போங்க!"

பிரிய மனமின்றி விடை கொடுத்தாள் அவள்.

* * *

அவன் பிரிந்து சென்றதும்தான், காதலின் வலியையே அவளால் உணர முடிந்தது.



இதுவரை இருவரும் ஒருவரை ஒருவர் சீண்டிப் பேசிய படி இணைந்திருந்தாலும், தன் இதயத்தில் பொங்கி யிருக்கும் காதல் வெள்ளத்திற்கு, இனிமேல் அணை போட முடியுமாவென்று சரியாகத் தெரியவில்லை.

இதுபோல் அவனும் தன்னை உயிராய் நேசிக்கிறானா வென்பதையும் அறிய முடியாமல், தவித்துத் தத்தளித்தது மனது!

பிறகு, நளினி அளித்த அட்டைப் பெட்டியை ஆவலுடன் பிரித்தால், அழகிய பட்டு சுடிதாரொன்று அதில் இருந்தது.

உடனே போன் செய்து அவருக்குப் பேசி, நன்றி கூறிவிட்டு வைத்தாள் அவள்!

அன்று... டைரிப் பக்கங்களில் ப்ராஜனே நிறைந்திருந்தான்.

மலைப் பிராந்தியத்தில் நிறைந்திருக்கும் மூடு பனியாய் சிலிர்க்கச் செய்தான்.

அவனுடைய பேச்சு... சிரிப்பு... ரசனை... பரிவு... குறும்பு அனைத்துமே காதலின் வலியுடன் அந்த டைரியில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இமைகள் பரவசத்தில் விரிந்து... இதயம் சிலிர்ப்பால் மலர... இனி அவனின்றித் தன்னால் இயல்பாக இயங்க முடியாதென்று, மௌனமாய் மறுகியது உள்ளம்!

* * *

அன்றைய இரவு, வெகு நேரம் கண் விழித்ததில் நன்றாக விடிந்த பிறகுதான் மறுநாள் கண் விழித்தாள், ஹம்சத்வனி!

அன்று அலுவலகத்திற்கு தாமதமாகச் சென்றபோது, ப்ரஜன் அவளுக்கு முன்பே வந்திருந்தான்.

வெளிநாட்டிலிருந்து சில ஃபாரின் டெலிகேட்ஸ் வந்திருந்ததால், அவர்களுடன் முக்கியமான மீட்டிங்கிலிருந்தான்.

அன்று முழுவதும், அவளுக்கும் வேலை சரியாக இருந்தது.

அவனைப் பார்க்காத நிமிடங்கள்... நிறமற்ற வானவில்லாய் வர்ணமிழந்திருந்தன!

மாலையில், ஏனோ அவனைச் சீண்ட வேண்டும் போலிருந்தது.

முதல் நாளிரவு, தன் கனவில் குவான் ஃபாங் வந்து ப்ரபோஸ் செய்ததாக, வேண்டுமென்றே அவனுக்கு ஒரு 'எஸ்.எம்.எஸ்.'ஸை அனுப்பிவிட்டு, அவனுடைய பதிலை எதிர்பார்த்து ஆவலுடன் அமர்ந்திருந்தாள்.

மறு நிமிடமே மெஸேஜ் வந்தது... ''ஐ யம் சோ ஜெலஸ்'' என்று!

இதழ்கள் ரகசியப் புன்னகையில் விரிய, ஏதோ ஒரு உண்மையை அது உரக்க அறிவிப்பது போல்!

பிறகு, அவனுடைய அம்மாவிற்கு போன் செய்து நலம் விசாரித்து விட்டு கெஸ்ட் ஹவுஸிற்குச் சென்றபோது, ஏதோ ஒருவித வெறுமை மனதை வியாபித்தது.

''ஒருநாள் அவனைப் பார்க்கவில்லை என்றதும், ஏன் இப்படி நெஞ்சம் பரிதவிக்கின்றது? அவனுக்கும் இப்படித்தான் இருக்குமோ?''

அந்த விடை தெரியாக் கேள்வியுடன், ஊன் மெழுகாய் உள்ளம் உருகிப் போய் அமர்ந்திருந்தாள் அவள்.



உடனே, சென்னைக்கு போன் செய்து எப்போதும் போல் தாய் தந்தையிடம் பேசி விட்டு வைத்த போது தான், மறுநாள் சனிக்கிழமை என்பதே உறைத்தது.

மேலும் இரு நாட்கள், அவனைப் பார்க்க முடியாதென்பதே, பெரும் தவிப்பைத் தருவதாய்!

பிறகு, டயரியில் எழுத ஆரம்பித்தபோது... ப்ரஜன் மேல் கொண்ட காதல்... தன்னை.. தன் உணர்வுகளை... ஆழ்மன ஏக்கங்களை எல்லாம் தோண்டி எடுத்து, தன்னையே தனக்கு அவன் அறிமுகப்படுத்திய அற்புதத்தை, வார்த்தைகளால் வெளிக் கொணர்ந்திருந்தாள் அவள்.

இன்றைய, அவனுடைய பொறாமையையும் சேர்த்து!

காதலாகிக் கசிந்துருகி நேசம் குழைத்து பதிவாகியிருந்தன வார்த்தைகள்!

அந்தப் பக்கங்களே, ஒன்றை ஒன்று காதலிக்க ஆரம்பித்து விடும் நிலை வரும்போல் ஒரு வித வினோத உணர்வு!

இன்று... அவளின் மனப் பக்கங்களைப் புரட்டிய போதுதான் தெரிந்தது... புதிதாகத் தொடங்கியிருந்த காதல் அத்தியாயத்தில் கனிந்திருந்த கனவு நேசம்!

## 10

மறுநாள் காலையில், மெதுவாக எழுந்து தலை குளித்து ட்ரையரில் உலர வைத்தபடி அமர்ந்திருந்தபோது, வாசலில் அழைப்பு மணி ஒலித்தது.

இந்த நேரத்தில் [illegible] தபடி கதவைத் திறந்தபோது, அங்கு ப்ரஜனை அவள் சத்திய மாக எதிர்பார்க்கவில்லை.

மயில் தோகையாய் நீண்டிருந்த கூந்தலின் அழகும், வெள்ளை நிறத்தில் லேஸ் ஓர்க் செய்த நைட்டி அணிந்து தேவதை போல் அவள் நின்றிருந்த கோலமும், அவனைப் பெரிதும் நிலை தடுமாறச் செய்தன.

அவளுக்கும், இரவு உடையில் தன்னை அவன் பார்த்தது, பெரும் குற்றக் குறுகுறுப்பாய்...!

உடனே சமாளித்தவள், "உள்ளே வாங்க ப்ரஜன்... ஒரு நிமிஷம் உக்காருங்க... நான் ட்ரஸ் மாத்திட்டு வந்திடறேன்.." பதட்டத்துடன் உள்ளே ஓடினாள்.

கையில் கிடைத்த ஒரு சுடிதாரை எடுத்து அணிந்து கொண்டு வெளியில் வந்தபோது, தினசரிப் பேப்பரை படித்தபடி அமர்ந்திருந்தான் அவன்.

"அம்மா எப்படி இருக்காங்க..?" சிறு புன்னகையுடன் விசாரித்தபடி வந்தவளையே, அவனது பார்வை கூர்மையுடன் ஊடுருவியது.

நெஞ்சக்குள்... உணர்வுகளின் உல்லாச ஊர்வலம்!

"ம்...! நல்லாருக்காங்க... நேத்து முழுக்க உன்னைப் பாக்கவே முடியலையா?

"அதோட, ஒரு குண்டை வேற தூக்கிப் போட்டுட்டே! சரியாத் தூங்கவே இல்லை... ஏதோ ஒரு பயம்!

"என்னவோ தெரியலை... ஒரே நாள்லே.. ஐ மிஸ்ட் யூ எ லாட்... அதான் வந்தேன்!" ஆழமான குரலில் கூறினான்.



சிலீரென்று ஒரு மாயக் கரம் மெலிதாய் இதயம் வருட, அவளைச் சுற்றி ஆயிரம் பட்டாம் பூச்சிகள் வண்ணமயமாய் சிறகடித்தன.

'நானும் தான்!' அவள் இதயம், மௌனமாய் வழிமொழிந்தது.

அவளிடமிருந்து பதிலை எதிர்பார்த்து ஏமாந்து போன ப்ரஜன், உடனே சமாளித்தபடி நிமிர்ந்தான்.

"நான் இன்னிக்கு உன்னை ஒரு இடத்துக்கு அழைச்சிட்டுப் போகலாம்னு தான் வந்தேன்... போகலாமா?"

"எங்கே?"

ஆவலுடன் கேட்டவளை, "ஊஹூம்... சர்ப்ரைஸ்... முதல்லே கிளம்பு.. போகலாம்!" உற்சாகமாக அழைத்தான்.

"ஓகே! அஞ்சே நிமிஷம்... முதல்லே காபி தர்றேன்... குடிச்சிட்டு நீங்க டி.வி. பார்த்திட்டிருங்க..." என்றவள், அவன் குடித்து முடிப்பதற்குள்ளாகவே, தயாராகி வெளியே வந்தாள்.

நீண்ட கூந்தல் தோளில் சிற்றருவியாய் விரிந்திருக்க, புது சுடிதாரில் மிதமான ஒப்பனையுடன் வெளி வந்தவளை, வியப்புடன் ஆராய்ந்தன அவன் விழிகள்!

"ராக்கெட் வேகம்தான் இல்லை!"

குறும்புடன் கேட்டு விட்டு அவன் கிளம்ப, பின் தொடர்ந்தாள் த்வனி.

* * *

அவன் காரைப் பார்க் செய்துவிட்டு அவளை அழைத்துச் சென்ற இடம் 'நேஷனல் லைப்ரரி' என்று போடப்பட்டிருந்தது.

''ஓ... லைப்ரரியா? இங்கே தமிழ் புத்தகங்கள் இருக்குமா?'' அவள் குதூகலத்துடன் ஆர்ப்பரித்தாள்.

''ம்... இது கவர்ன்மெண்ட் லைப்ரரி... சிங்கப்பூரிலே இது மாதிரி பதினைஞ்சு லைப்ரரிக்கும் மேல இருக்கு... உன்னை இங்கே மெம்பராக்கிடலாம்னுதான் அழைச்சிட்டு வந்தேன்... ஆர் யு ஹேப்பி நௌ?''

''ம்.. தேங்க் யூ ப்ரஜன்... ஐயம் சோ ஹேப்பி!'' அவள் விழிகள் வெகுவாய்க் கனிந்திருந்தன.

அந்தக் கட்டிடத்திற்குள் நுழைந்தபோது, ஒரு த்ரீ ஸ்டார் ஹோட்டலுக்குள் நுழைந்த உணர்வு வந்தது அவளுக்குள்...!

முதலில் அவளை மெம்பராக்கியபிறகு, எப்படி புத்தகங்கள் எடுப்பது... ரிடர்ன் செய்வது என்பது பற்றியெல்லாம் அவனே விளக்கினான்.

குளிர்ந்த ஏ.சி. ஹாலிலிருந்து லிஃப்டில் பயணித்து மேலே சென்றால் அங்கு ஆங்கிலம், சைனீஸ், தமிழ் என்று தனித் தனி அலமாரிகளில் புத்தகங்கள் சீராக அடுக்கப்பட்டிருந்தன.

அங்கிருந்த அமைதியும், படிப்பதற்கு வசதியாகப் போடப்பட்டிருந்த சோபாக்களும், அவளை மிகவும் கவர்ந்தன.

தனக்குப் பிடித்த நாவலாசிரியர்களின் புத்தகங்களை எடுத்துக் கொண்டு கீழே வந்தபோது, அவனுக்கு தான் பெரும் நன்றிக்கடன் பெற்றிருப்பது புரிந்தது.

கீழ்த் தளத்தில் ஒரு காபி ஷாப் தெரிய, அவளுக்குப் பெரும் வியப்பாய்!



அதை அவனிடம் பகிர்ந்தபோது, ''ஆமாம்... இங்கே எல்லா இடமும் அப்படித்தான்... அங்கங்கே ஃபுட் கோர்ட்... டாய்லட் எல்லாமே இருக்கும்... வெரி யூசர் ஃப்ரெண்ட்லி!'' பெருமையுடன் கூறினான்.

பிறகு பொதுவாகப் பேசியபடி இருவரும் கிளம்பிய போது, ''ஹம்சத்வனி! நாம ரெண்டு பேரும் இன்னிக்கு லன்ச்சுக்கு வெளியே போகலாமா?'' ப்ரஜன் ஆர்வத்துடன் கேட்டான்.

''ஏன்... வேற வேலை எதுவும் இன்னைக்கு இல்லையா? இல்லை... கேர்ள் ஃபிரண்ட்ஸ் யாரும் கிடைக்கலையா?'' இழுத்தபடிக் குறும்புடன் கேட்டாள்.

''ம்... உண்மையா சொல்லப் போனா ரெண்டும் தான்! அதனால தான் உன்னைக் கேட்டேன்... போகலாமா?''

''சரி.. எனக்கும் இங்கே யாருமே பாய் ஃப்ரெண்ட்ஸ் கிடைக்கலை... போகலாம்'' முகத்தை சோகமாக வைத்தபடிக் கூறினாள் அவள்.

''ஏய்!... என் கிட்டே உதை வாங்கப் போறே!''

சுட்டு விரலை உயர்த்தி அவன் எச்சரித்தபோது, ஏனோ இதயம் தடம் புரள, தனக்குள் என்னென்ன மாயங்கள் செய்கிறான் இவன் என்று சிலிர்த்தது தேகம்!

''என்ன அமைதியா வரே! என்னடா, இவன் கூடப் போய் ஹோட்டலுக்கு போறோமென்று வருத்தமா இருக்கா?'' திடீரென்று கேட்டான்.

''ம்... இவ்வளவு அருமையான நண்பரை நமக்கு கடவுள் குடுத்திருக்காரேன்னு ரொம்ப சந்தோஷமா இருக்கு... ஐயம் சோ லக்கி!'' நெகிழ்ந்து வந்தன வார்த்தைகள்!

''அவ்வளவுதானா? ப்ச்... நான் என்னென்னவோ எதிர்பார்த்தேன்'' உதடு பிதுக்கி சலிப்பாகக் கூறினான் அவன்.

''ஏன்... வேற என்ன சொல்லணும்?''

''அதை அப்புறம் சொல்றேன்... ரெஸ்டாரெண்ட் வந்துடுச்சி!'' என்றபடி அந்த ஓட்டல் பார்க்கிங் ஏரியாவில் காரை நிறுத்தினான் அவன்.

* * *

பிறகு சாப்பிட்டுவிட்டு அவளை கெஸ்ட் ஹவுஸில் விட்டு விட்டுத் திரும்பி வரும்போதுதான், அவனுக்கு அந்த சிறு விபத்து நிகழ்ந்தது.

அவளையே நினைத்தபடி, கனவுகளுடன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான் அவன்.

தன் இதயமெனும் ஒற்றைக் கதவு திறந்து, அதில் தேவதையாய் அவள் நுழைந்திருப்பதை, இப்போது அவனால் உணர முடிவதாய்!

ஆனால் தூரத்து கானல் நீர் வாழ்வில் தாகம் தீர்க்குமோ... என்றெண்ணும்போதே, உள்ளார்ந்த தகிப்பு வந்தது.

அந்த வேகத்துடன் அந்த வளைவில் அவன் திரும்பிய போது, ஜீப்ரா கிராசிங்கில் திடீரென்று கடந்த அந்த வயதானவரை அவன் கவனிக்கவில்லை.

அவரை இடிக்காமல் தவிர்த்து காரைத் திருப்ப நினைத்து ப்ளாட்ஃபார்மில் கார் இடித்ததில், அவன் முகம் பக்கவாட்டுக் கதவில் வேகமாக மோதிவிட, நெற்றியில் ரத்தத் துளிகள் உற்பத்தியாக ஆரம்பித்தன.



அந்த அதிர்ச்சியில் அப்படியே மயங்கிச் சரிந்தவனை உடனே அருகிலிருந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதித்தனர்.

## 11

ப்ரஜனுடைய வீட்டிற்கு ஃபோனில் தகவல் தெரிவிக்கப்பட, உடனே பதறிப் போனார் நளினி.

மறுகணமே அவர் ஹம்சத்வனியைத் தொடர்பு கொள்ள, அவளோ செய்வதறியாது தவித்துப் போனாள்.

அப்போதுதான் உடை மாற்றிவிட்டு, அவள் ஓய்வெடுக்க ஆரம்பித்திருந்தாள்.

திடீரென்று அவளுடைய செல் ஒலிக்க, எடுத்தால் ப்ரஜனின் வீட்டிலிருந்து ஜோதிதான் பேசினார்.

விபரம் அறிந்தவுடன், அவனுடைய அம்மாவை கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படி கூறியவள், நளினியிடமும் பேசி ஆறுதல் சொல்லிவிட்டு வைத்தாள்.

மறுகணமே, மனம் பதறி அழ ஆரம்பிக்க, உடனே ஒரு டாக்ஸியை அமர்த்திக் கொண்டு மௌண்ட் எலிசபெத் ஹாஸ்பிடலுக்குப் பறந்தாள்.

அவள் அங்கு சென்றபோது, அவனுக்கு நினைவு வந்திருந்தது.

வலது நெற்றியின் ஓரத்தில் தையல் போடப்பட்டிருக்க, மற்ற காயங்கள் ஏதுமின்றி, ப்ரஜன் இயல்பாகவே இருந்தான்.

ஆனால், அவனுக்குத் தான் பெரும் பதட்டமாய்!

கலங்கிய விழிகளும், கசங்கிய முகமுமாய், அவனை அங்கு அவன் சத்தியமாக எதிர்பார்க்கவில்லை.

"என்னாச்சு ப்ரஜன்! இப்பதான் ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி என்னை வீட்டிலே ட்ராப் பண்ணினீங்க... கடவுளே நான் எவ்வளவு பயந்து போயிட்டேன் தெரியுமா?"

விழிகள், நீரை அருவியாய் பொழிய ஆரம்பித்தன.

"ஹேய்... எனக்கு ஒன்னுமில்லை... சும்மா மூனு தையல் போட்டிருக்காங்க.. சரியாயிடும்! சி.டி. ஸ்கேன் எடுத்தாச்சு... எந்த ப்ராப்ளமும் இல்லைன்னுட்டாங்க... புரியுதா? முதல்லே இந்த அழுகையை நிறுத்து!"

உரிமையுடன் மென்மையாகக் கடிந்தான்.

மெதுவாகத் தன் விழிகளைத் துடைத்தவள், "நிஜமாவே ஒன்னும் பயமில்லையே?" தவிப்புடன் சிறு குழந்தையாய் வினவினாள்.

"ஊஹூம்... நிஜம்மா! ஆனா... எல்லாம் உன்னால தான்..."

உதட்டோரங்கள் துடித்தபடிக் கூறினான் அவன்.

"என்னாலயா... நான் என்ன செஞ்சேன்...?"

புரியாமல் அவள் கேட்க, "ம்... உன்னைப் பத்தி நினைச்சிட்டே அந்த ஜீப்ரா கிராசிங்லே திரும்பினேன்... நிறுத்தியிருக்கனும்..! மனசு ரொம்ப உற்சாகமா றெக்கை கட்டிப் பறந்துட்டிருந்ததா... கவனம் அதிலே இல்லை...

"ஒரு வயசானவர் திடீர்னு கிராஸ் பண்ணினாரு... அவரைத் தவிர்க்கறதுக்காக திருப்பி ப்ளாட் ஃபார்மிலே



இடிச்சிட்டேன்... சீட் பெல்ட் போட்டு இருந்தேன்... லூசா இருந்திருக்கும் போலருக்கு... அதான் சைடிலே முகம் இடிச்சிடுச்சி... எனக்கு இது ஒரு பாடம்...

"ஆனா, இதிலயும் ஒரு சின்ன சந்தோஷம்...! இந்தக் காயம் வடுவாகி உன்னைக் கடைசி வரைக்கும் எனக்கு நினைவு படுத்திட்டே இருக்குமே... ம்..?"

ஒற்றைக் கண் சிமிட்டி புருவம் உயர்த்திக் கேட்டான்.

உடனே சரிந்து அமர்ந்து, முகத்தை கைகளில் பொத்திக் கொண்டு அழ ஆரம்பித்தாள் அவள்.

"ஏய்... என்னாச்சு... அழக்கூடாது!... இதுக்குப் போய் அழுவாங்களா? எனக்கு எப்பவுமே அழுமூஞ்சிகளைக் கண்டாலே பிடிக்காது..." மெதுவாக நிறுத்தினான்.

அவனுடைய வார்த்தைகள், அவளுடைய புலன்களை விதிர்க்கச் செய்ய, நெஞ்சுக்குள் பதறியபடி, கண்களைத் துடைத்து நிமிர்ந்தாள்.

"ஆனா என்னவோ தெரியலை... அழு மூஞ்சியா இருந்தாலும் இந்தப் பொண்ணை ரொம்பப் பிடிச்சிருக்கு."

குறும்புடன் கிசுகிசுப்பாய் அவன் கூற, சட்டென்று உறைந்து போனாள் அவள்.

த்வனிக்குள் மகிழ்ச்சிச் சாரலைத் தூவின... அவனுடைய ரகசிய வார்த்தைகள்.

அவனையே பிரமிப்புடன் நோக்கியபோது, "என்ன இப்படி திருதிருன்னு முழிக்கிறே... வில் யூ மேரி மீ?" சட்டென்று மென்குரலில் கேட்டான் அவன்.

* * *

உலகமே ஒரு கணம் சுற்றாமல் நின்று, அண்ட சராசரங்களற்ற பெருவெளியில் தான் மட்டும் தனித்து நிற்பது போன்ற ஒருவித உணர்வில், திக்குமுக்காடிப் போனாள் அவள்.

இமயத்தையே உள்ளங்கையில ஏந்திய பிரமிப்பு வருவதாய்!

உள்ளுக்குள்ளே காதல் பாரம் கனமாய் பரவ ஒரு கணம் இயங்காது நின்றது... இவ்வுலகம்!

ஆழ் மனதில் உறைந்திருந்த நேசம்... என்னை வெளிப்படுத்தி விடேனென்று தவிக்க ஆரம்பிப்பதாய்...!

என் உள்ளத்தில் உன்னையன்றி யாருமில்லையோ என்ற பரவசம் எழ, ''என்ன சொன்னீங்க..?'' நம்ப முடியாமல் அவள் கேட்டாள்.

''நீ சரியாத்தான் கேட்டே... என்னைக் கல்யாணம் செஞ்சுக்கிறியா? என் வாழ்நாள் முழுக்க என்னோடத் துணையா வருவியா? என்ன கஷ்டம் வந்தாலும் என்னை விட்டுப் பிரியாம இருப்பியான்னு கேட்டேன்!'' இப்பவாவது புரியுதா?''

சீரியஸான தொனியில் கேட்டான் அவன்.

சட்டென்று முகம் இளகி, அவளுடைய கன்னங்களில் இரு வெட்க மொட்டுக்கள் வேகமாக அரும்பின... ஏனோ முதல் சந்திப்பிலேயே அவன் தன் இதயம் நுழைந்து விட்டதும் புரிந்தது!

உடல் சிலிர்த்து இதயம் நெகிழ்ந்து விட, 'இதை... இதைத்தான் உன்னிடமிருந்து இத்தனை நாட்களாக எதிர்பார்த்துத் தவமிருந்தேன்...' என்று கூற வேண்டும் போல்!



ஆனால்... வார்த்தைகள் வராத மௌனத்தில் பரிதவித்து நின்றாள் அவள்.

''ஏய்.. எப்படித்தான் இப்படி பதிலே சொல்லாம உன்னால அழுத்தமா கற்பாறை மாதிரி இருக்க முடியுதோ?

''உன் முகமும், வெக்கமும் எனக்குத் தேவையான பதிலைச் சொன்னாலும், அதை உன் வார்த்தைகள் கேட்கணும்னு நான் பரிதவிச்சு நிக்கறது உனக்குப் புரியலையா?

''ஹும்... எனக்கு உன்னை இந்த நிமிஷமே என்னென்னவோ செய்யணும் போலருக்கு!'' என்றான் ப்ரஜன் கிசுகிசுப்பான குரலில்!

புதிதாய் வந்த வெட்கம், போர்வை போல் செம்மையாய் முகத்தை மறைக்க, ''நான்... என்ன சொல்றது...?'' தவிப்புடன் நிறுத்தினாள் அவள்.

''என்ன சொல்றதா? நீதாம்மா சொல்லணும்! இதுக்காக வேற யாராவது 'ப்ராக்ஸி' வச்சா சொல்ல முடியும்... இப்படித் தடுமாறினா என்ன அர்த்தம்... பிடிச்சிருக்குன்னு எடுத்துக்கலாமா?''

அமர்ந்த குரலில், கிசுகிசுப்பும் ஏக்கமும் விரவிப் பரவ அவன் கேட்டபோது, தேகம் சிலிர்த்து உணர்வுகள் மரத்துப் போயின.

அவனுடைய குறும்பும், வசீகரமும், அவளுடைய வார்த்தைகளைக் கட்டிப் போட, மெதுவாகத் தலையசைத்தாள்.

''இப்படி ஒண்ணுமே சொல்லாமத் தலையசைச்சா... சொன்னாத்தானே புரியும்.. ம்?''

அவன் குறும்புடன் கேட்க, ''ம்... பிடிச்சிருக்கு'' எங்கோ பார்த்தபடி கூறினாள் அவள்.

''எது... அந்த சுவரிலே மாட்டியிருக்கே... பெயிண்டிங்கையா?... அதைப் பாத்து சொல்றே?'' அந்த ஏக்கமும் தாபமும் கசிந்தன அவன் குரலில்!

''ப்ரஜன்... ப்ளீஸ்... புரிஞ்சுக்கங்க! ஹூம்!'' வெட்கத்தோடு செல்லமாகச் சிணுங்கினாள் அவள்.

''ஏய்! இப்படி எல்லாம் சிணுங்கினா... அப்புறம் எனக்கு மூட் வந்துடும்! அப்புறம் இந்த ஹாஸ்பிடல் ரொமான்டிக் ப்ளேஸ் ஆகிடும்...

''நான் கொஞ்சி நீ பார்த்ததில்லை இல்லை.. அப்புறம் அதை இப்பவே பாக்கற மாதிரி ஆயிடும்..! எனக்கு நேரடியான பதில் வேணும்... அதுவும் இப்பவே... என்னால இனிமே காத்திட்டிருக்க முடியாது!'' சீண்டலாகக் கூறினான் ப்ரஜன்.

ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்தவள், ''சரி... நானும் உங்களை விரும்பறேன்... போதுமா?'' வெட்கச் சிரிப்புடன் முணுமுணுத்தாள்.

* * *

மறு கணமே, அவன் முகம் மின்னலாய் ஒளிர்ந்தது.

அவனுடைய பதில் தன் வாழ்க்கையை மிகவும் அர்த்தமுள்ளதாக ஆக்குவதையும்... தன்னுடைய கனவுகள் நிறைவேறப் போகின்ற இனி வரும் நிமிடங்கள் ரம்யத் தருணங்களாகவும் தோன்றின.

ஒப்பனை இல்லாத அந்த இயல்பான அழகிய வெட்கப் புன்னகை... வெகுவாய் அவன் இதயம் கவர்வதாய்!



மிக மென்மையாக... அதிர்ந்து இசைக்காத மெல்லிய யாழின் மீட்டலாய் அவளுடைய வார்த்தைகள் சுகமாய் உள்ளே பரவின.

''நீ மட்டும் என்னுடன் இருக்கிறேன் என்று சொல்... அந்த நிலவையே விலைக்கு வாங்கி அதில் ஒரு சிறு வீடு கட்டி உனக்குப் பரிசாய் அளிக்கிறேன்'' என்று அவளிடம் கூற வேண்டும் போல்!

உடனே அவன் விழிகள் குறுகுறுப்பாய் அவளிடம் பதிந்தன...

''என்ன கேட்டே... போதுமான்னா? ஊஹூம் இது போதாது! எத்தனை நாளாக் காத்திட்டிருக்கேன்... பக்கத்துல வந்து ஒரு 'உம்மா' கூடத் தர மாட்டியா?'' ஏக்கத்துடன் கேட்டான் அவன்.

உடனே பதறிப் போனவள், ''ஊஹூம்... அதெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம்தான்!'' சிணுங்கலாக மறுத்தாள்.

''சே... பெண்கள் எங்கேருந்து தான் கண்டுபிடிச்சாங்களோ இந்த வார்த்தைகளை...! முதல்லே இந்த வார்த்தையையே அகராதியில பேன்ட் பண்ணணும்...

''பாவம்! ஒரு பேஷண்ட் கேக்கிறானேன்னு கொஞ்சமாச்சும் அக்கறை இருக்கா?'' கண்களில் சிறு செல்லக் கோபத்துடன் முனகினான்.

உடனே அவளுக்குள்ளும் சிறுவலி!

''சாரி... ப்ரஜு... என் மேலக் கோபமா?''

''ம்... கொஞ்சம் கோபம்தான்...! ஆனா இப்ப என்ன சொன்னே? திரும்பிச் சொல்லு... கோபம் அப்படியே குறைஞ்சிடும்'' பரபரப்பாய் வினவினான்.

"நான் என்ன சொன்னேன்..? சாரின்னேன்..."

''அதுக்கு அப்புறம்... ம்..?"

''ம்... ப்ரஜுன்னு சொன்னேன்..! மனசுக்குள்ளே அப்படியே நினைச்சிப் பழக்கமாயிடுச்சா... அதான் தெரியாம வந்திடுச்சி!"

"இப்போ எனக்கு எப்படி இருக்கு தெரியுமா? உலகத்திலேயே அதிகமான சந்தோஷத்தோட இருக்கற மாதிரி இருக்கு! தேங்க் யூ ஹனி!"

அவன் கூறியதும், சிலிர்த்துப் போய் நிமிர்ந்தாள் அவள்.

''ம்... அன்னிக்கு நீ கேட்டியே... உன் பெயரை எப்படி ஷார்ட் பண்ணப் போறேன்னு... இப்படித்தான்! உன்னோட முதல் எழுத்தும் கடைசி எழுத்தும் மட்டும் சேர்த்திருக்கேன்."

கண் சிமிட்டியபடி உல்லாசமாகக் கூறினான்.

''ஓ!'' என்றபடி வியப்புடன் பார்த்தவளிடம், ''எவ்வளவு கஷ்டப்பட்டு கண்டு பிடிச்சிருக்கேன்... அதுக்கு எனக்கு ஏதாவது பரிசு கிடையாதா?'' ஊடலுடன் கேட்டான்.

உடனே மென்மையாக அவன் கரத்தைப் பற்றியவள், புறங்கையில் மெல்லத் தன் இதழ் பதித்தாள்.

''ஏய்... அப்படியே அதை இங்கே குடுத்தா நான் இன்னும் சந்தோஷப்படுவேன் இல்லை..? கையா பேசிச்சு..! இந்த உதடுகள்தானே ஹனின்னு சொன்னது?''

தன் உதடுகளை வருடியபடி கேட்டான்.

''ச்சீய்... போங்க!'' என்றபடி எழுந்து, வெளியேற முயன்றாள் அவள்.



"ஹனி... என்ன... பேஷண்ட்டை இப்படி அம்போன்னு விட்டுட்டு ஓடறே? அவ்வளவுதான் உன் காதலா?"

அவள் கையைப் பிடித்துத் தடுத்தபடி கேட்டான்.

''ப்ளீஸ்... விடுங்க ப்ரஜு... யாராவது வந்திடப் போறாங்க..."

''ஓ... அப்போ அதுதான் உன் பயமா? யாராவது பாத்திட்டா என்ன பண்றதுன்னா..? உடனே ஒரு ஆளில்லாத தீவுக்குப் போயிடலாம்... இங்கே அது மாதிரி சில தீவுங்க இருக்கு... அங்கே போயாவது நான் விரும்பினதை நீ குடுக்கறியான்னு பார்ப்போம்.''

அவன் ஒற்றைக் கண் சிமிட்டியபடி கேட்க, வெகு நேரம் அவளால் சிரிப்பை அடக்க முடியாது போயிற்று..!

பிறகு அவனுடைய அம்மாவிற்கு போனில் விபரம் கூறியவள், அவனை டிஸ்சார்ஜ் செய்து டாக்ஸியில் வீட்டிற்கு அழைத்துச் சென்றாள்.

''தூய்மையான காதல் ஒரு தணியாத வேட்கை... இனிமையான தொடர்கதை... அணையாத நெருப்பு!'' ஆபிண்டனின் வரிகளுடைய நிஜம் இன்று புரிந்தது.

## 12

டாக்ஸியில் செல்லும்போது, இருவரும் பின்புறம் அமர்ந்திருந்ததால், ப்ரஜன் அவளுடைய கையை எடுத்துத் தன் விரல்களுடன் அழுத்தமாகப் பிணைத்துக் கொண்டான்.

முன்புறம், டிரைவர் முகமறியாதவராக இருந்தாலும் தமிழராக இருந்ததால், அவளால் எதுவும் பேச இயலவில்லை.

ஆனால், அவனுடைய மென் ஸ்பரிசமும், அருகாமையும் அவளைப் பெரிதும் பேதலிக்கச் செய்வதாய்!

முகம் சிவக்கத் தலைகுனிந்து அவள் அமர்ந்திருந்த போது, ''இப்படியே வாழ்நாள் முழுக்கப் போயிட்டே இருக்கலாம்னு தோணுது... ஆச்சர்யமா இருக்கு... ஒரு பெண்ணோட தொடுகைக்கு இவ்வளவு சக்தியா?''

அவள் காதருகில் வெப்பமாய் தன்னுடைய மூச்சுக் காற்று வருடக் கேட்டான்.

அதைக் கேட்டதும் அவளுடைய முகம் இன்னும் ஆழ்ந்த சிவப்பிறகு மாற, ஓரக் கண்ணால் அதை நோக்கியவனின் உடல், மௌனச் சிரிப்பில் குலுங்கியது.

பிறகு வீடு வந்து சேர்ந்து, டாக்ஸிக்கான பணத்தை அளித்துவிட்டு உள்ளே செல்லும் வரை, அவளுடைய உணர்வுகள் அவள் வசம் இல்லை.

''ரொம்ப தேங்க்ஸ் ஹம்சத்வனி!'' என்றபடி பரிவுடன் அணைத்துக் கொண்ட நளினியைப் பார்த்ததும், அது வரை உறைந்த கணங்கள் உயிர்ப்புடன் மீண்டன.

''இதுக்கு எதுக்கம்மா தேங்க்ஸ் எல்லாம்? எனக்கு ஒண்ணுன்னா நீங்க பாத்துக்க மாட்டீங்களா? எப்படிம்மா இருக்கீங்க... ஒண்ணும் பயந்திடலையே?'' ஆதரவாக விசாரித்தாள்.

''முதல்லே கொஞ்சம் பயந்தேன்... அப்புறம் எங்க ஃபேமிலி டாக்டர் பேசினாரு. பயப்பட ஒண்ணுமில்லைன்னாரு..! நீ அங்கே வந்துட்டேன்னு சொன்னப்புறம்,



ப்ரஜனைப் பார்த்துக்க ஆள் வந்தாச்சுன்னு நிம்மதியா இருந்தது.'' கனிவுடன் புன்னகைத்தபடி கூறினார்.

அதைக் கேட்டதும், அவளுக்குள் பெரும் சிலிர்ப்பாய்..!

நளினிக்கும், ஓரளவு அவர்களுடைய விஷயம் தெரிந்திருக்குமென்று தோன்ற, தன் தாய் தந்தையை நினைத்த போதுதான் மனதில் பெரும் விதிர்ப்பு வந்தது.

அவளையே அந்த நிமிடம் ஊடுருவிக் கொண்டிருந்த ப்ரஜனுடைய காயத்தை மெதுவாக வருடிய நளினி, ''நீ போய் ரெஸ்ட் எடுத்துக்கப்பா ப்ரஜன்...'' என்றபடி அவளிடம் திரும்பினார்.

அவளுடைய முகவாட்டம் அவருக்கு எதை உணர்த்தியதோ, ''ஹம்சத்வனி! நீயும் போம்மா! அவனுக்குக் கொஞ்சம் ஹெல்ப் பண்ணிட்டு வறியா.. ப்ளீஸ்'' என்றார்.

''சரிம்மா...'' என்றபடி அவள் அவனைப் பின் தொடர, தன் அறைக்குச் சென்றதும் கதவை அழுந்த சாத்தினான் அவன்.

அவள் திடுக்கிட்டுப் பின்னடைய, ''ஏய்... என் கிட்டே என்ன பயம்? உன்னைக் கடிச்சி விழுங்கிடுவேனோன்னா... ம்...?''

''என் காதலை நீ ஏத்துக்கிட்ட சந்தோஷத்தைக் கொண்டாடணும் போல இருந்தது. அதான்!'' கண்களில் குறுகுறுப்புடன் நிறுத்தினான்.

உடனே மிரட்சியுடன் விழித்தவளைப் பார்த்ததும், ''என்ன... உடனே திருதிருன்னு முழிக்கறே? இங்கே வா... வந்து உக்காரு'' என்றபடி சோபாவில் அவளை அமர வைத்து விட்டு எதிரே அமர்ந்து கொண்டான்.

''இப்படியே தொடாம எதிர்லே... அதுவும் கொஞ்சம் தள்ளியிருந்தா, உனக்கு ஓகே தானே? சரி... இப்படியே உக்காந்து உன்னைப் பாத்துட்டே இருக்கேன்.''

அவன் சீரியஸாக முகத்தை வைத்தபடி கூற, அவளுக்குள் ஊற்றாய் பீறிட்டுக் கிளம்பியது சிரிப்பு!

அடக்க முடியாமல் கண்களில் கண்ணீர் துளிர்க்கும் வரை அவள் சிரிக்க, ரசனையுடன் அவளையே பார்த்தபடி அமர்ந்திருந்தான் அவன்.

அவள் சிரித்து முடித்ததும், ''எனக்கே ஆச்சர்யமா இருக்கு ஹனி... என்னை நினைச்சா! இதுவரைக்கும் எத்தனை பெண்களைப் பாத்திருப்பேன்... எனக்குள்ளே சின்ன சலனம் கூட வந்ததில்லை..!

''வாழ்க்கையில் இன்னும் முன்னேறணும்கிற லட்சியம் இருந்தாலும், அடிப்படையில வசதியானவனாவே இருந்ததாலே பெரிசா கஷ்டப்பட்டதில்லை...

''ஆனா, எந்தப் பொண்ணுமே என்னை இந்த அளவு ஈர்த்ததில்லை.. என் உயிருக்குள்ளே உணர்வுகளுக்குள்ளே இவ்வளவு கலந்ததில்லை... இதயத்துக்குள்ளே எப்பவுமே தன் நினைவைப் பதிச்சதுமில்லை!

''நீ மட்டும் எப்படி? உன்கிட்ட எது என்னைக் கவர்ந்தது... இந்த அழகு முகமா? அந்த இன்னொசென்ஸா... கண்கள்லே கசியற அந்தத் தாய்மை உணர்வா? புத்திசாலித்தனமா? என் மேல காட்டற ப்ரியமா... சொல்லத் தெரியலை...

''பட் ஐ யம் மேட்... ஐ நீட் யூ... ஐ அட்மையர் யூ... ஐ காண்ட் லிவ் வித்தௌட் யூ! அது மட்டும் புரியுது!''



உள்ளூரக் குமுறும் உணர்ச்சிகளை, வார்த்தைகளில் பிரதிபலித்து முடித்தான்.

அந்த நிமிடம் அவளுக்கு ''என்ன தவம் செய்தனை... இவன் உயிரும் உணர்வும் உருகி என்னைத் தன் இணை என்றழைக்க'' என்று பாட வேண்டும் போல்!

உள் உணர்வுகள் சிதாரின் தந்திகளாய் சுண்டப்பட்டு, துடித்துச் சிலிர்த்தன.

''கடவுளே! இந்த நிமிடமே இவன் மடியிலேயே இறந்து விடும் பாக்கியத்தை எனக்குக் கொடுப்பாயா? இவனால் எவ்வளவு நேசிக்கப்பட்டிருக்கிறேன்?'' நெஞ்சம் பலவிதமாய் இறைஞ்சியது..!

* * *

விழி மூடி மௌனித்திருந்தவளின் முகமும், கண்ணோரம் ஜனித்த ஒற்றைத் துளியும் அவளுடைய உணர்வுகளைக் கண்ணாடியாய் அவன் முன் பிரதிபலித்தன.

திடீரென்று அவளுடைய காலருகே ஏதோ அசைவு!

உடனே பதறி அவள் விழிக்க, ப்ராஜுன்தான் அங்கு அமர்ந்திருந்தான்.

அவளுடைய மடியில் மென்மையாகத் தலை சரித்தவன், ''நான் வாழுற காலம் வரைக்கும் என்னைத் தாங்க... அமைதிப் படுத்த... தூங்க வைக்க இந்த மடி வேணும்... தருவியா ஹனி?'' மெல்லக் கேட்டான்.

அவளுக்கு உடனே சிலிர்த்தது...

அவன் காதருகில் குனிந்தவள், ''தருவேன் ப்ராஜு''... நம்ம குழந்தை வர வரைக்கும்!'' குறும்புடன் கூறினாள்.

சட்டென்று நிமிர்ந்தவனின் விழிகள் கனிந்திருந்தன.

''தேங்க் யூ ஹனி!'' என்றபடி எழுந்து சென்று தன் படுக்கையில் நிம்மதியுடன் கண் மூடிச் சாய்ந்து கொண்டான் அவன்.

அப்பாடா என்ற ஒருவித நிம்மதி தெரிந்தது அவனிடம்!

அவளுக்குத் தான் என்ன செய்வதென்று புரியாத ஒரு நிலை!

அவள் தவித்திருக்கும்போதே, ''நான் கீழேயே கேக்கணும்னு நினைச்சேன்... ஏன் உன் முகம் திடீர்னு அவ்வளவு கவலையா மாறிச்சி? என்ன ப்ராப்ளம்?'' அக்கறையாக விசாரித்தான்.

''இல்லை... அப்பா அம்மாவை நினைச்சா பயமாயிருந்தது... இங்கேயாவது அம்மா பரவாயில்லை... புரிஞ்சிக்கிட்டாங்கன்னு நினைக்கிறேன்... ஆனா எங்க வீட்டிலே...''

அவள் முடிப்பதற்குள் அருகில் வந்து, ஒற்றை விரலால் அவள் இதழ்களை மூடினான் அவன்.

''அவங்க உடனே ஒத்துப்பாங்கன்னு எப்படிச் சொல்ல முடியும் ஹனி! நாம ஒத்துப்போமா... நம்ம பசங்களுக்கு எது நல்லதுன்னு யோசிக்க மாட்டோமா? அது மாதிரித் தானே அவங்களும்! நான் எப்படின்னு அவங்களுக்கு எப்படித் தெரியும்... உனக்கு மட்டும் தானே தெரியும்! அதைப் புரிய வைக்க வேண்டியது நம்ம பொறுப்பு..!

''கொஞ்சம் போராடித்தான் அவங்க கிட்டே நாம சம்மதம் வாங்க முடியும்... இதுக்குப் போய் பயப்படறே? நம்ம காதல் நிச்சயமா ஜெயிக்கும்!''



அவன் உறுதியுடன் கூற, அதுவரை நம்பிக்கையின்றித் தவித்திருந்த அவள் மனதில் அந்த ஒற்றை வார்த்தை... யானை பலம் தருவதாய்!

சுழற் காற்றிலும் அணையாத சுடர் விளக்காய் ஒளிர்ந்து பிரகாசிப்பதாய்!

''தேங்க் யூ ப்ராஜு. ஒரு வார்த்தையிலே எனக்கு எதையும் சமாளிக்கலாம்கிற ஒரு உணர்வைத் தந்ததுக்கு! மனசு முழுக்க கோடி தைரியச் சிறகு விரிச்சிப் பறக்க வச்சதுக்கு!''

உருகிக் கூறினாள்.

''வெல்கம்! ஆனா இன்னும் கொஞ்ச நேரம் இப்படித் தனியா இருந்தா... அதுவும் இந்த அழகுத் தேவதைக்கு பக்கத்துலே... அவ்வளவுதான்! என்னோட உறுதியெல்லாம் பொடிப் பொடியா சிதறிடும்...

''நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது! அப்புறம்... உனக்குத் தான் ரிஸ்க்! வா... கீழே போகலாம்...!'' என்றபடி எழுந்து கை நீட்டினான்.

அவன் கைகளுக்குள் தன் கைகளைப் பதித்தபோது, இன்று எழுத டயரியின் பக்கங்கள் போதாதென்று தோன்ற, அவளுடைய இதழோரம் வெட்கப் புன்னகையொன்று ஜனித்தது.

''என்ன விஷயம்... என்னைச் சுழட்டிப் போடற சுனாமி மாதிரி சிரிக்கிறே? ம்..?''

''இல்லை... என் டயரிப் பக்கமெல்லாம் இன்னிக்குத் தீர்ந்துடப் போகுதுன்னு நினைச்சேன்... அதான்!'' கூச்சத்துடன் கூறினாள்.

''ஓ! உனக்கு டயரி எழுதற பழக்கம் கூட உண்டா! ரொம்ப நல்ல பழக்கம்! ஒரு நாள்... நம்ம மேரேஜுக்கு அப்புறம், எல்லாத்தையும் படிச்சிப் பாத்து உன்னை ஒரு வழி பண்றேன்... இரு!''

ஒற்றை விரல் உயர்த்தி எச்சரித்தபடி, அவளைக் கீழே அழைத்துச் சென்றான் அவன்.

அவர்களைக் கண்டதும், ''எம்ப்பா ரெஸ்ட் எடுக்கலை?'' நளினி கேட்டார்.

''அம்மா! இவ சாப்பிட்டதும் நம்ம டாக்ஸி டிரைவரை வரவழைச்சி அனுப்பணும்... அதான்..! டின்னர் ரெடியா?'' அவரிடம் கேட்டான்.

''ம்... ரெடிப்பா! ஜோதியை சர்வ் பண்ணச் சொல்றேன்...'' என்று எழுந்தவரை அமர்த்தினாள்.

''நீங்க உக்காருங்கம்மா... நான் எல்லாம் பாத்துக்கறேன்'' என்றபடி கிச்சனுக்குள் சென்றாள்.

பெருமிதத்துடன் அவர் விழிகள் அவளையே தொடர, அவருடைய கையைப் பிடித்தபடி அருகில் அமர்ந்து கொண்டான் ப்ரஜன்!

''அம்மா!... ஹனியை உங்களுக்குப் பிடிச்சிருக்கா?'' மெதுவாகக் கேட்டான்.

''ம்... ரொம்ப! ப்ரஜன்... இதுவரைக்கும் படிப்பு விஷயத்திலயும் சரி... ஸ்போர்ட்ஸ்லே, தொழில்லே, இப்படி எதுவா இருந்தாலும் உன் முடிவுக்கு தான் நாங்க விட்டிருக்கோம்... ஏன்னா உன் முடிவு சரியாத்தான் இருக்கும்னு அப்பா சொல்வாங்க... ஆனா, இது தான் உன் சாய்ஸ்லேயே பெஸ்ட்டுன்னு நான் நினைக்கிறேன்.''



''தேங்க் யூ மம்மா!'' கூறிவிட்டு எழுந்து சமையலறைக்கு சென்றவன், வேண்டுமென்றே அவளைச் சீண்ட ஆரம்பித்தான்.

''ஏய்... இங்கே என்ன பண்ணிட்டிருக்கே? அங்கே உனக்காக ஒருத்தன் ஆசையாகக் காத்திட்டிருக்கேன்... நீ என்னடான்னா இங்கேயே இருக்கே! எனக்கு சமையல்காரப் பொண்ணு எல்லாம் வேணாம்ப்பா!'' அவள் காதருகில் கிசுகிசுத்தான்.

உடனே அங்கு ஜோதி இருப்பதை ஜாடையாக நினைவு படுத்தியவள், ''ப்ளீஸ்... கொஞ்ச நேரம் சும்மா இருக்கீங்களா? சமத்தா போய் டைனிங் டேபிள்லே உக்காருங்க... வரேன்'' அடிக் குரலில் கூறினாள்.

''ஏய்... உன்னைப் பாத்தாலே அப்படியே எனக்கு பரபரன்னு இருக்கு... கையக் காலை வெச்சுக்கிட்டு சும்மா இருன்னா எப்படி இருக்கிறது...? என் கஷ்டம் யாருக்குப் புரியுது? ஹூம்...''

நீளமாக ஒரு போலிப் பெருமூச்சு விட்டபடி வெளியேறினான்.

உதடுகளைக் குறும்பாகச் சுழித்துச் சிரித்தபடி, அவள் பரிமாற ஆரம்பித்தாள்.

அவனைக் காணாமல் மனமும், விழிகளும் அலை பாய, தேடிச் சென்றாள்.

வாசலில், காரின் சிறு ரிப்பேர் வேலைகளுக்காக மெக்கானிக் வந்திருக்க, அவரிடம் பேசிக் கொண்டிருந்தான் அவன்.

பிறகு மூவரும் சாப்பிட்டதும், அவள் விடை பெற்றுக் கிளம்பினாள்.

வாசல் வரை வந்து அவளை டாக்சியில் ஏற்றி விட்ட வன், "போய் சேர்ந்தவுடனே போன் பண்ணு" என்றான் அக்கறையுடன்!

"ம்... டேக் கேர் ப்ராஜு!" என்றபடி கிளம்பியவளின் விழிகளில், வெகு நேரம் அவன் உருவமே நிறைந் திருந்தது.

உலகையே உள்ளங்கையில் சுமந்த பிரமிப்பு வந்தது.

## 13

அறைக்குச் சென்றதும், உடனே அவனுக்கு போன் செய்து பேசிவிட்டு, மறுகணமே தன் டயரியை எடுத்து அமர்ந்தாள் அவள்.

அன்றையப் பக்கங்கள் இருவரின் அன்யோன்யத் தையும், பேச்சுக்களையும் ஒரு வரி விடாமல் பதிவு செய்தன.

நிலவையே மறையச் செய்கின்ற மேகமாய்... தன் பெற்றோரின் நினைவைக்கூட அவன் மறக்கச் செய்ததும், புரிவதாய்!

அவள் இமாலய சந்தோஷத்திலிருப்பதை... முதல் காதல் உயிர்த்து துளிர் கொண்ட அந்த அற்புத நொடியை... அழகான வார்த்தைகளால் வரி வடிவமாக்கின!

த்வனி, தான் இன்று இரண்டாவது முறை உயிர் கொண்டதை, உயிர்ப்புடன் எழுதினாள்.

"என் நினைவுகளை மலையளவு ஆக்கிரமித்திருக்கும் நீ... இன்று என் மடியில் உன் தலை சாய்த்தபோது மட்டும்,



எப்படி இலவம் பஞ்சாய் எடையற்று இருந்தாய்?" என்ற கேள்வியுடன் முடித்தாள், அன்றைய டயரியின் பக்கத்தை!

இதழ்கள் சிணுங்கலாய் மனதிற்குப் பிடித்த பாடல் வரிகளை முணுமுணுத்தன.

**"கோடி சுகம் வாராதோ... நீ எனைத் தீண்டினால்!**
**காயங்களும் ஆறாதோ... நீ எதிர் தோன்றினால்!**
**உடனே வந்தால் உயிர் வாழும்...**
**வருவேன்... அந் நாள் வரக் கூடும்!"**

அப்படியே தலையணையைத் தழுவியபடி உறங்கிப் போனாள் அவள்.

தொடர்ந்து வந்த நாட்கள்... அவர்கள் இணைந்திருந்த சோலைகளும், உலகை மறந்திருந்த வேளைகளுமே அதிகமாய்!

ஒருவருக்கென்றே மற்றொருவர் பிறந்த அந்த தேவ கணத்தை... விதியின் ரகசியத்தை அறிந்த வெற்றிக் களிப்பில் இருவரும் திளைத்திருந்தனர்.

ஒவ்வொரு நாளும், ஒருவரைப் பற்றி மற்றொருவர் ஆழமாகப் புரிந்து கொள்வதிலும்... ஒருவருக்காக மற் றொருவர், தங்களின் ரசனைகளை, கோப தாபங்களை மாற்றிக் கொள்வதுமென, அங்கு ஆத்மார்த்தமான இனிய உறவு மலர்ந்திருந்தது.

* * *

நாட்கள் வாரங்களாகி... பயண முனைப்புடன் விரைய ஆரம்பித்தன.

இப்போதெல்லாம், வாரக் கடைசி நாட்களில்... அது வும் ஞாயிறுகளில், ஹம்சத்வனி அவன் வீட்டிற்கு ரெகுல ராகச் செல்ல ஆரம்பித்திருந்தாள்.

தனிமையில் நத்தையாய் நகர்கின்ற மணித் துளிகள், அவனுடனும் நளினியுடனும் வேகமாக இனிதாகக் கழிந்து விடும்...!

அப்போதெல்லாம், நளினியின் பேச்சு பெரும்பாலும் அவர் கணவர் மேகநாதனைப் பற்றியும், மகனைப் பற்றியுமே இருக்கும்.

ஒருநாள் அதுபோல் அவர்கள் இருவருமாக அமர்ந்து பழைய ஆல்பங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தனர்... ப்ரஜன் குளிக்கச் சென்றிருந்தான்!

அவனுடைய சிறு வயதுப் புகைப்படங்கள், மிகவும் அழகாக இருந்தன.

அவள் ஆவலுடன் ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டு வரும்போதே, அவர் பேச ஆரம்பித்தார்.

''சின்ன வயசிலிருந்தே அவனுக்குக் கூச்சம் அதிகம்! என்கிட்ட கூட நினைவு தெரிஞ்சு குளிக்க வர மாட்டான்மா!

''அவன் மார்புல பெருசா ப்ரவுன் நிறத்தில படர்ந்த ஒரு மச்சம் இருக்கும்.

''அதை யாரும் பார்த்துடக் கூடாதுன்ற பயம் அவனுக்கு! ஒரு தடவை எங்கப்பா அதைக் காட்டி கேலியா ஏதோ சொல்லிட்டாங்க... அதிலிருந்தே அப்படித்தான்!

''அவங்கப்பா கூட கிண்டல் பண்ணுவாங்க... என்ன இவன் பொண்ணு மாதிரி இப்படி உடம்பைப் பொத்தி பொத்தி 'பாத் ரோபாலே' மூடிக்கிறான்.. பாப்போம்... கல்யாணம் செஞ்சுகிட்டு என்ன செய்யறான்னு என்கிட்ட கேலியா சொல்லுவாங்க!



''சின்ன வயசிலேயே அவனுக்கு மாடியிலே தனி ரூம் தான்..! ரொம்ப ப்ரைவசி எதிர்பார்ப்பான்... அவனோட பொருளை யாரும் உபயோகப் படுத்திடக் கூடாது!

''பழகாதவங்க கிட்டே பேசவே மாட்டான்... என் கிட்டே கூட லிமிட்டாதான் பேசுவான்... எங்க பேமிலி ஃப்ரண்ட் கைலாஷ் அண்ணாகிட்டே தான் கொஞ்சம் ஒட்டுவான்!

''ஆனா, உன்னைப் பத்தி என்கிட்ட பேசும்போது, அவன் கண்ணிலே தெரிந்த அந்த அசாத்திய பளபளப்பு... பேச்சில் தெரிந்த வித்தியாசமான உற்சாகம்... உன்னைப் பத்தின பேச்சுகளை நேரம் போறதே தெரியாம கண்கள் கனவிலே மிதக்க நிறையப் பேசினது... இதெல்லாம் என்னை ஒரு முடிவுக்கு வர வச்சிது...

''அவன் கொஞ்சம் கோபக்காரன்தான்... ஆனா ரொம்ப நல்லவன்மா...!' மனசிலே இருக்கறதை வெளியே சட்டுன்னு சொல்ல மாட்டான்...

''வெளியே தான் பாறை மாதிரி... ஆனா மனசு பூவாட்டம் மென்மையானதுன்னு எங்களுக்கு மட்டும் தான் தெரியும்! பாசம் காட்டினா அப்படியே ஒட்டிப்பான்.

''அவனை நீ நல்லாப் பாத்துக்கணும்... அன்பா... அவனுக்கு எல்லாமா நீ இருக்கணும்... நான் செய்ய மறந்ததெல்லாம் நீ அவனுக்கு செய்யணும்!

''உன் கிட்டே அவனை ஒப்படைச்சிட்டா, நான் நிம்மதியா இருப்பேன்...'' கலங்கிய விழிகளுடன் நிறுத்தினார்.

உடனே அவருடைய கையை ஆதரவாகப் பற்றியவள், ''நிச்சயமாப் பார்த்துப்பேம்மா... ஐ ப்ராமிஸ் யூ...! எந்தக்

காலத்திலயும், அவர் எந்த விதத்திலயும் காயப் படாமப் பாத்துப்பேன்..." உறுதியாகக் கூறினாள்.

அதே நிமிடம், அவன் குரல் பின்னாலிருந்து கேட்டது.

"என்ன... ரெண்டு பேரும் ரொம்ப சென்டிமென்ட்டா ஃபீல் பண்ற மாதிரி இருக்கு.. என்ன விஷயம்? என்னைப் பத்தித் தானே?"

"ஏன்.. எங்களுக்குள்ளே பேச வேற விஷயமே இருக்காதா என்ன? நாங்க அங்கிளைப் பத்திப் பேசிட்டிருந்தோம்."

நமட்டுச் சிரிப்புடன் அவள் கூறும்போதே, சோபாவில் அவளருகே வந்து அமர்ந்து விட்டான் அவன்.

புதிதாய் குளித்து விட்டு வந்தவன் மேல், சோப்... ஆஃப்டர் ஷேவ் லோஷன் இரண்டின் நறுமணமும் சேர்ந்து வீசி, அவளுள் புதுவிதக் கிறக்கத்தையும் பரவசம் செய்தன.

அவனுடைய அருகாமை வேறு அவளை வதைக்க, அவளுக்குள் ஊஞ்சலாடிய உணர்வுகளின் ஊர்வலத்தை, அவன் உடனே கண்டு கொண்டான்.

அந்த நிமிடம் எழுந்த நளினி, "நீங்க ரெண்டு பேரும் பேசிட்டிருங்க... நான் கொஞ்சம் போய் ரெஸ்ட் எடுக்கறேன்..." என்றபடி தன் அறைக்குச் சென்றார்.

உடனே அவள் தள்ளி அமர, "ஏய்... என்ன? நெருங்கி வந்தா விலகி விலகிப் போறே? நெருங்கி நாள் நீ ஏங்கி நிக்கப் போறே? நான் இருக்க மாட்டேன்" ஒரு ஊடலுடன் கூறினான்.

"ஏன்... எங்கே போவீங்க...?"



"ஊரிலே வேற பொண்ணா இல்லை? நான் 'இம்' முன்னா என் காலடியில விழ எத்தனை அழகிங்க இருக்காங்க தெரியுமா! ம்... அய்யாவோட பர்சனாலிட்டி அப்படி!" இல்லாத காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான்.

"அய்யோ... நினைப்புதான்... பாவம்! சரி... நான் தப்பிச்சேன்ப்பா! இனிமே நான் இங்கே வரமாட்டேன்... உங்க புது கேர்ள் ஃப்ரெண்டை எனக்கு அப்புறமா காட்டுங்க... நான் கிளம்பறேன்..."

வேண்டுமென்றே அவள் எழுவது போல் பாவனை செய்தாள்.

"அம்மா தாயே... இந்த ஒரு குட்டி ராட்சசி கிட்டே மாட்டிக்கிட்டு நான் படற பாடே போதும்! இன்னொண்ணா? அந்த எக்ஸ்பரிமென்ட்டுக்கெல்லாம் நான் தயாரா இல்லை... போதும்ப்பா சாமி!"

அவள் கையைப் பிடித்து இழுத்து அமர வைத்தான்.

"ம்... அந்த பயம் இருந்தா சரி!"

சுட்டு விரலைக் காட்டியபடி அவள் கூற, "அதெல்லாம் ஓகே தான்! ஆனா இந்த அழகுப் பெண்ணோட அகராதியில, 'உம்மா'ன்ற வார்த்தைக்கு மட்டும் இடமில்லைன்னு நினைக்கும்போதுதான், நெஞ்சுக்குள்ளே சின்னதா ஒரு வலி வருது...

"அது நாளடைவிலே ஒரு ஹார்ட் அட்டாக்காக் கூட மாறலாம்! அப்படி எனக்கு ஏதாவது ஆயிடுச்சின்னா, என் கடைசி ஆசையையாவது நிறைவேத்துவியா?" குறும்புடன் கேட்டான்.

"ஏன் இப்படி எல்லாம் பேசறீங்க?"

பதறிப் போய் அவள் கேட்க, ''அப்போ குடுத்துடு... சீக்கிரம்... யாராவது வந்துடப் போறாங்க..! ம்!'' அவ சரப்படுத்தினான்.

''ஒரு நிமிஷம்... நீங்க கண்ணை மூடுங்க! அப்ப தான்!''

அவள் கூற, கண்களை மூடுவது போல் பாவனை செய்து, பாதிக் கண்களால் குறுகுறுப்புடன் அவளையே நோக்கினான் அவன்.

ஹம்சத்வனி மெதுவாகக் குனிந்து, அந்த ஆல்பத்திலிருக்கும் சிறு ப்ரஜனின் புகைப்படத்தை, அழுந்த முத்தமிட்டாள்.

''போதுமா?''

கேட்டபடி அவள் நிமிர, ''ஏய்... இதெல்லாம் தப்பு! என்னை ஏமாத்திடலாம்னு மட்டும் நினைக்காதே!'' முகத்தை இறுக்கமாக வைத்தபடி கூறினான்.

''இது நிழற்படத்துக்கு... நிஜ ஃப்ரஜனுக்கு கல்யாணம் முடிஞ்சுதான்!'' கூறிவிட்டு அவள் எழுந்தாள்.

''இரு... ஒரு நாள் என்கிட்டே தனியா மாட்டாமலா போகப் போறே... அன்னிக்கு இருக்கு உனக்கு பூஜை! வட்டியும் முதலுமா சேத்து வசூலிக்கிறேன் பாரு!''

''சரி... அன்னிக்குப் பாக்கலாம்... இப்போ ஏதோ கடைக்குப் போகணும்னு சொன்னீங்களே... கிளம்பலாமா?'' சாதுவாகக் கேட்டாள் அவள்.

''ராட்சஸி.. இரு! ட்ரெஸ் மாத்திட்டு வரேன்'' என்றபடி மாடிப் படிகளில் தாவி ஏறினான் அவன்.

இப்படி ஒரு இனியவனைத் தனக்குப் பரிசாய் அளித்த அந்த இறைவனுக்கு, உடனே நன்றி கூறியது இதயம்!



எதைத் துறப்பது... எதை விடுப்பது என்று புரியாத வாழ்வின் இறுதித் தருணத்திலும், உன்னை மட்டும் மறவாதிருப்பேன் என்று உணர்வுகள் உறுதியளித்தன.

அன்றைய டயரியின் பக்கத்தில் அவனுடைய ரகசிய மச்சத்தைப் பற்றிய விபரம் குறும்புடன் இடம் பெற்றது.

என்றாவது அதைக் காணும் வேளையில், அவனைக் கிண்டல் செய்து சீண்ட வேண்டும் என்ற வார்த்தைகளுடன், அந்தப் பக்கத்தை நிறைவு செய்தாள் அவள்.

உடனே கண்களை மூடிக் கனவுகளுக்குள் நுழைய, அங்கும் ப்ரஜனே நிறைந்திருந்தான்.

## 14

மறு வார இறுதியில், ஞாயிறன்று இருவரும் 'சென்டோசா' தீவிற்குச் சென்றனர்.

அவள் வந்ததிலிருந்தே, அங்கு செல்ல வேண்டுமென்று ப்ரஜன் கூறிக் கொண்டிருந்தான்.

அந்த அழகிய தீவிற்குக் கேபிள் காரில் பயணித்த போது, அவள் மனம் எடையற்று லேசானது போல் ஒரு உணர்வு!

அவளின் குழந்தை போன்ற உற்சாகத்தை, விதம் விதமான கோணங்களில் தன் ஹேண்டிகேமில் பதிவு செய்து கொண்டிருந்தான் ப்ரஜன்!

அங்கு, நிறைய பொழுதுபோக்கும் விஷயங்கள் இருந்தன.

ஒவ்வொரு இடமாகச் சுற்றி வந்தபோது, அழகிய மிக... நிற டால்ஃபின்களின் உற்சாகமான ஷோவும், அழகிய வண்ணங்களுடன் அழகாய் சிறகடித்த பட்டர்ஃபிளை பார்க்கும், அவளை மிகவும் கவர்ந்தன.

சிங்கப்பூரின் சின்னமான மெர்லயனின் மீது ஏறி நின்ற போது, பெரும் உற்சாகமாய் பிறகு லூஜில் பயணித்த போது, சிறு குழந்தையாய் மனம் துள்ளியது.

ஸ்கை டவர் ரைடில் ஏறி மெதுவாக உயர்ந்த போது சுற்றிலும் சூழ்ந்த கடலும், சிங்கப்பூரின் தூரத்துக் காட்சி யும், சிறு தீவுக் கூட்டங்களும், கப்பல்களின் அழகும் அவளை மெய்சிலிர்க்க வைத்தன.

பிறகு கடற்கரைக்குச் சென்றபோது, எதிரே தண்ணீரில் சிறு சிறு தீவுத் திட்டுகள் தெரிந்தன.

ஒரு திட்டுக்குக் கயிற்றால் ஆன பாலத்தை அமைத் திருந்தனர்.

ப்ரஜன், அதில் அவளை அழைத்துச் சென்று சுற்றிக் காட்டியபோது, பிரமிப்பாக இருந்தது அவளுக்கு!

வெளிநாட்டுப் பயணிகள் பலர் ''சன்பாத்'' எடுத்துக் கொண்டிருக்க, அந்த இடமே வெகு அழகாய்!

பிறகு அங்கிருந்து கிளம்பி லேசர் பீம் ஷோவிற்கு சென்றபோது, அதையும் வெகுவாகவே ரசித்தாள் அவள்.

தண்ணீரை சிதறடித்து ஃபௌண்டைன்களுக்கு நடுவில் லேசர் பீம் மூலம் வண்ண உருவங்களை உருவாக்கி நடனமாடச் செய்தது, மெய் சிலிர்க்க வைப்ப தாய்!

* * *



பிறகு சிங்கப்பூருக்குத் திரும்பி வரும்போது, ''தேங்க் யூ ப்ரஜன்! இன்னிக்கு ஒரு அழகான வித்தியாசமான உலகத்தை எனக்கு அறிமுகப்படுத்தினதுக்கு... தேங்க்யூ சோ மச்!'' என்றாள் ஹம்சவத்னி நெகிழ்ந்த குரலில்!

உடனே, சிறு முறுவலுடன் அவள் கண்களுக்குள் ஊடுருவியபடி ஒரு பார்வை பார்த்து விட்டு, அவ ளுடைய விரல்களைத் தன் கரங்களுக்குள் பிணைத்துக் கொண்டான் அவன்.

அப்படியே அவன் தோள் சாய வேண்டும் போலிருந்த உணர்வை சிரமப்படுத்தி அடக்கி, தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டாள் அவள்.

அவள் கூறிய திருமணம் என்ற ஒற்றை வார்த்தைக் காக, இன்றுவரை அவன் வரம்பு மீறாமல் கௌரவம் காப்பது... மிகவும் பெருமையாய்!

இந்த ஊரின் கலாச்சாரமே வேறாக இருந்தாலும், தன் விருப்பத்துக்கும், உணர்வுகளுக்கும் அவன் மதிப்பு கொடுத்து விலகி இருப்பது, பெரும் வரமாகத் தோன் றியது.

பிறகு கடந்த பயணம் இளையராஜாவின் பாடல்களில் பேச்சின்றி மௌனமாகவே தொடர, ஏனோ அந்த சூழலே இதமாய்..!

வழியில் சாப்பிட்ட பிறகு, அவளை கெஸ்ட் ஹவுஸில் இறக்கி விட்டுவிட்டு அவன் விடைபெற்றான்.

அப்போது அவள் பார்வை ப்ரஜனுடைய நெற்றியின் ஓரத்திலிருந்த அந்தக் காயத்தில் பதிய... இப்போது அது சிறு வடுவாகியிருந்தது.

''என்ன... அங்கே பார்க்கிறே? அந்தக் காயம் எப்பவோ ஆறிடுச்சி... ஆனா இந்தக் காயம்தான்...'' தன்

இதயத்தைத் தட்டி, உதட்டைக் குவித்துக் குறும்புடன் காண்பித்தான்.

"ச்சீய்... எப்ப பாருங்க... இதே நினைப்பு தானா ப்ரஜன்? இப்படி எல்லாம் பேசினா அப்புறம் நான் உடனே இந்தியாவுக்கு ஓடிப் போயிடுவேன்."

"நீ எங்கே தனியா ஓடறது? கூடவே தான் நானும் வந்திடுவேனே!"

"ம்.... பார்ப்போம்! டேக் கேர்.... பை..."

கண்கள் மின்ன விடை கொடுத்தாள் அவள்.

"பை..." என்றபடி தலையசைத்து அவன் செல்ல... அந்தச் சிறு பிரிவைக் கூடத் தாங்க முடியாமல் தீப் பொறியாய் அவள் இதயத்தைத் தீண்டி தகிக்கச் செய்தது காதல்!

* * *

அன்றிரவு, ஆதிராஜ் போன் செய்த போது ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

மெதுவாக அவளுடைய திருமணத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தவர், சொந்தத்திலேயே அவளுக்கு ஒரு டாக்டர் மாப்பிள்ளை வந்திருப்பதாகவும், அவள் வந்தவுடனே பேசி முடிக்கப் போவதாகவும் கூறினார்.

அவளுக்கு தான் பதிலே வராமல், வார்த்தைகள் நொண்டியடித்தன.

பிறகு மெல்ல சமாளித்துக் கொண்டு, "அப்பா... இப்ப எந்த முடிவும் செஞ்சிடாதீங்க... ப்ளீஸ்! நான் அங்கே வந்தப்புறம் பாத்துக்கலாமே..!" மெதுவாகக் கூறினாள்.

"அதுவும் சரிதான்! நீ முதல்லே வா... அப்புறமாப் பேசுவோம்... எப்பம்மா வருவே?"



"இன்னும் ரெண்டு மாசத்துலே வந்துடுவேன்ப்பா! அம்மாவைப் பேசச் சொல்லுங்க!" என்று அவரிடமும் பேசிவிட்டு வைத்தாள்.

இரண்டு மாதங்களில் ப்ரஜனைப் பிரிய வேண்டும் என்று நினைத்தாலே உயிர் வலியாய்!

எப்படி இந்த விஷயத்தைத் தன் வீட்டில் பேசி முடி வெடுப்பது என்ற குழப்பமும் ஆயாசமும் மேலிட அமர்ந் திருந்தபோது, மனதில் தீர்க்கமாய் ஒரு முடிவு வந்தது.

காதலுக்காக எதை வேண்டுமானாலும் விட்டுத் தரலா மென்பதும், மற்ற எதற்காகவும் காதலை விட்டுத் தர முடியாதென்பதும் புரிவதாய்!

ஆனால், பெற்றவர்களின் சம்மதமின்றி அதைச் செய்வதும் இயலாத காரியமென்பது தெரிய, குழப்பமும் சஞ்சலமுமாய் ஆயாசமானது நெஞ்சம்!

உடனே தன் டயரியை எடுத்து எழுத ஆரம்பித்தாள் அவள்.

பிறகு, வீட்டுக்குச் சென்று ப்ரஜன் போன் செய்த போது, ஏனோ அவனைச் சீண்ட வேண்டும் போலி ருந்தது.

மெதுவாக ஆரம்பித்தாள்.

"இன்னிக்கு அப்பா போன் பண்ணியிருந்தாங்க... எனக்கு சொந்தத்திலேயே ஒரு டாக்டர் அலயன்ஸ் வந்திருக்குதாம்... அதைப் பேசி முடிச்சிடவான்னு கேட் டாங்க..."

சிறிது நேரம், எதிர் முனையில் கடும் நிசப்தம் நிலவியது.

''ப்ராஜு... லைன்லே இருக்கீங்க தானே?''

அவள் கேட்டதும், ''ம்... அதுக்கு நீ என்ன சொன்னே?'' அவன் கூர்மையுடன் வினவினான்.

''ம்... நான் வந்தப்புறம் பாத்துக்கலாம்... இப்ப தெ முடிவு செய்ய வேண்டாம்னு சொன்னேன்...''

அவள் முடிப்பதற்குள், அவன் குரல் சீறியது.

''புல்ஷிட்! உடனே உண்மையைச் சொல்ல வேண டியதுதானே? நம்மைப் பத்தி சொல்ல இதைவிட வே எப்போ உனக்கு சான்ஸ் கிடைக்கும்? ம்?'' கோபமா உறுமினான்.

அவனுடைய முதல் கோபம், சிலீரென்று சிதறி கண்ணாடியாய் அவளுக்குள் ஊடுருவுவதாய்!

''ப்ராஜு! ஏன் இவ்வளவு டென்ஷன்?... அதெல்லாம போனிலே சொல்ல முடியாது.. நேரிலதான் பேசணும்.. எனக்கு பயமா இருக்கு!''

அவள் குரலில் சிறு நடுக்கம் ஓடியது.

உடனே அவன் குரல் தழைந்தது.

''ஓ... ஹனி! நீயும் எவ்வளவு டென்ஷனா இருந் திருப்பேன்றதையே மறந்திட்டேன். சாரி! நான் இருக் கும்போது உனக்கென்ன பயம்? நான் வேணா இப்பவே அங்கே வரவா?'' சினம் விலக்கி அக்கறையுடன் கேட டான்.

''இல்லை... அதெல்லாம் வேண்டாம்! நம்மை மீறி எதுவும் நடக்காதுன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு ப்ராஜு... நீங்க நிம்மதியாத் தூங்குங்க! குட்நைட்!''

அவனிடம் அப்படிக் கூறிவிட்டு வைத்தாலும், அவள் தான் நிம்மதி இழந்து தவித்துப் போனாள்.



முன்னறிவிப்பின்றி பொழியும் மழையாய்... மன தோரம் பெரும் தவிப்பும் பயமும் திடீரென்று ஆக்ர மித்தன.

அவனுடைய அருகாமையில், யானை பலம் வரு வதும், அதுவே நீங்கிச் சென்றதும், பலமிழந்து துடித்துப் போவதும் புரிவதாய்!

விழிகள், இமைகளைக் கதவுகளாக்கி மௌனத் தாழ்ப்பாளிட்டு இறுகி மூட, கனவுகளும் அவனையே சுமந்தன.

## 15

மறுநாள் காலையில் அலுவலகத்துக்கு வந்தவன், அவள் முகத்தைக் கண்டதுமே, அவளுடைய தவிப்பைப் புரிந்து கொண்டு விட்டான்.

மெதுவாக அவளருகில் வந்தவன், ''எனக்கு தைரியம் சொல்லிட்டு, யாரோ ஒருத்தர் ரொம்பக் கவலையா இருக்கிற மாதிரித் தெரியுது! என்ன ஹனி... எனி ப்ரா ப்ளம்?'' அடிக் குரலில் கேட்டான்.

''ப்ராஜு! எனக்கு என்னவோ பயமா இருக்கு! அப்பா... என்னைக் கேக்காம ஏதாது வாக்குக் குடுத்துட்டா? கடவுளே... ரொம்ப டென்ஷனா இருக்கு...'' கவலையுடன் மொழிந்தாள்.

''அதெல்லாம் நடக்காது... நீ அங்கே இல்லாம, கல்யாணம் மட்டும் எப்படி நடக்கும்?''

''அதில்லை ப்ராஜ்... அப்பா ஏதாவது முடிவு செஞ்சு அதை எதிர்த்து, மீறி என்னால நடக்க முடியாமப் போயிட்டா?''

அவள் குரலில் சிறு நடுக்கம் இழை ஓடியது.

''ஹனி! எனக்கும் ஒரு அப்பாவோட உணர்வுகள் புரியும்... நானும் எங்கப்பாவும் ரொம்ப நெருக்கமா ஃப்ரெண்ட்லியா இருந்தவங்க!

''அதனாலே, எந்தக் காலத்திலயும் உங்கப்பாவை மீறி அவர் மனசைப் புண்படுத்திட்டு என் கூட வான்னு, நான் நிச்சயமா சொல்ல மாட்டேன்..

''அதுக்குப் பதிலா நானே இந்தியாவுக்கு வந்து, இந்த தேவதையை எனக்குக் கல்யாணம் பண்ணித் தாங்கன்னு அவர் கிட்டயே உரிமையோட நேரா கேக்கப் போறேன்!''

அவன் முடித்தவுடன், ''எல்லாமே கிண்டல் தானா உங்களுக்கு?'' செல்லமாகச் சிணுங்கினாள் அவள்.

''இல்லை! நான் நேத்தே ஒரு முடிவு பண்ணிட்டேன்.... உன் கூடவே நானும் இந்தியா வரப் போறேன்... உங்கப்பா எதுவும் முடிவெடுக்கறதுக்கு முன்னாடி நாம முந்திக்கறது பெட்டர்... இல்லையா?''

''அம்மாவும் ஒகே சொல்லிட்டாங்க! அதனால நான் வரேன்... என் மாமனாரைப் பாக்கறேன்... உடனே முடிவு செஞ்சு என் செல்லத்தைத் தூக்கிட்டுச் சிங்கப்பூருக்கு ஓடி வந்திடுறேன்... அவ்வளவுதான்! சரியா?'' மென்மையாகக் கேட்டான்.

''உங்க கூட இருக்கும்போது... நீங்க இப்படிப் பேசும் போது... மனசுக்கு ரொம்பத் தெம்பா இருக்கு... ஆனா, கெஸ்ட் ஹவுஸுக்குப் போனவுடனே ரொம்பப் பயம் வந்திடுது! என்ன செய்யறதுன்னே புரியலை!''



''ஹேய்... எல்லாம் நான் பாத்துக்கறேன்... பீ சியர் ஃபுல் ஐ ஸே! இப்படியே நீ உம்மணா மூஞ்சியா இருந்தா, அப்புறம் வேற ஏதாவது அழகான பொண்ணுங்க இருக்காங்களான்னு நான் தேட ஆரம்பிச்சிடுவேன்... ம்!''

குறும்பாய் கூறி அவளைச் சிரிக்க வைக்க முயன்றான்.

''முதல்லே அதைச் செய்ங்க... நான் நிம்மதியாவாவது இருப்பேன்...''

குமுறலுடன் கூறிவிட்டு அவள் கைகளில் முகம் புதைத்து கண்ணீர் விட, அதற்கு மேல் அவனால் தாங்க முடியாது போயிற்று.

''ஹனி! என்னடா... இது மாதிரி நீ அழுதா, என்னால எப்படி நிம்மதியா வேலை பாக்க முடியும்... இன்னிக்கு முக்கியமான மீட்டிங் வேற! ப்ளீஸ்... காம் டவுன் ஹனி!''

அவளுடைய தலையைக் கோதி, மெதுவாக ஆறுதல் கூறினான்.

நல்ல வேளையாக அலுவலகத்தில் அவனுக்குத் தனி கேபின் என்பதால், மற்றவர்கள் அதைப் பார்க்க வாய்ப்பில்லாது போயிற்று!

* * *

பிறகு வந்த நாட்களில், அவனுடைய அன்பிலும், அக்கறையிலும் அவள் கல்யாணப் ப்ரச்னையை மறந்தே போனாள்.

வாரா வாரம், மியூசியம், மிருகக் காட்சி சாலை, சயின்ஸ் சென்டர், கோவில், ஸ்போர்ட்ஸ் பார்க், ஷாப்பிங் மால், என்று பொழுது விரைவாய் இறக்கை கட்டிப் பறந்தது...

ஆனால் எந்த ஒரு நேரத்திலும் எல்லை மீறாமல், அனாவசியத் தொடுகையின்றி அவன் இயல்பான பிரியத்

துடன் நடந்து கொண்டது... அவளுக்கு மிகவும் பெரு
மிதம் தருவதாய்!

எப்போதாவது கோவிலுக்குச் சென்றாலும், அங்கும்
அவனுக்கான வேண்டுதல்களே மனதில் நிறைந்தன.

இன்னும் ஒரு மாதம் மட்டுமே இருந்தது... அவன் தன்
தாய் நிலம் திரும்ப!

ஏனோ, இப்போதெல்லாம் அவனை விட்டுப் பிரிய
வேண்டுமென்று நினைத்தாலே மனம் கனத்துப்
போனது!

அவளுடைய காதல் பெட்டகத்துத் திறவு கோலாய்
அவன்!

அவனைப் பிரிந்து தன்னால் எப்படிச் செல்ல முடியு
மென்ற தவிப்பு, அவளை அதிகமாய் ஆக்ரமித்து பேத
லிக்கச் செய்திருந்தது.

ப்ரஜனும், அதைவிட அதிகமான பரிதவிப்பிலிருந்
தான்.

இன்னும் ஒரு வாரம் மட்டுமே இருந்தது, ஹம்சத்வனி
வேலை முடிந்து ஊர் திரும்ப!

அந்த வாரக் கடைசியில், ஞாயிறன்று ப்ரஜனின்
வீட்டிற்குச் சென்றபோது, அவளால் தன்னைக் கட்டுப்
படுத்திக் கொள்ள முடியாது போயிற்று!

மாடியில் அவனுடைய அறைக்குச் சென்றதும்,
சட்டென்று திரும்பி அவன் மார்பில் இறுகப் புதைந்து
குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்து விட்டாள் த்வனி!

அவனுக்கும் இந்தப் பிரிவு தாங்க முடியாததாக இருந்
தாலும், ஓரளவு தன்னை அமைதிப் படுத்திக் கொண்டான்.



அவளை இதமாக வருடி ஒரு குழந்தை போல் தேற்றி,
அப்படியே இறுக அணைத்து அவளுடைய உச்சியில்
தன் கன்னத்தை இதமாகப் பதித்துக் கொண்டான்.

அன்று வெகு நேரமாயிற்று... த்வனி தன்னைச்
சமாதானப்படுத்திக் கொள்ள..!

பிறகு மெதுவாக நிமிர்ந்தவள், "என் கூட நீங்களும்
நிச்சயமா வருவீங்க தானே?" சோர்வுடன் கேட்டாள்.

"ம்... அதான் டிக்கெட் கூட புக் பண்ணியாச்சே ஹனி!
அப்புறம் ஏன் இப்படிக் கேக்கறே? என் மேல நம்பிக்கை
இல்லையா? ம்?"

அவளுடைய முகத்தை இரு கைகளிலும் ஏந்தியபடிக்
கொஞ்சலாகக் கேட்டான்.

"ப்ரஜு"! நான் உங்களை நம்பலைன்னா, என்னையே
நம்பலைன்னு அர்த்தம்! என்னவோ தெரியலை... பயமா
இருக்கு..! நம்ம காதல் நிறைவேறுமா அப்படின்னு
உள்ளுக்குள்ளே ஒரு சின்ன நெருடல் ஓடிட்டே இருக்கு!"

"இந்தப் பட்டுத் தலைக்குள்ளே அநாவசியமா
ஓடிட்டிருக்கற அந்தக் கவலையை அழிச்சிடு... நான் உங்க
வீட்டுக்கு வந்து பேசறேன்... உடனே கல்யாணம்தான்!
அப்புறம்... அப்புறமாவது நான் கேட்டதைத் தருவியா?"

காதருகில் குறும்புடன் சீறலாகக் கேட்டான்.

"சீ.. போங்க..."

சட்டென்று சிரித்துவிட்டு, கைகளால் அவன் மார்பில்
செல்லமாகக் குத்த, அவளையே கண்களுக்குள்
ஊடுருவிக் காதலுடன் நோக்கினான் அவன்.

அந்தப் பார்வை, சிலீரென்று பனித் துளியாய் உள்
ளிறங்கி அவள் உயிர் வரை தீண்டுவதாய்!

உனக்கு நானிருக்கிறேன் என்று மௌன மொழியில் கூறி, அவள் மனதை செப்பனிட்டு, பெரும் தைரியத்தை மீட்டுத் தருவதாய்!

* * *

அன்று தான், அவளுக்கு அழகிய புடவை ஒன்றையும் ஒரு மோதிரத்தையும் பரிசளித்தான் அவன்.

அவள் கிளம்புவதற்கு முன்பு தன் அறைக்கு அழைத்தவன், "ஹனி... உனக்கு ஒரு சின்ன கிஃப்ட் பிடிச்சிருக்கான்னு பாரேன்!" என்றபடி ஒரு பார்சலைக் கொடுத்தான்.

அவள் வியப்பும் உற்சாகமுமாய் அதைப் பிரிக்க, உள்ளே ஒரு அழகிய பட்டுச் சேலை இருந்தது!... கூடவே ஒரு ரூபி மோதிரமும்!

அவள் நெகிழ்வுடன் நிமிர்ந்தபோது, "பிடிச்சிருக்கா ஹனி?" சிறகாய் சாமரம் வீசுகின்ற குரலில் கேட்டான்.

"ம்... ரொம்ப! தேங்க் யூ ப்ராஜு... நான் தான் எதுவுமே உங்களுக்குத் தரலை!" தவிப்புடன் வந்தது அவள் குரல்!

"ம்... இது மாதிரி எதுவும் மெட்டீரியலா எனக்கு வேண்டாம்... குடுத்தாலும் நான் அக்செப்ட் பண்ணிக்க மாட்டேன்."

"பின்னே?"

கேள்வியாய் அவள் நோக்க, "ம்... அது என்னன்னு உனக்கே தெரியும்! அதை நீயா வந்து தர்ற வரைக்கும் நான் காத்திட்டிருப்பேன்!" அவன் விழிகளில் குறும்பும் எதிர்பார்ப்பும் கசிந்தன.

உடனே அவனருகில் வந்தவள், மெல்ல அவன் கைப் பிடித்து தோளில் தன் தலை சரித்தாள்.



"ப்ராஜு... முதல்லே இப்படி ஆரம்பிச்சா... அப்புறம் அது எதிலே போய் முடியுமோன்னு பயமாருக்கு... நம்மளாலே கண்ட்ரோல் பண்ணிக்க முடியாமப் போயிட்டா என்ன செய்யறது... எனக்காகக் கொஞ்ச நாள் காத்திட்டிருக்க முடியாதா?" ஏக்கத்துடன் கேட்டாள்.

மறு கணமே அவளை நோக்கிக் குனிந்தவன், "இந்தக் காலத்துல... இவ்வளவு ப்ரின்சிபிளோட... எனக்கு பெருமையா இருக்கு ஹனி! நான் உனக்காக எத்தனை கோடி வருஷம் வேணாலும் காத்திருப்பேன்... போதுமா?" முகம் கனியக் கேட்டான்.

"தேங்க் யூ ப்ராஜு" என்றபோது, அவள் விரலில் அதே மோதிரத்தை மெதுவாக அணிவித்தான் ப்ராஜன்.

அவளுடைய தந்த நிற விரலுக்கு, அந்த ஆழ்ந்த சிவப்பு ரூபிக் கல் மிக அழகாய்ப் பொருந்தியது.

அந்த நிமிடம் மொழிகள் ஊமையாகிவிட, அவளுடைய விழிகள் கசிந்தன.

பிறகு, ஏக்கத்துடன் அவனிடம் பிரியாவிடை பெற்றுக் கீழே வந்தாள் அவள்.

ஏனோ தன் இதயத்தையே அங்கு விட்டுச் செல்வது போல் தோன்ற, இறுகிய முகத்துடன் நளினியை நமஸ்கரித்தபோது, அவர் ஒரு அழகிய சைனீஸ் உடையைப் பரிசளித்தார்.

ஆழ்ந்த சிவப்பில் தங்க நிறப் பூக்கள் விரவித் தெரிய, சேட்டின் துணியில் வடிவமைக்கப்பட்டிருந்த அந்த உடை, அவளை மிகவும் கவர்ந்தது.

"ரொம்ப அழகா இருக்கும்மா...! தேங்க் யூ! கிளம்பறப்ப கட்டாயம் வரேன்... உடம்பைப் பார்த்துக்கங்க!" என்றபடி விடை பெற்றாள்.

உடலுக்குள்ளிருக்கின்ற உயிர் சுமையாகாததைப் போல், ப்ராஜன் தனக்குள் நிறைந்திருப்பதை உணர்ந்த மனம், முற்றுப் பெறாத கவிதையாய்த் தவித்தது.

## 16

அந்த வார இறுதியில் இருவரும் ஊருக்குக் கிளம்பும் நாளும் வந்தது.

நளினி, உடல்நிலை காரணமாக வீட்டிலிருந்தே விடை கொடுத்தார்.

த்வனி, அவர் வாங்கித் தந்த பட்டு சுடிதாரணிந்து அவரை நமஸ்கரித்து விடை பெற்றாள்.

ஏர்போர்ட்டிற்கு வந்தும், அவளுக்கு கனவுலகில் இருப்பது போலவே ஒரு உணர்வு... எதையுமே நம்ப முடியவில்லை!

பிறகு இருவரும் விமானத்தில் அருகருகே அமர்ந்து பயணித்தபோதும், ஒரு மாய உலகிலேயே சஞ்சரித்திருந்தாள் அவள்.

சென்னைக்கு சென்று இறங்கியதும், ''ஹனி! உங்கம்மா அப்பா ஏர்போர்ட்டுக்கு வந்திருப்பாங்க இல்லை..? அவங்க என்னை இப்பப் பார்க்க வேண்டாம்..!

''நான் நேரே ஹோட்டலுக்குப் போயிடறேன்... அங்கிருந்துதான் அப்பாவோட பழைய பார்ட்னர்... எங்க குடும்ப நண்பர் கைலாஷ் அங்கிளுக்குப் பேசணும்... முடிஞ்சா அவரையும் அழைச்சிட்டே உங்க வீட்டுக்கு வரேன்..!'' என்றான் ப்ராஜன் யோசனையுடன்.



''ஓகே ப்ராஜு''... ஆனா என் கூட இப்ப நீங்களும் வாங்க! ரெண்டு பேருமாவே போகலாம்! உங்களை என் ஃப்ரெண்ட்டுன்னு முதல்லே அறிமுகப்படுத்தறேன்! என்ன செய்யறாங்கன்னு பாப்போம்!

''நாளைக்கு மெதுவா நம்ம விஷயத்தைச் சொல்லிட்டா... நீங்க நாளன்னிக்கு எங்க வீட்டுக்கு வரலாம்! நானே கால் பண்றேன்!'' என்றபடி அவன் கரங்களுடன் தன் கையைப் பிணைத்துக் கொண்டாள்.

பிறகு 'இமிக்ரேஷன் செக்' முடிந்து, பேகேஜ்களை எடுத்துக் கொண்டு ட்ராலியைத் தள்ளியபடி இருவரும் வெளியே வந்தபோது, ஆதிராஜும், ருக்மணியும் அங்கு எதிர்பார்ப்பும் ஆர்வமுமாய் காத்திருந்தனர்.

அவளைக் கண்டதும் ஓடிவந்து ருக்மணி அணைத்துக் கொள்ள, ஆதிராஜ் ட்ராலியை வாங்கித் தள்ள ஆரம்பித்தார்.

''அப்பா... இவர் மிஸ்டர் பிரஜேந்திரன்... சிங்கப்பூரிலே எனக்கு பாஸ்! இங்கே ஒரு வேலையா வந்திருக்காரு!'' என்று அவனை அறிமுகம் செய்தாள் த்வனி.

உடனே அவனுடைய கையைப் பிடித்து குலுக்கிய ஆதிராஜ், ''நான் ஆதிராஜ்... த்வனியோட அப்பா... ரொம்ப சந்தோஷம் தம்பி உங்களைப் பார்த்ததிலே! என் பொண்ணை பத்திரமா கொண்டு வந்து சேத்ததுக்கு ரொம்ப நன்றி தம்பி'' நெகிழ்ந்து போய்க் கூறினார்.

''எதுக்கு அங்கிள் நன்றி எல்லாம்! எனக்கும் உங்களைப் பாத்ததிலே ரொம்ப சந்தோஷம்!'' என்றபடி ப்ரியத்துடன் கை குலுக்கினான் அவன்.

உடனே ருக்மணியிடம் திரும்பியவள், ''அம்மா! நான் சொல்லலை.. எனக்கு சிங்கப்பூரிலே ஒரு தமிழ்க் குடும்

பம் நல்ல ஃப்ரெண்டாகி இருக்காங்க... நளினி ஆன்
என்னை அன்பாய் பாத்துக்கிட்டாங்கன்னு... அவ
பையன்தான் இவரு!'' என்றாள்.

''வணக்கம் தம்பி... அம்மா நல்லாருக்காங்களா? ஒ
நாள் நம்ம வீட்டுக்கு சாப்பிடற மாதிரி வாங்க'' என்று
அழைத்தார் அவர்.

''நிச்சயமா வரேன் ஆண்ட்டி... வரேன் அங்கிள்... வ
ஹம்சத்வனி!'' என்று விடை பெற்றான் அவன்.

''ஹனி...'' என்று கூற வந்து, அவன் அவசரமாகத்
திருத்திக் கொண்டதை, உள்ளூர ரசித்துச் சிரித்தபடி
விடை கொடுத்தாள் அவள்.

* * *

பிறகு வீட்டிற்குச் சென்றதும், தான் அம்மாவிற்கு
அப்பாவிற்கு வாங்கிய பொருட்களை அவள் எடுத்துக்
கொடுக்க, ஆதிராஜ் அவர் பார்த்திருக்கும் டாக்டர் மாப்
பிள்ளையின் புகைப்படத்தை அவளிடம் காண்பித்தார்.

''அப்பா... ப்ளீஸ்... அப்புறம் பாக்கறேனே... ரொம்ப
டயர்டா இருக்கு... குளிச்சிட்டு முதல்லே அம்மா கையால
சாப்பிடணும்...'' என்று கூற, அவரும் புரிந்து கொண்டு
அதை உள்ளே எடுத்துப் பத்திரப் படுத்தினார்.

அன்று முழுவதும் பொருட்களை அடுக்க... ஓய்
வெடுக்க... தெரியாமல் ப்ராஜனிடம் பேச என்று பொழுது
வேகமாகச் சென்றது.

இரவு அவளை அழைத்து அவர் விபரம் கூறும் முன்பு,
அவளே முந்திக் கொண்டாள்.

''அப்பா! நானே உங்களோட முக்கியமா ஒரு விஷயம்
பேசணும்... அம்மா! நீங்களும் வாங்களேன்'' என்று தன்
அறைக்கு அழைத்தாள்.



''உள்ளே சென்றதும், ''நீங்க ரெண்டு பேரும் என் மேல
கோபப்படக்கூடாது... நான் சொல்லப் போறதை பொறுமை
யாப் புரிஞ்சிப்பீங்கன்னு நினைக்கிறேன்..'' தயக்கத்துடன்
ஆரம்பித்தாள்.

''என்னம்மா... என்ன விஷயம்..?''

ஆதிராஜ் யோசனையுடன் கேட்க, ''அப்பா... நான்
ஒருத்தரை... மனசார விரும்பறேன்... உங்க சம்மதத்தோட
அவரைக் கல்யாணம் செஞ்சுக்கணும்னு ஆசைப்பட
றேன்'' தயக்கத்துடன் நிறுத்தினாள்.

மறுகணமே சடாரென்று எழுந்து, அமர்ந்திருந்த
நாற்காலியைத் தூக்கி எதிர்பாராமல் விசிறி அடித்தார்
அவர்.

''இதுக்குத் தான் உன்னை வேலைக்கு அனுப்பாம ஒரு
கல்யாணத்தைப் பண்ணி அனுப்பிடலாமுன்னு தலை
தலையா உங்கம்மா கிட்டே அடிச்சிகிட்டேன்...''

மிருகமாய் உறுமியவர், கடும் சினத்துடன் மனைவி
யிடம் திரும்பி பளாரென்று அறைந்தார்.

''பாத்தியாடி உன் பொண்ணு செஞ்சிருக்கற காரி
யத்தை! என்னடி வளர்த்திருக்கே அவளை! நம்ம உறவு
முறையிலே எல்லார்கிட்டேயும் என் மானத்தை வாங்
கறதா உன் பொண்ணு முடிவு பண்ணிட்டா போலருக்கு!

''ஆனா, இது நடக்காது... நான் செத்தப்புறம், அவ
யாரை வேணாலும் கல்யாணம் செஞ்சுக்கட்டும்!'' ரௌத்ர
மாகக் கத்திவிட்டு வெளியேறினார்.

ருக்மணி அதிர்ச்சியுடன் அவளையே பார்த்திருக்க,
அப்படியே சரிந்து அமர்ந்து கண்களை இறுக மூடிக் கொண்
டாள் ஹம்சத்வனி.

இதயம் படபடத்தாலும், எப்படியாவது தந்தையை தைரியமாக எதிர்கொண்டு தன் காதலில் ஜெயிக்க வேண்டும் என்ற முடிவை, உறுதியாய் உச்சரித்தது நெஞ்சம்!

''காதலே... எனக்கு சக்தி கொடு! என் தாய் தந்தையின் மனதை மாற்றி அவர்கள் சம்மதத்துடன் எங்கள் திருமணம் நடக்கும் வரை, அவர்களை எதிர்கொள்ள என் மனதில் தைரியத்தைக் கொடு!'' என்று தனக்குள்ளேயே இறைஞ்சினாள்.

அப்போது ''த்வனி?'' ருக்மணியின் ஆச்சர்யக் குரல் தூரத்து அழைப்பாய்க் கேட்க, மெதுவாக இமை திறந்தாள் அவள்.

''நீ சொன்னது நிஜமா? உனக்கு ஏதுடி இவ்வளவு தைரியம்? அப்பா குணம் தெரிஞ்சும் இப்படி ஒரு காரியத்தைச் செய்ய எப்படிடி உனக்கு மனசு வந்தது?''

கோபத்துடன் கேட்டுவிட்டு, அவளைப் பிடித்து உலுக்க ஆரம்பித்தார்.

''அம்மா... ப்ளீஸ்! புரிஞ்சுக்கங்க... நான் என்ன கொலைக் குத்தமா செஞ்சிருக்கேன்... ஒருத்தரை விரும்பறேன். அது தப்பா?'' மெதுவாகக் கேட்டாள்.

''விரும்பறது தப்பில்லைடி... உன் அப்பாவுக்கு பொண்ணாப் பிறந்துட்டு இப்படி ஒரு முடிவெடுத்ததுதான் தப்பு!''

தன் தலையில் அறைந்து கொண்டு அழ ஆரம்பித்தார் அவர்.

மறுநாளே, அந்த டாக்டர் மாப்பிள்ளை அவளைப் பெண் பார்க்க வரப் போவதாக, ஆதிராஜ் மனைவியிடம் கூறினார்.



அதைக் கேட்டதும் ஒரு முடிவுடன் எழுந்த ஹம்சத்வனி, தந்தையிடம் வந்தாள்.

''அப்பா! நான் விரும்பறவரோட என்னால சிங்கப்பூர்லேயே கல்யாணம் செஞ்சிட்டிருந்திருக்க முடியும்... ஏன் செய்யலைன்னா, உங்க முன்னாடி... உங்க சம்மதத்தோட... ஆசீர்வாதத்தோட அது நடக்கணும்னு நானும் அவரும் விரும்பினோம்... அதுக்கு நீங்களும் மதிப்பு குடுப்பீங்கன்னு நினைக்கிறேன்...

''என்னால இப்பவே போய் என் விருப்பப்படி நடந்துக்க முடியும்! ஏன்னா நான் ஒரு மேஜர்.. சட்டமே அதை அனுமதிக்கும்! ஆனா அதெல்லாம் தேவையில்லைன்னு நான் நினைக்கிறேன்...'' உறுதியுடன் முடித்தாள்.

''ஓ... உன்கூட வந்தானே அந்த உயரமான பையன்... அவன் தான் இதுக்குக் காரணமா? நினைச்சேன்!

''திடீர்னு ஒருத்தனை முன்னால நிறுத்தி நமக்கு அறிமுகப்படுத்தறாளேன்னு அப்பவே சந்தேகப் பட்டேன்... என்னையே எதுக்கறதுக்கு கத்துக் கொடுத்தானா அவன்?''

''இல்லைப்பா! அன்புன்னா என்னான்னு சொல்லித் தந்தாரு! உங்களோட அதிகாரம் கலந்த அன்பிலே வாழ்ந்திருந்த எனக்கு, உண்மையான ப்ரியத்தை புரிய வச்சாரு!'' ஒரு வித நிமிர்வுடன் பதிலளித்தாள்.

''அப்புறம் ஏன்டி இங்கே வந்தே? அப்படியே அவனோடவே ஓடிப் போயி குடித்தனம் நடத்த வேண்டியது தானே?'' நக்கலாகக் கேட்டார் அவர்.

''அப்பா! எனக்கு உங்க ரெண்டு பேரோட சம்மதமும், ஆசீர்வாதமும் வேணும்! அதுக்காகத்தான் இவ்வளவு பேசறேன்... ப்ளீஸ் புரிஞ்சுக்குங்க!''

''நீ இத்தனை வருஷமா வளத்த எங்களைப் புரிஞ் சிக்கலையேம்மா! ஊரிலே நாலு பேரு நாலு விதமாப் பேசுவாங்களே...!

''நாங்க இதுவரைக்கும் கட்டிக் காத்து வந்த குடும்ப கௌவரம், ஜாதிக் கட்டுமானம், மரியாதை இதெல்லாம் குலையப் போறதைப் புரிஞ்சுக்கலையே?'' திடீரென்று இறங்கிய குரலில் சீறினார் அவர்.

''அப்பா! அவரும் மனுஷ ஜாதி தானேப்பா! நீங்களே பாத்து முடிவு பண்ணினாக் கூட இது மாதிரி என்னைப் புரிஞ்சு நேசிக்கற ஒரு அற்புதமான மனுஷர் கிடைக்க மாட்டாரு... அதனால... உங்களுக்கு மாப்பிள்ளை பாக்கத் தெரியாதுன்னோ, என் மேல அக்கறை இல்லைன்னோ, நான் சொல்ல வரலை..!

''என்னை மன்னிச்சிடுங்க! நான் ப்ரஜனை மட்டும் பாக்காம இருந்திருந்தா, அந்தப் பொறுப்பை உங்க கிட்டே தான் தந்திருப்பேன்.!

''சின்னதிலேருந்து எல்லாமே பார்த்துப் பார்த்து செஞ்ச உங்களுக்கு, எனக்கு என்ன தேவை... யாரைத் துணை யாக்கணும்னு தெரியாதா என்ன? நிச்சயமாத் தெரியும்ப்பா!

''ஆனா, எனக்கும் அதை முடிவு பண்ண ஒரு சின்ன உரிமை இருக்கு இல்லியா?

''ஊரிலே நாலு பேரு என்ன சொல்வாங்கன்னு வருத்தப்படறீங்களே... அதுக்கு குடுக்கற ஒரு முக்கியத் துவத்தை நம்ம பொண்ணு நல்லா வாழறதுதான் முக் கியம்னு நீங்கள்லாம் ஏம்ப்பா நினைக்க மாட்டேன்றீங்க?''

''நாம வாழ்க்கையில கஷ்டப்பட்டா, அந்த நாலு பேருமா வந்து நம்மைத் தாங்கப் போறாங்க... அப்பவும்



தூற்றித் தான் பேசுவாங்க... முதல்லே நமக்காக வாழுங் கப்பா!''

திடீரென்று அருள் வந்தாற் போல் ஆவேசமாகக் கூறிவிட்டு, வேகமாகத் தன் அறைக்குள் சென்று கதவை சாத்திக் கொண்டாள் அவள்.

அப்படியே தொய்ந்து போய் சோபாவில் சரிந்தவருக் குள், அவளுடைய கேள்விகள் பெரும் சம்மட்டி அடியாய்!

அவளுடைய வார்த்தைகளால், சில்லென்று சிதறியது அவருடைய நெஞ்சம்!

## 17

அன்று முழுவதும், அந்த வீடே புயல் கடந்த பூமியாய் காட்சியளித்தது.

அன்றிரவு செல்லில் பேசிய ப்ரஜனிடம் எல்லா வற்றையும் கூறியவள், மறு தினம் மாலையில் அவனைத் தன் வீட்டிற்கு வரும்படிக் கூறினாள்.

காலையில் அவள் எழுந்தபோது, ஊரிலிருந்து அவ ளுடைய சித்தப்பா ஞானராஜும், சித்தி பங்கஜமும் வந் திருந்தனர்.

நான்கு பேரும் சேர்ந்து எவ்வளவோ கூறியும், உறுதி யுடன் மறுத்து விட்டாள் அவள். ஆனால், மீண்டும் ஆதிராஜிடம் பேசினாள்.

''கட்டாயத்தின் பேரால, கடமைக்காக ஒரு கல்யாணம் செஞ்சிக்க என்னால முடியாதுப்பா! விலகின... ஒட்டாத

மனசோட என்னால சத்தியமா உயிர்ப்போட வாழ மு
யாது!

''உங்களுக்கு, என் நிம்மதியையும் சந்தோஷத்தையு
விட ஜாதிதான் முக்கியமாப்பா!''

''சமூகத்துக்கு பயந்து... ஜாதிப் ப்ரச்னைக்கு பலியாகி
என் காதலைக் குழி தோண்டிப் புதைக்க நான் விரும்
பலை!

''ஆனா அதுதான் முடிவுன்னு நீங்க சொன்னா, என்
முடிவையும் கேட்டுக்கங்க!

''நான் வேற யாரையும் சத்தியமா கல்யாணம் செஞ்சுக்க
மாட்டேன்... கோழையா தற்கொலை முடிவுக்கும் போக
மாட்டேன்! நான் கிறிஸ்துவ மதத்துல சேர்ந்து கன்
யாஸ்திரியா மாறிடறேன்...

''பொது சேவைக்கு, இறைப் பணிக்கு உங்க
பொண்ணை அர்ப்பணிச்சிட்டதா சந்தோஷப்பட்டுக்கங்க.''

இறுதியாக, ப்ரஜனைத் தனக்குத் திருமணம் செய்து வைக்க முடியாதென்றால் தான் கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்து கன்யாஸ்திரியாகி விட முடிவு செய்து விட்டதாக அவள் கூறியதும், அனைவரும் ஒரு கணம் வாயடைத்துப் போயினர்.

மறுகணமே எழுந்து தன் அறைக்குள் வேகமாகச் சென்ற ஆதிராஜ், பிறகு வெளியில் வரவே இல்லை.

அவருடைய வீம்பையும், பிடிவாதத்தையும் சிதறடிக்க, அவள் முடிவொன்றே போதுமானதாய்!

எல்லோரும் சாப்பிடாமல் அவளுக்காகக் காத்திருக்க, வீடே களையிழந்து கிடந்தது.

* * *



மதியம் மறைந்து மாலை வர, சரியாக ஐந்து மணிக்கு வாசலில் அழைப்பு மணி ஒலித்தது.

தன் அறையில், புது சுடிதாரணிந்து தயாராக இருந்த ஹம்சத்வனி, ஓடிச் சென்று கதவைத் திறந்தாள்.

வாசலில் புன்னகையுடன் நின்றிருந்த ப்ரஜனைக் கண்டதும், நீண்ட நெடும் யுகங்கள் கழித்து அவனைப் பார்ப்பது போன்ற ஒருவித உணர்வு வந்தது, அவளுக்குள்!

''வாங்க...''

வெட்கத்துடன் அழைத்தபோது தான், அவனுடன் இன்னொரு வயதான மனிதரும் வந்திருப்பது உறைத்தது.

உடனே அவரையும் வரவேற்று ஹாலில் அமர வைக்கும்போது, உள்ளேயிருந்த அனைவரும் ஒருவித இறுக்கத்துடன் ஹாலுக்கு வந்தனர்.

மதியத்திலிருந்து, தன் அறையிலேயே தனித்திருந்த ஆதிராஜின் முகம் இறுகிக் கண்கள் சிவந்திருந்தன.

மெதுவாகத் தன் தந்தையிடம் திரும்பியவள், ''அப்பா! இவர்தான் நான் சொன்ன ப்ரஜன்! இவங்க...'' அவள் திணறும் முன்பு இடைமறித்தான் பிரஜன்.

''அங்கிள்! நான் உங்க பொண்ணை மனசார விரும்
பறேன்! இவர் எங்க குடும்ப நண்பர் கைலாஷ் அங்கிள்!

''அப்பாவுக்கு பால்ய நண்பர்! எனக்குன்னு இங்கே
இந்தியாவிலே யாரும் இல்லை... அதான் அங்கிளை
அழைச்சிட்டு வந்தேன்'' என்றவன் ஒரு கண்ணசைவில்
வாசலில் நின்றிருந்த டிரைவரை ஏவினான்.

உடனே, அவன் பழங்கள், ஸ்வீட், காரம், வெற்றிலை
பாக்கு, பூக்கள் நிறைந்த தாம்பாளங்களை எடுத்து வந்

டப்பாயில் வைத்துவிட்டு, பவ்யமாக வெளியேறிச் சென்றான்.

தயக்கத்துடன் நின்றிருந்த ஆதிராஜின் கண்கள், கைலாசத்தை சிறு யோசனையுடன் ஏறிட்டபடி இடுங்கின.

அதற்குள் கைலாசமே முகம் மலர எழுந்து அவசரமாக முன்னே சென்று, ஆதிராஜின் கைகளை வாஞ்சையுடன் பற்றிக் கொண்டார்.

''ஆதி... என்னை மறந்துட்டியா? பெத்த நாயக்கன் பாளையத்துலே ஒரே தெருவிலே பிறந்து வளர்ந்து, நாம ரெண்டு பேரும் ஒண்ணாப் படிச்சோமே!'' விழிகள் மின்னக் கேட்டார்.

''கைலாசம்...'' என்றபடி பாய்ந்து அவரை அணைத்துக் கொண்டார் ஆதி!

சிறு வயதிலிருந்தே பாசத்துடன் இணைந்து பழகிய நட்பின் பரிணாமம் அங்கு கண்ணாடியாய் பிரதிபலிக்க, இதை எதிர்பார்க்காததால், வியப்புடன் உறைந்து நின்று விட்டாள் ஹம்சத்வனி.

பிறகு, நீண்ட நாட்கள் முன்பு பிரிந்து இணைந்த நண்பர்கள் இருவரும் பழைய விஷயங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தாலும், ஆதிராஜிடம் சிறு இறுக்கம் வெளிப்படையாகவே தெரிந்தது.

இருவரையும் அமரும்படிக் கூறிவிட்டு அவரும் ஞானராஜூம் உட்கார, பெண்கள் தவிப்புடன் நின்றிருந்தனர்.

அப்போது, கைலாசம்தான் மெதுவாகப் பேச ஆரம்பித்தார்.

''ஆதி! நீ இங்கே இருப்பேன்னு சத்தியமா நான் எதிர்பார்க்கலைப்பா!



''ஆனா, இப்ப சொல்றேன்... நீ எனக்கு எப்படியோ, அப்படித்தான் ப்ரஜனோட அப்பா மேகநாதனும்!... ரொம்ப நல்ல குடும்பம்!''

''நான் படிச்சி முடிச்சி சிங்கப்பூருக்கு வேலைக்குப் போனேன் இல்லையா? அங்கே மேகநாதனும் நானும் சேர்ந்துதான் பிசினஸ் ஆரம்பிச்சோம்.. டிபார்ட்மெண்டல் ஸ்டோர் பிசினஸ்..! நல்லா செஞ்சிட்டிருந்தோம்... ரொம்ப அற்புதமான ஒரு மனுஷன் மேகநாதன்!

''அஞ்சு வருஷம் முன்னாடி எனக்கும் ஓய்வு வேணும்னு தோணிச்சி... நம்ம தாய் நாட்டிலதான் என் கடைசி மூச்சை விடணும்னு நினைச்சேன்...

''உடனே என் பொண்ணுக்கு அங்கேயே கல்யாணத்தை செஞ்சு குடுத்திட்டு, மாப்பிள்ளையை எங்க கடையில பார்ட்னராக்கிட்டு, இங்கே வந்து சென்னையிலே செட்டிலாயிட்டேன்.

''மேகநாதன் திடீர்னு ஹார்ட் அட்டாக்கிலே மூணு வருஷம் முன்னாடி இறந்து போயிட்டதாலே, இப்போ அதை என் மாப்பிள்ளை கிட்டேயே வித்துட்டான் ப்ரஜ

''அவனும் அப்பதான் வேலையிலே சேர்ந்திரு புதுசு..! இந்த பிசினஸ் அவனுக்குப் பழக்கமில்லை அதனால இப்ப என் மாப்பிள்ளை தான் அதைப் பாத்துக்கறாரு!

''ப்ரஜனும் எனக்கு ஒரு பையன் மாதிரித் தான்! சின்ன வயசல இருந்தே அவனை வளர்த்தவன் நான்!

''அவங்க அம்மா ரொம்ப அருமையான மனுஷி! உ பொண்ணைத் தான் ப்ரஜன் விரும்பி இருக்கான் சத்தியமா எனக்குத் தெரியாது.

"இவன் ரொம்ப நல்ல பையனாச்சே... பொண்ணு எப்படி இருப்பாளோ... அவங்க குடும்பம் எந்த மாதிரி யானதோன்னு நான் பயந்துட்டே வந்தேன்... இப்பதான் நிம்மதியாச்சு!

"இனிமே எனக்குக் கவலையில்லை! நீ பயப்படவே வேண்டாம் ஆதி! ஊரிலே யாராவது கேட்டா, இவன் எ சொந்தக்காரப் பையன்னு சொல்லு! என் மகனுக்கு உ பொண்ணைக் கேட்டா குடுப்பே இல்லியா? அப்படி நினைச்சிக்க..!

"நாங்க வந்தபோது உன் முகமே சரியில்லை... பொண் ணோட வீட்டில ஒத்துக்கலைன்னு, இங்கே வரும்போது ப்ரஜன் என்கிட்டே சொன்னான்...

"உனக்கு எந்தக் கவலையும் வேண்டாம்... ப்ரஜன் எனக்கும் மகன் மாதிரிதான்!

"உன் பொண்ணை அவனுக்குத் தருவியா?" உரிமை யுடன் கேட்டார் கைலாசம்.

உடனே ஆதி சற்று நேரம் யோசித்தார்.

"நான் ரொம்ப பயந்துட்டிருந்தேன் கைலாசம்! என் பொண்ணு தப்பான ஒருத்தனை நம்பி ஏமாந்து போயிட்டா என்ன செய்யறதுன்னு ஒரு பயம் இருந்தது.

"அதைவிட வேற ஜாதியில கல்யாணம் செஞ்சு, ஊர் நாலு விதமாய் பேசுமேன்னு ரொம்ப யோசிச்சேன்...

"ஆனா என் பொண்ணு இன்னிக்குக் காலையில ஒரு கேள்வி கேட்டா பாரு... நெத்தியடியாட்டம் அப்பதான் உறைச்சிது!

"ரொம்ப நேரம் யோசிச்சிட்டே படுத்திருந்தேன்... இப்ப நீ வேற வந்து கேட்டுட்டே... இனிமே என்னால மறுக்க முடியாது" என்றவர், மகளிடம் திரும்பினார்.



"நீ ஜெயிச்சிட்டேம்மா! எனக்கு இவரை மாப் பிள்ளையா... இல்லை... இன்னொரு மகனா ஏத்துக்க சம்மதம்! சந்தோஷம்தானே?"

கண்கள் கலங்க நெகிழ்ந்து போய்க் கேட்டார்.

"அப்பா..."வென்று ஓடி வந்து அணைத்துக் கொண்ட ஹம்சத்வனியின் மனமும் விழிகளும், ஈரத்தில் நனைந் திருந்தன.

இந்த திடீர் மாற்றத்தை எதிர்பார்த்திராத அனைவரின் மனமும், நிம்மதியிலும் மகிழ்ச்சியிலும் விம்மித் தணிந் தது.

ப்ரஜன், உடனே நெஞ்சம் நிறைந்த சந்தோஷத்துடன், "தேங்க்யூ அங்கிள்" என்றபடி ஆதிராஜின் பாதத்தைத் தொட்டு நமஸ்கரிக்க, அவளும் கைலாசத்தின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றாள்.

இருபுறமும் இருவரையும் அணைத்துக் கொண்டு ஆதிராஜ் ஆனந்தக் கண்ணீர் விட, அந்த திடீர்த் திருப்பம் எதிர்பாராததாய்!

* * *

பிறகு தன் குடும்பத்தைப் பற்றி அவன் கூற, அவரு தன் பூர்வீகத்தைப் பற்றி அவனுக்குப் பெருமையுட விவரித்தார்.

ஹம்சத்வனிக்குத்தான், மலையையே புரட்டிப் போ டது போல் ஒருவித நிம்மதி உணர்வு!

அப்படியே உறைந்து போய் வெட்கமும் தவிப்புமா நின்றிருந்தவளை, மெல்லத் தோளில் தட்டி அழைத்த ருக்மணி!

"த்வனி! அவங்களுக்கு டிபன் எடுத்து வந்து தரலாம்... வா!"

தனது கனவுலகம் கலைந்து பரவசத்துடன் அவள் திரும்ப, அந்தக் கணம் அவள் கண்களுக்குள் ஊடுருவி, தன் மேலிருந்த காதலைத் தேடிக் கொண்டிருந்தன ப்ரஜனின் விழிகள்.

அவளுடைய பார்வையிலோ கோடி மின்னல்களின் சிதறல்கள்!

உடனே விழிகள் நிறைய, கை கூப்பித் தந்தையையும் அவருடைய நண்பரையும் வணங்கியவள், உற்சாகத்துடன் உள்ளே ஓடினாள்.

பிறகு, கையில் டிபன், காபியுடன் முகத்தில் வெட்கத்தையும் சுமந்து அவள் ஹாலுக்கு வந்தபோது, ப்ரஜனுக்கோ எதிர்பாராமல் அந்த வானமே கைவசமானதைப் போல் ஒரு உணர்வு!

இதயத்தை சுகமாய் நனைத்து வருடியது... அவளுடைய மாயப் புன்னகை!

உடனே போன் செய்து தன் தாயுடன் பேசியவன், குறும்புடன் நோக்கியபடி, அவளிடம் செல்லைக் கொடுத்தான்.

"அம்மா! நான் த்வனி பேசறேன்! எப்படி இருக்கீங்க?"

அவள் விளக்கும்போதே, "ரொம்ப சந்தோஷமா இருக்கேன்மா... நீ நம்ம வீட்டுக்கு வரப் போற நாளை ஆவலோட எதிர்பார்த்திட்டிருக்கேன்..."

"ப்ரஜன் எல்லாம் சொன்னான்... நாம முதல்லே கைலாஷ் அண்ணாவுக்குத்தான் தேங்க்ஸ் சொல்லணும்... அவரு இருக்காரா?" ஆவலுடன் கேட்டார்.



தன் நண்பனுடன் பழைய கதைகளைப் பேசிப் பகிர்ந்து கொண்டிருந்த கைலாசத்திடம் விபரம் கூறி, செல்லைக் கொடுத்தாள் அவள்.

பிறகு ருக்மணியும் அவரிடம் பேச, திருமணத்தைப் பற்றிய விபரங்களையும் அனைவரும் கூடிப் பேசி முடித்தனர்.

ஓட்டலுக்குக் கிளம்புவதற்கு முன்பு, ஒரு கணம் தயங்கி நின்ற ப்ரஜன், "நான் நாளைக்கு மறுநாள் டிக்கெட் புக் பண்ணியிருக்கேன்... அதனால, நாளைக்கு காலையிலே வந்து ஹம்சத்வனியை அழைச்சிட்டுப் போகலாமா? நான் கொஞ்சம் ஷாப்பிங் பண்ணணும்" ஆதிராஜிடம் கேட்டான்.

"அழைச்சிட்டுப் போங்க தம்பி! அதான் எல்லாம் பேசி முடிவு செஞ்சாச்சே! இனிமே உங்களுக்கில்லாத உரிமையா?" புன்னகையுடன் கூறி விடை கொடுத்தார் அவர்.

உடனே குறும்புடன் ஒற்றைக் கண் சிமிட்டி, ஹம்சத்வனியிடம் விடை பெற்றான் ப்ரஜன்.

அந்த ஒற்றை விழியின் கூர்மை... அவளுடைய இமைகளை உடனே மூட வைத்தது.

வெட்கத்துடன் திரும்ப உள்ளே ஓடினாள் அவள்.

## 18

அன்றிலிருந்தே அவர்களுடைய வீட்டில் திருமணக் களை கட்ட ஆரம்பித்து விட்டது.

உடனே உட்கார்ந்து, நகை, சீர், திருமண வேலைக அழைக்க வேண்டிய உறவுகள், நட்புகள் என்று ஆ ராஜுவும், ஞான ராஜுவும் பட்டியலிட ஆரம்பித்து விட்டன

ஹம்சத்வனிக்குள், ஆயிரம் உல்லாச உணர்வுக ஊற்றாய்ப் பெருக, மகிழ்ச்சியில் ஊஞ்சல் கட்டி ஆடியது உள்ளம்!

அன்றிரவு முழுவதும், மர நிழலில் இளைப்பாறிய பறவைக் கூட்டம் திடீரென்று தன் வெண் சிறகு விரித்து பறந்து சென்ற படபடப்பை அவள் இதயமும் சும திருந்தது.

நால்வகை நாணங்களும் அவளிடம் அனுமதியின்றி சரண் புக, நெஞ்சம் ஜதியாய்த் துள்ளல் போட்டது.

மறுநாள் காலையிலேயே, ப்ரஜன் வந்து விட்டான்.

இருவருமாகக் கிளம்பிச் சென்று தேவையானவற்றை வாங்கினர்.

அவள், நளினிக் கென்று ஒரு பட்டுப் புடவையும், அவனுக்கு ஒரு மோதிரமும் வாங்கினாள்.

தன் மனதினுள் சேமித்திருக்கின்ற மொத்தக் காதலை யும் உருக்கி வார்த்த அன்பளிப்பாய், அதை அவனிடம் அளித்தாள்.

அவன் வற்புறுத்தி அதைத் தன் விரலில் மாட்டி விடும்படிக் கூற, ''ம்ஹூம்... வீட்டுக்குப் போனப்புறம் போட்டு விடறேன்... இங்கே எல்லாரும் இருக்காங்க'' சிணுங்கலுடன் கூறினாள்.

அவளுடைய மறுப்பை, உள்ளூர ரசித்து நகைத் தாலும், ''அதெல்லாம் முடியாது. இப்பவே போட்டு விடு... நான் என்ன உன் கிட்டே எல்லார் முன்னாடியும்



'உம்மா' குடுன்னா கேட்டேன்... இவ்வளவு வெக்கப் படறே? அவங்கவங்க பொது இடத்திலே என்னென் னவோ செய்யறாங்க!'' என்றபடி வற்புறுத்திப் போட வைத்தான்.

ஷாப்பிங் முடிந்த பிறகு, அவளுடைய வீட்டிற்கு வந்தபோது, ருக்மணியும் பங்கஜமும் ஊரே மணக்கும்படி மாப்பிள்ளைக்கு விருந்தைத் தயார் செய்திருந்தனர்.

சாப்பிட்டு விட்டு ஹோட்டலில் ஓய்வெடுக்கச் சென்றவன், மாலையானதும் அவளைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்றான்.

விரிந்து படர்ந்திருந்த கடற்கரையில், அலைகள் சுகமாய்க் காலைத் தழுவ அவளருகில் நின்றபோது, உலகமே மறந்து போனது!

''ஹனி! என்னவோ ரொம்ப கலாச்சாரம் அது இதுன்னு நீதான் என்னைப் பக்கத்துலயே நெருங்க விடாம இருக்கே? இங்கே பாரு... உங்க ஊரிலே, இந்தக் காதலர்கள் எல்லாரும் பாக்கறப்பவே எவ்வளவு சுதந்திரமா காதல் செய்யறாங்க... எவ்வளவு நெருக்கமா இருக்காங்க?'' ஊடலுடன் சிணுங்கினான்.

''ப்ரஜு! இவங்க தான் எங்க சமூகத்தோட பிரதி நிதிங்கன்னு நான் சொல்லலையே? பொது இடத்துலே... அதுவும் பெரியவங்க, குழந்தைங்க வர்ற ஒரு இடத்துல இப்படி நடந்துக்கறவங்களை நினைச்சா, எனக்குப் பரிதாபமாத்தான் இருக்கும்!

''தன்னோட அந்தரங்கங்களை பிறர் அறிய வெளிச்சம் போட்டுக் காட்டற இந்த மாதிரி மனுஷங்களை, வெளி நாட்டிலே வேணா அங்கீகரிக்கலாம்.

''ஆனா இங்கே அப்படி இல்லை! அதைப் பத்தி, அ
வெறுப்போட காரசாரமா விமர்சிக்கறவங்கதான் அதிக

''என்னைப் பொறுத்தவரைக்கும் இது எனக்கு
பிடிக்காது. அவங்களுக்குப் பிடிச்சிருக்கு... அவ்வள
தான்!

''ஆனா இதை வச்சி எங்க கலாசாரத்தை தயவு செஞ்
ஜட்ஜ் பண்ண வேண்டாம்... ப்ளீஸ்!'' சிறு தவிப்புடன்
கெஞ்சினாள்.

''ஓகே... ஓகே...'' என்றபடிக் கையுயர்த்தியவன்,
சட்டென்று குனிந்து கடல் நீரை அவள் மேல் வாரி
இறைத்தான்.

வெள்ளி முத்துச் சிதறலாய் தன் மேல் பரவிய நீரை
ரசித்தவள், ''ஹும்... ப்ரஜு... பாருங்க! சுரிதாரெல்லாம்
நனைஞ்சிடுச்சி.. ச்சீ... ரொம்ப மோசம் நீங்க!'' செல்ல
மாய்க் கடிந்தாள்.

''ஹனி.. என் கை தானே உன்னைத் தொட மாட்
டேன்னு சொல்லியிருக்கு... அந்தக் கடல் தண்ணி
எவ்வளவு குடுத்து வச்சிருக்கு பாரு... ரொம்பப் பொறா
மையா இருக்கு!

''பேசாம ஹோட்டலுக்குப் போயிடலாம்... அங்கே
உன் சுடிதாரைக் காய வச்சிட்டு அப்புறமா உங்க வீட்டுக்
குப் போகலாம்...'' குறும்புடன் கூறினான்.

''ம்... ரொம்ப ஆசைதான்!... அதெல்லாம் இங்கேயே
காஞ்சுடும்... ஹோட்டலுக்குப் போனா, அப்புறம் என்ன
நடக்கும்னு எனக்குத் தெரியும்...''

''ஏய்... சொல்லு சொல்லு! என்ன நடக்கும்? எனக்கு
எதுவுமே தெரியாதே... உனக்கு அதெல்லாம் கூடத்



தெரிஞ்சிருக்கு... பெரிய ஆள்தான் நீ! என்னவோ
ஒண்ணுமே தெரியாத மாதிரி நடிச்சே! ம்...''

கண்கள் குறுகுறுப்புடன் இடுங்கி அவளையே வருடக்
கேட்டான்.

''ப்ரஜு... இப்படி எல்லாம் வம்பு பண்ணினா, அப்புறம்
நான் இங்கேருந்து போயிடுவேன்...''

''ஓ.கே... ஓ.கே..! கொஞ்ச நேரம் இங்கேயே காத்து
வாங்கிட்டுக் கிளம்புவோமா?'' என்றபடி சென்று மண
லில் அமர்ந்தான் அவன்.

மௌனமாக அவனருகில் அமர்ந்தவளுக்குள், இந்தத்
தருணம் நிஜமாவென்ற மகிழ்ச்சித் ததும்பல்கள்!

அவளுடைய துப்பட்டா காற்றில் பறந்து வந்து
மெதுவாகப் ப்ரஜனை உரச, மெய் சிலிர்த்தது அவனுக்கு!

''எனக்கு உன்கிட்டயிருந்து ஒண்ணே ஒண்ணு
வேணுமே!''

திடீரென்று ஆழ்ந்த குரலில் கேட்டான் ப்ரஜன்.

''ஏய்! நீங்க என்ன கேக்கப் போறீங்கன்னு எனக்குத்
தெரியும்..!''

சுட்டு விரலை உயர்த்தி எச்சரித்தபடி சிணுங்கினாள்
அவள்.

''பாத்தியா? உனக்குத்தான் அதே நினைப்பு! நான்
அதைக் கேக்கலை... உன்னோட டயரி வேணும்!
என்னைப் பத்தி அதிலே நீ என்ன எழுதியிருக்கேன்னு
தெரிஞ்சுக்க ரொம்ப ஆசையா இருக்கு! தருவியா ஹனி?''

ஏக்கத்துடன் கேட்டவனைப் பார்த்தபோது, ஏனோ
அவளால் மறுக்க இயலாமல் போக, ''ம்... வீட்டுக்கு
வாங்க.. தரேன்!'' என்றாள் மெல்லிய குரலில்!

* * *

பிறகு அவளுடன் கைலாசத்தின் வீட்டிற்குச் சென்று அவரிடமும் அவர் மனைவி சிவகாமியிடமும் இருவரு ஆசீர்வாதம் வாங்கினர்.

அவளை வீட்டில் விட்டு விட்டுச் சாப்பிட்டவுடன் அவன் கிளம்பும்போது, தன் டயரியை ஞாபகமாக எடுத்து வந்து அவனிடம் தந்தாள் அவள்.

அவன் சென்றதும், ஏனோ அந்த வீடே ஒளியிழந்தது போல்...

மறுநாள் அவனைப் பிரிய வேண்டும் என்று நினை தாலே அவளுக்குள் வேதனையாய்!

அந்த நீல வானப் பின்னணியில் மிதக்கும் ஒற்றைப் பறவையாய் அவனையே சுற்றி வந்தது உள்ளம்!

மறுநாள் காலையிலேயே அவனிடமிருந்து அழைப்பு வந்து விட்டது.

அவன் தன் செல்லை அவசரமாக உயிர்ப்பித்தவுடன், ''ஹனி! தேங்க் யூ! உன் டயரி.. நீ சொல்லாத நிறைய விஷயங்களை... உன்னோட உணர்வுகளை... என் மேல நீ வச்சிருக்கிற ஆழ்ந்த பிரியத்தை அழகா எனக்குச் சொல்லிடுச்சி! தேங்க் யூ சோ மச்'' என்றான் உணர்ச்சிகள் நிரம்பிய குரலில்!

மதியம், ஆதிராஜ், ருக்மணி, கைலாசம் என்று அனை வரும் ஏர்போர்ட்டுக்கு உடன் வந்திருந்ததால், அவளால் அவனுடன் தனிமையில் எதுவுமே பேச முடியாமல் போயிற்று!

பிரிவின் வலி... கனமாய் மனதில் பதியன் போட்டது.

இனி வருகின்ற இரவுகளில், உறக்கம் தொலைத்து தான் தவிக்கப் போவதை இன்றே உணர்ந்தாள் அவள்!



ஆனால் கிளம்புவதற்கு முன்பு, ஹேண்ட் லக்கேஜி லிருந்து அவன் ஒரு அட்டைப் பெட்டியை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

''இந்த மாசக் கடைசியிலே தீபாவளி வருது இல் லையா? அதுக்கு தான்! என்னோட ஃபேவரிட் கலர்லே எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்த ஒரு புடவை!'' சிறு முறுவலுடன் கூறினான்.

''எப்போ எடுத்தீங்க?'' அவள் ஆர்வத்துடன் கேட்டாள்.

''நீ அம்மாவுக்குப் புடவை செலக்ட் பண்ணிட்டிருந் தியே, அப்போ பக்கத்து கௌண்டர்லே இருந்தது... உனக்குத் தெரியாம பில் போட அனுப்பிட்டேன்...''

''தேங்க் யூ ப்ரஜு'' என்றபடி அவனுக்கு விடை கொடுத்தவளின் விழிகள், பிரிவுச் சுமையில் நிறைந் திருந்தன.

உடனே அவளிடம் குனிந்தவன், ''ப்ளீஸ் ஹனி.. அழுதிடாதே... அப்புறம் என்னால உன்னை விட்டுட்டுக் கிளம்ப முடியாது'' மென் குரலில் கெஞ்சுவது போல் கேட்டான்.

''இல்லை ப்ரஜு...! நான் அழ மாட்டேன்... இன்னும் மூணே மாசம் தானே? நிமிஷமாய் பறந்துடும்!''

கண்ணீரை விழிகளிலிருந்து உள் வாங்கியபடிச் கூறினாள்.

''ம்... தட்ஸ் தி ஸ்பிரிட்!'' என்றபடி செல்லமாக அவள் கன்னத்தைத் தட்டி விட்டு, அனைவரிடமும் விடை பெற்றான் அவன்.

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஜனித்த சில கணங்களிலேயே மறைந்து விடும் வானவில்லாய், அவன் பார்வையிலிருந்து மறைந்தான் ப்ரஜன்!

* * *

என்று அவள் கன்னத்தில் யாரோ தட்டி உசு
அதுவரை மனதில் சுமந்திருந்த இனிய நினைவுகள்
புகைப்படலமாய் மெல்லக் கலைந்தன!

தான் சிறு வயதில் கூடு கட்டி வாழ்ந்திருந்த மரத்தை
திரும்பிப் பார்க்க வரும் பறவையாய்... மனதில் பழைய
நினைவுகளின் தாக்கம் சுகமாய் நிறைந்திருக்க, மெதுவாக
அந்த இனிய தருணத்திலிருந்து தன்னை விடுபட்டு
மீண்டாள் அவள்.

ஆழ்குளத்து நீரின் அசைவற்ற மௌனத்தை சுமந்
திருந்தது மனது!

## 19

ஹம்சத்வனியின் மடியிலிருந்த குழந்தை தான்
அவளை எழுப்பிக் கொண்டிருந்தான்.

ப்ரஜனைப் பற்றிய ஞாபகப் பதிவுகள்.. பனிப்
புகையாய் கலைந்தன.

"ஏய்.. குட்டிச் செல்லம்... என்னம்மா வேணும்?"
என்றபடி அவனைக் குனிந்து முத்தமிட்டாள் அவள்.

உடனே அவன் மாயக் கண்ணனாய் புன்னகை சிந்த,
"த்வனி! சிங்கப்பூர் வந்துடுச்சின்னு நினைக்கிறேன்... சீட்
பெல்ட் போடச் சொல்லி இப்பதான் ஏர் ஹோஸ்டஸ் வந்து
சொன்னாங்க... அதான் எழுப்பினோம்" என்றார் ருக்மணி.

உடனே சீட் பெல்ட்டைப் போட்டு நிமிர்ந்தவளுக்
குள், தான் இன்று எதற்காக சிங்கப்பூருக்கு வந்திருக்கிறோ
மென்ற நினைவும், நளினியின் இறப்பும் நெருடலாய்ப்
பரவி, இதயத்தை பெரும் பாரமாக்கின.



நளினி, இன்று காலையில் சிங்கப்பூரில் இறந்துவிட்ட
செய்தி கேட்டுத்தான் அவர்கள் மூவரும் கிளம்பி இருந்
தனர்.

நாளைக் காலையில், இறுதிச் சடங்கு நடக்கவிருக்
கிறது.

கைலாசமும் அங்கு வந்திருப்பாரென்று தோன்ற,
ஜன்னல் வழியே கீழே பார்த்தாள் அவள்.

அழகிய தங்க நிற விளக்குகள் வரவேற்பாய் புன்
னகைக்க, சிங்கப்பூரின் அழகும், பிரம்மாண்டமும், ஏனோ
இன்று அவளுக்குள் எந்தவிதச் சலனத்தையும் ஏற்படுத்த
வில்லை.

மாறாக, பெரும் பாரத்தையும், வேதனையையுமே
பரவச் செய்தன. சோகத்தின் விளிம்பில் நின்று தவித்தது
நெஞ்சம்!

பிறகு, ஏர்போர்ட்டிலிருந்து ஹோட்டலுக்குச் சென்று
தங்களின் பொருட்களை வைத்துவிட்டு, குளித்து முடித்து
ப்ரஜனின் வீட்டிற்கு மூவரும் சென்றனர்.

வழியியிலேயே, பரணிக்கு போன் செய்து தான்
பத்திரமாக வந்து சேர்ந்து விட்ட விபரத்தைக் கூறிவிட்டு
வைத்தாள் அவள்.

மனம் பாறையாகக் கனத்திருந்தது... முதல் முறை
வந்ததற்கும் இந்த முறைக்கும் உள்ள வேற்றுமையை
எண்ணி உள்ளம் சோர்ந்தது!

கார் வழுக்கிச் செல்ல... இன்னும் சிறிது நேரத்தில்
ப்ரஜனுடைய வீட்டுக்குச் செல்லப் போகிறோம் என்ற
தும், தன்னையே தனக்கு அறிமுகம் செய்த அவனுடைய
நினைவுகள் நீங்காமல் நெஞ்சில் நிறைந்தன.

அங்கு வாசலிலேயே காத்திருந்த கைலாசமும், அ
ருடைய மகள் ஹேமமாலினியும், ஜோதியும், பெரு
சோகத்துடன் அவளை வரவேற்றனர்.

உள்ளே சென்றபோது, சிறு புன்னகையுடன் அமைதி
யாய் ஒரு குளிர் சாதனப் பேழையில் சயனித்திருந்தா
நளினி.

'ஹோ'வென்ற தனிமை உணர்வுடன், துக்கம் தொண்
டையை அடைக்கத் திரும்பினாள் த்வனி.

எதிரே, பெரிதாய் ப்ரஜனின் புகைப்படம்... அழகிய
பூமாலையும், விளக்குமாய் அவனுடைய வழக்கமான
குறும்புப் புன்னகையை சுமந்தபடி மாட்டப்பட்டிருந்தது.

* * *

பழைய நினைவுகள் காட்டாற்று வேகத்துடன் உள்ளே
பாய, தான் அவனை ஏர்போர்ட்டில் பார்த்த அந்த இறுதிக்
கணமே நினைவுக்கு வருவதாய்!

அன்றுதான், அவள் அவனை உயிருடன் கடைசியாய்
பார்த்தது!

பிறகு கல்யாணக் கனவுகளுடன் அவள் காத்திருக்க,
தினமும் போனில் பேசியபடி தன் காதல் தளிரை அவ
ளுக்குள் பதியன் போட்டுக் கொண்டிருந்தான் அவன்.

தை மாதத்தில் அவர்களுக்கு திருமணம் நிச்சயம்
செய்யப்பட்டிருக்க, ஜனவரி முதல் வாரத்திலேயே,
அவனும் நளினியும் இந்தியா வருவதாக இருந்தனர்.

அவர்களுடைய திருமணத்திற்கு இன்னும் ஒரு
மாதமிருக்க, த்வனி வேலையை விட்டிருந்தாள்.

ப்ரஜனுடைய நேசத்தை யாசகம் பெற, உணர்வுப்
பிழம்பாய் உருகி நின்றாள்.



வீட்டிலேயே இருந்து சமையல் கற்றுக் கொள்ளவும் ஆரம்பித்திருந்தாள்.

திருமண வேலைகள் வேகமாய் நடக்க, பத்திரிகை அடிக்கக் கொடுத்திருந்தார் ஆதிராஜ்.

* * *

வீடே திருமணக் களை கட்ட ஆரம்பித்து... அவள் எதிர்காலக் கனவுகளில் மகிழ்ச்சியுடன் ஆழ்ந்திருந்த போது தான், அந்த விபரீதம் நிகழ்ந்தது.

டிசம்பர் மாதம்... மூன்றாவது வாரத்தில் அலுவலக விஷயமாக இந்தோனேஷியாவிற்குச் சென்றிருந்தான் ப்ரஜன்.

டிசம்பர் 26, 2004... அன்று விடிகாலையில் கூட அவளிடம் பேசினான் அவன்.

ஆனால், அன்றுதான் கடல் தனக்குள் ஒளிந்திருந்த பூகம்பத்தை வெளிப்படுத்தி சுனாமியெனும் ஆழிப் பேரலையை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்திய நாள்!

பல உயிர்களைத் தன் கோரப் பசிக்கு இரையாக்கி... அதுவரை காத்திருந்த அமைதியை சிதறடித்து... தன் மடியில் பரவசத்துடன் காத்திருந்த மனிதர்களை மாயப் பிசாசாய் ராட்சசக் கரங்கள் கொண்டு கடல் கபளீகரம் செய்த ஒரு கொடிய நாள்!

ஊரையே புரட்டிப் போட்ட சுனாமி, அவளுடைய வாழ்க்கையையும் உருக் குலைத்த நாளும் அது தான்!

அன்று ஞாயிறென்பதால், அவன் பீச் ரிசார்ட்டில் நீச்சல் குளத்தில் ஓய்வாக சன் பாத் எடுத்துக் கொண்டிருந்த போதுதான், அந்தக் கொடூரம் நிகழ்ந்தது.

## 20

கடல், தன் கூரிய பற்களையும் கோர முகத்தையு மனிதர்களுக்கு அறிமுகப்படுத்தி ஊழித் தாண்டவ ஆடத் துவங்கியது.

இதை அறியாமல் உல்லாசமாய் கடற்கரையில் களி திருந்த மக்கள் தங்களின் உயிர் மூச்சை கடலின் மடியி அப்பாவிகளாய் அர்ப்பணித்தனர்.

அன்று, தொலைக்காட்சியில் இந்த செய்தி ஒளிபரப் பட்டதுமே மிகவும் பயந்து போனாள் ஹம்சத்வனி!

உடனே ப்ரஜனுக்கு செல்லில் தொடர்பு கொண்ட ஏனோ லைனே கிடைக்கவில்லை.

மிகவும் பதறிப் போனவள், சிங்கப்பூரிலிருக்கு நளினியுடன் பேசியபோது, அவரும் மிகவும் உடைந் திருந்தார்.

இருவரும் தவித்துப் போய் பல இடங்களுக்கு தொடர்பு கொண்டு பேசியும் பலனில்லை.

பிறகுதான் தெரிந்தது... பல உயிர்களைப் பலி கொண்ட அந்த சுனாமி, ப்ரஜனையும் விடவில்லை என்பது!

ஹோட்டலில் தங்கியிருந்தவர்களில் பலர் கடலி மடியில் தொலைந்து போயிருக்க, அவர்களில் ஒருவனா ப்ரஜனும் இருந்ததாக, ஹோட்டல் நிர்வாகம் வருத்த துடன் அறிவித்தது.



பலரின் உடல்கள் கிடைக்கவில்லை... கிடைத்த உடல்களும் பலத்த சேதமாகி இருந்தன!

உடனே நளினி இந்தோனேஷியாவிற்குப் பறந்து சென்று, கிடைத்த சடலங்களில் தன் மகனுடையதைத் தேடினார்.

ஆனால், கடலன்னை தன் மடியில் ப்ரஜனை அசுரத் தனமாகத் தாலாட்டி தன்னுடன் ஐக்கியமாக்கி இருந்தாள்.

அந்த பீச் ரிசார்ட்டில் தங்கியிருந்த அனைவருமே மாண்டு போயிருந்தனர்.

ப்ரஜனுடைய பொருட்கள் சிலவற்றை ஓட்டல் நிர் வாகமே அறையிலிருந்து எடுத்துக் கொடுக்க, ஒரே மகனை இழந்த துக்கத்துடன் நளினி நடைப் பிணமாய் உயிர்ப்பைத் தொலைத்து ஊர் திரும்பினார்.

ஹம்சத்வனிக்கும் அவள் குடும்பத்திற்கும் இந்தத் துக்கம் தாங்க முடியாததாய்... மரண அடியாய்!

மன ஆழத்தில் தேக்கி வைத்திருந்த துயரமும், வேதனையும், நீர்த் துளிகளாய் வற்றாது பெருகின.

உடனே, தன் மகளை அழைத்துக் கொண்டு சிங்கப் பூருக்கு சென்றார் ஆதிராஜ்.

அவனுடைய பிரிவு அவளை உருக்குலைத்திருக்க, சிதைந்த சிற்பமாய்... உயிருள்ள சவமாகி இருந்தாள் த்வனி!

உணர்வுகள் மரத்துப் போய், நடந்த உண்மையை உணர மறுத்து ஊமையாகியிருந்தாள்.

ப்ரஜனின் வீட்டில், யுடிகோலனின் தெளிப்பில்லா மல்... ரோஜாக்களின் சிதறலின்றி... குளிர்ப் பேழை

இல்லாமல்... சாவின் சுவடின்றி ஒரு மரணம், அதை வரையும் சுருட்டிப் போட்டு கண்ணீர்த் துளிகளை உதிர வைத்துக் கொண்டிருந்தது.

சோக முட்களை மனதெங்கும் பரப்பி, கிழிபடும் நினைவுகளுடன் கனத்த மனதோடு உயிர்ப்பைத் தொலைத்து அமர்ந்திருந்தாள் த்வனி!

அங்கு சென்றதும், நளினிக்கும் ஆறுதல் கூறித் தேற்றி, திருமணத்திற்கு ஒரு மாதம் முன்பு தன்னுடைய மாப்பிள்ளை இறந்த சோகத்தையும் ஆற்றிக் கொண்டு, மகளை கண்ணுக்குள் வைத்துத் தாங்கினார் ஆதிராஜ்.

ஆனால் த்வனிதான் பெரிதும் ஓய்ந்து போனாள்.

அவளுடைய மகிழ்ச்சியும் எதிர்காலமும் சிதைந்து போய் கனவுகள் கானல் நீராகி இருந்தன.

நெஞ்சுக்குள் வியாபித்திருந்த வெளிச்சம் முழுவதும் விலகி, இருளாய் பாழடைந்து கிடந்தது.

இதயம் மட்டும், அரூபமாகிய அவனுடன் பேசிய படியே இருந்தது.

''என்னருமை ப்ரஜு! உன்னோடு கழித்த நாட்கள் மழையில் நனைந்த பறவைச் சிறகாய் என்னுள் ஒட்டிய படிப் பரவசமாய் கலந்திருக்கிறது...

''உன் இதழ்களில் அழகாய் ஜனித்து குறும்பாய் உறைந்திருக்கும் அந்த ஒற்றைப் புன்னகையை எப்படி மறப்பேன்?

''உன்னுடன் கலந்து, பழகி, ரசிக்க... நுகர... எத்தனை விஷயங்களைப் பட்டியலிட்டு வைத்திருந்தேன் நான்... எவ்வளவு அபூர்வமானவன் நீ!



''என் மீது நீ கொண்டிருந்த அந்த மாறாக் காதல் இன்று காற்றோடு போன மாயம் என்ன? ஏன் என்னைப் பிரிந்து சென்றாய்?''

குமுறலுடன் தனக்குள்ளேயே உருகிக் கரைந்திருந்தாள் அவள்.

பிறகு, ஊருக்குத் திரும்பி வந்து பல நாட்களாகியும், எதையுமே உணருகின்ற மன நிலையில் அவள் இல்லை.

அவனை நினைவு படுத்துகின்ற எல்லாவற்றையும் மறக்கத் துணிந்தவளுக்கு, நெஞ்சக் கூட்டிலிருக்கும் அவனை மட்டும் வெளியேற்றவே முடியவில்லை.

அந்த இழப்பிலிருந்து அவள் வெளிவரவே, ஆறு மாதங்களுக்கு மேல் ஆயிற்று!

வேலைக்கும் செல்லாமல், வீட்டிலேயே அதுவும் தன் அறையிலேயே அவள் அடைந்து கிடக்க, இலக்கின்றி வான் வெளியே வெறித்திருக்கும் அவள் கோலம், ஆதிராஜையும், ருக்மணியையும் உலுக்கிப் போட்டது.

காலம் சோகத்தை ஆற்றும் என்ற உண்மையும் அவளுடைய விஷயத்தில் பொய்த்துப் போவதாய்!

* * *

நாளாக ஆக, அவள் சிறிது சிறிதாக மாறியதும் மகிழ்ந்த ஆதி, மீண்டும் அவளுடைய திருமணப் பேச்சை மெதுவாகத் தொடங்கினார்.

ஆனால் அவளோ உறுதியாக மறுத்துவிட, ருக்மணி உடனே அழ ஆரம்பித்து விட்டார்.

''த்வனி... எங்களுக்கு நீ ஒரே பொண்ணு! நம்ம குலம் உன் மூலமாத்தான் தழைக்கணும்! உங்கப்பாவோட

குடும்பம் வாரிசில்லாம அழிஞ்சிடக் கூடாது... ஏற்கனவே குளத்துக்குக் குழந்தை இல்லை! நீயும் இப்படி இருந்தா எப்படிடா?'' கண்ணீருடன் கேட்டார்.

''அம்மா..! சத்தியமா என்னால ப்ரஜனை மறந்து வேற ஒருத்தரை கல்யாணம் செஞ்சுக்க முடியாது... உங்களுக்கு வாரிசு தானே வேணும்? நானே அதுக்கு ஒரு ஏற்பாடு பண்றேன்'' உறுதியாகக் கூறினாள் அவள்.

பெரியவர்களிருவரும் வேறு எதிர்பார்த்திருக்க, உடனே ஒரு முடிவும் எடுத்து, ஒரு அநாதை இல்லத்திற்குச் சென்று, ஒரு குழந்தையைத் தத்தெடுத்து விட்டாள் அவள்.

அவனுக்கு 'ப்ரஜன்' என்று பெயரிட்டு அவள் வளர்த்து வர, தொடர்ந்த நாட்களில், நளினிக்கும் அவனுக்குமான நெருக்கமும் தொடர்பும், இன்னும் அதிகரித்தது தான் உண்மையாய்!

தன் மகன் இறந்த பிறகும் அவனை மறக்காமல், ஒரு குழந்தையை தத்தெடுத்து தன் வாழ்க்கையைப் புதிய பாதையில் திருப்பிக் கொண்டவளை, மகளாகவே வரித்துக் கொண்டார் நளினி.

அவளையும், அவளுடைய உறுதியையும் பார்த்து உடைந்து போய் மனதிற்குள்ளேயே நொந்து போன ஆதிராஜ், ஒரு நாளிரவு தூக்கத்திலேயே மாரடைப்பால் இறந்து போனார்.

அவருடைய இறப்பு, த்வனியை சுக்கு நூறாய் சிதறடித்தது... தன்னால்தான் அவர் இறந்தாரோ என்ற குற்றவுணர்வும், வேதனையும் அவளை வாட்டின.



பிறகு வந்த நாட்களில், குட்டி ப்ரஜன் இருந்ததால் மட்டுமே அவளால் இரு இழப்பையும் தாங்கி சிறிது ஜீவனுடன் வாழ முடிந்தது.

அவன் முகம் பார்த்து சிரிக்க, அவள்தான் சோகத்தை மெல்ல அதில் கரைக்க ஆரம்பித்திருந்தாள்.

பிஞ்சு விரல்களால் அவள் வேதனைகளை நீவி ஆறச் செய்து கொண்டிருந்தான் அவன்.

பாலைவனத்தை வளப்படுத்த வந்த சிற்றோடையாய்... அவளை அன்புச் சாரலால் நனைக்க ஆரம்பித்திருந்தான்.

உனக்கென நானிருக்கிறேன் என்ற சிறு நம்பிக்கையை தன் மழலைச் சிரிப்பில் கலந்து பரிசளித்து அவளை மீட்டெடுத்துக் கொண்டிருந்தான் அவன்.

ருக்மணியும், இந்த இழப்பினால் பெரிதும் ஓய்ந்து போயிருந்தார்.

* * *

தொடர்ந்து வந்த நாட்களில், ஹம்சத்வனி வேலைக்குப் போக ஆரம்பித்தாள்.

ருக்மணி, ப்ரஜனைக் கவனிப்பதில் தன் நாட்களை செலவிட, இன்னும் ஒரு பொம்மையைப் போல் உணர்ச்சிகளைத் தொலைத்துத்தான் த்வனி வலம் வந்து கொண்டிருக்கிறாள்.

பரணியின் நட்பு மட்டுமே அவளை சிறிது மாற்றியிருந்தது.

ப்ரஜனுடைய நினைவுகள் இப்போதும் ஆழ் மனதில் பொக்கிஷமாய் சாம்பல் பூத்துக் கிடக்கின்றன.

காதலாகிக் கசிந்துருகி, கவிதை கிறுக்கி, அவனுக்கான காத்திருப்பை ஒரு தேடலுடன் கடந்து... தனிமையில் வெட்கப்பட்டு அடிக்கடி கனவுலகை ஸ்வீகரித்து... தன் தலையணைக்கு அவன் பெயர் வைத்து கிறக்கத்துடன் தழுவிக் கொண்ட சுகமான தவமாய்... பழைய நாட்கள் இன்னும் உள்ளே நிறைந்து தானிருக்கின்றன.

அவனுடைய ஞாபகங்களை, நித்தமும் பிம்பமாய் இன்னும் சுமந்து கொண்டுதான் இருக்கிறாள் அவள். பழைய ஞாபகங்களின் அடையாளம், அழியாமல் தான் இருக்கிறது.

* * *

யாரோ தன் தோள் தொடும் உணர்வில் அவள் கலைய, ஹேமமாலினிதான் அங்கு நின்றிருந்தாள்.

எதிரே ப்ராஜனுடைய படம் அவளைப் பார்த்து குறும்புடன் புன்னகைத்தபடி இருக்க... 'ஏன் பிரிந்தாய் என்னவனே?'வென்று இதயம் அடைத்து ஹோவென்று கதறியது நெஞ்சம்!

"ஹம்சத்வனி! எனக்கு உங்களை நினைச்சா ரொம்ப பெருமையா இருக்கு... கவலையாவும் கூட!

"நளினி ஆன்ட்டியும் இறந்துட்டாங்க... உங்களுக்குன்னு ஒரு வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கறது தானே நல்லது! நான் சொல்றேன்னு தப்பா நினைச்சிக்காதீங்க ப்ளீஸ்!" தாழ்ந்த குரலில் கூறினாள்.

அவளுடைய விரல்களைப் பிடித்து மெல்ல அழுத்தியவள், "நான் தப்பா எடுத்துக்க மாட்டேன்க்கா! என் மேல் இருக்கற அக்கறையிலதானே சொல்றீங்க! ஆனா



என் மிச்ச வாழ்க்கைக்கு இந்த ப்ராஜன் போதும்...! என்னால என் ப்ராஜுவை மறக்க முடியாதுக்கா!"

மெல்லிய குரலில் உறுதியுடன் வந்தது அவள் குரல்.

அன்றிரவு ஹோட்டலுக்குத் திரும்பி வரும்போது, அந்தத் தெருக்களில் அவனுடைய ஒற்றை விரல் பிடித்து தான் நடந்த தருணங்கள், தப்பாமல் நினைவுக்கு வந்தன.

வெளியே, மெல்லிய சாரலுடன் பரவ ஆரம்பித்தது மழை!

இங்கு வந்ததும், ஏனோ மீண்டும் டயரி எழுத விழைந்தது மனம்!

இப்போதெல்லாம், அவள் கவிதையே எழுதுவதில்லை!

மூன்று வருடங்களுக்கு முந்தைய டயரியில் அவன் பெயரோடு நின்று விட்டது... அவளுடைய பேனா!

இன்று ஏனோ அவனிடம் கேட்க நிறைய கேள்விகள்!

மெதுவாக ஒரு காகிதத்தை எடுத்து எழுதத் துவங்கினாள் அவள்.

**என் மன்னவனே!**
**என் இதயக் கூட்டை விட்டு...**
**ஏன் பிரிந்தாய்**
**என்னவனே?**
**கூட்டைப் பிரிகிற**
**பறவைக்குத் தான்...**
**சுதந்திரச் சிறகுகளும்**
**தடையில்லா வானமும்**
**சொந்தமென்பதாலா..?**

இல்லை...
வானத்தை
வசப்படுத்தச் சென்றாயா?

அன்று...
உன்
வருகைக்குப் பிறகுதான்...

என்
டயரியில்...
மையூற்றி
எழுதுவதற்கு பதில்...
மனதை ஊற்றி
வார்த்தைகளாய்
வடித்தேன்..!

இன்று...
வேதனைத் துளிகள்
கசிகின்றன...
இதற்கு மேல்
எழுத மறுக்கிறது
என் பேனா!
ஒரு இறுதிக் கோரிக்கை!

அலைகள் நுரைத்து
ஆவியாகி...
முகிலாய் கறுத்து
இடிகள் சப்தித்த..



இந்தப் பெரும் மழையில்
காத்திருக்கிறேன் நான்!
நீ கேட்ட...
அந்த ஒற்றை
முத்தத் துளியையும்...
மொத்தப் பிரியத்தையும்...
பரிசாய் தர!
மீண்டும் வருவாயா!'

'ஓ'வென்று வான்வெளியை நோக்கிக்

கதற வேண்டும் போல்!

"த்வனி.. படுக்க வரலையா?"

பால்கனியில், வானத்தை வெறித்தபடி நின்றிருந்தவளிடம் கேட்டார் ருக்மணி.

"ம்... வரேம்மா..." என்றபடி உள்ளே வந்து படுத்தவள் வெகு நேரம் உறங்கவில்லை.

தொலை தூரத்தில் தொலைத்து விட்டுத் திரும்பினாலும் மீண்டு வந்து மடி மேல் அமர்கின்ற செல்லப் பிராணியாய்... அவன் நினைவுகள் பெரும் தீவிரத்துடன் அவளை ஆக்ரமித்தன.

ஒரு நாளும் இறக்கி வைக்க முடியாத கருவறைச் சுமையாய், ஆழ் மனதில் அவனுடைய நேச ஞாபகங்கள் உன்மத்தமாய் இடம் பிடித்திருப்பதை, இன்றும் உணர முடிந்தது.

## 21

மறுநாள், நளினியுடைய இறுதிச் சடங்குக்குப் பிறகு அவளைத் தனியே அழைத்தார் கைலாசம்.

''த்வனி! நீ ஹோட்டல் ரூமைக் காலி செஞ்சுட்டு மாலினியோட வீட்டுக்கு வந்திடும்மா! ஒரு வாரம் அங்கே ரிலாக்ஸ்டா இருக்கலாம்..!''

அவர் வாஞ்சையுடன் கூற, அதுவும் சரியென்றே பட்டது, அவளுக்கு!

அந்த வார இறுதியில், நளினியின் உயிலில் அவளுக்குப் பெரும் பங்கிருப்பதாக வக்கீல் கூறியபோது அதிர்ந்து போனாள் அவள்.

அவர்கள் இருந்த வீட்டையும், பாங்க் பேலன்ஸையும் அவள் பெயருக்கு நளினி எழுதியிருந்தார்.

மற்ற உறவினர்களுக்கு, இன்னொரு வீட்டின் அனுப உரிமை மட்டும் வழங்கப்பட்டிருக்க, ப்ரஜனின் இருபத் யோரு வயதில் அவனுக்கு அளிக்கப்பட வேண்டுமெ திருந்தது.

ஜோதியின் உதவியுடன் எல்லாப் பொருட்களையு மாடிக்கு மாற்றினாள் அவள்.

ஜோதியை, மாலினியே தன் வீட்டில் வேலைக் அமர்த்திக் கொள்ள முடிவு செய்திருப்பதாகக் கூற, பெரு நிம்மதி வந்தது அவளுக்குள்!

பதினோராம் நாள் நடத்த வேண்டிய நளினியின் காரியத்தையும், நட்பு, உறவுகளின் துணையுடன் அவளே முன்னின்று செய்தாள்.



பிறகு எல்லா உரிமையையும் 'பவர்' என்ற பெயரில் மாலினியிடம் ஒப்படைத்தபோது தான், நிம்மதியாக இருந்தது.

கீழ் வீட்டை வாடகைக்கு விட்டு, அதில் வருகின்ற பணத்தை ஒரு அனாதை ஆசிரமத்திற்கு வழங்கும்படி ஏற்பாடு செய்தாள் அவள்.

ஊருக்குக் கிளம்பும்போது, மாலினியுடனே சிங்கப்பூரில் சில மாதங்கள் தங்கப் போவதாக கைலாசம் அவளிடம் தெரிவித்தார்.

அவர்களிடம் விடைபெற்று ஏர்போர்ட்டுக்கு வந்தபோது, இதயம் பாரமாய் கனத்திருந்தது.

கண்ணாடிக் கதவின் வழியே வெளியே மழை பொழிவது தெரிய, பனித் திவலைகளாய் கண்ணாடியில் வேர்த்திருந்த துளிகளையே வெறித்திருந்தாள்.

வெளியே சாரலாய் தெளித்த ஒவ்வொரு மழைத் துளியும், ''உன்னுடன் இணை பிரியாமல் கை கோர்த்துச் சென்ற முறை வலம் வந்த அந்த தேவகுமாரன் எங்கே?'' என்று கேட்பது போல்!

சூரியனின் மறைவால், தன் ஒளிமுகத்தை தொலைத்து இருண்டு போன பூமியின் நிலையிலிருந்தாள் த்வனி!

பிறகு, ஓய்ந்த மனதுடன் அனைவரிடமும் விடை பெற்றாள் அவள்.

* * *

சென்னைக்கு அவர்கள் வந்து இறங்கியபோது, ஏர்போர்ட்டில் காத்திருந்தான் பரணி.

"உன்னைவிட உயர்வான ஒரு மனிதனைத் தவிர மற்றவருடன் ஒரு போதும் நட்பு கொள்ளாதே!" அறிஞர் கன்பியூஷியஸின் வரிகள் தான் அவளுக்கு நினைவு வந்தது.

வெகுவாய் சோர்ந்திருந்த அவளைக் கண்டதும், அவன் மனதிலும் சிறு பாரம் பரவுவது போல்!

இவன்தான் எவ்வளவு அற்புதமான ஒரு நண்பன் என்று தோன்றியது அவளுக்கு..!

அவள் சோர்ந்திருந்தபோது பெரும் துணையாய் இருந்தவன் அவன்... அவளைப் பற்றி ஆதியோடந்தமாக அறிந்தவன்!

அவள் வேலைக்குச் சேர்ந்த புதிதில் யாரிடமும் பழக மறுக்க, மெல்ல மெல்ல அவள் மனதில் நல்ல நண்பனாய் இடம் பிடித்து நெருங்கியவன்!

'செக்ஷுவல் ஹாராஸ்மெண்'டினால், ஆறு மாதங்களுக்கு முன்பு அவள் பாதிக்கப்பட்டாள்.

ஏற்கெனவே உடைந்திருந்தவள், சக ஊழியரின் இந்தத் தொல்லையால் மிகவும் ஓய்ந்து போனாள்.

அப்போது, ஹம்சத்வனிக்கு மேலதிகாரியாகப் பணி புரிந்த ரங்கராஜிற்கு, அவள் மீது ஒரு கண் இருந்தது.

எப்படியாவது அவளைப் பணிய வைத்து, தன் வசமாக்கி விட வேண்டுமென்ற எண்ணத்தில், அவன் பலவாறு முயற்சித்தான்.

இறுதியில், வேண்டுமென்றே அவளுடைய வேலையில் குற்றம் சொல்வது... இரவு தாமதமாக வீட்டிற்கு அனுப்புவது... அசிங்கமாகப் பேசுவது என்று அவன் தொல்லைகள் எல்லை மீறித் தொடர ஆரம்பித்தன.



தாங்க முடியாமல் ஒரு நாள் எல்லாவற்றையும் அவள் பரணியிடம் கூற, உடனே அதை மேலிடத்திற்குக் கொண்டு சென்றான் அவன்.

மறுநாளே, அந்தக் காமுகனை எச்சரிக்கை செய்து வேறு ப்ராஜக்டிற்கு மாற்றினர்.

அன்றிலிருந்துதான், அவள் பரணியிடம் நட்பாகப் பழகி தன் மனம் திறந்து பேச ஆரம்பித்திருந்தாள்.

பிறகு, மெல்ல மெல்ல எல்லாவற்றையும் பகிர்ந்த போது, அதுவும் அவளுடைய கதையைக் கேட்டதும், பெரிதும் அதிர்ந்து போனான் அவன்.

ஆனால், அவளை இயல்பு வாழ்க்கைக்கு மாற்றியதும் அவன்தான்!

"வாழ்க்கையில... சோகத்தின் பாரத்தால் ஒரு இடத்தில் இதற்கு மேல் தாங்க முடியாதென்று தேங்கி நின்று விட்டால், பாசிகள் நிறைந்த குளம் போல் ஆகி விடுவோம்...

"நம்ம நிம்மதிக்குத் தடையா இருக்கற எல்லாத்தையும் தைரியமாத் தாண்டி அருவியாப் பெருகினா, வாழ்க்கை கண்ணாடி மாதிரி தெளிவா ஆகிவிடும்... மனதில் இருக்கும் கவலைகளை... தடைகளை அது தாண்டி விடும்..." என்று தேறுதல் கூறி இந்த அளவுக்கு அவளைத் தேற்றியிருந்தான், அவன்.

* * *

காரில் செல்லும்போது, மெல்லிய குரலில் சிங்கப்பூரில் நடந்த நிகழ்வுகளை அவன் விசாரித்தபடி வர, அவளும் கூறிக் கொண்டே வந்தாள்.

வீட்டிற்குச் சென்றதுமே, பழைய பாரம் அவளுக்குள் மீண்டும் குடி புகுந்து விட, மௌனமாக அவளிடம் விடை பெற்றான்.

பிறகு வந்த நாட்கள் இலக்கற்ற பயணமாய் விரைய, ஒரு நாள் பரணி அவளிடம் மெதுவாகத் தன் மனதைத் திறந்தான்.

''ஹம்சத்வனி! நீங்க எத்தனை நாட்கள் தான் தனியே இருப்பீங்க? அம்மா இருக்கற வரைக்கும் சரி... அப்புறம்! இப்படிச் சொல்றேன்னு நீங்க என்னைத் தப்பா நினைச்சிக்காதீங்க...'' என்றான் தயங்கியபடி!

''என் பரணி... எனக்காக ஏதாவது மாப்பிள்ளை பார்த்து வச்சிருக்கீங்களா? சாரி! நான்தான் சொல்லி இருக்கேனே... ப்ரஜனைத் தவிர என் வாழ்க்கையிலே வேற யாருக்கும் இடம் கிடையாதுன்னு!''

அலைப்புறும் விழிகள், நீரில் நிறையக் கூறினாள்.

''அதில்லை... உங்களுக்குத் துணையா... ஒரு நண்பனா... குட்டி ப்ரஜனுக்கு அப்பாவா இருக்க எனக்கு சம்மதம்!

''அதனால என்னைக் கேவலமா நினைக்க வேண்டாம்! ஒரு நண்பனா மட்டும்தான் இருக்கேன்னு சொல்றேன்... உங்க மனசு மாறுகிற வரைக்கும் நான் காத்திருப்பேன்...'' உறுதியுடன் உரைத்தான்.

''ஹும்! என் மனசு மாறலைன்னா?'' அவள் கூர்மையுடன் கேட்டாள்.

''பரவாயில்லை... அதைப் பத்தி நான் கவலைப் படலை! உங்க வாழ்க்கை பாலைவனமா வறண்டு போயிடக்கூடாது ஹம்சத்வனி!''



''அதனால... ஏற்கனவே சிதைந்திருக்கிற என் வாழ்க்கையை சரி பண்றதா நினைச்சி, உங்க வாழ்க்கையை பலி குடுக்கணும்னு நினைக்கிறது சரியான முட்டாள்தனம் பரணி! வேண்டாம்...'' உறுதியுடன் மறுத்தாள் அவள்.

''என்னை நீங்க தப்பா நினைச்சிக்கலையே?'' தவிப்புடன் வந்தது அவன் குரல்!

''சேச்சே! உங்களை என்னால எப்படித் தப்பா நினைக்க முடியும்? எனக்கு ஒரு நல்ல ஃப்ரெண்ட்... வெல் விஷர் நீங்க! என்னோட வாழ்க்கை நல்லா இருக்கணும்னு நீங்க விரும்பறதை என்னால தப்பாவே நினைக்க முடியாது பரணி!... வெளிப்படையாப் பேசினதுக்கு நன்றி!

''இதுவே வேற யாராவதா இருந்திருந்தா நிலைமையே மாறியிருக்கும்... ஆனா, என்னை நல்லாப் புரிஞ்சிக்கிட்ட நீங்களே எப்படி...?

''சாரி... உங்களுக்கு சாதகமான ஒரு பதிலை என்னால சொல்ல முடியலையேன்னு தான் வருத்தமா இருக்கு! என்னை விட நல்ல பெண்ணா நீங்க விரும்பற மாதிரி உங்க வாழ்க்கை அமையும்... வாழ்த்துக்கள்!''

''இதை, நான் ஒரு காதலனா உங்களைக் கேட்கலை ஹம்சத்வனி... ஒரு நல்ல நண்பனா... உங்க சுக துக்கங்களைப் பாத்துப் பழகினவனா... உங்களுக்கு நல்லதே நடக்கணும்.. நீங்க சந்தோஷமா இருக்கணும்னு ஆசைப்படற ஒரு தோழனாத்தான் நான் கேட்டேன்... அதுவும் உங்க அம்மா என்கிட்டே பேசினப்புறம்தான்!''

அவன் கூறியதைக் கேட்டதும், திக்கென்று அதிர்ந்து நிமிர்ந்தவளுக்குள், மெலிதாய் கோபக் குமிழ்கள் வெடித்தன.

இதுவரை புரியாத ஏதோ ஒரு புதிர் முடிச்சு பட்டென்று தெரிந்து அவிழ்ந்ததைப் போல...!

உடனே, "நான் கிளம்பறேன் பரணி!" என்றபடி வெளியில் வந்து ஸ்கூட்டியை உயிர்ப்பித்தாள் த்வனி!

காதலுக்காக, தன்னையே துண்டித்தபடி துடித்த மனதிற்குள்... சிப்பிக்குள் முத்தாய் தன்னந்தனியே உறைந்து மறைந்திருக்கும் வேட்கை வருவதாய்!

நேச ரேகைகள், நெஞ்சுக்குள் ஆழமாய் பரவியிருந்தன.

அவன் நினைவுகளின் ஆக்ரமிப்பு, இதயத்தில் கண்ணீராய் வழிய ஆரம்பித்தது.

## 22

வீட்டிற்கு வந்ததும், த்வனி ஏதாவது கூறுவாளா வென்று ஆவலுடன் அவள் முகத்தையே பார்த்திருந்த ருக்மணிக்கு பெருத்த ஏமாற்றமாகிப் போனது.

வாசலுக்கு ஓடி வந்து, தாவி அணைத்துக் கொண்ட ப்ரஜனைத் தூக்கிக் கொண்டு தன் அறைக்குச் சென்றவளுக்குள், மெலிதாய் ஒரு எரிமலையின் புகைச்சல்!

சிறகு சிதைந்த பறவையாய்... மனதிற்குள் ஒரு படபடத் தவிப்பு!

மெதுவாகப் பின் தொடர்ந்து வந்த ருக்மணி, "ஏம்மா த்வனி! டல்லா இருக்கே? ஆஃபீஸிலே ஏதாவது ப்ரச்னையா?" தயக்கத்துடன் கேட்டார்.

உடனே நிமிர்ந்தவள், "ஏம்மா இப்படிச் செஞ்சீங்க? பரணி எனக்கு ஒரு நல்ல நண்பர். அவரிடம் போய்



இப்படி எல்லாம் பேசி... எப்படிம்மா உங்களாலே முடிஞ்சது?" கடும் சீற்றத்துடன் கேட்டாள்.

உடனே அவர் விழிகள் நீரில் நிறைந்தன.

"எல்லாம் உன் நன்மைக்குத்தான் த்வனி! நீ இப்படியே தனியா இருக்கறதைப் பாத்தா எனக்குத் தாங்கலை! அப்பாவும் சொல்லிச் சொல்லிப் பாத்துட்டு போய் சேர்ந்துட்டாரு... எனக்கு அப்புறம் உன்னை யாரு பாத்துப்பா?"

கடும் வேதனையிலும், அவளைப் பற்றிய கவலையிலும் உடைந்திருந்தது, அவர் குரல்!

"அம்மா! ப்ளீஸ்... புரிஞ்சிக்கங்க... இவன்... இந்த குட்டி ப்ரஜன் போதும் எனக்கு! என்னால என் ப்ரஜுவை இந்த உடம்புல உயிர் இருக்கற வரைக்கும் மறக்க முடியாது... எத்தனை காலமானாலும் என் முடிவு இதுதான்!"

உறுதியுடன் கூறிவிட்டு, மடியிலிருந்த குட்டி ப்ரஜனை இறுக்கி அணைத்துக் கொண்டாள்.

உறுதியுடன் கூறிவிட்டு, மடியிலிருந்த குட்டி ப்ரஜனை இறுக்கி அணைத்துக் கொண்டாள்.

"நேத்து நம்ம கோவில்லே பரணி தம்பியைப் பார்த்தேன்... அங்கே உன்னைப் பத்திதான் பேசிட்டிருந்தோம்... உனக்கு வாழ்க்கை குடுக்க யாராவது வரணுமேன்னு சாமிகிட்டே கேட்க வந்ததா சொல்லிட்டிருந்தேன்... அப்பதான் அவரும் கவலைப்பட்டாரு!

"அவருக்கு சம்மதம்னா, உன்னை நல்லாப் புரிஞ்சிக்கிட்ட அவரே இதைச் செய்யலாமேன்னு நான் கேட்டேன்... யோசிச்சிட்டு சரின்னாரு... அதான்! உன்னைத் தனியா விட்டுட்டுப் போயிடுவோமோன்னு கொஞ்ச நாளா ஒரு வித பயம் வருது!" கவலையுடன் முடித்தாள்.

''அம்மா... நட்பு வேற... காதல் வேற! ரெண்டை
ஒண்ணா என்னால சத்தியமாப் பாக்க முடியாது! ப்ளீஸ்...
எனக்கு அசிங்கமா இருக்கு... என்னை விட்டுடுங்க!''

கையுயர்த்திக் கும்பிட்டவளின் விழிகள், கலங்கி
யிருந்தன.

உடனே அவளை அணைத்துக் கொண்டு விசும்ப
ஆரம்பித்த ருக்மணிக்குள், அவளைப் புரிந்து கொண்ட
உணர்வு!

அதன் பிறகு, அவர் இதைப்பற்றி அவளிடம் பேச
வதேயில்லை...

அவள் உலகமே குட்டி ப்ராஜனுடன்தான் என்று ஆகி
போனது.

''அம்மா... அம்மா''வென்று அவன் சுற்றிச் சுற்றி
வரும்போது, அது பழைய சோகங்களை சிறிது மறக்
கடித்தாலும், ப்ரஜுவின் ஞாபகங்களும்... சபிக்கப்பட்ட
வனமாய் அந்தக் காதல் காலமும்... உள்ளே கல்வெட்
டாய்ப் புதைந்திருந்தன.

பரணியும் அவளுடைய எண்ணம் புரிந்து விலகியே
இருந்தாலும், எல்லா விதத்திலும் உதவியாகவே இரு
தான்.

* * *

அந்த வாரக் கடைசியில், அவர்களுடைய எம்.டி.
லிங்கேஸ்வரன் அனைவரையும் அழைத்து, ஒரு மகிழ்ச்
யான செய்தியைக் கூறினார்.

இனி, அவருடைய மகன் அஷ்வந்த் இந்த நிறுவன
பொறுப்பை ஏற்றுக் கொள்வதாகவும், தானும் அவனுக்



உதவப் போவதாகவும் அவர் தெரிவித்தபோது, அனை
வரும் அதை வரவேற்று தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.
அடுத்த நாளே, அந்த நிறுவனத்தின் இரண்டாவது
ஆண்டு நிறைவு விழா, என்பதால் அதற்காக, அலுவல
கத்தில் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மறுநாள் வேலை நேரம் முடிந்ததும், அனைவரும்
அந்த கான்ஃபரன்ஸ் ஹாலில் கூடியிருந்தனர்.

பஃபே முறையில் விருந்து தயாராக இருக்க, புது
எம்.டி.யைப் பார்க்க அனைவருமே ஆவலுடன் காத்திருந்
தார்கள்.

வீட்டில் குட்டி ப்ராஜன் என்ன செய்து கொண்டிருப்
பானோவென்ற கவலை கலந்த தவிப்புடன் சுவாரசிய
மின்றி அமர்ந்திருந்தாள் ஹம்சத்வனி.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான மன நிலையில்
காத்திருக்க, லிங்கேஷ்வரனைத் தொடர்ந்து உள்ளே வந்த
புது எம்.டி. அஷ்வந்தைக் கண்டதும், அனைவரும்
மகிழ்ச்சியுடன் எழுந்து கை தட்டி வரவேற்றனர்.

ஆழ்ந்த நீல நிறத்தில் கோட் சூட் அணிந்து, கம்பீரமாய்
அந்த ஏசி ஹாலுக்குள் நுழைந்தவனைக் கண்டதும், ஒரு
கணம் இமைக்க மறந்து சிலையானாள் அவள்.

உயிரும், உடலும், உணர்வுகளும் பதறித் தவிக்க,
அங்கு உயிருடன் மீண்டும் ப்ராஜனை அவள் சத்தியமாக
எதிர்பார்த்திருக்கவில்லை.

நம்ப இயலாத கனவொன்று கை கூடி நிஜமானதைப்
போன்ற உன்னத உணர்ச்சித் தளும்பலில், ஒரு கனம்
உறைந்தாள்.

பிறகு, "ப்ரஜ"..." என்ற அவளுடைய பரிதவித்த ஏக்கக் குரல்... அந்தக் கைதட்டலில் அமுங்கித் தொலைந்து போனது!

இதுவரையில் தன்னையே தொலைத்திருந்தது போல இன்று அவனைக் கண்டதும், புதிதாய் ஜனனமெடுத்த ஒரு உணர்வு!

முதலில் முகம் வெளிறி, நம்ப முடியாமல் பதறினாலும், மறு கணமே விழிகள் உற்சாக மின்னலை வெளியிட, பரவசத்தில்... உச்ச கட்ட ஆனந்தத்தில் அவளுக்குப் பேச்சே வரவில்லை.

ஆழ் மனதில் வேர்விட்டு, நெஞ்சம் முழுவதும் விழுதுகளும், கிளைகளுமாய் பரவியிருந்த காதல், முட்டி மோதி விழிகளில் மின்னலாய்த் தெறித்தது.

இப்போது எப்படிப் போய் அவனிடம் பேசுவது... இத்தனை நாளாக அவன் எங்கிருந்தான்... ஏன் என்னைத் தேடி அவன் வரவில்லை... மனதிற்குள் சரம் சரமாய் கேள்விகள்! இதயம்... கோடிப் பூக்களின் அர்ச்சனையில், நறுமணத்தில் விகசித்து மலர்வதாய்!

அதற்குள் லிங்கேஸ்வரன் பேச ஆரம்பித்து விட, பார்வை ப்ரஜனிடமே இருந்தாலும் செவிகள் மட்டும் அவர் பேச்சில் பதிந்தன.

பல காலமாக வறண்டிருந்த ஒரு ஆறு, திடீரென்று பெருகிய நீர்ப் பெருக்கை பரபரப்புடன் உள் வாங்குவதைப் போல், அவனுடைய ஒவ்வொரு அசைவையும் பொக்கிஷமாய் தனக்குள் பதிவு செய்து கொண்டிருந்தாள் அவள்.



"டியர் ஃப்ரெண்ட்ஸ்! இவன்தான் என் மகன் அஷ்வந்த்! இனிமே இந்த நிறுவனத்தோட எல்லாப் பொறுப்பையும் இவன்தான் ஏற்கப் போகிறான்...

"நான் இவனுக்கு பேக் போனா இருக்கலாமின்னு முடிவு செஞ்சிருக்கேன்... அஷ்வந்த் நல்ல ட்ரெயிண்ட் பர்சன்னாலும், உங்க ஆதரவை எதிர்பார்க்கிறேன்...

"எனக்கு குடுத்த ஒத்துழைப்பையும், உழைப்பையும் இனிமேலும் தரணும்... ஒரு நிறுவனத்திற்கு இளம் வயது பாஸ் வரது, ரொம்ப ஆரோக்கியமான ஒரு விஷயம்!

"அவன் உங்களுக்கு எம்.டி. மட்டுமில்லை... நல்ல நண்பனும் கூட! நான், ஒவ்வொருத்தரா அப்புறமா அவனுக்கு அறிமுகப்படுத்தறேன்... இப்ப எல்லாரும் ரூஃப் கார்டனுக்கு வாங்க... டிபன் ரெடியா இருக்கு!" என்றபடி கூட்டத்தில் கலந்து மெதுவாகச் செல்லத் துவங்கினார்.

அனைவரும் ஒன்றாகக் கிளம்பி லிஃப்டில் பயணித்த போதும், ஹம்சத்வனிக்கு அவனிடம் உடனே சென்று பேச வேண்டும் போல் ஒரு உணர்வு!

மெல்ல மெல்ல, தன் உயிரினைக் கொள்ளையடித்தவனை விழிகளாலேயே பருக ஆரம்பித்தாள் அவள்.

மாடியில் பஃபே முறையில் உணவு தயார் செய்யப்பட்டிருக்க, சில்லென்ற காற்று தேகம் தழுவியது.

பரணியும் அவளுமாக தட்டில் உணவை எடுத்துக் கொண்டு ஒரு ஓரத்தில் வந்து அமர்ந்து சாப்பிட ஆரம்பித்த போதும், அவள் விழிகள் அவனிடமே பதிந்திருந்தன.

யாரிடமோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தவனைப் பார்க்கும்போது, இவன் ப்ரஜனைப் போல் வேறு ஒரு

வனோ... உலகில் ஒரே உருவத்தில் ஏழு பேர் இருப்பதாகக் கூறுவார்களே... பல விடை தெரியா வினாக்கள் உள்ளே வேகமாய்ப் பரவின.

இதுவரை, அவன் பிரிவு மட்டுமே மூச்சுத் திணற வைத்தது... இன்று, அவன் வரவும் சுவாசச் சிறையை அறிமுகப் படுத்துவதாய்!

தேன் சிந்தும் பூஞ்சோலைகள் தூரமாய் நீங்கிச் சென்று மனதில் பாலையாய் வறட்சியை அறிமுகப் படுத்தியிருந்த வேளையில்... கரைக்குள் அடங்காத காட்டாறாய் அவன் வரவு!

சிநேகமாய் ஒரு பார்வை பார்க்க மாட்டாயா என்ற ஏக்கத்தில் தவித்த மனதுக்குள்... மெலிதாய் ஒரு பாடலின் முணுமுணுப்பு!

முதன் முறை கிள்ளிப் பார்த்தேன்...
முதன் முறை கையில் வேர்த்தேன்!
எந்தன் தாயின் கர்ப்பம் தாண்டி...
மறுமுறை உயிர் கொண்டேன்!
உன்னால்... இருமுறை உயிர் கொண்டேன்!

## 23

பரணி, சாப்பிட்டு முடித்து வேறு உணவு வகைகளை எடுப்பதற்காகச் சென்றிருந்தான்.

அவனைப் பார்த்தவுடனே விழிகளில் துளிர்த்த பரவசத்தை மறைத்துப் பரிதவித்து நின்றவளுக்குள், உணர்வுகளின் விசுவரூபமும்... மௌனக் குமுறல்களும்



பலவித யோசனைகளுடன் அவள் நிமிர, எதிரில் லிங்கேஸ்வரனும், ப்ராஜுனும் நின்றிருந்தனர்.

விதிர்த்துப் போய் அவள் எழுந்தபோது, கையிலிருந்த தட்டு சரிய, சட்டென்று குனிந்து அதைத் தாங்கிக் கொண்டான் அஷ்வந்த்.

''மெதுவா! பாஸைப் பாத்து இவ்வளவு பயப்படணும்கிற அவசியமில்லையே... ஈஸி!''

மெல்லிய குரலில் அவன் கூடிய, அந்தக் குரல் சுகமாய் அவள் இதயம் நனைத்தது.

தேன் சுமந்த பூவாய் மலர்ந்த இதயம், மகிழ்ச்சியில் ஊஞ்சல் கட்டி ஆடியது... அது ப்ராஜுனுடைய குரல்தான் என்பதை உணர்ந்ததும்!

''இது என்னுடைய ப்ராஜுவின் குரலேதான்'' உள்ளுணர்வுகள் சத்தியம் செய்தன... உள்ளே இருக்கின்ற செல்கள் ஒவ்வொன்றிலும் நேசப்பூக்கள் புஷ்பித்தன!

அந்த நிமிடம் லிங்கேஸ்வரனை 'செல்' அழைக்க, ''ஒரு நிமிஷம்! நீ பேசிட்டிரு அஷ்வந்த்'' என்றபடி விலகிப் போனார் அவர்.

அந்தக் கணம்... பொன்னானதாய்!

தாங்க முடியாத தவிப்புடன் வேகமாய் புரண்டு வந்தது... காதல் நதி!

தன் தயக்கம், பயம் எல்லாம் தூக்கியெறிந்து அவள் பரவசத்துடன் நிமிர்ந்து, ''ப்ராஜு...'' என்றபோது, புரியாத ஒரு உணர்வு அவன் கண்களில்!

''என்ன சொன்னீங்க?''

இடுங்கிய விழிகளுடன் அவன் கேட்க, தான் என்ன செய்கிறோமென்று புரியாமலே தட்டை அருகிலிருந்த

மேஜையில் வைத்தவள், அவனைக் காதலுடன் ஏறிட்டு "ஐ லவ் யூ ப்ராஜு! இத்தனை நாள் என்னை விட்டு எங்கே போயிருந்தீங்க?" மென் குரலில் கேட்டாள்.

மறு கணமே அவன் முகம் இறுகிவிட, அவளை விநோதமாகப் பார்த்தபடி உடனே விலகிப் போனான் அவன்.

"ப்ராஜு..!"

அந்த வார்த்தை, ஆண்டாளின் பாசுரங்களாய் அவனுள் நுழையாமலே, காற்றில் பரவிக் கலந்தன.

அவளின் அழைப்பு காதில் விழாததுபோல் அவன் செல்ல, "என்னம்மா? உன்னை என் மகன் கிட்டே அறிமுகப்படுத்திக்கிட்டியா?" என்றபடி வந்தார் லிங்கேஸ்வரன்.

அதுவரை பிரதிபலித்த மாயக்கண்ணாடி சிலீரென்று சிதற, "ம்... இல்லை சார்" என்றாள் த்வனி மெதுவாக!

அவர் உடனே, "அஷ்வந்த்..." என்று மகனை அழைத்தார்.

"இவங்க ஹம்சத்வனி... நம்ம கம்பெனியில ஒரு ப்ராஜெக்ட் லீடர்... வெரி டேலண்டட் லேடி!" என்று அறிமுகப்படுத்தினார்.

ஒரு வெறுமையான பார்வையும், உணர்ச்சியைத் தொலைத்த முகத்துடனும், அவளை ஒரு கணம் ஏறிட்டான் அவன்.

பிறகு "ஹலோ..." என்றபடி கை குலுக்கியபோது அவனுடைய ஸ்பரிசமும் நெற்றியின் ஓரத்திலிருந்த அந்த சிறு வடுவும் அவன் யாரென்பதை அவளுக்கு மெய்ப்பித்தன.



இரு விழிகளால் அவனை சிறையெடுத்தவளுக்குள், சில்லென்று ஒரு சிற்றோடையின் தடம் தெரிவதாய்!

உடலில் ஒரு சிலிர்ப்பு ஓட, அவன் மார்பில் அப்படியே சரணடைய வேண்டும் போல் துடித்த மனதை அடக்கியபடி நிமிர்ந்தபோது, அவனுடைய இதழோரங்கள் ஏளனமாகத் துடித்தபடி சுழித்திருந்தன.

அப்போது பரணியும் அங்கு வந்துவிட, அவனையும் தன் மகனுக்கு அறிமுகம் செய்து வைத்தார் லிங்கேஸ்வரன்.

ப்ராஜுன் ஏன் தன்னை அறிந்து கொள்ளவில்லை... தன்னைத் தெரிந்ததுபோல் ஒரு பார்வை கூட இல்லையே என்று தீவிரமாய் யோசித்தபடி அமர்ந்திருந்தவளை, பரணியின் குரல் உசுப்பியது.

"ஹம்சத்வனி! என்ன... அப்படியே சிலை மாதிரி உக்காந்திட்டீங்க? நம்ம புது பாஸ் ரொம்ப அழகா கம்பீரமாக இருக்காரு... இல்லை?" ஆர்வத்துடன் கேட்டான்.

"ம்..." என்று தலையசைத்தவளுக்குள், கடும் குழப்பமும் பரிதவிப்பும்!

"ப்ராஜு! என்னை எப்படி மறந்து போனாய்..? இந்த சமுதாயப் பாலைவனத்தின் வறண்ட வெடிப்புகளுக்கிடையே... இந்த வம்பு செறி தீங்கினர்களின் குத்தல் பேச்சுக்களுக்கிடையே... இன்னும் நான் உனக்காகவே காத்திருக்கிறேனே...?

"ஏன் என்னை அறிமுகமில்லாதவனைப் போல் பார்த்து, உயிருடன் கொல்கிறாய்?" இதயத்தில் உதிரம் கசியத் துவங்கியது.

தன்னுடைய நீண்ட காலத் தவம் மெய்ப்பட்டதை உணர்ந்த அதே நேரத்திலேயே, அவனுடைய புறக் கணிப்பும், விலகலும் பெரிதும் பேதலிக்கச் செய்தன..!

அவளுக்கு அனைத்தும் அவனாகவே இருந்ததும், அவனுக்காக அணு அணுவாய் ஒவ்வொரு செல்லிலும் தான் காதலை சுமந்து காத்திருந்த நாட்களும், பெரு வேள்வியாய்!

சுழிக்காற்றில் சிக்கிய சிறு மலராய் இதயம் சிதைய துவங்கியது.

"ஏங்க சரியாவே சாப்பிடலை? எல்லாரும் முடிச்சிட்டாங்க...!"

அவள் தட்டில் தொடப்படாமலிருந்த உணவு வகைகளைப் பார்த்தபடி கேட்டான் பரணி.

"இல்லை... என்னவோ பசிக்கலை... கொஞ்சம் தலை வலிக்கிற மாதிரி இருக்கு" என்றவள், தட்டை எடுத்து சென்று, குப்பைக் கூடையில் போட்டு விட்டு வந்தாள்.

ஒருவித அலைப்புறுதலுடன் அவனைத் தேடிய விழிகள், இறுதியில் அவன் முகத்தில் நங்கூரமிட்ட போது, அவன் பார்வையும், ஒரு வித அலட்சிய பாவத்துடன் அவளிடமே பதிந்திருந்தது.

ஒருவித ஆராய்ச்சியும், ஏளனமும் அதில் நிறைந்திருந்ததை உணர்ந்தபோது, அவள் உலகமே அஸ்தமிக்க உயிர் வரை உணர்வுகள் உலர்ந்தன.

திடீரென்று மின்னல் பாய்ந்த தகிப்பு அவளிடம்!

"ஏன் என்னை அவனுக்குத் தெரியவில்லை... புதிதாய் சந்திக்கும் ஒருவரைப் பார்ப்பது போல் பார்க்கிறா



பார்வையும்... அறிமுகமில்லாத புதுப் பெயரும் சுமந்து... எங்கு குழப்பம் நிகழ்ந்தது?"

"நான்தான் வேறு ஒருவரை ப்ரஜன் என்று தவறாக வர்ணம் பூசுகின்றேனா... அப்படி என்றால்... அந்த வடு கூடவா ஒன்றாக இருக்கும்?" அனலில் விழுந்த சருகாய் சுருண்டது மனது!

அன்றிரவு முழுவதும், உறக்கமில்லாத் தவிப்புடன் கழிந்தன.

* * *

மறுநாள் அலுவலகத்திற்குச் சென்றபோது, பொறுப்பேற்று முதல் நாள் என்பதால் எல்லா டிபார்ட்மெண்ட்களையும் பார்வையிட்டுக் கொண்டிருந்தான் அவன்.

அவள் வேலை செய்கின்ற கேபினுக்கு அவன் வந்த போது, டீம் மெம்பர்களுடன் ப்ராஜெக்ட் பற்றிய முக்கிய ஆலோசனையிலிருந்தாள் அவள்.

அவனைக் கண்டதுமே... காற்றை ஊடுருவிச் சென்று அவனருகில் நின்று, அவன் சுவாசம் தேடியது இதயம்!

பெரும் வேதியல் மாற்றமொன்று நிகழ்ந்து, முகம் காதலின் ரசவாதத்தால் பொன்னிறம் கொண்டது!

அவளுடைய முகத்தையும், அதில் தெரிந்த மாற்றத்தையும் கவனித்தவன், அவளிடம் எதுவுமே பேசவில்லை.

டீமிலிருந்த மற்ற மெம்பர்களிடம் வேலையைப் பற்றி அவன் விசாரிக்க, த்வனிக்குள் தான், எதுவோ ஒரு இனம் புரியாத வெறுமை படர்வதைப் போல்!

வேண்டுமென்றே அவன் தன்னைப் புறக்கணிப்பது தெரிந்ததும்... இதயத்திற்குள் சுருக்கென்று ஒரு வலி!

இதைப் பற்றி வெளியில் யாரிடமும் கூறவும் மு
யாமல்... அவனிடமும் நேரில் பேசித் தெளிவு பெறவு
வகையின்றித் தவித்துப் போனாள் அவள்.

காற்றும், பூவும் கலந்துரையாடுவதைப் போல
உள்ளுணர்வுகள் ஒன்றையொன்று உரசிப் பார்த்தன.

ஆனால், அவனைப் பார்த்துக் கொண்டே இருந்தாலே
போதும் போலிருந்தது...

கைலாசத்திடம் விபரம் கூறி யோசனை கேட்கல
மென்றால், அவரும் அப்போதுதான் இதய அறுவை
சிகிச்சைக்காக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்
டிருப்பதாக, மாலினி கூறியிருந்தாள்.

தன்னுடைய ப்ரச்னைக்கு, அவரைப் பலிகடாவாக்க
அவளுக்கு விருப்பமில்லை.

ஆனால், மெல்லவும் முடியாமல், விழுங்கவும் மு
யாமல் இருதலைக் கொள்ளி எறும்பாய்த் தவிக்க ஆர
பித்தாள்.

தினமும், ஒரு முறையாவது அலுவலகத்தில் அவனை
பார்க்க நேர்ந்ததில் மிகவும் சலனப்பட்டுப் போனா
அவள்.

மனதின் மௌனப் பரிபாஷையும் அங்கு மொழியற்று
புரிபடாமல் போக, காதலின் ஆளுமை மட்டும் மாற்ற
முடியாமல் அங்கு மையம் கொண்டிருந்தது.

நீண்ட நெடு நாட்களுக்குப் பிறகு, இயல்பாய் பொங்
கிய உற்சாகத்தில் உள்ளம் மிதக்க, அதன் கரையாய்
அவனுடைய வருகை!



# 24

ஒரு நாள், அவளுடைய ப்ராஜெக்டில் சிறு தவறு நேர்ந்து விட்டது.

அவளுடைய டீம் மெம்பரில் ஒருவர் அந்தத் தவறைச் செய்துவிட, கண் கொத்திப் பாம்பாய் அதை கவனித்து விட்டு அவளை அழைத்தான் அஷ்வந்த்.

அவன் எதற்கு அழைக்கிறானென்று புரியாமலே ஒருவிதப் பரவசத்துடன் உள்ளே சென்றவள், அவ்வளவு கோபமாக அவனை சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

அவன் முகம் ரௌத்ரமாய்த் தெரிய, விழிகள் சிவந்திருந்தன...

"மிஸ். ஹம்சத்வனி! நீங்க நினைவுலகிலேதான் இருக்கீங்களா? இல்லை... வேற ஏதாவது கனவு கண்டுட்டு இருக்கீங்களா?

"ப்ராஜெக்ட்டுலே இவ்வளவு பெரிய தவறு நடந்திருக்கு... கொஞ்சம் கூட ரெஸ்பான்சிபிலிடி இல்லாம இருந்திருக்கீங்க... வாட் தி ஹெல் இஸ் கோயிங் ஆன் ஹியர்? ம்?" கடும் கோபத்துடன் இரைந்தான்.

அவளுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை... தன்னுடைய தவறும் புரிந்தது!

ஒரு வாரமாக அவனுடைய புறக்கணிப்பிலும், அவனைப் பார்த்த பரவசத்திலும் தவிப்பிலும், புலன்கள் தன் வசம் இல்லாததும், வேலையில் தன் கவனம் தொலைந்து போனதும் இன்று உரைத்தது.

"என்ன... பதிலே காணோம்... இதுக்கு நீங்க தா
பொறுப்பேத்துக்கணும்... அதை உடனே சரி பண்ணுங்க
உங்க டீம் மெம்பர்ஸ் எப்படி வேலை செய்யறாங்கன்னு
பார்க்கத்தான் உங்களுக்கு இந்தக் கம்பெனி இவ்வளவு
சம்பளம் தருது... மைண்ட் இட்! யூ மே கோ" நெ
கையை வாசல் புறம் நீட்டினான்.

அவனுக்கு முன் தவறு செய்து மாட்டிக் கொண்
தவிப்பிலும் அவமானத்திலும் கூனிக் குறுகி நின்றவ
"சரி சார்... இனிமே நான் கவனமா இருப்பேன்" என்று
வெளியேறினாள்.

"கவனம் வேலையில இருந்தாத் தானே? எங்கே
எவன் பணக்காரனா அகப்படுவான்... வலை வீ
பிடிக்கலாம்னு அலைஞ்சிட்டிருந்தா இப்படித்தான்!"

அடிக் குரலில் அவன் நக்கலும் எகத்தாளமுமா
முணுமுணுக்க, முகம் கன்றியது அவளுக்கு!

இவ்வளவு தரக் குறைவாகப் பேசுபவனை, மன்னி
கவும் மனம் வரவில்லை.

"எவ்வளவு கர்வம் சார் உங்களுக்கு? உங்கள
மயக்கறது தவிர பெண்களுக்கெல்லாம் வேற எண்ண
இருக்காதுன்னு நினைப்பா? நல்ல உளறல் இது"
சுள்ளென்று பதில் கொடுத்து விட்டாள்.

"உளறலை! உண்மையைச் சொல்றேன்! உன்னோ
நிஜ சொரூபம் எனக்கு தானே தெரியும்! தூங்கு
வங்களை எழுப்பலாம்... தூங்குற மாதிரி நடிக்கிறவ
களை எழுப்பறது கஷ்டம்தான்!"

அவன் கூற, விதிர்த்துப் போனவளின் விழிகளி
வெள்ளமாய் பெருகியது கண்ணீர்!



இதயத் துடிப்பு திடீரென்று முகாரியாய் ஒலிக்க... அவனுடைய நெஞ்சப் பாதைக்குள் நுழைந்து தான் தடம் பதிக்க முடியுமாவென்று மனம் ஏங்கியது.

விழியை மறைத்த நீரை சுண்டியபடி அவள் வெளியே வந்தபோதுதான், எதிரே வந்த பரணி அதைக் கவனித்து விட்டாள்.

"என்னாச்சு ஹம்சத்வனி? ஏன் அழறீங்க?" பதறிப் போய்க் கேட்டான்.

"ஒண்ணுமில்லை பரணி..! கண்ணிலே தூசு விழுந்திடுச்சி அதான்."

சமாளித்து விட்டு, தன் கேபினுக்குச் சென்றாள்.

யோசனையுடன் 'எம்டி'யின் அறைக்குள் சென்றவன், வந்த வேலை முடிந்து திரும்பும்போது, தயக்கத்துடன் அஷ்வந்திடம் பேசினான்.

"சார்! ஒரு சின்ன ரிக்வெஸ்ட்... இப்ப வரும்போது ஹம்சத்வனி அழுதுட்டே போன மாதிரி தெரிஞ்சுது... அவங்க ரொம்ப நல்லவங்க...! வேலையில பர்ஃபெக்டா இருப்பாங்க! ஆனா, ஒரு வாரமா என்னவோ தெரியலை... ரொம்ப டல்லா இருக்காங்க! அந்தக் கவலையில ஏதாவது தப்பு செஞ்சிருந்தாங்கன்னா, தயவு செஞ்சு அதைப் பெரிசு பண்ணாதீங்க சார்" மெதுவாக நிறுத்தினான்.

"ம்.. ஓகே!... நீங்க போகலாம்! அப்புறம் ஒரு நிமிஷம் பரணி! இப்படி தனக்காக சிபாரிசு பண்ணச் சொல்லி அவங்க தான் உங்களைத் தூது அனுப்பினாங்களா?" ஏளனக் குரலில் கேட்டான்.

"சார்... அப்படி எல்லாம் இல்லை... நானாத்தான் சொன்னேன்... அந்த அளவுக்கு அவங்க கீழ்த்தரமானவங்க இல்லை...

"சரி... நான் உங்கக்கிட்டே இதைப் பத்திப் பேசி இருக்க கூடாது... வரேன் சார்" பதைப்புடன் கூறிவிட்டு வெளியேறினான்.

உடனே, அஷ்வந்தின் முகம் சுருங்கி இறுகியது.

'நல்ல பணக்காரனுக்கு வலை வீசி மாட்டவில்லையே என்ற சோகம்தான் ஒரு வாரமாக அவளைச் சோர்வடைய செய்திருக்கும்... இதையும் மீறி அவள் என்னைத் தொந்தரவு செஞ்சா நான் யாருன்னு காட்டறேன்!'

மனம் குளுரைக்க, மெதுவாக வேலையில் ஆழ்ந்தான்.

முதல் பார்வையிலேயே முகம் சிவக்க ஐ லவ் யூ கூறி, இத்தனை நாள் அவனை விட்டுப் பிரிந்திருந்ததாகப் பொய் சொல்லி ஒரு மாய வலை வீசிய அவளை நினைத்தால், பெரும் கசப்பாய்!

ஏன், நான் சந்திக்கும் பெண்கள் அனைவருமே பணம் தின்னிக் கழுகுகளாய் இருக்கிறார்கள்?

மறுகணமே போன மாதம் நடந்த ஒரு நிகழ்ச்சி, அவன் கண் முன்னே திரைப்படமாய் விரிந்தது.

* * *

இந்தக் கம்ப்யூட்டர் நிறுவனத்தின் பொறுப்பேற்பதற்கு முன்பு, அவனை சிறந்த நிர்வாகியாக்க வேண்டுமென்று, லிங்கேஸ்வரன் அதற்கான கோர்ஸில் அவனைச் சேர்த்திருந்தார்.

அவன் பெரிய பணக்காரனென்று தெரிந்தவுடன் அங்கு உடன் பயின்ற சில பெண்கள் அவனுடைய கவனத்தைக் கவர முயற்சித்து பிரம்மப் பிரயத்தனம் செய்தது... அவனைப் பொறுத்தவரை பெரும் அருவெறுப்பான ஒரு விஷயமாய்!



எல்லோரையும் ஒருவித நிமிர்வும் வெறுப்புமாய் நிராகரித்தபோது, ஒரு பெண் மட்டும் அவனைக் கண்டால் ஒதுங்கி வித்தியாசமாய் கவர்ந்தாள்.

ஒரு நாள் அவளைத் தேடிச் சென்றபோது, தன் தோழியுடன் அவள் பேசுவதைக் கேட்க நேர்ந்தது.

அவனை விட்டு விலகி கண்டும் காணாமல் இருந்தால், அவனே ஒரு ஈர்ப்புடன் தன்னிடம் வருவானென்றும், இது வித்தியாசமான ஒரு தூண்டில் என்றும் அவள் கூறியபோது, பெண்களைப் பற்றிய அவனுடைய மதிப்பே பொய்த்துப் போவதாய்!

இன்று, ஹம்சத்வனியை நினைத்தாலோ, வெறுப்பாய்!

முதன் முதலில் அவளைப் பார்த்ததும் ஏனோ தனக்குள் ஏற்பட்ட சிறு சலனமும் ஈர்ப்பும், அவள் பேச்சினாலும் செய்கையாலும், மலர்ந்த உடனே உதிர்ந்து கருகியதும் புரிவதாய்!

'நீ ஏன் என்னிடம் அப்படிப் பேசினாய் பெண்ணே! இயல்பாக இருந்திருந்தால் கூட ஏதோ ஒரு வித இனம் புரியாத ஈர்ப்பில் உன்னிடம் ஒரு வேளை சரணடைந்திருப்பேனோ என்னவோ?

'ஆனால் இன்று உன்னை முழுதாக வெறுக்கிறேன்... உலகில் வேறு எவரையும் வெறுக்காத அளவு வெறுக்கிறேன்!

'ஏன் உன்னையே நீ இவ்வளவு தூரம் தாழ்த்திக் கொண்டாய் பெண்ணே...?' அவன் மனம் தனக்குள்ளேயே கேள்வி எழுப்பியது!

இது எதையுமே அறியாத ஹம்சத்வனியின் இதயமோ, சில்லு சில்லாய் சிதறியிருந்தது.

இனி, அவன் முன்னால் தலை குனிந்து நிற்கத் தேவை யில்லாத ஒரு நிலையில், தான் கவனமாக இருக்க வேண் டும் என்று உறுதி பூண்டது மனது!

பூமி...

மனிதர்களின் ஆதிக்கத்தில்!

மனிதர்கள்...

மரபுகளின் ஆதிக்கத்தில்!

மலர்கள்...

ஆதவனின் ஆதிக்கத்தில்!

ஆதவன்...

வானத்தின் ஆதிக்கத்தில்!

வானம்...

பறவைகளின் ஆதிக்கத்தில்!

பறவைகள்...

சுதந்திரத்தின் ஆதிக்கத்தில்!

என்னவனே!

நீ

மட்டுமே முரண்படுகிறாய்!

என்

நேசச் சாம்ராஜ்யத்தின்

ஆதிக்கத்தில்

வர மறுத்து!

மௌனமாகக் குமுறியது மனது!



தன் இதயம் கவர்ந்தவனை... அருகிலிருந்தும் பேசிப் பழக முடியாது தனித்துத் தவித்திருக்கும் வேதனை எவ் வளவு கொடியதென்று, இன்றுதான் உணர்ந்தாள்!

அதை வெளியிலும் கூற முடியாமல் அவள் தவித் திருந்த போதுதான், ஒரு நாள் எதிர்பாராத விதமாக அவனைக் கோவிலில் சந்தித்தாள் அவள்.

* * *

அன்று தன் தாய் கோமளாவுடன், ஒரு வேண்டுதலை நிறைவேற்றுவதற்காக கோவிலுக்குச் சென்றிருந்தான் அஷ்வந்த்.

கோவில் பிரகாரத்தில் அவன் அமர்ந்திருந்தபோது, மீன்களுக்கு பொரி போட்டுவிட்டு வருவதாகக் கூறி விட்டு, அவர் குளக்கரைக்குச் சென்றிருந்தார்.

யோசனையுடன் அவன் காத்திருந்தபோது, முழுவதும் நனைந்த உடையுடன், கைத்தாங்கலாக அணைத்தபடி வந்த ஒரு பெண்ணுடன் அவர் வர, பதறி எழுந்தான் அவன்.

''அம்மா! என்னாச்சு! உங்களுக்கு...?'' என்றபடி ஓடி வந்து தாங்கிக் கொண்டவனிடம், மெதுவாக நடந்ததைக் கூறினார் அவர்.

''ஒண்ணுமில்லேப்பா... மீனுக்கெல்லாம் பொரி போட்டுட்டு குளத்திலே காலைக் கழுவிட்டு வரலாம்னு படியில இறங்கினேனா, அப்படியே வழுக்கித் தண்ணி யிலே விழுந்திட்டேன்... நல்ல வேளை இந்தப் பொண்ணு மட்டும்தான் அங்கே இருந்தாங்க... உடனே என்னைத் தூக்கிக் காப்பாத்தினாங்க'' என்றபடி அருகில் நின்றிருந்தவளிடம் திரும்பினார்.

அதுவரை, அவர் கூறியதைக் கேட்டபடி அதிர்ச்சியில் உறைந்து நின்றிருந்த ஹம்சத்வனியிடம், "இவன்தாம்மா என் மகன் அஷ்வந்த்!" என்று அறிமுகம் செய்தார்.

இவன் எப்படி இந்தப் பெண்மணிக்கு மகனாக முடியும் என்ற குழப்பமும், யோசனையுமாய அவள் அஷ்வந்தை நோக்கினாள்.

"ரொம்பத் தேங்க்ஸ்" என்றபடி அவளை நோக்கியவனின் பார்வை, சட்டென்று மாறியது.

"நீயா...?"

உதடுகள் மெல்ல முணுமுணுக்க, அதே நேரம் "அம்மா..."வென்றபடி ஓடி வந்தான் குட்டி ப்ரஜன்!

அதைக் கண்ட அஷ்வந்த்தின் முகம் மேலும் சுருங்கி இறுக, "உன் குழந்தையாம்மா?" ஆர்வத்துடன் அவளிடம் கேட்டார் கோமளா.

"ஆமாம்மா... இனிமே ஜாக்கிரதையா இருங்க..! நீங்க கிளம்புங்க... வீட்டுக்குப் போயி ட்ரெஸ் மாத்திக் கலைன்னா சளி பிடிச்சிக்கும்... நான் வரேன்மா!"

அங்கிருந்து கிளம்புவதிலேயே குறியாக இருந்தாள் அவள்.

குட்டி ப்ரஜனிடம், ப்ரஜுவின் போட்டோவைக் காட்டி 'அப்பா' என்று கற்றுக் கொடுத்திருக்கிறாள்.

இன்று, அவன் அஷ்வந்தைப் பார்த்து அடையாளம் கண்டு அப்பாவென்று கூறி விட்டால், வேறு வினையே வேண்டாம்...

அதை வேறு வேண்டுமென்றே செய்து, அவளை வளைக்க விரும்புவதாகக் கூறினாலும் கூறுவான்.



போதும்... ஒரு முறை அக்னிப் பிரவேசம் செய்து அவன் வார்த்தைகளால் தீப்பட்டாற் போல் தகித்தது என்ற யோசனையுடன், உடனே கிளம்பி விட்டாள் அவள்.

ஆனால் அவளிடம் தன் கணவரின் விசிட்டிங் கார்டைக் கொடுத்த கோமளா, ஒரு நாள் தங்களின் வீட்டிற்கு அவள் வர வேண்டுமென்ற கோரிக்கைக்குப் பிறகு தான், அவளுக்கு விடை கொடுத்தார்.

"பை பாத்திம்மா.." என்றபடி, தன் தாயின் கரம் பிடித்து ஓடிய குழந்தையையே பார்த்திருந்தவர், அவனிடம் திரும்பினார்.

"எவ்வளவு அழகான குழந்தை..! அந்தப் பொண்ணும் தான் சந்தனச் சிலை மாதிரி அப்படி ஒரு அழகா இருக்கா! நானும் இது மாதிரித்தான் ஒரு பொண்ணை உனக்கு முடிவு செஞ்சு வச்சிருக்கேன்... நீதான் பிடி குடுக்கவே மாட்டேங்கிறே."

ஒரு பெருமூச்சுடன் எழுந்து நடக்க ஆரம்பித்தார்.

அதே நேரம், அஷ்வந்தின் மனதில் இன்னும் பல மடங்கு தரம் தாழ ஆரம்பித்திருந்தாள் த்வனி.

திருமணமானவள்... அதுவும் ஒரு குழந்தை இருக்கும் போது... இப்படி ஒரு காரியத்தை, பணத்திற்காக ஒரு அந்நிய ஆடவனைத் தன்புறம் ஈர்க்கச் செய்த முயற்சியை நினைக்கும்போது, அருவெறுப்பின் உச்சிக்கே சென்றிருந்தான் அவன்!

'ச்சீ' என்றிருந்த மனதில், கோபக் குமிழ்கள் எரிமலையாய் வெடித்தன.

"எவ்வளவு அழகான குடும்பம் இல்லை அஷ்வந்த்... உன்னையும் இது போல ஒரு குடும்பஸ்தனா பேரக் குழந்தைகளோட பாக்கணும்னு எனக்கு ஏக்கமா இருக்கு..."

தூரத்தில் இருவரும் நடந்து போவதையே, ஏக்கத்துடன் பார்த்தபடிக் கூறினார் அவர்.

"இது போலக் குடும்பமா?"

சட்டென்று பூத்த வெறுப்புடன் அவன் வார்த்தைகளை சிதற விட, வியப்புடன் அவனையே நோக்கினார் அவர்.

"என்ப்பா... இப்படிச் சொல்றே?"

அவர் ஆதங்கத்துடன் கேட்க, "இல்லைம்மா... இதைவிட அருமையான மருமகளா உங்களுக்குக் கிடைப்பான்னு சொல்ல வந்தேன்!" வரவழைத்த முறுவலுடன் கூறினான்.

"கிடைக்கிறதென்ன? அதான் உன் தாரா அத்தை பொண்ணு சில்வியாதான் தயாரா இருக்காளே!" பெருமையுடன் சிலாகித்தார் அவர்.

அவனுக்குள், எதுவோ உடைந்தாற் போல் ஒரு உணர்வு!

தான் இன்னும் திருமணத்திற்கு தயாராகவில்லை என்று, தன் தாயிடம் கூடிய சீக்கிரமே தெரிவித்து விட வேண்டும் என்ற உறுதி வந்தது அவனிடம்!

முழுவதும் நிரப்பப் படாத குறுக்கெழுத்துப் போட்டியைப் போல், ஒவ்வொரு பெண்ணிற்குள்ளும் ஏமாற்று புத்தியும் குரோதமும் நிறைந்திருக்குமோவென்ற எரிச்சல் பரவியது.

## 25

**வீ**டு வரும் வரை, ஹம்சத்வனியின் உணர்வுகள் அவள் வசமில்லை!



"என்னம்மா! தரிசனம் நல்லாக் கிடைச்சுதா?"

ருக்மணி ஆவலுடன் கேட்டபோது, திக்கென்று நிமிர்ந்தவள், "ம்... நல்லாக் கிடைச்சுதும்மா!" பதைப்புடன் கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

"என்னாச்சு இந்தப் பெண்ணுக்கு?... ரொம்ப படபடப்பாத் தெரியறா! ப்ரஜன் குட்டி... அங்கே கோவில்லே சாமி பாத்தியா?"

குழந்தையிடம் யோசனையுடன் கேட்டார்.

"பாத்திம்மா பாத்தேன்" என்று கூறிவிட்டு அவன் உள்ளே ஓட, அவருக்கு ஒன்றுமே புரியவில்லை.

பிறகு உடை மாற்றி ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போதுதான், அஷ்வந்த் என்ன நினைத்திருப்பானோ வென்ற தவிப்பும், தகிப்பும் அவளைச் சூழ்வதாய்!

இப்போதெல்லாம், விடை தெரியாத கேள்விகளுடன், முட்டி மோதி உணர்வுகள் உடைந்து கொண்டிருக்கையில், அவன் முகம் தேடி இதயம் காத தூரம் தொலை வது புரிந்தது.

ஒவ்வொரு பொங்கலுக்கும் புதிதுதான் உடுத்த வேண்டுமென்று ருக்மணி கூறும்போதெல்லாம், த ராமல் இரண்டு வருடங்களாக அவன் வாங்கித் தந் முதல் புடவையையே, தான் இன்னும் உடுத்துவது இன் ஞாபகம் வந்தது.

"என்னுடைய அன்பின் ஆழத்தை... உன் மீது நா கொண்டிருக்கும் மாறாத உயிர் நேசத்தை எல்லா உன்னிடம் எப்படிக் கூறி புரிய வைப்பேன்...?"

உள்ளுக்குள்ளேயே மறுகியது மனம்.

அந்தப் பெண்மணி எப்படி ப்ரஜனின் தாயாக முடியும்? இவன் ப்ரஜன் தானா? இல்லை... அவன் உருவிலிருக்கும் வேறு மனிதனா?... அவனைக் கண்டதும் உடனே ஓடிச் சென்று சரணடையத் தூண்டும் உணர்வை அடக்க முடியவில்லையே...

உணர்வுகள் பொய் கூறுமா? குரலும், வடிவும், ஸ்பரிசமும் கூட ஒரே மாதிரி இருவருக்கும் அமைந்து விடுமா?

''கடவுளே... இந்தப் புதிரை நான் எப்படி விடு விப்பேன்'' தவிப்புடன் இறைவனிடம் இறைஞ்சினாள்.

அப்போது தாவி ஓடி வந்து அவளை அணைத்த ப்ரஜன்... ''அம்மா... அப்பா?'' என்றபடி அங்கு பெரிதாக மாட்டப்பட்டிருந்த ப்ரஜுவின் போட்டோவைக் காட்டினான்.

அவனும் அஷ்வந்தைப் புரிந்து கொண்டானோ வென்ற நெருடலுடன் அவனை அப்படியே வாரி அணைத்துக் கொண்டாள் அவள்.

இவன் அன்பு மட்டும் இல்லையென்றால் தான் என்னவாகியிருப்போமென்ற பெரும் விதிர்ப்பு உள்ளே ஊடுருவியது.

* * *

மறுநாள் அலுவலகத்தில் வேலையில் ஆழ்ந்திருந்த போது, ப்ராஜெக்டில் ஒரு பெரும் தவறு நேர்ந்து விட்டதாகவும், அதனால் அந்த ப்ராஜெக்டே கை நழுவிப் போய் விடுகின்ற அபாயத்திலிருப்பதையும் அவளுடைய டீம் மெம்பர்கள் பதைப்புடன் கூறினர்.



அன்று முழுவதும், அதிலேயே அமர்ந்து, அந்தத் தவறை கண்டு பிடித்து அந்தப் ப்ரச்னையை முழுதாய் ஆராய்ந்து சரி செய்து முடிக்க இரவாகி விட்டது.

ஒரு நிமிடம் கூட ஓய்வின்றி மற்ற டீம் மெம்பர்களின் உதவியுடன் அவள் அதை முடித்தபோது மணி ஒன்றாகியிருந்தது.

பிறகே, ட்ராவல்ஸில் கார் ஏற்பாடு செய்து அனைவரும் வீட்டிற்குக் கிளம்பினர்.

மறுநாள் காலையிலேயே அஷ்வந்த் அவளை அழைத்தான்.

யோசனையுடன் அவனுடைய அறைக்குச் சென்றவளை அமரும்படி சைகை செய்தவன், ''யூ ஹேவ் டன் எ குட் ஜாப்! கங்கிராட்ஸ்! மத்த விஷயங்களிலே நீ அப்படி இப்படி இருந்தாலும், வொர்க்லே வெரி சின்சியர்ங்கறதை நான் இன்னிக்குதான் புரிஞ்சுகிட்டேன்... கீப் இட் அப்!'' ஆழமான குரலில் கூறினான்.

''தேங்க் யூ சார்! அப்புறம் ஒரு விஷயம்...! நீங்க சொன்ன மாதிரி வொர்க்லே மட்டும் இல்லை... மத்த விஷயங்களிலேயும் நான் ரொம்ப சின்சியர்தான்னு நீங்க போகப் போக புரிஞ்சிப்பீங்க...''

அவளும், அழுத்தமான குரலிலேயே ஒரு வித திமிர்வுடன் கூறினாள்.

உடனே தோள்களைக் குலுக்கி உதட்டைப் பிதுக்கியவன், ''ஹும்... அதைத் தான் உன்னைப் பார்த்த முதல் நாளே, நல்லாத் தெரிஞ்சிக்கிட்டேனே...! என்னோட கணிப்பு எப்பவுமே தவறாப் போனதில்லை...'' அலட்சியமாக முடித்தான்.

''சார்! நான் ஏன் அப்படி நடந்துக்கிட்டேன்னு...'' அவன் முடிக்கும் முன்பே, கதவைத் தட்டி விட்டு உள்ளே வந்தான் ரங்கராஜ்.

''ஓ.கே... அப்ப நீங்க கிளம்பலாம்!'' என்றபடி அஷ்வந்த் எழ, வேறு வழியின்றி அமைதியாக வெளியேறினாள் அவள்.

காலத்தின் கட்டாயத்தாலும், விதியின் வக்ரச் சிரிப்பாலும், அஷ்வந்த் அவளைப் பற்றி ரங்கராஜிடமே விசாரிக்க ஆரம்பித்தான்.

ஆனால், ரங்கராஜின் சதியால், அவன் மேலும் தன்னை வெறுக்கப் போவதை அவள் பாவம் உணரவில்லை.

அவனிடம், எப்படித் தன்னைப் புரிய வைப்பதென்ற தீவிர யோசனையுடன், வேலையில் ஆழ்ந்தாள்.

* * *

அதே நேரம், ரங்கராஜ் அஷ்வந்த்திடம் தன் சதி வேலையை ஆரம்பித்திருந்தான்.

''சார்! நீங்க என்னை நம்புவீங்களா தெரியலை... ஆனா, நீங்க கேட்டதாலே தான் இதப் பத்திப் பேசறேன்!

''நான் உங்க கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்! இப்ப போனாங்களே மிஸ். ஹம்சத்வனி... அவங்க அவ்வளவு நல்லவங்க இல்லை! எல்லா ஆம்பிளைங்க கிட்டயும், தானாப் போய் இளிச்சிப் பேசறது... அவங்க கிட்டே பணம் கறக்கற வரைக்கும் கறந்து பாக்கறது... அலுத்துப் போயிட்டா வேற ஆள் தேடறது...! அது மாதிரிப் பொண்ணு சார் அது!''

மனதில் பொங்கிய குரூரத்துடன் நிறுத்தினான்.



சட்டென்று விழிகள் செவ்வரியோடிச் சிவக்க, கை முட்டிகள் இறுகிவிட, யோசனையுடன் நிமிர்ந்தான் அஷ்வந்த்.

''அப்புறம்..?'' கூர்மையான குரலில் கேட்டான்.

''என் கிட்டேகூட அப்படித்தான் வாலாட்டப் பாத்தா சார்... நான் மசியலைன்னதும், உடனே என்னைப் பத்தியே தப்பா உங்கப்பா கிட்டே கம்ப்ளெய்ண்ட் பண்ணிட்டா!

''எல்லாரும் பெண்கள் சொல்றதைத்தானே நம்புவாங்க... அவ இட்டுக் கட்டி கதை சொல்றதிலே பெரிய கில்லாடி சார்! அவளுக்கு சப்போர்ட் பண்ண இங்கே நிறைய ஆளுங்க இருக்காங்க! அவங்கதான் என்னைப் பத்தி மேலிடத்துல போட்டுக் கொடுத்ததே!

''உங்கப்பாவும் என்னை வார்ன் பண்ணி விட்டுட்டாரு! இப்ப அவளோட லேட்டஸ்ட் பாய் ஃப்ரெண்ட் பரணிதான்! நீங்க வேணா கவனிச்சிப் பாருங்களேன்...''

அவளைப் பழி வாங்கிய திருப்தியுடன் முடித்தான்.

பிறகு தன் நோக்கம் நிறைவேறியதை, அஷ்வந்தின் முக பாவத்திலிருந்தே புரிந்த கொண்டபடி, மகிழ்ச்சியுடன் வெளியேறினான், அவன்.

தன் கணிப்பு நூறு சதவிகிதம் சரியாகி விட்டதை உணர்ந்த அஷ்வந்துக்கோ, உள்ளூர சிறு ஏமாற்றமும், கடும் ரௌத்ரமும் பரவின.

''என்னிடமா உன் ஜாலம் பலிக்கும் என்று நினைக்கிறாய்... பரணிக்குப் பிறகு பெரிய ஆளாகத் தேடுகிறாயா? இரு... உனக்கு ஒரு நாள் நன்றாகப் பாடம் புகட்டுகிறேன்...'' மனதிற்குள் கறுவிக் கொண்டான்.

வன்மமும், வீம்புமாய் அவளை மேலும் வெறுக்க ஆரம்பித்தான் அவன்!

## 26

நாட்கள், நரைத்துப் போய் விரைந்தன.

வாரம் ஒரு முறையாவது அவனைப் பார்க்கும் சந்தர்ப்பம் அமைந்தாலும், அவனுடன் தனிமையில் மனம் திறந்து பேசும் வாய்ப்பு மட்டும், த்வனிக்குக் கிடைக்கவில்லை.

ஒரு நாள், அவள் லிஃப்டில் ஏறி பட்டனை அழுக்குவதற்குள், யாரோ வேகமாக உள்ளே வருவது ஓரக் கண்ணில் தெரிந்தது.

சிறிது தயங்கிய பின்னர், அவள் செல்ல வேண்டிய தளத்துக்கான எண்ணை அழுத்திவிட்டு நிமிர்ந்தாள்.

அங்கு, புன்னகையைத் தொலைத்து இறுகிய முகத்துடன் அஷ்வந்த் நின்றிருந்தான்.

உடனே, முன்பு ஒரு முறை சிங்கப்பூர் லிஃப்டில் பயணித்தபோது, அவளை நெருங்கி முத்தமிட அவன் முயற்சித்ததும், அவள் வெட்கத்துடன் செல்லக் கோபம் கொண்டு விலகியதும் நினைவு வந்தது.

அவனுடைய குறும்பும், சீண்டல்களும் ஞாபகப் பெட்டகத்துக்குள்ளிருந்து மேலெழும்பி வர, இமையோரம் கோடி மின்னல் தெறித்தது.

முகம் நாணத்தில் சிவக்க, என்ன செய்வதென்று தெரியாமல் விழிகளைத் தாழ்த்தியபோதுதான், அவன் குரல் ஆழமாக வந்தது.



''என்ன? திடீர்னு என்னவோ மாதிரி வித்தியாசமா ரியாக்ட் பண்றே? சங்க காலத்துலதான் பெண்கள் வெட்கப்பட்டா கன்னம் சிவக்கும்னு சொல்லுவாங்க...

''இப்போ... இங்கே என்ன நடந்ததுன்னு இப்படி வெக்கப்படற மாதிரி நடிக்கிறே?

''என்னை மயக்கறதுக்காகத்தானே இப்படியெல்லாம் நடிக்கிறே? லிஃப்ட்டை விட்டு வெளியே போறப்ப, அங்கே இருக்கறவங்க எல்லாரும் உன்னையும் என்னையும் சேர்த்து வச்சி வேற மாதிரி நினைக்கணும்னு நீ முயற்சி செய்யறது, நல்லாப் புரியுது!

''பாவம் நீ... எந்தக் காலத்திலயும் நீ நினைக்கறது நடக்காது! இவ்வளவு சீப்பா பிஹேவ் பண்ற ஒரு பெண்ணை நான் பார்த்ததே இல்லை... ஐ ஹேட் யூ!'' தீக்கங்குகளாய் வார்த்தைகளைச் சிதற விட்டான்.

சில்லென்ற பனிநீரை யாரோ முகத்தில் விசிறி அடித் தாற் போல் திகைத்துத் தவித்தவளின் விழிகள், நீரில் நிறைந்தன.

முகம் வெளிறி கண்கள் சிவந்து அவனுக்கு பதில் கூற வார்த்தைகளைத் தேடுவதற்குள், லிஃப்ட் நின்று, அவன் கோப நடையுடன் வெளியேறினான்.

தன்னுடைய உணர்வுகளை மறைத்தபடி அவ வெளிவந்தபோது, தான் ஒரு கோழை என்பது தெளிவாக புரிவதாய்!

பேச வேண்டிய நேரத்தில் எதையுமே சொல்ல மறந் தான் பரிதவிப்பதும், வார்த்தைகளைத் தேர்ந்தெடுத் வெளி விடுவதற்குள், பதில் சொல்வதற்கான நே கடந்து விடுவதும் உறைத்தது.

ஏன் அவனுடைய அருகாமையில் இவ்வளவு தயங்கித் தவித்துப் போகிறாய் என்று தன்னையே கடிந்தது நெஞ்சம்!

ஒரு பெண் சிரித்தாலே அவளைக் கீழ்த்தரமாக எண்ணி விடுவது ஆண்களின் வழக்கமென்பது. இன்று புரிந்தது.

ஆனால், தான் வெட்கப்பட்டது அவனை இந்த அளவு பாதித்து எதிர் மறையாய் ஏளனமாய் பேச வைத்ததும், ஒரு விதத்தில் நிறைவையே அளிப்பதாய்!

சாதாரணமாக எல்லாப் பெண்களையும் ரசித்து வழிபவன் அவனில்லை என்பது, அவனுடன் உயிராய் பழகியபோது அவள் அறிந்ததுதான்!

ஆனால் இடைப்பட்ட இந்த இரண்டு வருடங்களுக்குள் என்ன நடந்திருக்குமென்று தவிப்புடன் யோசிக்க ஆரம்பித்தாள்.

அவளை நினைவிருந்தால்... அவன் ப்ரஜ்ஞனாக இருந்திருந்தால், நிச்சயமாக அவளைத் தேடி வந்திருக்க வேண்டுமே... ஏன் வரவில்லை...?

அவளைத் தெரிந்த மாதிரி ஒரு கணம் கூட அவன் நடந்து கொள்ளவில்லையே... ஏன் இப்படி நடந்து கொள்கிறான்? வேண்டுமென்றே அவளிடம் சீண்டி விளையாடுகிறானா?... குழப்பத்தில் மனம் சோக வலை பின்னியது.

* * *

ஒரு நாள் மதியம், அவனும் பரணியும் காபி ஷாப்பிற்கு சென்று காபி குடித்து விட்டு லிஃப்டில் திரும்பி வந்து கொண்டிருந்தனர்.



''என்னாங்க... வர வர ரொம்ப அமைதியாயிட்டீங்க... சாதாரணமாக் கூட என்னோட பேச மாட்டேன்றீங்க... அம்மா சொன்ன பேச்சைக் கேட்டுட்டு நான் தப்பு பண்ணிட்டேனோன்னு ரொம்ப உறுத்தலா இருக்கு!''

அவன் ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினான்.

உடனே பதறிப் போனவள், ''அதெல்லாம் ஒண்ணுமில்லை பரணி! ஏதேதோ யோசனைகள்... அதான்! இதுக்கும் நீங்க கேட்டதுக்கும் எந்த சம்பந்தமுமில்லை...'' சிறு முறுவலுடன் கூறினாள்.

''தேங்க் யூ ஹம்சத்வனி! நான் பயந்தே போயிட்டேன்! உங்க மனசிலே எந்த வருத்தமும் இல்லைன்னதும், தான் பாரம் இறங்கின மாதிரி இருக்கு! ஃப்ரெண்ட்ஸ்!''

அவன் வாஞ்சையுடன் கை நீட்ட, மெதுவாக அதில் தன் விரல்களைப் பதித்தாள் அவள்.

அந்த நிமிடம் அவர்கள் இறங்க வேண்டிய ஃப்ளோரில் லிஃப்ட் நின்று கதவு திறக்க, அங்கு காத்திருந்த அஷ்வந்தின் விழிகள் ஒரு கணம் இடுங்கி, இணைந்திருந்த அந்தக் கரங்களில் பதிந்தன.

ஏதோ உணர்வு அவளைத் தாக்க, நிமிர்ந்தால், எதிரே அஷ்வந்தின் வெறுப்பும் சீற்றமும் சுமந்த முகத்தை சந்தித்தாள், அவள்.

தான் எந்தத் தவறும் செய்யாமலே அவனுடைய விழிகள் தன்னைக் குற்றம் சாட்டுவது புரிந்து, சஞ்சலமானது மனது.

பிறகு, மதியம் வேலை விஷயமாக அவனைச் சந்திக்கச் சென்றபோதுதான், அவனுடைய கோபத்தின் காரணமே புரிந்தது.

''என்ன... வீக் எண்ட் ஹாலிடே ரொமான்ஸ் இன்னும் தொடருது போலருக்கு... கம்பெனிக்கு வந்தா அப்பப்ப கொஞ்சம் வேலையும் பாக்கணும்! உன்னையும் பரணியை யும் தான் சொல்றேன்... இனிமேலாவது அக்கம் பக்கம் யார் இருக்காங்கன்னு பாத்து நடந்துக்கங்க..!

''நாம எல்லாரும் மிருகங்கள் இல்லை... கிடைச்ச இடத்துல தங்களோட இச்சையைத் தீர்த்துக்க!... பண் பாடுள்ள மனுஷங்கன்றது ஞாபகம் இருக்கட்டும்.''

எரிமலைக் குழம்பாய் பொங்கிச் சிதறின வார்த்தைகள்!

இதயத்தில் யாரோ சூட்டுக்கோலால் இழுத்தது போல் ஒரு வலி எழ, பதறி நிமிர்ந்தாள் அவள்.

''நீங்க... சார்.. ஏன் இப்படி அசிங்கமாப் பேசறீங்க! நானும் பரணியும் நல்ல ஃப்ரெண்ட்ஸ்! அவர் என்னை மணக்கக் கேட்டபோது கூட மறுத்தவ நான்!'' மூச்சு வாங்க நிறுத்தினாள்.

''ஓ! இதை என்னை நம்பச் சொல்றியா? ஒருவேளை அது உண்மையாக் கூட இருக்கலாம்! ஏன்னா, பரணி இந்த கன்சர்ன்லே ஒரு எம்ப்ளாயிதானே? இப்ப உன் கவன மெல்லாம் வேற இடத்துல இல்ல இருக்கு!... பெரிய புளியங்கொம்பா இல்லத் தேடறே... எம்.டி. ரேஞ்சுக்கு?'' கூறிவிட்டு நக்கலாகச் சிரித்தான்.

உச்சி முதல் பாதம் வரை கூசிப் போக, இந்த நிமிடமே பூமி பிளந்து தன்னை உயிருடன் உள் வாங்கிக் கொள்ளக் கூடாதா என்றிருந்தது அவளுக்கு!

விழிகளில் கண்ணீர்த் துளிகள் ஜனிக்க, சட்டென்று எழுந்து அவள் வெளியேறும்போதுதான் உள்ளே வந்தார் லிங்கேஷ்வரன்.



இருவருடைய முகத்தையும் பார்த்து எதையோ ஊகித் தவர், ''என்னப்பா? இங்கே என்ன ப்ரச்னை?'' என்றார் யோசனையுடன்.

''இல்லைப்பா! ப்ராஜெக்ட்டுல ஒரு சின்ன மிஸ்டேக்... அதுக்காகத் திட்டுனேன்... அதுதான்!'' அசுவாரசியமாகக் கூறினான் அவன்.

''சரி சரி! ஆனா ஒரு இன்ஃபர்மேஷன்! வொர்க்குல ஹம்சத்வனி எப்பவுமே பர்ஃபெக்ட் மை சன்... அதான் எனக்கு உதைக்குது! வேற ஒண்ணுமில்லையே!''

சந்தேகமாக வினவினார் அவர்.

''ப்ச்... இல்லைப்பா! அஃபிஷியல் மேட்டர்தான்! என்னாச்சு நீங்க டீல் பண்ணின ப்ரர்ப்பர்ட்டி விஷயம்?'' என்றபடி பேச்சைத் திசை திருப்பினான் அவன்.

''அதானே பார்த்தேன்... வேற எதிலயும் மாட்டிக்காதே அஷ்வந்த்! உன் அத்தை பொண்ணு சில்வியா அடுத்த மாசம் யு.கே.லேருந்து வரா! அவளைத் தான் எனக்கு மருமகளாக்கிக்கணும்னு நான் உங்க சின்ன வயசிலிருந்து முடிவு பண்ணியிருக்கேன்..'' மெதுவாகக் கூறினார்.

''அப்பா... எனக்கு இப்ப கல்யாணத்துல எல்லாம் இன்ட்ரெஸ்டே இல்லை... நான் அதுக்குத் தயாராவும் இல்லை... முதல்லே பிசினஸ்லே எதையாவது சாதிக் கணும்... அப்புறம்தான் மத்ததெல்லாம்!'' ஒருவித உறுதி யுடன் முடித்தான் அவன்!

அவனையே பெருமையுடன் நோக்கியவரின் விழி களுக்குள், சிறு சஞ்சலமும் பயமும் புதிதாய் குடி புகுந்தன.

# 27

அடுத்த வாரமே, ஒரு ஜெர்மன் கம்பெனியின் ப்ரா ஜெக்ட் அவர்களுக்குக் கிடைத்தது.

அதைப் பற்றி எல்லா ப்ராஜெக்ட் லீடர்களுடனும் அவன் பேச்சு வார்த்தை நடத்தினான்.

அப்போதுதான், அங்கிருந்த அந்தக் கம்பெனி எக்சிகியூட்டிவ்ஸ் எல்லோருமே ஜெர்மன் மொழியிலேயே பேசுவது தெரிய வந்தது.

அந்த வார இறுதியில், மீட்டிங்கில் இதைப் பற்றி அனைவரிடமும் கலந்தாலோசித்தபோதுதான், ஹம்சத்வ னிக்கு ஜெர்மன் தெரியுமென்பதை பரணி பெருமையாகக் கூறிவிட்டான்.

சட்டென்று ஒற்றைப் புருவம் ஏறி இறங்க அவர்களிரு வரையும் ஏறிட்ட அஷ்வந்த் யோசனையுடன் அவளை மட்டும் இருக்கும்படிச் சொன்னான்.

மற்றவர்கள் வெளியேறியதும், ''நானும் பரணியும் நண்பர்கள்தான்னு அன்னிக்கு அடிச்சி சொன்னே? இப்போ நான் சொன்னது உண்மையாயிடுச்சா?'' நக்கலாக வந்தது அவன் குரல்!

சட்டென்று பொங்கிய கோபத்தில் உதடுகள் துடிக்க, ''புரியலை சார்.. மத்தவங்களுக்குப் புரியற மாதிரிக் கொஞ் சம் பேசறீங்களா?'' அவளும் ஏளனமாகவே கேட்டாள்.

''ஹூம்... தூங்கறவங்களை எழுப்பிடலாம்... ஆனா தூங்கற மாதிரி நடிக்கிறவங்களை எழுப்பவே முடியாது..''



அவன் சுழித்த உதடுகளுடன் பகர்ந்தான்.

''யார் சார் நடிக்கிறது? இப்ப என்ன நடந்துடுச்சின்னு இப்படிப் பேசறீங்க... எனக்கு நடிப்பெல்லாம் வராது.''

''ஓ! இதை நான் நம்பணும்!... சரி நேரிடையாவே விஷயத்துக்கு வரேன்... உனக்கு ஜெர்மன் தெரியும்னு பரணிக்கு எப்படித் தெரியும்?''

''ப்ச்... இதுதான் உங்க ப்ரச்னையா? எனக்கு ஜெர்மன் தெரியும்னு என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாருக்குமே தெரி யும்... நான் சொன்னது பெண் தோழிகளை!

''அதுக்காக நான் அவங்களை எல்லாம் லவ் பண் றேன்னு சொல்ல முடியுமா? அப்புறம் அதோட அர்த்தமே அனர்த்தமாயிடும் சார்...

''பரணியும் எனக்கு நல்ல நண்பர்... அவ்வளவுதான்! நீங்க என்ன நினைச்சாலும் எனக்கு அதைப் பத்திக் கவலையில்லை!'' என்றபடி எழுந்து வெளியேற முயன் றாள்.

உடனே அவள் முன் நின்று வழியை மறித்தவன், ''எதையுமே சரியா முடிக்காம அரைகுறையா பாதியிலயே விட்டுட்டுப் போனா எனக்குப் பிடிக்காது'' உலர்ந்த குரலில் கூறினான்.

''ஹூம்! எனக்கும் அதே மாதிரிதான்! பொறுப்பைத் தட்டிக் கழிக்கறது... பாதியிலே கழட்டி விடறதெல்லாம் எனக்குப் பழக்கமில்லை... அது உங்களுக்குத்தான் பழக்கம்கிறதை மறந்துட வேண்டாம்...''

''ஏய்... என்ன சொல்றே? யூ சீட்டர்?'' என்றபடி அவள் கையை இரும்பாய் அவன் பற்ற, அந்த அழுத்தத்தில் துடித்துப் போனாள் அவள்.

"ப்ராஜு... கையை விடுங்க ப்ளீஸ்... அப்புறம் நான் சத்தம் போட்டா, உங்களுக்குத் தான் அசிங்கம்!" அடிக் குரலில் சீறினாள்.

"ஓ! எங்க சத்தம் போடு பாக்கலாம்... அப்படி என்ன அசிங்கம் நடக்குதுன்னு நானும் பாக்கறேன்!

"அதென்ன? எவளையாவது பாத்தா உடனே அவனுக்கு பெட் நேம் எல்லாம் கூட வச்சிடுவியா? என்னைப் பாத்த அன்னிக்கு கூட இப்படித்தான் ஏதோ ஒரு பெயர் சொல்லி... இல்லை இதே பெயர் சொல்லித்தான் உளறினே... இன்னிக்கும் அதையே செய்றே?

"ரங்காராஜுக்கும் பரணிக்கும் என்ன பெயர் வச்சி செல்லமாக் கூப்பிடுவே? ராஜ், ரணின்னா...?" ரௌத்ரம் பொங்கும் விழிகளுடன் கேட்டான்.

உடனே அவள் பொறுமை சிதறிவிட, அக்னிப் பிரவேசம் செய்த பத்தினிப் பெண்ணாய் அவள் நிமிர்ந்த போது, மெதுவாக கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தார் லிங்கேஷ்வரன்.

சட்டென்று அவளிடமிருந்து அஷ்வந்த் விலக, அங்கு தொடர்ந்த இறுக்கமும், அசாதாரண சூழ்நிலையும் இருவருக்குமிடையே ஏதோ நடந்திருப்பதைப் பறை சாற்றின.

ஆனால் இருவரின் முகமும் கோபத்தில் சிவந்திருந்ததால், வேறு முடிவுக்கு வர இயலாமல் சட்டென்று இலகுவானார் அவர்.

"என்னப்பா... ஜெர்மன் ப்ராஜெக்ட்டைப் பத்திப் பேசி முடிச்சாச்சா? பத்து கோடி ருபாய் ப்ராஜெக்ட்! பாத்து ஹேண்டில் பண்ணணும்... ஏன்... இப்படி ரெண்டு பேரும்



[illegible] எலியும் பூனையுமா நிக்கறீங்க?" மெதுவாகக் கேட்டார்.

உடனே தன்னை அடக்கியபடி அவன் திரும்ப, அவளோ "நான் வரேன் சார்" என்றபடி வேகமாக வெளியேறினாள்.

அவளையே தொடர்ந்த விழிகளை அவன் திருப்ப, "என்னாச்சு அஷ்வந்த்? என்ன ப்ரச்னை உங்களுக்குள்ளே?" மெதுவாக விசாரித்தார் அவர்.

"ஒண்ணுமில்லைப்பா... ஜெர்மன் தெரியுமான்னு அவகிட்டே கேட்டிட்டிருந்தேன்!"

"அவ்வளவுதானா? அதுக்குப் போய் ஹம்சத்வனி இவ்வளவு கோபப்படத் தேவையில்லையே?" யோசனையுடன் வினவினார் அவர்.

"இல்லைப்பா! அவளுக்கும் பரணிக்கும் இருக்கற உறவைப் பத்தி நான் கொஞ்சம் கிரிட்டிசைஸ் பண்ணிட்டேன்... அதான் கோபம்!"

"பரணிக்கும் அவளுக்குமா...? ரெண்டு பேரும் நல்ல நண்பர்களாச்சே! அதான் அவளுக்கு இவ்வளவு கோபம் வந்திருக்கு!"

"சரி... அதை விடுங்கப்பா! ஜெர்மன் பேசத் தெரிஞ்ச ஒருத்தரைத் தேடிட்டிருந்தேன்... நல்லவேளை! ஹம்சத்வனிக்கே தெரியுமாம்...!"

"அப்ப ஓகே! உன்னோட அத்தை போன் செஞ்சிருந்தா! சில்வியா முன்னாடியே கிளம்பி இன்னும் பத்து நாளிலே இங்கே வராளாம்..." ஆர்வத்துடன் கூறினார்.

"அப்பா... ப்ளீஸ்! அவ வரதுக்கும் எனக்கும் என்ன சம்மந்தம்? என்னை விட்டுடுங்க.. ப்ளீஸ்!"

''அஷ்வந்த்! பின்னே எப்போதான் லைஃப்லே நீ செட்டிலாகறதா உத்தேசம்? ம்?''

''அப்பா... நான் வாழ்க்கையிலே சாதிக்க வேண்டியது எவ்வளவோ இருக்கு! இப்பதான் பிசினஸிலேயே காலை எடுத்து வச்சிருக்கேன்... அதுக்குள்ளே என் கவனம் சிதறுவதை என்னால அனுமதிக்க முடியாதுப்பா!'' இறுதி யாகவும் உறுதியாகவும் முடித்தான்.

பிறகு, தொழிலைப் பற்றி பேசிவிட்டு யோசனை யுடன் அவர் வெளியேற, தான் ஹம்சத்வனியிடம் பேசியது தவறோ என்று, முதன் முறையாக அவனுக்குத் தோன்ற ஆரம்பித்தது.

சட்டென்று தோளைக் குலுக்கி அந்த எண்ணத்தை விலக்கினான்.

உடனே அவளைப் பற்றி ரங்கராஜ் கூறியதும், குழந்தையுடன் அவளை சந்தித்ததும், தன் பெயரை மின் ஹம்சத்வனி என்றே அவள் கொடுத்திருப்பதும், மனதில் நிறைந்தன.

ஏனோ, விளங்க முடியாத ஒரு சீற்றம் உள்ளே பரவ, அவள் மோசமானவள் தான்... தான் அவளிடம் அப்படிப் பேசியதும் சரிதான் என்ற எண்ணம் உறுதியாய் வலுப் பெற்றது.

* * *

நாட்கள் கடந்து போகும் காற்றாய் விரைய, பத்தே நாட்களில் சில்வியாவும் இந்தியா வந்து விட்டாள்.

மிகவும் நவீனமாக உடையணிந்து நடை, உடை பாவனை முழுவதும் வெளிநாட்டுப் பெண்ணாக வந்த வளை, குடும்பமே ஆர்வத்துடன் வரவேற்றது.



அஷ்வந்த் மட்டும் சிறு புன்னகையுடன் தலையசைத்து ''ஹாய்!'' என்று வரவேற்று விட்டுத் தன் அறைக்குச் சென்றுவிட, லிங்கேஷ்வரன்தான் கவலையுடன் யோசிக்க ஆரம்பித்தார்.

அதற்குள், ''அங்கிள்! என்ன அதுக்குள்ளே ரொம்ப யோசிக்க ஆரம்பிச்சிட்டீங்க? இந்த சாட்டர் பாக்ஸை எப்படி மேனேஜ் பண்றதுன்னா?'' என்றபடி அருகில் வந்து வாஞ்சையுடன் முத்தமிட்டாள் அவள்.

உடனே நெகிழ்ந்து போனவர், ''இல்லைம்மா! உன்னை... இங்கேயே எப்படித் தங்க வைக்கலாம்னு யோசிச்சிட்டிருந்தேன்!'' என்றபோது, அதில் ஏதோ ஒரு தவிப்பிருந்தது.

எப்படியாவது அவளைத் தன் வீட்டிற்கு மருமகளாக்கி, தன் தங்கைக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும் என்ற உறுதியும் அதில் தெரிவதாய்!

''நீ வாம்மா சில்வியா! உன் ரூமைக் காட்டறேன்... அம்மாவும் உன்கூட வந்திருக்கலாமில்லையா? எவ்வளவு நாளாச்சு அவளைப் பார்த்து?'' என்று கேட்டுவிட்டு அவளைப் பிடித்து அணைத்தபடி அழைத்துச் சென்றார் கோமளா.

அவளுக்காகக் கொடுக்கப்பட்டிருந்த அறை பிரம் மாண்டமாய் இருக்க, வியப்புடன் அதை அளவிட்டபடி சென்று படுக்கையில் அமர்ந்தாள் சில்வியா.

''எனக்கு என்ன தெரியும் ஆன்ட்டி? மம்மியையும் தான் கூப்பிட்டேன்... அவங்க டேடியை விட்டு எங் கேயும் வரமாட்டாங்க! ஹாலிடே ட்ரிப்புக்கு என்னை இங்கே அனுப்பினதே பெரிசு!'' புன்னகையுடன் படுக் கையில் சாய்ந்தாள்.

''அஷ்வந்த்தைப் பாத்தியாம்மா? உனக்குப் பிடிச்சிருக்கா?'' மெதுவாகக் கேட்டார் அவர்.

''ஏன் ஆன்ட்டி? அஷ்வந்த் ரொம்ப சென்சிடிவ் அன்ட் செக்ரிடிவ் டைப்பா? அதிகமாப் பேச மாட்டாரா?''

''ஆமாம்மா! அவன் அப்படித்தான்! நீ ரெஸ்ட் எடு! கொஞ்சம் பழகிட்டா, அப்புறம் நல்லாப் பேசுவான்!''

யோசனையுடன் கூறிவிட்டு உள்ளே சென்றவரின் மனதிற்குள், பழைய ஞாபகங்கள் ஊற்றாய் நிறைந்தன.

## 28

சிறு வயதில், சில்வியாவின் அம்மா கனகதாராவை, விடுமுறைக்கென்று தான் சொந்த ஊருக்கு அடிக்கடி அழைத்துச் சென்றது, முதலில் ஞாபகம் வந்தது.

அங்கு தன் தம்பி தன்ராஜிடம் அவள் தன் இதயம் தொலைத்தது, நேற்று நடந்ததைப் போல் நினைவலைகளாய் பரவின.

பிறகு அவனிடம் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அவள் தன் பெண்மையை இழந்து கர்ப்பமானதும், தன்ராஜ் ஊரை விட்டே ஓடிவிட, என்ன செய்வதென்றே புரியாமல் கோமளாவும் தாராவும் தவித்தனர்.

அவமானத்தில், கோமளாவின் தந்தை தற்கொலை செய்து தன் உயிரை மாய்த்துக் கொண்டார்.

கர்ப்பமான தங்கையுடன் மனைவியும் வந்து நிற்க, லிங்கேஷ்வரன்தான் பெரிதும் உடைந்து போனார்.



அப்போதுதான் அவருடைய நண்பன் தேவராஜ் அவர்களிடம் வந்து பேசினான்.

தான் வெகு நாட்களாகவே தாராவை மனதார விரும்புவதைத் தெரிவித்தவன், இந்த நிலையிலும் அவளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாகக் கூறினான்.

உடனே மெய் சிலிர்த்துப் போன லிங்கேஷ்வரன் நண்பனுக்கு ஒரு சத்தியம் செய்து தந்தார்.

பிறக்கப் போவது பெண் குழந்தையாக இருந்தால், கட்டாயம் தன் மகனுக்கே அவளை மணமுடித்துக் கொள்வதாக, வாக்குக் கொடுத்தார்.

அப்போது அஷ்வந்த்துக்கு ஐந்து வயது... முதல் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான்.

பிறகு திருமணம் முடிந்து தேவராஜ் வெளிநாடு சென்று விட, அவர்களுடைய குடும்பம் அங்கேயே செட்டிலானது.

பத்து வருடங்களுக்கு முன்பு, எல்லோருமாக இந்தியாவில் ஒன்று கூடி ஒரு உறவுக்காரத் திருமணத்தில் சந்தித்தது...

அதற்குப் பிறகு இப்போதுதான் சில்வியா இந்தியா வந்திருக்கிறாள்.

* * *

ஏதையோ எண்ணிப் பெருமூச்சு விட்டபடி, பழைய நினைவுகளிலிருந்து கோமளா மீண்டு வந்தார்.

எப்படியாவது அஷ்வந்த்திற்கு சில்வியாவை மணமுடித்து, தன் தம்பி செய்த தவறுக்குப் பிராயச் சித்தம் செய்து விட வேண்டுமென்ற உறுதி, அவருக்குள் முடிச்சாய் இறுகியது.

சில்வியா, வந்த ஒரு வாரத்திலேயே, இருவரிடமு நன்றாக ஒட்டிக் கொண்டாள்.

அவளால் அஷ்வந்திடம் மட்டும் ஏனோ இயல்பாகப் பழக முடியவில்லை... அவனும் ஏனோ ஒதுங்கியே இருந்தான்!

அன்றுடன், அவள் வந்து ஒரு வாரம் ஆகியிருந்தது.

எங்குமே செல்லாமல் அவள் வீட்டிலேயே அடைப்டிருக்க, டிரைவரின் துணையுடன் அவளைக் கோவிலுக்கு அழைத்துச் சென்றார் கோமளா.

மைலாப்பூர் கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்து விட்டுத் திரும்பும்போது, ஒரு பைக்காரனைத் தவிர்க்க பாதை ஓரத்தில் டிரைவர் வண்டியைத் திருப்பினான்.

குழந்தையுடன் சென்று கொண்டிருந்த ஒரு வயதான பெண்மணியின் மேல் கார் இடித்து விட்டது.

உடனே, அவர் தடுமாறி பாதையோரத்தில் விழ, பெண்கள் இருவரும் பதறிப் போனார்கள்.

உடனே காரை நிறுத்தி பதட்டத்துடன் இறங்கிச் சென்று அவரைத் தூக்கியபோது தான், அருகில் இருந்த அந்த சிறு குழந்தையை கவனித்தார் கோமளா!

உடனே, தன்னைக் காப்பாற்றிய அந்தப் பெண்ணுடன் இந்தக் குழந்தையை பார்த்த ஞாபகம் வந்தது அவருக்கு!

அந்த வயதான பெண்மணியைத் தூக்கி நிறுத்திய சில்வியா, ''ஆன்ட்டி! வாங்க! முதல்லே ஒரு டாக்டர் கிட்டப் போகலாம்... எங்கேயாவது அடிபட்டிருக்கப் போகுது...'' பதட்டத்துடன் அழைத்தாள்.



''அதெல்லாம் ஒண்ணுமில்லைம்மா... சும்மா தடுமாறி சாஞ்சிட்டேன்... அடியெல்லாம் எதுவும் படலை! நீங்க கிளம்புங்க..'' சிறு புன்னகையுடன் கூறினார்.

''அதெல்லாம் இல்லை! ஒரு டாக்டர்கிட்டே போய் செக்கப் பண்ணிடலாம்...'' விடாமல் வற்புறுத்தியபடி காரில் அவரை ஏற்றினாள் அவள்.

குழந்தையைக் கோமளா மடியில் வைத்துக்கொள்ள, உடனே அருகிலிருந்த நர்ஸிங்ஹோமிற்குக் கார் சென்றது.

செல்லும் வழியிலேயே, அவரிடம் மெதுவாக விசாரிக்க ஆரம்பித்தார் கோமளா.

''ஏம்மா! இந்தக் குழந்தையை நான் முன்னாடியே பாத்திருக்கேன்... இவங்கம்மா ஹம்சத்வனிதான் ஒரு நாள் என்னைக் கோவில்லே குளத்தில விழுந்தப்ப காப்பாத்தினாங்க... அவங்க உங்களுக்கு என்ன வேணும்?'' ஆர்வத்துடன் கேட்டார்.

''அவ என் பொண்ணுதாம்மா... இவன் என்னோட பேரன்! ஒரு நாள் அவளும் என் கிட்ட இதைப் பத்தி சொன்னா! நீங்கதானா அது?''

''ஆமாம்மா... உலகம் எவ்வளவு சின்னது பாருங்க... இன்னிக்கு உங்களை வீட்டில விட்டுட்டு ஹம்சத்வனியையும் பாத்துட்டுத்தான் நான் கிளம்புவேன்! இவ என் நாத்தனார் பொண்ணு சில்வியா'' மகிழ்ச்சியுடன் அறிமுகப்படுத்தினார் அவர்.

''அவ வீட்டுக்கு வர நேரம்தான்! வீட்டு சாவி வேற என்கிட்ட இருக்கு... நான் இல்லைன்னா பயந்துடுவா...''

வருத்தத்துடன் அவர் கூற, உடனே சில்வியாவின் செல்லிலிருந்து ஹம்சத்வனிக்கு தொடர்பு கொண்டாள் கோமளா.

அவளிடம் விஷயத்தைக் கூறியதும், பயந்து விட்டாள் அவள்.

இப்போதுதான், வீட்டிற்கு தான் கிளம்புவதாகவும் நேரே மருத்துவமனைக்கே வந்து விடுவதாகவும் தெரிவித்தாள்.

"இல்லைம்மா! வேண்டாம்! நீ வீட்டுக்கே போயிடு! நாங்க நேர அங்கே வந்துடறோம்... அம்மா ஒண்ணும் வலி இல்லைன்றாங்க! இருந்தாலும் பாத்திடலாமேன்னு தான்!" என்று வைத்தார் கோமளா.

பிறகு மருத்துவமனையிலிருந்து அவர்கள் திரும்பிய போது, வாசலிலேயே பதட்டத்துடன் காத்திருந்தாள் த்வனி.

பிறகு, ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொண்டு அனைவரும் உள்ளே சென்றனர்.

ஹம்சத்வனி இருவருக்கும் காபி எடுத்து வந்து உபசரிக்க, உரிமையுடன் சில்வியாவின் மடியில் சாய்ந்திருந்தான் ப்ரஜன்!

அவர்கள் கிளம்பிய பிறகுதான், த்வனிக்கு சரியாகவே மூச்சுவிட முடிந்தது.

வீட்டைச் சுற்றிப் பார்க்கிறேன் என்று அவர்கள் வந்து விட்டால், அவளுடைய அறையில் பெரிதாக மாட்டப் பட்டிருக்கும் ப்ரஜனின் படத்தைப் பார்த்துவிட நேருமே என்ற பரிதவிப்பு அவளுக்கு!



அந்த சிறிது நேரத்தில், கிளம்புவதற்குள்ளேயே சில்வியா அவளுடன் நல்ல தோழியாக மனதோரம் இடம் பிடித்துக் கொண்டாள்.

பெரியவர்கள் இருவரும் பேச, தன்னைப் பற்றியும் தான் மாமா வீட்டிற்கு வந்திருப்பதைப் பற்றியும், த்வனியிடம் கூறிக் கொண்டிருந்தாள்.

சட்டென்று, த்வனியின் மனம் துணுக்குற்றது.

இவள், அஷ்வந்த்திற்கு அத்தை பெண்ணா என்று சிறு வாட்டத்துடன் சுருங்கியது மனது.

ஏனோ, வெகு நேரம் இதயம் சமாதானமடைய மறுத்தன.

தன் வாழ்க்கையில் முதன் முதலாக ஒரு பெண் எதிரியாக வந்திருப்பதை உணர்ந்தபோது, உணர்வுகள் சில் விட்டன.

ப்ரஜன், ஒருவேளை இப்போது அவளை விரும்புவதால்தான் தன்னைப் புறக்கணிக்கிறானோ... மனதில் பலப்பல விடை தெரியாக் கேள்விகள்!

ஆனால், அவன் எப்படி அஷ்வந்த்தாக மாற முடியும்... லிங்கேஷ்வரனும், கோமளாவும் அவனுக்கு பெற்றோரென்றால் இவன் ப்ரஜன் இல்லையா?

இல்லையே! அவனுடைய குரல், நெற்றி வடு எதுவும் மாறாமல் அப்படியே இருக்கிறதே! ஒருவரைப் போல இன்னொருவர் இருந்தாலும் வடுவும் குரலும் கூட ஒரே மாதிரியாக இருக்குமா என்ன?

கடும் குழப்பத்தில் மனம் சிலந்தி வலை பின்ன, எந்த முடிவுக்கும் வர முடியாமல் தவித்துப் போனாள் அவள்.

# 29

அலுவலகத்தில், அந்த வாரம் முழுவதும் அவளை கவனித்ததில், அஷ்வந்த் இயல்பாகவே இருந்தான்.

காதலியைப் பார்த்த பரவசமோ, உற்சாகமோ இன்றி, வழக்கத்தைவிடக் கடுமையாகவும் டென்ஷனாகவும் இருந்தான்.

அவளால் எந்த முடிவுக்கும் வர இயலவில்லை... இந்தப் புதிரை எப்படி விடுவிப்பதென்றும் புரியவில்லை!

கைலாசத்திற்கு உடல்நிலை தேறிய பிறகுதான், அவரிடமும் மாலினியிடமும் இதைப் பற்றிப் பேச வேண்டும் என்று முடிவு செய்திருந்தாள் அவள்.

ருக்மணியிடம் கூறி, அவரிடம் பெரும் எதிர்பார்ப்பையும், எதிர்காலக் கனவுகளையும் உருவாக்க அவளுக்கு விருப்பமில்லை.

ஒருவேளை அவன் ப்ரஜனாக இல்லாவிட்டால்... ஆனால் அவன்தான் என்று அவனுடைய தொடுகை உணர்ச்சி அவளிடம் அடித்துக் கூறியது.

இருதலைக் கொள்ளி எறும்பாய் தவித்துப் போனாள் அவள்.

இப்போதெல்லாம், வீட்டிலிருக்கும்போது குட்டி ப்ரஜன் உறங்கும் நேரங்களில், அவளால் தன் உணர்வுகளை... ஏக்கத்தை... தவிப்பை கட்டுப்படுத்திக் கொள்ளவே இயலாது போயிற்று.

* * *



அந்த வார இறுதியில், ஞாயிறு என்பதால் அவள் ஷாப்பிங் சென்றிருந்தாள்.

ஒவ்வொரு பொருளாக எடுத்து ட்ராலியில் போட்டுத் தள்ளியபடி வரும்போது தான் மீண்டும் சில்வியாவைச் சந்தித்தாள் அவள்.

''ஹலோ! என்னங்க... நாம அடிக்கடி சந்திக்கிறோம்... எப்படி இருக்கீங்க?'' கேட்டபடி உற்சாகத்துடன் கை குலுக்கினாள் அவள்.

''ம்! நல்லாருக்கேன்... என்ன, தனியா ஊர் சுத்திப் பாத்திட்டிருக்கீங்களா?''

''இல்லை... என்னோட ஃப்ரெண்ட் ஒருத்தர் வரேன்னிருக்காரு... அதான் வெயிட் பண்ணிட்டே ஷாப்பிங் செய்யறேன்...''

சில்வியா முடிக்கும் முன்பே அந்த இளைஞன் வந்து விட்டான்.

''ஹாய் அவினாஷ்! இவள் என் ஃப்ரெண்ட் ஹம்சத்வனி!'' என்று அவனிடம் அறிமுகம் செய்து வைத்தாள் அவள்.

பிறகு ஹம்சத்வனியிடம் திரும்பி, ''இவர் டாக்டர் அவினாஷ்! இவர் அங்கே எங்க அப்பா வேலை செய்யற ஹாஸ்பிடல்லே ட்ரெயினிங்குக்காக வந்திருந்தார்... நான் அங்கே ஆஃபீஸ் அட்மினிஸ்ட்ரேஷன் பாத்துட்டிருந்தேன்...

''போன மாசம்தான் அவர் ட்ரெயினிங் முடிஞ்சு இங்கே திரும்பி வந்தாரு! அதான் வந்தவுடனே இங்கே மீட் பண்ணலாம்னு வரச் சொன்னேன்! டெய்லி மீட் பண்ணிட்டுதான் இருக்கோம்!''

கண்கள் கனவில் மிதக்க சிறு நாணத்துடன் கூறினாள்.

அவளுடைய முகத்திலிருந்த அவளுடைய உணர்வு களைப் படித்துப் புரிந்து கொண்டவள், குறும்புடன் புன்னகைத்து அவனுக்கு கை குலுக்கினாள்.

உடனே அவள் முகத்தையே கூர்ந்து நோக்கிய சில் வியா, ''ஹம்சத்வனி! நீங்க ரொம்ப புத்திசாலி! ஒரே பார்வையிலே என்னைப் பத்தியும் அவினாஷைப் பத்தி யும் புரிஞ்சிக்கிட்டீங்க இல்லை?'' வியப்புடன் கேட்டாள்.

''ம்! எப்பவுமே காதலிக்கிறவங்களைத் தவிர சுத்தி இருக்கிற எல்லாருக்கும் அது நல்லாவே தெரிஞ்சுடும்!''

கண்கள் குறுகுறுக்க குறும்புடன் கூறினாள் த்வனி.

''நீங்க சொல்றது சரிதான்! அங்கே கூட ஹாஸ் பிடல்லே சிலருக்குத் தெரிஞ்சிடுச்சி. ஆனா இன்னும் அம்மா அப்பாவுக்குத் தெரியாது... என்னால அவினாஷைப் பிரிஞ்சு இருக்க முடியலை! அதான் வெகேஷனுக்கு மாமா வீட்டுக்கு வர சாக்குல உடனே வந்திட்டேன்!''

காதல், பெருமையுடன் கசிந்து வழிந்தது அவள் குரலில்!

உடனே ''ஆல் தி பெஸ்ட் சில்வியா!'' என்று வாழ்த்திய வளுக்குள், ஏனோ இனம் புரியாத ஒரு நிம்மதி!

அவளை ஒரு எதிரியாக வரித்திருந்த நெஞ்சம் இன்று நெகிழ்ந்திருந்தது... அவளுடைய காதல் நிறைவேற வேண்டுமென்று ப்ரார்த்தித்தது.

இருவரிடமும் விடைபெற்று அவள் வீட்டிற்கு வந்த போது, மனம் எடையற்று லேசாகி இருந்த ஒரு உணர்வு!

* * *



பிறகு தொடர்ந்த நாட்களில், அஷ்வந்திடம் பெரும் இறுக்கம் தெரிவது போல்!

அதுவும் ஹம்சத்வனியைக் கண்டாலே, இன்னும் அதிகமாக எரிந்து விழ ஆரம்பித்திருந்தான்.

அதைப் பற்றி பரணியிடம் பகிர்ந்து கொள்ளலாம் என்றால், அதற்கும் வகையில்லாது போயிற்று.

அவனை வேறு ப்ராஜெக்ட்டிற்கு மாற்றி இருந்ததால், இன்னும் பத்தே நாட்களில் பரணி ஆஸ்திரேலியா செல்லப் போகிறான்.

அவன் சென்ற பிறகு, நட்பாய் எதையுமே பகிர, ஒரு துணையின்றி தான் தவிக்கப் போவதும் புரிவதாய்!

மறுவாரமே, பரணி கிளம்பியபோது ஒரு நல்ல நண் பனைப் பிரிகின்ற உணர்வில் அவள் தவித்துத்தான் போனாள்.

நாட்கள் ஒருவித சக்கரச் சுழற்சியுடன் விரைய, பரணி ஊருக்குச் சென்று ஒரு வாரமாகியிருந்தது.

அங்கு சென்றதுமே போன் செய்து தெரிவித்தவன், வாரக் கடைசியில் மீண்டும் பேசுவதாகக் கூறியிருந்தான்.

அன்று அவள் வேலை முடிந்து வீட்டிற்குச் சென்ற போது, கோமளாவும் சில்வியாவும் வந்திருந்தனர்.

அந்த ஞாயிற்றுக்கிழமை அவர்களுடைய வீட்டில் சுமங்கலிப் பூஜை என்பதால், அவளை அழைக்க வந்திருந் தனர்.

டிபன், காபி கொடுத்து அவர்களுடன் பேசி விடை கொடுக்கும்போது, சில்வியா மெதுவாக அவளைத் தனியே அழைத்தாள்.

"அம்மா! ஒரு நிமிஷம்... இதோ வந்திடறோம்" என்றபடி அவளைத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றாள் த்வனி!

"என்ன விஷயம் சில்வியா? ஏதாவது ப்ரச்னையா?" கவலையுடன் வினவினாள்.

"ஆமாம் த்வனி!... நான் உங்களை அப்படிக் கூப்பிடலாமில்லையா?" தயக்கத்துடன் கேட்டாள்.

"ம்! நிச்சயமா! நான் உங்க ஃப்ரெண்ட்தானே?"

"த்வனி! அவினாஷ் வீட்டில் ரொம்ப ப்ரஷர்...! அவரைக் கல்யாணம் செஞ்சுக்கச் சொல்லி! என்ன செய்யறதுன்னு தெரியலை! அவங்க வீட்டிலே ஜாதி ரொம்ப முக்கியம்!

"இவர், மெதுவாத் தன் காதலை சொன்னப்ப, அவங்கப்பாவும் அம்மாவும் ரொம்பக் கோபமாயிட்டாங்களாம்.. உடனே தீவிரமா பொண்ணு பாக்க ஆரம்பிச்சிட்டதா இவரு சொல்றாரு! அதனால நாங்க ஒரு முடிவுக்கு வந்திருக்கோம்!"

தயங்கி நிறுத்தியவளையே கூர்ந்தவள், "சொல்லுங்க சில்வியா..." என்று தூண்டினாள்.

"ம்... அவினாஷ் சொல்றாரு! நாங்க ரெண்டு பேரும் ஒரு கோவில்லே வெச்சு மாலை மாத்திட்டு அப்புறம் ரிஜிஸ்டர் மேரேஜ் செஞ்சுக்கலாமின்னு!

"அதனால... எங்களுக்குச் சாட்சி கையெழுத்துப் போட நீங்க வருவீங்களா ப்ளீஸ்... எனக்கு இங்கே யாரையுமே தெரியாது" கலங்கிய விழிகளுடன் யாசித்தாள்.

சிறிது நேரம் அவள் மௌனித்திருக்க, "ப்ளீஸ்! மாட்டேன்னு மட்டும் சொல்லிடாதீங்க" அவள் கைகளைப் பற்றியபடிக் கேட்டாள்.



"நான் அதுக்கு யோசிக்கலை சில்வியா! நான் இதுவரைக்கும் சொல்லாத ஒரு உண்மையை இப்ப சொல்லப் போறேன்!

"உங்க மாமாவோட கம்பெனியிலதான், நான் வேலை செய்யறேன்! உங்க மாமா பையன் அஷ்வந்த்தான் எனக்கு பாஸ்! இதனால எனக்கு ஏதாவது ப்ராப்ளம் வந்துட்டா?"

"ஒரு ப்ராப்ளமும் வராது! நீங்கதான் என் கூட வரப் போறீங்கன்னு தெரியாமப் பாத்துக்கலாம்! எனக்கு வேற வழி தெரியலை! இன்னும் பதினைஞ்சு நாளிலே நான் ஊருக்குக் கிளம்பணும்... அங்கே போயிட்டா அவ்வளவுதான்!

"ஏற்கெனவே, அப்பாவும் அம்மாவும் அஷ்வந்தைத் தான் நான் கல்யாணம் செஞ்சிக்கணும்னு வற்புறுத்தறாங்க! இங்கே, அத்தை மாமாவும் கூட அதான் எதிர்பார்க்கறாங்க..."

அவள் முடிக்கும் முன்பு சட்டென்று குறுக்கிட்டவள், "ஆனா, அஷ்வந்த் என்ன சொல்றாரு?" ஆர்வத்துடன் கேட்டாள்.

"தேங்க் காட்! அவர்தான் இப்ப எனக்கு பெரிய பலமே!"

"ஓ! அவருக்கு உங்க காதல் தெரியுமா?" என்று கேட்டதுமே, பதறிப் போனாள் அவள்.

"இல்லை... தெரியாது! ஆனா அவருக்கு பெரியவங்களோட இந்த முடிவுல கொஞ்சம் கூட இஷ்டமில்லைன்னு மட்டும் நான் தெரிஞ்சிக்கிட்டேன்."

"எப்படி? அவரா சொன்னாரா?" த்வனி ஆர்வத்துடன் விசாரித்தாள்.

''ஹூஹூம்... சொன்னாத் தானா? என்னைக் கல்யாணம் பண்ணிக்க இஷ்டமிருந்தா நான் வந்ததிலிருந்து என் என்கிட்டயிருந்து விலகி விலகிப் போகணும்? ஒரு வார்த்தை கூட என் கூடப் பேசாம என் ஒதுங்கியிருக் கணும்? என் என்னைப் பாத்தாலே ஏதோ ஏலியனைப் பாத்த மாதிரி தர்ம சங்கடப்படணும்.''

''அவருக்கு இஷ்டமில்லைன்னு நான் வந்த அன்னிக்கு... அதுவும் அவர் அத்தை கிட்டே பேசினதை வச்சித் தெரிஞ்சிக்கிட்டேன்... அப்பதான் எனக்கு நிம்மதியாச்சு.''

ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினாள்.

அப்போது, ருக்மணியின் குரல் இடையிட்டது.

''த்வனி... அவங்க கிளம்பணுமாம்... காத்திட்டிருக் காங்க'' மெதுவாக அழைத்தார் அவர்.

''இதோ வரேம்மா!'' என்று இருவரும் கிளம்பினர்.

## 30

அந்த ஞாயிறன்று மாலையில், ருக்மணி வர மறுத்து விட்டதால், குட்டி ப்ரஜனையும் அவரிடம் விட்டு விட்டு, தனியே ஆட்டோவில் அஷ்வந்தின் வீட்டிற்குக் கிளம்பிச் சென்றாள் ஹம்சத்வனி.

மனதிற்குள் ஒருவிதப் படபடப்பு!

தன்னை அஷ்வந்த் எதிர்பார்த்திருக்க மாட்டான் என்று தோன்றும்போதே, தன்னைக் கண்டதும் அவன் முகம் எப்படி மாறப் போகிறதோவென்ற சிறு குறுகுறுப்பு!



அங்கு வாசலிலேயே காத்திருந்து வரவேற்று, அவளை உற்சாகத்துடன் உள்ளே அழைத்துச் சென்றாள் சில்வியா.

ஹாலில் அமர்ந்து ஏதோ மேகசினைப் படித்துக் கொண்டிருந்த அஷ்வந்த், மெதுவாக நிமிர்ந்தபோது, ஒரு கணம் இமைக்க மறந்து உறைந்து போனான்.

அழகிய கெம்ப் நிற சில்க் காட்டன் புடவையில், தேரில் வருகின்ற உற்சவச் சிற்பமாய் அசைந்து வந்த ஹம்சத்வனியை, அவன் அங்கு சத்தியமாக எதிர்பார்த்திருக்கவில்லை.

அப்போது அங்கு வந்த கோமளா, ''வாம்மா ஹம்சத்வனி! அம்மாவும் குட்டிப் பையனும் வரலையா?'' வாஞ்சையுடன் வரவேற்றார்.

''இல்லைம்மா! அம்மா எங்கேயும் வாதில்லை!'' மெதுவாக பதிலிறுத்தாள் அவள்.

உடனே அஷ்வந்த்திடம் திரும்பியவர், ''அஷ்வந்த்! இவங்க என்னை ஒரு நாள் கோவில்லே காப்பாத்தினாங்களே ஹம்சத்வனி... உனக்கு ஞாபகம் இருக்கா?'' ஆவலுடன் அறிமுகப்படுத்தினார்.

அவன் உணர்ச்சியின்றி அவளையே கூர்ந்திருக்க, உடனே இடையிட்டாள் சில்வியா.

''ஆன்ட்டி! அஷ்வந்த்கிட்டே போய் த்வனியை அறிமுகப்படுத்தறீங்க? அவங்க நம்ம மாமாவோட கம்பெனிலதான் வேலை பாக்கறாங்க... உங்க பையன் தான் இவங்களுக்கு பாஸ்!''

உற்சாகத்துடன் போட்டு உடைத்து விட்டாள்.

வியப்பும், யோசனையுமாய், அவர் மகளை நோக்க, அஷ்வந்த்தின் முகம் உடனே கருத்தது.

''என்னப்பா? சில்வியா சொல்றது உண்மையா? அவ்னிக்கு நீ சொல்லவே இல்லை?'' ஆதங்கத்துடன் கேட்டார் கோமளா.

''ம்... மறந்திருப்பேம்மா! ரொம்ப முக்கியமானவங்களா இருந்தா சொல்லியிருக்க மாட்டேன்?''

உலர்ந்த குரலில் கூறிவிட்டு வேகமாக எழுந்து உள்ளே சென்றான் அவன்.

அவனையே ஆராய்ச்சியுடன் தொடர்ந்த சில்வியாவின் விழிகள், உடனே திரும்பி த்வனியிடம் நிலைத்தன.

அவள் முகமும் வெளிறி சோர்ந்திருப்பதைப் பார்த்த போது, இருவருக்குள்ளும் ஏதோ ஒரு ப்ரச்னை இருப்பது போல் தோன்றியது.

உடனே அவளை அழைத்துக் கொண்டு சில்வியா உள்ளே செல்ல யோசனையுடன் பின் தொடர்ந்தார் கோமளா.

ஆனால் பூஜை முடியும்வரை த்வனியால் அவனைப் பார்க்கவே முடியவில்லை.

பிறகு அனைவரும் சாப்பிடும்போதுதான், அவன் சில உறவினர்களுடன் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித் தாள் அவள்.

அவனுடைய முகத்தையே ஆவலுடன் நோக்கியவளை, இரு விழிகள் ஆராய்ச்சியுடன் கவனித்தன.

அந்த நிமிடம் எதேச்சையாகத் திரும்பியவனின் பார்வை, அவள் மீது பதிய, தீவிர யோசனையுடன் அவன் புருவங்கள் நெறிந்தன.



சாப்பிட்டு முடித்த பிறகு, சிலர் விடைபெற்றுச் செல்ல, சில்வியா அவளைத் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றாள்.

''த்வனி...! நான் யாரோடயும் சட்டுன்னு பழக மாட்டேன்... பழகினவங்களை விடவும் முடியாது!

''என்னவோ தெரியலை! உங்களைப் பாத்தவுடனே ரொம்ப நாள் பழகின மாதிரி ஒரு ஃபீலிங்... அதான் என்னைப் பத்தி உடனே சொல்லிட்டேன்!

''அவினாஷ் கேட்டப்ப கூட எனக்காக கையெழுத்துப் போட ஒரு ஃப்ரெண்ட் இருக்கறதா தைரியமா சொல்ல முடிஞ்சது!''

படபடவெனத் தன் உள்ளத்தில் இருந்ததை மறைக்காது கொட்டினாள்.

''தேங்க் யூ சில்வியா! என்னை நம்பி உங்க பர்ஸனல் மேட்டரைப் பகிர்ந்துக் கிட்டதுக்கு!''

த்வனி மெல்லிய குரலில் கூறினாள்.

''ம்... ஆனா, நீங்க தான் உங்களைப் பத்தி எதுவுமே சொல்ல மாட்டேன்றீங்க! இருங்க... நானே கண்டு பிடிக்கறேன்!''

''ஹூம்! நீங்க கண்டு பிடிக்கற அளவு என்கிட்டே எதுவுமே ரகசியமில்லை!'' விழிகளைத் தழைத்தபடிக் கூறினாள் அவள்.

''எனக்கு ஒரு சந்தேகம் த்வனி! உங்களுக்கும் அஷ்வந்த்துக்கும் ஏதாவது ப்ரச்னையா?''

அவள் கேட்டவுடன் த்வனி விதிர்த்துப் போய் நிமிர ''ஓ! தப்பா நினைக்காதீங்க! ஒரு பாஸ்... எம்ப்ளாயிங்கிற

சாதாரண அர்த்தத்துல தான் கேட்டேன்'' அவசரமாக முடித்தாள்.

''அப்படி எல்லாம் எதுவும் இல்லை சில்வியா'' என்ற வள், அதன் பிறகு எதுவும் பேசாமல் டெசர்ட்டை சாப்பிட ஆரம்பித்தாள்.

* * *

இருவரும் மௌனமாக ஐஸ்கிரீமை சுவைத்துக் கொண்டிருந்தபோதுதான், அந்தக் கேள்வியைக் கேட்டு, த்வனியை அதிர வைத்தாள் சில்வியா!

''ஏன் த்வனி? உங்க ஹஸ்பெண்ட் எங்கே வேலை பாக்கறாரு? நாங்க அன்னிக்கு வீட்டுக்கு வந்தப்ப கூட அவரைப் பாக்க முடியலையே?'' இயல்பாகக் கேட்டாள்.

உடனே, உதடுகள் உலர்ந்து நெஞ்சக் குழியே காய்ந்து போய், ஒரு விதிர்ப்பு வந்தது த்வனியிடம்!

அவளுடைய கேள்வியே புரியாதது போல் திகைத்து விழித்தவளையே பார்த்திருந்த சில்வியாவிற்குள், பல யோசனைகள்!

''என்னங்க... பதிலே சொல்ல மாட்டேன்றீங்க... சாரி... நான் தப்பாக் கேட்டுட்டேனா?''

''ம்... இல்லை... அவர் இப்ப என்கூட இல்லை!'' தயங்கியபடி நிறுத்தினாள்.

''ஓ! சாரி... நான் இதை சத்தியமா எதிர்பார்க்கலை! இவ்வளவு அழகா தேவதை மாதிரி ஒரு மனைவியை... கூடவே க்யூட்டா ஒரு குழந்தையையும் விட்டுட்டுப் போக அவருக்கு எப்படி மனசு வந்தது?'' அதிர்ச்சியுடன் கேட்டாள்.



அதே நிமிடம் பின்புறமிருந்து ஒரு குரல் இடை மிட்டது.

''சில்வியா! அம்மா உன்னைத் தேடிட்டிருந்தாங்க... ஹம்சத்வனி கூட அஃபிஷியலா கொஞ்சம் பேசணும்...''

'நீ போகலாம்' என்ற இறுகிய தோரணை தெரிந்தது அவனிடம்!

மெல்ல எழுந்து, திரும்பிப் பார்த்தபடியே சில்வியா உள்ளே செல்ல, இடியாய் முழங்க ஆரம்பித்தான் அவன்.

''ஏய்... நீ உன் மனசுல என்ன நினைச்சுட்டிருக்கே? ஆஃபீஸிலே தான் உன் தொந்தரவு தாங்கலைன்னா இங்கேயுமா? என்னை நிம்மதியாவே இருக்க விட மாட்டியா? ஏன் இங்கே வந்தே?''

ஹம்சத்வனி... இந்தக் கோபத்தை சத்தியமாக எதிர் பார்க்கவில்லை... ஆனால் என்ன செய்வதென்றும் தெரியவில்லை!

ஆனால், அவளுடைய தன்மானத்திற்குப் பெரும் அடி விழுந்தது போல்!

''நான்... அம்மா கூப்பிட்டாங்க...! அதான் வந்தேன்...''

தர்ம சங்கடத்துடன் நெஞ்சம் கலங்கி நிறுத்தினாள்.

''அம்மா கூப்பிட்டா உடனே வந்துடுவியா? இந்த அப்பாவித் தோற்றம், நடிப்பு எல்லாம் ரொம்பப் பிர மாதம்தான்... அதையெல்லாம் எங்கம்மா மாதிரி வெகு ளிங்க தான் நல்லா நம்புவாங்க!

''ஆனா உன்னோட கேவலமான லீலைகள், பிரதாபங் களை ஏற்கனவே தெரிஞ்சிக்கிட்டவன்கிறதாலே, என்னை ஏமாத்த முடியாது!

''உன்னைப் பாத்தாலே அருவெறுப்புதான் அதிக மாகுது! இங்கே இருக்கப் போற கொஞ்ச நேரமும் உக வாலைச் சுருட்டி வச்சுக்க... உன் திமிரடி வேலைய எல்லாம் இங்கே காட்டினா ஒட்ட நறுக்கிடுவேன்..!

''ஏன், உன் ஹஸ்பண்ட் உன்னை விட்டுட்டுப் போனாருன்னு இப்பதானே புரியுது... பாவம் அந்த அப்பாவி!

''இவ்வளவு அழகான ஒருத்தி. விஷம் மாதிரி குண முள்ளவளா இருந்தா, அவர் என்ன பண்ணுவாரு பாவம்..!''

அவன் முடிப்பதற்குள் அவளுக்குள் கோபம் பீறிட்டெழ, ''மைண்ட் யுவர் வேர்ட்ஸ் ப்ரஜு... திஸ் இஸ் தி லிமிட்...'' சட்டென்று கத்தி விட்டாள்.

''என்னடி! ப்ரஜு... ப்ரஜுன்னு! அது உன் புருஷனோட பெயரா? அவன் விட்டுட்டுப் போயிட்டா, எல்லாரை யுமே அப்படித்தான் கூப்பிடுவியா? இவ்வளவு கேடு கெட்ட ஒருத்தியை இதுவரைக்கும் நான் சந்திச்சதே யில்லை.''

வார்த்தைக் கற்கள் குறிபார்த்து எறியப்பட்டன.

திராவகத்தை யாரோ எடுத்து முகத்தில் வீசியதைப் போன்ற உணர்வுடன் பதறித் துடித்தவள், அடுத்த வார்த்தை கூறுவதற்குள், அங்கு வந்து விட்டாள் சில்வியா!

''அஷ்வந்த்! மாமா உங்களைக் கூப்பிட்டாங்க!... சில கெஸ்ட்ஸ் கிளம்பறாங்க'' தயக்கத்துடன் அழைத்தாள்.

''ஹூம்... சே!'' என்றபடி அவன் உள்ளே செல்ல விழிகளில் நீர்த் தாரைகள் வழிய, மறுகணமே அங்கிருந்து வேகமாக வெளியேறினாள் ஹம்சத்வனி!



சில்வியாவிற்குத்தான், ஒரு கணம் ஒன்றுமே புரிய வில்லை.

''ப்ரஜு'' என்று ஹம்சத்வனி கத்தும்போதே அவன் வந்து விட்டாள்.

அவள் ஏன், தன் குழந்தையின் பெயரால் அஷ்வந்த்தை அழைக்க வேண்டுமென்ற வியப்பு, அவளிடம்!

தீவிர யோசனையுடன் உள்ளே வந்தவளை கோமளா தான் விசாரித்தார்... ''எங்கேம்மா ஹம்சத்வனி? தாம்பூலம் தாரணும்... கூப்பிடறியா?'' என்றார் ஆவலுடன்.

''இல்லை ஆன்ட்டி! அவங்க கிளம்பிட்டாங்க... அவசரமா ஏதோ போன் வந்தது.. அதான்..'' தர்ம சங்கடத்துடன் கூறினாள் அவள்.

''அப்படியா? நாளைக்கு நாம ரெண்டு பேருமா எடுத்துட்டுப் போயி குடுத்திட்டு வந்திடலாம்... சமங் கலிப் பொண்ணுக்கு தாம்பூலம் தராம அனுப்பக் கூடாது...'' என்றபடி அவளுடன் உள்ளே சென்றார்.

## 31

அன்று வீட்டிற்குச் சென்ற ஹம்சத்வனிக்கோ, உள் ளமும் உடலும் பதறித் துடிக்க, ஏன் உயிர் வாழ்கிறோ மென்ற பெரும் விரக்தி உணர்வு!

முகம் சிவந்து கண்கள் கலங்கி, பதட்டத்துடன் வந்தவளைப் பார்த்து ருக்மணிக்கோ, தாங்க முடிய வில்லை.

இந்தப் பெண்ணுக்கு என்னாயிற்று... ஏன் இப்படிப் பேயறைந்தவளைப் போல் வருகிறாளென்ற யோசனையுடன், அவளை விசாரிக்க முற்பட்டார்.

''என்னம்மா த்வனி! பூஜை நல்லா நடந்ததா? ஏன் இப்படி வந்திருக்கே?''

அவர் கேட்டவுடன் தாங்க முடியாமல் பொங்கி வெடித்தாள் அவள்.

''அம்மா.. ப்ளீஸ் என்னை எதுவுமே கேக்காதீங்க! நான் கொஞ்ச நேரம் தனியா இருக்கணும்'' என்றபடி வேகமாகத் தன் அறைக்குள் சென்று கதவை சாத்திக் கொண்டாள் அவள்.

உடனே உடைந்து போனது. அந்தத் தாயுள்ளம்!

'கடவுளே! ஏன் எங்களை இப்படி வதைக்கிறாய்' என்று இரத்தக் கண்ணீர் வடிக்க ஆரம்பித்தது.

அவளுக்குள் மௌனக் கவிதையின் சோக மலர்வு!

என்
இதயமே!
என்
உறக்கம் நிறைந்த
கனவுகளில் நீ!
என்
நித்திரை தொலைத்த
நினைவுகளிலும் நீ!
உன்
நிஜத்தை விட..
நிழலான நினைவுகள்



என்னை பாதித்ததே
நிஜம்!
நான்
விழித்துக் கடந்த பாதையில்...
உனைத் தொலைத்து
நின்றதும் நிஜம்!
என்
கனவுகள்
கானல் நீராய்..!
உன்
காதல் தேசத்தில்
நேசத்திற்குப் பஞ்சமா?
என்னை
உனக்குள் சுமந்து...
இத்தனை நாட்களாக
எங்கு சென்றிருந்தாய்?
இன்று..
உனக்குள்ளிருக்கும்
என்னை...
ஏன்
உணர மறுக்கிறாய்?
மனம் கதறித் துடித்தது!

* * *

அன்று இரவு முழுவதும் கண்ணீரில் கரைந்தவளுக்கு, மறுநாளே காய்ச்சல் வந்து விட்டது.

அன்று, அலுவலகத்திற்கு விடுப்பு எடுத்துக் கொண்டு படுத்திருந்தாள் அவள்.

ப்ரஜன், 'அம்மா... அம்மா'வென்று அன்று முழுவதும் அவளையே சுற்றிக் கொண்டிருந்தான்.

ருக்மணிதான், மௌனமாக மறுகியபடி சமைத்துக் கொண்டிருந்தார்.

அப்போது வாசலில் அழைப்பு மணி ஒலிக்க, கதவைத் திறந்தால் சில்வியாதான் நின்றிருந்தாள்.

''வாம்மா! உக்காரு... த்வனிக்குத்தான் உடம்பு சரி யில்லை... ஒரே காய்ச்சல்! இன்னிக்கு ஆபீசுக்குக் கூட போகலை... படுத்திருக்கா!''

அவர் கூறும்போதே, ஏதோ பேச்சுக்குரல் கேட்டு வெளியே வந்தாள் த்வனி.

ஒரே நாளில், பெரிதும் ஓய்ந்திருந்தவளையே கூர்ந்து கவனித்த சில்வியாவின் மனதில், பெரும் ஆராய்ச்சி!

''என்னாச்சு த்வனி? இப்படி டயர்டா இருக்கீங்க. திடீர்னு என்ன ஃபீவர்?'' கவலையுடன் கேட்டாள்.

''தெரியலை சில்வியா... கொஞ்சம் கோல்ட்... அதான் நாளைக்கு சரியாயிடும்! உக்காருங்க...''

கூறிவிட்டு சிறு சோர்வுடன் தானும் அமர்ந்தாள் அவள்.

தன்னைக் கண்டவுடன் ஓடிவந்து மடியில் ஏறிய ப்ரஜனைத் தாவி அணைத்த சில்வியாவிற்குள், பெரும் குழப்பமும் விடை தெரியாக் கேள்விகளும்!

''நேத்து நீங்க தாம்பூலமே வாங்கிக்காம கிளம்பி வந்திட்டீங்களா? அத்தை ரொம்ப வருத்தப்பட்டாங்க. என்கிட்டக் குடுத்தனுப்பினாங்க!'' என்றபடி, தான் எடுத்து வந்திருந்த பையைக் கொடுத்தாள்.



''ஓ! சாரி... மறந்திட்டேன்...'' என்றபடி அதை வாங்கித் தன் தாயிடம் அளித்தாள் த்வனி.

''இந்தப் பொண்ணுக்கு நேத்து என்னம்மா ஆச்சு... வரும் போதே ஒரே...''

அவர் முடிப்பதற்குள் த்வனியின் ''அம்மா!''வென்ற கோபக் குரல் அவரைத் தடுத்தது.

உடனே அவளுடைய சொல்லுக்குக் கட்டுப்பட்டு, பையை எடுத்துக் கொண்டு அவர் உள்ளே செல்ல, சில்வியாவிடம் திரும்பினாள் அவள்.

''அப்புறம்... சில்வியா! என்னிக்கு உங்க ரிஜிஸ்டர்ட் மேரேஜ்?'' ஆர்வத்துடன் விசாரித்தாள்.

''ம்! நாளைக்கு மறுநாள் காலையிலே! உங்களாலே வர முடியுமா த்வனி? இல்லைன்னா, நான் அவினாஷோட ஃப்ரண்டையே வரச் சொல்லிடறேன்'' யோசனையுடன் கேட்டாள் சில்வியா.

''அதெல்லாம் ஒண்ணும் ப்ராப்ளம் இல்லை... நாளைக்கு ஆபீஸுக்குப் போயிடுவேன்... மறுநாள் காலையிலே கொஞ்சம் பர்மிஷன் போட்டாப் போச்சு!''

''அப்ப சரி! நான் கிளம்பறேன் த்வனி... டேக் கேர்... படுத்து ரெஸ்ட் எடுங்க'' என்றவள் உடனே கிளம்பி விட்டாள்.

நெஞ்சம் முழுவதும், ஏனோ த்வனியையும் அஷ்வந்த்தையுமே சுற்றிச் சுற்றி வந்தது.

இருவருக்கிடையேயும், ஏதோ ஒரு இனம் புரியாத ப்ரச்னை இருப்பதை உணர்ந்தவளால், அதற்கு மேல் எதையுமே சரியாக கணிக்க முடியவில்லை.

* * *

மறுநாள் த்வனி வேலைக்குச் சென்றபோது, அஷ்வந்த் அவள் முகத்தையே ஒரு கணம் அதிகமாகக் கூர்ந்தாலும், வேண்டுமென்றே கண்டு கொள்ளவில்லை.

அவளும் ஒரு நடைப் பிணமாகவே உயிர்ப்பின்றி வேலை செய்து முடித்துவிட்டு வீட்டிற்குக் கிளம்பினாள்.

அன்றிரவே போன் செய்து, மறுநாள் காலையில் எட்டு மணிக்கே அவள் ரிஜிஸ்ட்ரார் அலுவலகத்தில் இருக்க வேண்டுமென்பதை நினைவு படுத்தினாள் சில்வியா.

அடுத்த நாள் காலையில் அவள் அங்கு சென்றபோது, மணக் கோலத்துடன் நான்கு நண்பர்கள் புடை சூழ இருவரும் தயாராகக் காத்திருந்தனர்.

பிறகு மாலை மாற்றி திருமணம் இனிதே முடிய, சாட்சிக் கையெழுத்து போட்டுவிட்டுக் கிளம்பியவளை, சில்வியா விடவில்லை.

"த்வனி! எனக்காக இன்னொரு உதவியும் செய்யணும். அப்படியே கோவிலுக்குப் போய் தாலியும் கட்டிடணும் கிறது அவினாஷோட ஆசை!

"அவரோட ஃப்ரெண்ட்ஸ் அதுக்கு எல்லா ஏற்பாடும் செஞ்சிட்டாங்க... ஒரு செயின்லேயே தாலியும் கோர்த்து தயாரா இருக்கு... எனக்காக நீங்க கோவிலுக்கும் வரணும்."

மெல்லிய குரலில் கோரினாள்.

ஏனோ அவளால் மறுக்க இயலாது போக, அவளும் கோவிலுக்குச் சென்றாள்.

சாஸ்திர சம்பிரதாயங்களுடன் அந்தத் திருமணமும் நிகழ்ந்துவிட, ஹோட்டலுக்குச் சென்று டிபன் சாப்பிட்டு விட்டுத்தான் அவளை அனுப்பினாள் சில்வியா.



திருமணமென்பதால் அழகிய காட்டன் புடவை அணிந்து அவள் தாமதமாக அலுவலகத்திற்கு வந்தபோது, அஷ்வந்திடமிருந்து உடனே அழைப்பு வந்தது.

அவனுடைய அறைக்குச் சென்றபோது, சற்று வெளிறிய முகத்துடன் மணப் பெண் போல வந்தவளையே, அவன் விழிகள் ஆராய்ச்சி நோக்கோடு ஊடுருவின.

"என்ன? நேத்து லீவு போலருக்கு... பரணி போன வுடனே புதுசா ஆள் பிடிச்சாச்சா! ஒரே ஊர் சுத்தல்... கொண்டாட்டம்தானா? பாத்தா ஆபீஸுக்கு வர மாதிரித் தெரியலையே!"

வார்த்தைகளில் ஊசியைச் செருகினான்.

அதுவரை தைரியத்துடனிருந்த மனம் ஒரேயடியாக ஒய்ந்து போனது.

"ப்ளீஸ் சார்... வேலை விஷயமா ஏதாவது பேசறதா இருந்தா சொல்லுங்க... நான் இருக்கேன்... இல்லைன்னா நான் போறேன்..." சலிப்புடன் முடித்தாள்.

உடனே ஏளனப் பார்வையுடன் நிமிர்ந்தவன். "என்ன... இன்னிக்கு உருகல் நாடகமெல்லாம் ரொம்ப பலமா இருக்கு... நானும் ஒரு முடிவெடுத்திட்டேன்!

"இது மாதிரி கண்டவங்களெல்லாம் சுத்தி சுத்தி வழியறதிலேருந்து தப்பிக்கணும்னா, ஒரே வழிதான் இருக்கு! இன்னிக்கு அப்பாகிட்டே என் முடிவை சொல்லிடப் போறேன்... சில்வியாவை மணக்க சம்மதம்னு!

"அவ உன்னை மாதிரி இல்லை... நான் சொந்த மாமா மகனாவே இருந்தாலும் மரியாதையோட விலகிப் போறவ!"

நக்கலாகக் கூறிக் கொண்டே நிமிர்ந்தவனின் விழிகள், அவள் முகத்தில் நிலை குத்தி நின்றன.

புன்னகை தேசமாய் அவள் முகம் மாறியிருக்க... உடலில் ஒருவித இறுக்கம் வந்திருந்தது.

இன்று காலையில்தானே சில்வியாவிற்குத் திருமணமாயிற்று... அது புரியாமல் இவன் திட்டமிடுகிறானே என்ற நினைவில் அவளறியாமலே மந்தகாசமாய் விரிந்து கேலியுடன் புன்னகைத்தன, அவள் இதழ்கள்!

அவளுடைய வித்தியாசமான முறுவல், எதையோ அவனுக்கு உணர்த்த, ரௌத்ரமாய் எழுந்தான் அவன்.

''ஏய்... என்ன நக்கலா சிரிக்கிறே?''

அவன் கேட்டவுடனே அவள் மிரண்டு போய் திகைத்து விழிக்க, ''இப்படி ஒண்ணும் தெரியாத குழந்தை மாதிரி கண்ணை விரிச்சு அப்படியே அப்பாவி மாதிரி முழிச்சா நீ இதுவரைக்கும் செஞ்ச குற்றங்களுக்கும் உனக்கும் சம்மந்தமேயில்லைன்னு தப்புக் கணக்கு போட்டு நான் ஏமாந்துடுவேன்னு நினைப்பா?

''என் கண்ணாலப் பாத்ததோட, உன்னைப் பத்தி மத்தவங்க சொன்னதையும் நான் கேட்டிருக்கேன்...

''அதையெல்லாம் மறந்திட்டு உன் வெளிக் கவர்ச்சிக்கு மயங்கி அப்படியே தலை சுத்திப் போறதுக்கு நான் பரணி இல்லை!

''இப்படித் தாம் கெட்ட பெண்களையும் பாத்து மயங்கி மனசை தொலைக்கிறாங்களே... அவங்களை என்ன சொல்றது?

''ரங்கராஜைப் பத்தி எங்கப்பாகிட்டே பொய் சொன்ன மாதிரி, என்னைப் பத்தியும் சில்வியாகிட்டே ஏதாவது சதி வேலை செஞ்சிருக்கியா?'' இடியாய் முழங்கினான்.



உடனே அந்த ரங்கராஜின் ஓநாய் இளிப்பு நினைவு வர, துடித்து நிமிர்ந்தாள் அவள்.

முட்கள் தைத்தாற்போல்... அவன் சொற்கள் தைத்த தில் வலி எழுந்தது.

''சே! யார் நல்லவங்க யாரு கெட்டவங்கன்னு உங்களுக்குப் புரியவே புரியாதா சார்? அந்த ரங்கராஜ் நல்லவன்... நானும் பரணியும் கெட்டவங்களா?

''ஹூம்! ஒரு நாள் உங்களுக்கு எல்லா உண்மையும் தெரிய வரும்... அன்னிக்கு வருத்தப்படுவீங்க பாருங்க! ஆனா அப்போ காலம் கடந்திருக்கும்.''

ஒரு வேகத்துடன் கூறிவிட்டு வெளியேறியவள், அதன் பிறகு அவனுடைய அறைப் பக்கமே செல்லவில்லை.

எல்லாவற்றையும் தன்னுடைய அசிஸ்டெண்டிடமே கொடுத்து அனுப்பினாள்.

அவனும் பெருத்த யோசனையிலிருந்ததால், அதைக் கண்டு கொள்ளவில்லை.

அவள் ஏன் அப்படி நக்கலாக மர்மச் சிரிப்பு சிரித்தாள் என்ற கேள்வியே, மனதில் மீண்டும் மீண்டும் அவனுள் வலம் வந்து கொண்டிருந்தது.

## 32

அன்று இரவே, அதற்கு விடையும் கிடைத்தது!

அஷ்வந்த் வீட்டிற்குச் சென்றபோது, ஏதோ ஒருவித அமானுஷ்ய அமைதி அங்கு நிலவியது போல் தோன்றியது.

குளித்து முடித்து டைனிங் டேபிளின் முன்பு அமர்ந்த போது, அனைவரிடமும் ஒருவித இறுக்கம் தெரிவதாய்!

''என்ன... இன்னிக்கு எல்லாரும் ரொம்ப அமைதியா இருக்கீங்க?'' ஆர்வத்துடன் கேட்டான் அவன்.

''ம்... ஒண்ணுமில்லைப்பா! நாம ஒண்ணு நினைக்க, கடவுள் வேற நினைச்சிடுறாரே!'' லிங்கேஸ்வரன் சோர்ந்த குரலில் கூறினார்.

''நீங்க இவ்வளவு சலிச்சிக்கிற அளவுக்கு இப்போ என்னப்பா நடந்தது?''

''இன்னும் என்ன நடக்கணும்? பெரியவங்க நாங்க ஒண்ணை விரும்பினோம்னா, சின்னவங்களுக்கு அதெல்லாம் எதுவுமே புரியறதில்லை! அவங்கவங்க விருப்பம் தானே பெரிசா இருக்கு!''

கலங்கிய கண்களுடன் கோமளா கூற, விருட்டென்று எழுந்து உள்ளே சென்றாள் சில்வியா!

அவள் ஏன் இப்படி நடந்து கொள்கிறாளென்ற கேள்வியுடன் தந்தையிடம் திரும்பினான் அவன்.

''அப்பா! இன்னிக்கு நான் சொல்லப் போற விஷயத்தைக் கேட்டா நீங்க ரெண்டு பேரும் துள்ளிக் குதிக்கப் போறீங்க?'' என்றான் உற்சாகத்துடன்.

''இல்லைப்பா... இன்னிக்கு நீ என்ன சொன்னாலும் எங்களால நீ சொல்ற மாதிரியெல்லாம் நடந்துக்க முடியாது!'' தவிப்புடன் கூறியபடி அவனருகில் வந்து அமர்ந்தார் கோமளா.

''ஊஹூம்! நான் சில்வியாவைக் கல்யாணம் பண்ணிக்க ரெடின்னாக் கூடவா?''



அவன் கூர்மையுடன் கேட்க, ''கடவுளே! வெண்ணெய் திரண்டு வர்ற நேரத்துல தாழி உடைஞ்சிடுச்சின்றது இது தானா?'' என்றபடி முகம் பொத்தி அழ ஆரம்பித்தார் கோமளா.

''என்னம்மா... என்னென்னவோ சொல்றீங்க? அப்படி என்னதான் ஆச்சு?

''உங்களோட விருப்பத்துக்காகவும், வேற சில காரணங்களுக்காகவும்தான் நான் இந்த முடிவுக்கு என் மனதை தயார்படுத்திக்கிட்டேன்!

''காதல் அது இதிலெல்லாம் எனக்கு சத்தியமா நம்பிக்கையில்லை! கல்யாணம் முடிஞ்சப்புறம் அது வந்தாலும், எனக்கு சம்மதம்தான்...''

அவன் கூறியதைக் கேட்டு லிங்கேஷ்வரன் வாயடைத்து அமர்ந்திருக்க, அடுத்திருந்த அறையிலிருந்து இதைக் கேட்ட சில்வியாவிற்கோ பெரும் அதிர்ச்சி!

மறுகணமே நம்ப இயலா வியப்பும் கண்ணீருமாய்த் திரும்பிய கோமளாவிடமிருந்து வெடித்துச் சிதறிய வார்த்தைகள், அவனுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

''அஷ்வந்த்! நீ இந்த வார்த்தைய சொல்ல மாட்டியான்னு இத்தனை நாளா நான் ஏங்கிட்டிருந்தேன்! ஆனா, இப்ப ஏன் சொன்னேன்னு வருத்தமா இருக்கு!

''இன்னிக்குக் காலையிலதான்... சில்வியா தன் மனசுக்குப் பிடிச்சவனை கல்யாணம் பண்ணிக்கிட்டாளாம்!'' இறங்கிய குரலில் முடித்தார்.

சட்டென்று அதிர்ந்தவன், ''யாரைம்மா?'' என்றான் மெதுவாக.

உடனே, லிங்கேஷ்வரன் தொண்டையைக் கனைத்தபடி தர்ம சங்கடத்துடன் ஆரம்பித்தார்.

"சில்வியா... அங்கே யு.எஸ்.ஸிலே ஒரு ஹாஸ்பிடல்லே அட்மினிஸ்ட்ரேஷன் பாத்திட்டிருந்தா இல்லையா... அங்கே ட்ரெயினிங்குக்குப் போன அவினாஷ்ன்ற டாக்டரை அவ விரும்பி இருக்கா!

"வீட்டுக்கு விஷயம் தெரியாது போலிருக்கு! அவரும் ட்ரெயினிங் முடிஞ்சு இந்தியாவுக்குத் திரும்பிட்டாராம்!

"தேவராஜும், தாராவும் வெகேஷனுக்கு அவளை இங்கே போகச் சொல்லி இருந்ததாலே, அந்தப் பையனையும் பாக்கலாமேன்னுதான் முன்னாடியே கிளம்பி வந்திருக்கா...

"அவ, ரிஜிஸ்ட்ரார் ஆஃபீஸிலே நம்ம அட்ரஸைக் குடுத்திருந்ததாலே, அவரு எனக்கு போன் பண்ணி விசாரிச்சாரு! எனக்கு பயங்கர ஷாக்!

"அப்பதான் சில்வியாவும் வந்தா! உடனே விசாரிச்சப்போ உண்மை தெரிஞ்சுது!"

அவர் முடித்தவுடனே, ஏனோ ஹம்சத்வனியின் மர்மச் சிரிப்பும், வேலைக்குத் தாமதமாக வந்ததும், உடனே நினைவடுக்குகளில் ரௌத்ரமாய்ப் பரவின.

இனம் புரியாக் கோபத்துடன் எதிலோ தோற்று விட்டாற் போன்ற ஒரு உணர்வும் கலவையாய் எழ, உடனே சில்வியாவைத் தேடிப் போனான் அவன்.

அவளைக் கண்டதும் பதறி எழுந்தவளையே கூர்ந்தவன், "இது ஹம்சத்வனிக்கு முன்னாடியே தெரியுமா? அவளும் இன்னிக்கு உன் கல்யாணத்துக்கு வந்திருந்தாளா?" இடியாய் முழங்கினான்.



உடனே பயத்துடன் ஆமெனத் தலையசைத்தவள், "சரி! நான்தான் அவங்களை ஒரு ஃப்ரெண்டா இன்வைட் பண்ணியிருந்தேன்! கோவிலுக்கும், ரிஜிஸ்ட்ரார் ஆபீஸுக்கும் அவங்க வந்திருந்தாங்க..." பிசிர் தட்டுகிற குரலில் முடித்தாள்.

தான் சில்வியாவை மணக்க சம்மதிக்கப் போகிறேன் என்றதுமே, அவள் முகத்தில் படர்ந்த ஏளனச் சிரிப்பும் மர்ம பாவனையும் இப்போது புரிந்தன.

ஏனோ குற்றம் செய்தவளே அவளென்பதைப் போல் மனம் கோபத்தில் தடுமாற, தன் அறைக்குச் சென்று வேகமாக கதவைச் சாத்திக் கொண்டான் அவன்.

மனம் முழுவதும் எரிமலையாய்க் குமுற, ஏனோ அவளைப் பழி வாங்க வேண்டும் போல்!

சில்வியாவின் மீது வரவேண்டிய கோபம் முழுவதும் திசை மாறி ஹம்சத்வனியிடம் பாய, அன்றிரவு அவனுக்குள் பரவிய தகிப்பும், அவனை சரியாகவே உறங்க விடாமல் செய்தன.

* * *

மறுநாள் விடிகாலையிலேயே செல் உசுப்பி எழுப்ப, சோம்பலுடன் அதை எடுத்தாள் ஹம்சத்வனி.

அதில் சில்வியா கூறிய செய்திகள், அவளுக்குள் இடியாய் இறங்கின.

அவள் நூறு முறை மன்னிப்பு கேட்டு வைத்துவிட, இன்று தனக்கு என்ன மண்டகப்படி காத்திருக்கிறதோவென்ற தவிப்புடன் அலுவலகம் சென்றாள் த்வனி!

அவள் சென்றவுடனே, அவனிடமிருந்து அழைப்பு வந்தது.

சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திக்கப் போகும் உணர்வுடன், தன்னைத் தைரியப்படுத்தியபடி உள்ளே சென்றாள் அவள்.

உள்ளே நுழைந்ததிலிருந்து அலுவலக விஷயமாகவே பேசியவனின் விழிகள், இடுங்கிச் சிவந்திருந்தன.

எல்லாம் முடிந்து திரும்பும்போது, ''ஒரு நிமிஷம்!'' என்று அவளை நிறுத்தினான்.

அவள் பயத்துடன் திரும்ப, ''என்ன... மேரேஜ் புரோக்கர் வேலையெல்லாம் கூடச் செய்யறே போலருக்கு! பைசா செலவில்லாம சில்வியா கல்யாணம் முடியத் துணையிருந்ததுக்கு தேங்க்ஸ்!'' என்றான் உதடுகளால் மட்டும் புன்னகைத்தபடி!

''சார்! நான்... எனக்கு...''

அவள் தொடரும் முன்பே கை உயர்த்தியவன், ''போதும்! நீ போகலாம்'' என்றான் இறுகிய குரலில்!

மெதுவாக வெளியேறியவளின் இதயம், வெளியே வந்து விழுந்து விடும்போல் துடிக்க ஆரம்பித்தது.

ஆனால், பெரும் அர்ச்சனையை எதிர்பார்த்திருந்தவளை, அவனது அமர்ந்த பேச்சு, பெரும் வியப்புக்குள்ளாக்குவதாய்!

தனக்குள் மூழ்கி அவள் நடந்தபோதுதான், செல்லில் மீண்டும் அவளை அழைத்தாள் சில்வியா!

''என்னாச்சு த்வனி! ஒண்ணும் ப்ரச்சனையில்லையே? உங்க மேல அஷ்வந்த் ரொம்பக் கோபமா இருக்கற மாதிரித் தெரிஞ்சுது! பயமாயிடுச்சி... அதான் இப்ப கால் பண்ணினேன்!'' கவலையுடன் கேட்டாள்.



''தெரியலை! நான் எதிர்பார்த்த அளவு இல்லை. வீட்டில ரொம்ப ப்ரச்சனையா?''

''ஆமாம்! நைட்டே மாமா அப்பாவுக்கு சொல்லிட்டாங்க... ரெண்டு பேரும் இன்னிக்கு நைட் ஃப்ளைட்டில் திரும்பி நாளைக்கு வராங்க!

''பயமாயிருக்கு! ஆனா அவினாஷ் துணையாயிருப்பாரு! பாவம்... அப்பா அம்மாவுக்கு தான் இது பெரிய ஷாக்.''

''ம்... வேற ஏதாவது விஷயமிருந்தா அப்புறம் போன் பண்ணுங்க சில்வியா... பை!'' என்றபடி தொடர்பைத் துண்டித்தாள் அவள்.

மனம் பெரும் ஆயாசமாகி விட, வேலையைத் தொடர்ந்தவளுக்குள், சிறு வியப்பும், அஷ்வந்த்தின் வித்தியாசமான நடத்தை பற்றிய ஆராய்ச்சியும் சூழ்ந்தன.

அன்று முழுவதும், அவன் வேறு எதற்காகவும் அழைக்காமல் போக, அப்பாடி என்றிருந்தது அவளுக்கு!

காதலித்த மனம் ஆறுதல் தேடி அலையும் போது, அந்த நேசமே ஆதாரமாவது புரிந்தது.

## 33

மறுநாள் முழுவதும் அவன் பாராமுகமாகவே இருக்க, த்வனிதான் அவனுடைய மனப் போக்கை அறிய முடியாமல் பெரிதும் தவித்துப் போனாள்.

அன்றிரவே வெளிநாட்டிலிருந்து வந்த தேவராஜும், தாராவும் கொதித்துப் போயிருந்தனர்.

தன் மகளை கோபத்துடன் கண்டித்து அடிக்கப் போன தாராவை, லிங்கேஷ்வரன் தான் சமாதானப்படுத்தும்படி ஆயிற்று.

இரவு முழுவதும் பேசி ஒரு முடிவுக்கு அனைவரும் வந்தபோது, விடிய ஆரம்பித்திருந்தது.

மறுவாரமே எளிமையான முறையில் ஒரு ரிசப்ஷன் நடத்தவும், அவினாஷின் பெற்றோர்களை சந்தித்து சமாதானப்படுத்தவும், பெரியவர்கள் கூடி முடிவு செய்தனர்.

அன்று சனிக்கிழமை என்பதால், காலையில் எழுந்து தலை குளித்துக் காய வைத்தபடி அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்தாள், ஹம்சத்வனி..

அப்போது போன் ஒலிக்க, எடுத்தால், சில்வியாதான் பேசினாள்.

"த்வனி! ஒரு குட் நியூஸ்... ஒரு வழியா அம்மா அப்பா ஒத்துக்கிட்டாங்க! அடுத்த வாரமே ஒரு ரிசப்ஷனுக்கு ஏற்பாடு பண்ணிடலாம்னு சொல்லிட்டாங்க... இப்பகூட அவினாஷோட வீட்டுக்குப் போயி பேசறதுக்காகத்தான் மாமா அத்தையோட போயிருக்காங்க!"

உற்சாகத்துடன் ஆர்ப்பரித்தவளை மனதார வாழ்த்தி விட்டு வைத்தாள் அவள்.

உள்ளத்திற்குள், உடனே அஷ்வந்த்தைப் பற்றிய எண்ணங்கள் ஜனித்தன.

அவனுக்கு இந்த செய்தி எவ்வளவு பெரிய அதிர்ச்சியாக இருந்திருக்குமென்று எண்ணும்போதே, இதழ்களில் சிறு வருத்தம் பரவியது.

ஆனால், இப்படித்தானே உன் புறக்கணிப்பினால் நானும் துவண்டு போயிருப்பேன் என்று விரக்தியுடன்



எண்ணியபோதும், ஏனோ அவன் மேல் பரிதாபமே வருவதாய்!

தன்னால் அவனை எந்தக் காலத்திலும் எதற்காகவும் வெறுக்க முடியாதென்பதும் புரிந்தது.

அவன் மேல் கொண்ட காதல் அவளைப் புரட்டிப் போடுவதாய்!

அந்த வாரம் முழுவதும், தான் விடுமுறை எடுத்திருப்பது அப்போதுதான் நினைவு வந்தது.

கண் தெரியாத மாணவர்களுக்காக பரீட்சை எழுத உதவுவது, எப்போதுமே அவளது வழக்கம்!

இந்த முறையும் அதற்காகத்தான் விடுப்பு எடுத்திருந்தாள். பல வருடங்களாகவே அவள் ஒரு ஸ்கிரைபாக உதவி செய்து வருகிறாள்.

* * *

த்வனி, திங்கட்கிழமை அன்று காலையில் தன்னுடைய ஹோண்டாவில் சென்று அந்தக் கல்லூரியை அடைந்தாள்.

பரீட்சை எழுதியபோது, அந்தப் பார்வையில்லாத இளம் பிஞ்சுகளைப் பார்த்ததுமே, மனம் கனத்துப் போனது.

வேறு எந்த ஊனமும், அவளை இந்த அளவு பாதித்ததில்லை.

ஆனால், விழிகளின் ஒளி இல்லாது தன்னைச் சுற்றி என்ன நடக்கிறதென்றே அறிய முடியாத அந்த இருட்டு உலகத்திற்குள் வாழ்பவர்களைக் கண்டாலே, இதயம் கசிந்து விடும்.

அவர்களுக்குத் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டுமென்ற ஏக்கமும் ஆவலும், அவளை எப்போதுமே ஆக்கிரமிக்கும்!

இன்றும் அதுபோல் எழுதிவிட்டு, எடையற்று லேசான நெஞ்சத்துடன் வீட்டிற்குக் கிளம்பினாள்.

இதயச் சுவரில் உயிரோவியமாய் ப்ரஜனின் நினைவுகள்!

அன்று காலையில் த்வனி கிளம்பிய உடனே அவளைத் தேடி வீட்டிற்கே வந்துவிட்டாள் சில்வியா.

மறுவாரம் முழுவதும் அவள் விடுமுறை என்று, நேற்று கூறியிருந்தாள்.

ஏனோ தனியே மனம் விட்டு அவளிடம் பேசி, தன் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று சில்வியாவிற்குத் தோன்ற, உடனே தாமதிக்காமல் கிளம்பி விட்டாள்.

ஆனால், அவள் மதியம்தான் வருவாளென்று ருக்மணி கூறியதுமே ஓய்ந்து போய் அமர்ந்தவள், ப்ரஜனுடன் விளையாட ஆரம்பித்தாள்.

திடீரென்றுதான் தோன்றியது... த்வனி சொல்ல மறுக்கின்ற அவளின் வாழ்க்கையைப் பற்றி ருக்மணியிடம் கேட்க வேண்டுமென்று!

மெதுவாக ஆரம்பித்தாள் சில்வியா...

"ஏம்மா! த்வனியோட ஹஸ்பெண்ட் ஏம்மா அவளை விட்டுப் பிரிஞ்சு போனாரு? இவ்வளவு அழகான அன்பான மனைவி, அற்புதமான குழந்தை, ரெண்டையும் பிரிய அவருக்கு எப்படி மனசு வந்தது?" ஆதங்கத்துடன் கேட்டாள்.



சட்டென்று ஒருவித இருள் சூழ்ந்தது, அவருடைய முகத்தில்!

"உனக்கு எதுவுமே தெரியாதாம்மா? த்வனி தன்னைப் பத்தி எதுவுமே சொல்லலையா?" அவர் கலங்கிய விழிகளுடன் கேட்டார்.

"இல்லைம்மா! ப்ரஜனோட அப்பா இப்ப அவங்களோட இல்லைன்னு மட்டும் தான் சொன்னாங்க! வேறே ஒண்ணும் எனக்குத் தெரியாது."

"ஹூம்... அது பொய்! ப்ரஜன் அவளுக்குப் பிறந்த குழந்தையுமில்லை... அவளுக்கு இன்னும் கல்யாணம் ஆகவுமில்லை!"

அவர் முடித்ததும், புயலடித்து ஓய்ந்த அமைதியும், அதன் பாதிப்பும் சில்வியாவின் முகத்தில் தெரிந்தன.

மனதிற்குள் சோக மழை அருவியாய் பொழிய ஆரம்பித்தது.

"அம்மா! அப்படின்னா இந்தக் குழந்தை..?"

அவள் தவிப்புடன் கேட்க, தயக்கத்துடன் த்வனியைப் பற்றிக் கூறத் தொடங்கினார் ருக்மணி.

த்வனி சிங்கப்பூர் சென்றது... அங்கு ப்ரஜனை சந்தித்து காதல் கொண்டது... அதற்கு அவனுடைய அம்மா நளினி சம்மதித்தது... ஆறு மாதங்களுக்குப் பிறகு இருவருமாக இந்தியா வந்தது... தந்தையிடமும், தன்னிடமும் காதலைக் கூறியது... அவர்கள் ஏற்க மறுத்தது... பிறகு அவனுடன் வந்த பால்ய நண்பர் மூலம் விபரமறிந்து ஒத்துக் கொண்டது... திருமண ஏற்பாடு... என்று எல்லாவற்றையும் கூறியவர் மேலே பேச முடியாது, முந்தானையால் வாயைப் பொத்தி விம்ம ஆரம்பித்தார்.

உடனே பதறிப் போனவள் அவரை சமாதானப்படுத்த, குட்டிப் ப்ரஜனும் விபரம் புரியாது கூடவே அழ ஆரம்பித்தான்.

இருவரையும் அமைதிப் படுத்தியவளுக்கு, அதற்கு மேல் அவரிடம் எப்படிக் கேட்பதென்று புரியவில்லை.

பிறகு என்னாயிற்றென்ற கூரிய எதிர்பார்ப்பும், அறிந்து கொள்ளும் ஆர்வமும் அவளை வதைத்தன.

த்வனிக்கும், ப்ரஜனுக்கும் ஏன் திருமணம் நடக்கவில்லை... அவள் ஏன் அஷ்வந்த்தை 'ப்ரஜு' என்று அழைத்தாள்... சரம் சரமாய் பல கேள்விகள் மனதில்!

வெகுவாக உடைந்து போய் அமர்ந்திருந்தவரை, அதற்கும் மேல் தொந்தரவு செய்ய மனமின்றி அவள் எழுந்தபோதுதான், அழைப்பு மணி ஒலித்தது.

வேகமாகச் சென்று அவள் கதவைத் திறந்தபோது, அங்கு சிறு முறுவலுடன் நின்றிருந்தாள் ஹம்சத்வனி!

"ஹாய் சில்வியா? எப்ப வந்தீங்க?"

உற்சாகத்துடன் வரவேற்றபடி உள்ளே நுழைந்தவளுக்கு, அங்கிருந்த சூழ்நிலையே அசாதாரணமாய்!

அழுதழுது சிவந்த முகத்துடன் ருக்மணியையும், புது மணப் பெண்ணுக்கே உரிய மலர்ச்சியைத் தொலைத்து சோகத்துடன் நின்ற சில்வியாவையும் பார்த்தபோது ஏதோ புரிவது போல்!

"அம்மா என்னாச்சு?" கூர்மையுடன் வினவினாள்.

அவர் பேசுவதற்குள், சில்வியாவின் குரல் இடையிட்டது.



"த்வனி... உங்களைப் பத்திதான்... நாங்க இவ்வளவு நேரம் பேசிட்டிருந்தோம்."

தயங்கிய குரலில் அவள் நிறுத்த, ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்தவள், 'ப்ச்' என்றபடி தொப்பென்று சோபாவில் அமர்ந்தாள்.

கன்னங்களில் நீர்க்கறையுடன் ருக்மணியின் மடியில் உறங்கிக் கொண்டிருந்த குட்டி ப்ரஜனையே சிறிது நேரம் நோக்கியவள், சில்வியாவிடம் திரும்பினாள்.

"எல்லாம் கேட்டு முடிச்சாச்சா?" சிறு விரக்தியுடன் வினவினாள்.

"இல்லை! உங்க கல்யாணம் முடிவான வரைக்கும் தான் அம்மா சொன்னாங்க!"

தவிப்புடன் நிறுத்தியவளையே கூர்ந்தவள், "ஹூம்! அப்புறம் என்ன... அந்த டிசம்பர் 24ம் தேதி..." சட்டென்று மேலே பேச முடியாமல் உதடுகள் உலர்ந்து, அவளுக்குள் சிறு நடுக்கம் ஓடியது.

பிறகு சமாளித்து நிமிர்ந்தாள்.

"ஹூம்... எமன் சுனாமியா வந்து, என் ப்ரஜுவை என்கிட்டருந்து பிரிச்சி என் வாழ்க்கையையும் அழிச்சிட்டான்... அவ்வளவுதான்!"

விழிகளில் நீர் திரள, ஓய்ந்து போய்க் கூறிவிட்டு உள்ளே சென்றாள் அவள்.

தளர்ந்த நடையுடன் அவள் செல்வதைப் பார்த்த சில்வியாவிற்கு மனதே தாங்கவில்லை.

"த்வனி! சாரி... உங்க மனசில இருந்த சோகத்தைக் கிளறி விட்டுட்டேன்" என்றபடி அவளைப் பின்

தொடர்ந்து அறைக்குள் வந்தவள், மறுகணமே சிலையாய் உறைந்து நின்று விட்டாள்.

முகம் பேயறைந்தாற்போல் ஆக, எதிரிலிருந்த பெரிய புகைப்படத்தில் குறும்பாக சிரித்துக் கொண்டிருந்தான், அஷ்வந்த்!

மறுகணமே முகம் வெளிறிவிட, ''இது... த்வனி... இந்த போட்டோவில இருக்கறது...?'' முடிக்க முடியாமல் தடுமாறினாள்.

அந்த நிமிடமே விளங்கியது... அன்றொரு நாள் அஷ்வந்த்தை ஏன் ப்ரஜு... என்று த்வனி அழைத்தாள் என்கிற உண்மை!

''ஆமாம்! இதான் என்னோட ப்ரஜன்... ப்ரஜு! இப்ப புரியுதா, நான் ஏன் அஷ்வந்த்தைப் பார்த்தாலே தவிச்சுப் போறேன்னு?''

சில்வியாவிடம் கேட்டுவிட்டு, முகம் மூடிக் குமுறிக் குமுறி அழ ஆரம்பித்தாள் த்வனி.

உடனே அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்து சமாதானப்படுத்தியவளுக்கோ, ப்ரஜனுக்கும் அஷ்வந்த்திற்குமிருந்த உருவ ஒற்றுமை, பெரும் சம்மட்டி அடியாய்!

இது எப்படி சாத்தியம்..? ப்ரஜன் தான் அஷ்வந்த் என்றால், எப்படித் தன் காதலியை அவனால் மறக்க முடியும்... வெறுக்க முடியும்?

குழப்பத்தில் மனம் சிலந்தி வலையாய் பின்ன விட்டது.

'கடவுளே! இந்தப் புதிரை விடுவிக்க மாட்டாயா?' தவிப்புடன் இறைஞ்சியது நெஞ்சம்!



''அப்போ இந்தக் குட்டி ப்ரஜன்?'' மெதுவாக அவள் வினா எழுப்பினாள்.

''என்னோட ப்ரஜுவோட ஞாபகமா நான் தத்தெடுத்து வளக்கிற... என் வயித்துல பிறக்காத... ஆனா எனக்காகவே பிறந்த ஒரு அற்புதக் குழந்தை!'' கூறிவிட்டு விம்மி அழத் துவங்கினாள் த்வனி!

மெதுவாக அவளை சமாதானப்படுத்தியவளுக்குள், பல கேள்விச் சரங்கள்... ஒன்றுக்கொன்று சம்மந்தமில்லாமல், முட்டி மோதி, நீர்க் குமிழிகளாய் உடையத் துவங்கின.

இந்தப் பிரச்னையைப் பற்றி, அஷ்வந்திடம் பேசி ஒரு முடிவு காண வேண்டுமென்ற எண்ணத்தை, உடனே உறுதியாய் செதுக்கியது மனது!

ஆனால், இன்று காலையில்தான் அஷ்வந்த் வேலை விஷயமாக ஆஸ்திரேலியாவிற்குச் சென்றிருந்தான்.

ஒரு வாரம் கழித்து, வரும் ஞாயிறன்றுதான் வருகிறான்.

அன்று மாலையில்தான், அவளுடைய ரிசப்ஷன்!

அவன் திரும்பி வந்ததும் இது பற்றி எப்படியாவது அவனிடம் பேசிவிட வேண்டும் என்று, உறுதியான முடிவெடுத்தாள் சில்வியா.

பிறகு இருவரிடமும் விடைபெற்றுக் கிளம்பியபோது, மனம் பாறையாய் கனத்திருந்தது.

கிளம்பும்போது அவளை நிறுத்திய த்வனி, ''ப்ளீஸ் சில்வியா! இதைப் பத்தி எதுவுமே நீங்க அஷ்வந்த்கிட்டப் பேச வேண்டாம்! இது என் ப்ரச்னை! நான் பாத்துக்கறேன்...

''கல்யாண சந்தோஷத்தை ஜாலியா என்ஜாய் பண்ணுங்க... இந்தத் தேவையில்லாத கவலையை எல்லாம் விட்டுடணும்... சரியா?'' சிறு முறுவலுடன் கோரினாள்.

மறுகணமே தலையசைத்தவளுக்குள், த்வனியால் இவ்வளவு பெரிய சோகத்திலிருந்து எப்படிக் கரையேற முடிந்ததென்ற பெரும் கேள்வி, காதலின் வலியையும் தீவிரத்தையும் நன்றாக உணர்ந்ததால், விசுவரூபமெடுத்து எதிரில் நின்றது.

ஏதோ ஒரு மர்ம முடிச்சு அவிழாதிருப்பதைப் போன்ற ஒருவித நெருடலுடன் வீட்டிற்குச் சென்றாள் அவள்.

உலகில், பல காதல்கள் கல்லறைக் காவியங்களாகவே முடிந்திருப்பதும், காதலுக்குரிய ஆற்றல் அளவிட முடியாததென்பதும் புரிவதாய்!

எப்படியாவது, இந்தப் புதிருக்கான விடையைத் தெரிந்து அதை சீர் செய்யும் வேட்கை மனதை நிறைத்தது.

''முயற்சி செய்து நீ ஒரு அடி எடுத்து வைத்தால், வெற்றி தேவதை உன் பக்கம் பத்து அடி எடுத்து வைப்பாள்'' என்ற வால்ட் டிஸ்னியின் வரிகள் நினைவு வந்து பெரும் பலம் தந்தன.

## 34

பிறகு தொடர்ந்த நாட்கள், கல்யாண வேலைகளில் செல்ல த்வனியும் பார்வையற்றோருக்கு உதவுவதில், தன் மனதைத் தீவிரமாக ஆட்படுத்தியிருந்தாள்.

ஞாயிறன்று காலையிலேயே, அஷ்வந்த் வந்து விட்டான்.

ஆனால், அவனிடம் சில்வியா பேச நினைத்தபோது, அதற்கான தனிமையும் சந்தர்ப்பமும், ஏனோ அன்று அமையாமலே போனது.

அவினாஷும் அவனுடைய குடும்பத்தினரும், காலையிலேயே திருமண மண்டபத்திற்கு வந்துவிட, பெண் வீட்டினரும் அவர்களை வரவேற்பதற்காக அங்கு சென்று விட்டனர்.

மாலையில் திருமண வரவேற்பு பிரம்மாண்டமாக நடக்க, ருக்மணியும், த்வனியும் குட்டி ப்ரஜனுடன் அதில் கலந்து கொண்டனர்.

ஒரு வாரம் அஷ்வந்த்தைப் பார்க்காததால், த்வனியின் விழிகள் ஒரு இணை மானின் வேட்கையுடன் அவனையே தொடர்ந்தன.

நெஞ்சக் கூட்டுக்குள் புதையலாய் புதைந்திருந்த சில மகிழ்ச்சித் தருணங்கள் மெல்ல எட்டிப் பார்த்தன.

அது போன்ற ஒரு தருணத்தில் யாரிடமோ பேசியபடித் திரும்பிய அஷ்வந்த், அவளையும், அந்த விழிகளில் கசிந்த ஏக்கத்தையும் சட்டென்று கண்டு கொண்டான்.

மனம் குரூரமாக நகைத்தது...!

ஒரு குழந்தையுடன் கணவனைப் பிரிந்து வாழ்பவள், வேற்று ஆடவனை மயக்க முயற்சிப்பதை நினைத்தால், மனம் உலைக்களமாய்!

''உனக்கு ஒரு வழி செய்கிறேன்... நாளை உனது நாள்... பெண்ணே! உன் வேசித் தனத்திற்கு நான் ஒரு இறுதி முடிவு கட்டப் போகும் நாள்...''

நெஞ்சம் கொடூர வெறியுடன் குளுரைத்தது!

கலி கொட்டிச் சிரிக்கப் போவதை அறியாத ... மீண்டும் விளையாடி வே...
அவனைப் பற்றிய யோசனையுடனே அமர்ந்திருந்தாள் த்வனி.

* * *

மறுநாள் காலையிலேயே சில்வியாவும் அவினாஷும் டார்ஜிலிங்கிற்கு தேனிலவு கிளம்பி விட்டனர்.

மனதில் பொங்கிய குரூர வெறியுடன் அன்று அலு வலகத்திற்கு வந்திருந்தான் அஷ்வந்த்.

அன்றுதான் ஒரு வாரம் கழித்து வேலைக்கு வந்திருந் தாள் த்வனி.

அவள் ஒரு வாரம் விடுமுறை என்பதை அறிந்தும், தன்னைப் பார்க்க முடியாதென்பதாலேயே அவள் விடுப் எடுத்ததாக, தவறாக அர்த்தம் கற்பித்தது அவன் இதயம்.

இன்று உனக்கு வைக்கிறேனடி ஒரு அக்னிப் பரீட்சை என்று மனம் குரோதத்தில் துள்ளிக் குதித்தது.

இது எதையுமே அறியாத அப்பாவியாய் ஒரு ரிப் போர்ட்டுடன் அவனுடைய அறைக்குள் நுழைந்தாள் த்வனி.

சிறு வண்ணப் பூச்சியைக் கண்டதும் தாவியோடி சிறைப் பிடிக்கும் ஊர்வன போல், அவனுடைய இதயம் வேட்கையுடன் அவளுக்காகக் காத்திருந்தது.

அவள் உள்ளே நுழைந்ததுமே, சிறு முறுவலுடன் ஏறிட்டவன், தொழில் முறையில் அவள் அளித்த தகவல் களை மெதுவாக உள் வாங்கிக் கொண்டான்.

மெல்லிய குரலில் அனைத்தையும் கூறி முடித்து விட்டு அவள் கிளம்பும்போது 'ஒரு நிமிஷம்!' என்று அவளை நிறுத்தினான்.



“நீயும் போன வாரம் முழுக்க லீவு போலருக்கு! ஏன்... நான் ஊரில இல்லை... வர மாட்டேன்னதும் உனக்கும் ஆபீஸுக்கு வரப் பிடிக்கலையா?”

உல்லாசமான குரலில் கேட்டான்.

உடனே... உள்ளே பூபாளம் இசைத்தது. ஒற்றைக் குயிலொன்று!

அவன் குரலில் தெரிந்த மாற்றமும், இளகிய முகமும் அவளுக்கு எதையோ உணர்த்தின.

அவன் முகத்தையே ஊடுருவியவளின் மனதிற்குள், இனிதாக ஒரு பூ மலர்வது போல்!

சட்டென்று முகம் மந்தகாசமாகிவிட, “இல்லை! அது வந்து... ப்ளைண்ட் பீப்பிளுக்கு பரீட்சை எழுத உதவுறது எப்பவுமே என்னோட வழக்கம்! அதான்” மென் குரலில் கூறினாள்.

“என்னிடமா உன் பொய் ஜாலத்தைக் காட்டுகிறாய்?” உள்ளம் அமிலமாய் கொதிக்க முகத்தில் அதைக் காட்டாது மறைத்தவன், மெதுவாக அவளருகில் வந்தான்.

“த்வனி! நான் அப்படி உன்னைக் கூப்பிடலா மில்லை?” மென்மையாக வினவினான்.

அந்த ஒற்றை வார்த்தையில், உடலிலிருந்த செல் களனைத்தும் சிலிர்க்க நிமிர்ந்தவள், 'ம்' என்று மெல்லத் தலையசைத்தாள்.

மெல்ல அவள் காதருகில் குனிந்தவன், “இந்த ஒரு வாரப் பிரிவுதான் உன்னைப் பத்தி எனக்குப் புரிய வச்சது! என்னை மாதிரித்தானே நீயும் தவிச்சிருப்பே?” ஆழ்ந்த குரலில் கேட்டான்.

எப்போதோ, அபூர்வமாய் வருகின்ற வானவில்லாய்... உள்ளம் பல நிறம் கொண்டது.

பாலையாய் வறண்டிருந்த நிலத்தில் விழுந்த முதல் மழைத் துளியாய்... உயிர்த் துளியாய்... அவன் வார்த்தைகள் நெஞ்சுக்குள் வேகமாக இறங்கின.

மனம் முழுவதும் கோடி ஆனந்த சிறகுகள் முளைத்துப் பறப்பது போன்ற உணர்வில் வெட்கத்துடன் நிமிர்ந்தவள், அவனுடைய இதழ்களில் படர்ந்திருந்த ஒருவித வக்ரச் சிரிப்பை சத்யமாக எதிர்பார்த்திருக்கவில்லை.

அவள் சுதாரித்து விலகுவதற்குள், அவளைத் தன் கையணைப்பிற்குள் கொண்டு வந்திருந்தான் அவன்.

''என்ன... இந்த வாரக் கடைசியில் நீ ஃப்ரீயா? மகாபலிபுரத்திலே எங்க கெஸ்ட் ஹவுஸ் ஒண்ணு இருக்கு... அங்கே போய் ஜாலியா ரெண்டு நாள் தங்கிட்டு வரலாம்... நீ கேக்கிற பணத்தை நான் குடுத்துடறேன்! ம்...?''

அஷ்வந்த் கேட்டவுடன், தணலை வாரி யாரோ தலையில் கொட்டிய உணர்வில் தகித்துப் போனாள் த்வனி!

சட்டென்று அபஸ்வரமாய் தெறித்த வார்த்தைகள் உணர்வுகளைச் சுண்டின.

சுய கௌரவத்தையும், தைரியத்தையும் தொலைப்பது போன்ற அவலம் வேறெதுவுமில்லை என்பது இன்று புரிவதாய்!

இதயம் கிழிபட்டு அழ ஆரம்பிக்க, உடனே பதறி அவன் பிடியிலிருந்து விலக ஆரம்பித்தாள்.



''ஏய்! எங்கே ஓடறே? இதைத் தானே எதிர்பார்த்தே? பணத்துக்காக தரம் தாழ்ந்து என்ன வேணாலும் செய்றவதானே நீ! உனக்கு சம்மதம்தானே?''

ஊசியாய் உறுத்துகின்ற குரலில் கேட்டான்.

ஓராயிரம் ஈட்டிகளை... ஒரே நேரத்தில் இதயத்தில் யாரோ செருகியதைப் போன்ற வலியுடன் அவள் துடித்துப் போனாள்.

''நோ! நான் அப்படிப்பட்ட பொண்ணு இல்லை! நான் உங்களை மனசார விரும்பினேன்... ஆனா நீங்க... சே!'' விரக்தியிலும், அருவெறுப்பிலும் வெடித்தாள்.

''ஏய்... என்னடி... பெரிய பத்தினியாட்டம் பேசறே? இதை நான் நம்பணுமா?'' ஏளனம் நிறைந்திருந்தது அவன் குரலில்!

உடனே, பொங்கி எழுந்தாள் அவள்.

''ஹூம்... உங்களுக்கு என்னை நிரூபிக்கணும்கிற அவசியம் எனக்கில்லை... நீங்க என்னை நம்பணும்னும் நான் எதிர்பார்க்கலை! ஆனா, சீதை மாதிரி தீக்குளிச்சி என் கற்பு நிலையை நான் மெய்ப்பிக்க மாட்டேன்... ஏன்னா, நானே ஒரு தீ...! தீ தீக்குளிக்க வேண்டியதில்லை...''

வேகத்துடன் அவனிடமிருந்து தன்னை விடுவித்த படிக் கண்ணீருடன் வெளியேறியவளுக்குள், பெரும் பூகம்ப அதிர்வும்... தான் ஏன் இனி உயிருடனிருக்க வேண்டுமென்ற சுய பச்சாதாபமும்!

தான், இதுவரை இதயத்தில் அவன் மேல் சேமித்து வைத்திருந்த நேசமும், பிரியமும், அர்த்தமின்றி கானல் நீராய் கரைவது புரிவதாய்!

உக்ரமாய் தன் உணர்வுகளை வெளிப்படுத்தி விட்
டாலும், உடல் முழுவதும் பதறித் துடிக்க... ஒவ்வொரு
செல்லிலும் பெரும் நடுக்கம் ஓட, உயிர்ப்பையே
தொலைத்து ஒடுங்கியிருந்தாள் அவள்.

ஏனோ, காதலெனும் வார்த்தை மீதே இப்போது பெரும்
வெறுப்பும் துவேஷமும் வந்தன.

உடனே தன் கேபினுக்குச் சென்று, ஒரு மாத விடு
முறையுடன் தன் ராஜினாமாக் கடிதத்தையும் இணைத்த
வளுக்கு, கண்ணீர் ஆறாய்ப் பெருகியது.

* * *

பிறகு கிளம்பி ஹோண்டாவில் பயணித்து வீடு வந்து
சேரும்போது கண்கள் இருட்டி மயங்கி விடும் நிலையி
லிருந்தாள் அவள்.

எரிமலை ஒன்று நாபிக்குள் குமுறியதைப் போல
தகிப்புடனிருந்தாள்!

தன் மகளை அந்த வித்தியாசமான கோலத்தில் கண்
டதும், ருக்மணிக்குத்தான் என்ன செய்வதென்றே புரிய
வில்லை.

ஏதோ நடந்திருப்பதை உணர்ந்தவர், அவளைத் தொந்
தரவு செய்ய மனமின்றி எதுவுமே கேட்காமல் ஓய்வெடுக்க
வைத்தார்.

விசும்பல்கள் அடங்கி அவள் உறங்கும் வரை, மெது
வாகத் தலையைக் கோதியபடி அமர்ந்திருந்தவருக்குள்
பெரும் யோசனை!

புயலில் அகப்பட்ட சிறகாய் உருக்குலைந்து வந்த
மகளைக் கண்டபோது, அவள் வீட்டிலிருந்து கிளம்பிச்



சென்று திரும்பிய இடைப்பட்ட இரண்டு மணி நேரத்தில்
என்ன நடந்திருக்குமென்ற தீவிர யோசனை!

அங்கு, அலுவலகத்தில் அஷ்வந்தும் கொதித்துப்
போயிருந்தான்.

த்வனி, உடனே அலுவலகத்திலிருந்து கிளம்பியதைக்
கூறிய அட்டெண்டர் ராமன் அவளுடைய டேபிளி
லிருந்த கடிதங்களையும் எடுத்து வந்து தந்திருந்தான்.

அவளுடைய நாடகம் புரிந்து, அவன் மனம் தீயாய்
கனன்றது.

எவ்வளவு திமிர் இருந்தால் முதலில் தன்னை வளைக்க
முயற்சிப்பாள்... பிறகு மிகவும் நல்ல பெண்ணைப் போல்
ராஜினாமா கொடுப்பாள்!

இதிலிருந்தே, அவளுடைய சதி தனக்கு புரிந்து
விட்டதாக இறுமாப்புடன் எண்ணினான் அவன்..!

ஆனாலும், அவளுடைய கண்ணீரும், கசங்கிய
முகமும், காயப்பட்ட பாவனைகளும், மனதின் ஓரத்தில்
சிறு சஞ்சலத்தை ஏற்படுத்தியது மட்டும் உண்மையாய்!

பெண்களிடம் மரியாதையின்றி நடந்து பழக்கமில்லா
தவன் என்பதாலும், முதன் முதலாக ஒரு பெண்ணை
வக்ரமாய் நடத்தியதாலும், உள்ளூர சிறிது உறுத்தியது.

தலையைக் கைகளால் தாங்கியபடி அமர்ந்திருந்தவ
னுக்கு அதற்கு மேல் வேலை செய்ய மனமின்றிப் போக,
உடனே வீட்டிற்குக் கிளம்பினான்.

ஆனால் அங்கு சென்றும் அவனுடைய மன உளைச்
சல் சிறிதும் குறையவில்லை.

நீண்ட நேர யோசிப்பிற்குப் பிறகு கிடைத்த பதிலும்,
த்வனிக்கு எதிராகவே இருந்தது.

இப்படி ஏதாவது நாடகமாடினால் தான், தன் பின்னாலேயே ஆண்களை அலைய விடலாமென்ற குறுபுத்தியும், திமிரும் ஒரு காரணமாக இருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தது மனது.

உடனே ரங்கராஜின் கூற்றும், அவளைப் பரணியுடன் இணைத்து அவன் முடிவு செய்து வைத்திருந்த தகாத உறவென்ற கற்பனையும், உள்ளே ஓடின.

ஒரு குழந்தையுடனிருப்பவள், அதுவும் கணவனைப் பிரிந்து வாழ்பவள், இத்தகைய கேவலமான நிலைக்கு இறங்கியிருப்பதை நினைத்தபோது, பெரும் வெறி வந்தது அவனுக்குள்!

இப்படிப்பட்ட பெண்களை வரிசையாக நிற்க வைத்து சுட வேண்டுமென்று துடித்தது, கோபம் கொண்ட நெஞ்சம்!

நெறி கெட்ட பெண்களுக்கான இறுதித் தீர்ப்பை எழுத வேண்டும்... நியாயத் தராசை கையிலெடுக்க வேண்டுமென்ற வெறி அவனிடம்!

அந்த நேரத்தில், அஷ்வந்த்தை வீட்டில் எதிர்பார்க்காத கோமளா, பதட்டத்துடன் என்னவென்று விசாரித்தார்.

"என்னப்பா? போனவுடனே திரும்பி வந்துட்டே? உடம்பு ஏதும் சரியில்லையா?" கவலையுடன் கேட்டார்.

"இல்லைம்மா! சும்மா தலைவலி... அதான்! கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்தாச் சரியாயிடும்..." என்றபடி தன் அறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டான் அவன்.



# 35

த்வனியின் வீட்டில், அவள் நிலையோ பெரும் கேள்விக் குறியாய்... ஊழிக் காற்றில் சிதைந்த மலரைப் போல் அவள் நிலை!

அதுவும், அவனிடமிருந்து இப்படி ஒரு வார்த்தையை எதிர்பார்த்திராதவளுக்கு, உடலெங்கும் பெரும் நடுக்கம் ஓடியது.

உதிர்கின்ற மலர்களாய்... கண்ணீர்த் துளிகள் நெஞ்சப் பரப்பில் செறிந்தன.

இந்த நிமிடமே இறந்து விடலாமென்ற வேதனை உணர்வை, ருக்மணியும் ப்ரஜனும் மட்டுமே தடுத்தனர்.

உன் சொற்கள் தைத்து சிதைந்த என் இதயத்தை, எந்த அறுவை சிகிச்சையாலும் சரி செய்ய முடியாதென்று அவனிடம் கூற வேண்டும் போல்!

அவர்களை அநாதையாக விட்டுச் செல்லவும் மனமின்றி, உயிர் வாழவும் பிடிக்காமல் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தவள், மாலை வரை அழுது கொண்டே இருந்தாள்.

**என் மனதைக்**<br>
**கொள்ளையடித்தவனே!**<br>
**முன்பு...**<br>
**என்**<br>
**மனதின்**<br>
**சோகச் சுமைகள்...**

இலவம் பஞ்சாய்
கனம் குறைந்து...
உன் பார்வை!
என்
கனவுகளின்
அதிர்வுகள்...
மயில் தோகையாய்
சாமரம் வீசி...
உன் நினைவு!
என்
என்னைச்
சிப்பிக்குள்..
நாகணவாய் பட்சிகளின்
தேன்குரல் கூட
பதியன் போடப்படாமல்...
உன் பேச்சு!
என் மனக் காட்டாற்றின்
வேகத் தடை..
அதை
வழி நடத்தும் கரை..
உன் நிதானம்!
இன்றோ..
என்
காதல் வேள்வியில்...
மனதைப் புடம்
போட்டு...
நான் கேட்ட
கேள்விக்கு



பதிலாய்...
உன்
தீச் சொற்களும்...
எரிமலைப் பார்வையும்...
வெறுப்பான புறக் கணிப்பும்!
புரியவில்லை ப்ரஜு!
எனை...
நீ
வெறுப்பதேன்
மன்னவனே!

அவளுக்குள் பெரும் போராட்டம்...!

உடலும், மனமும் அழண்டு போனது... உள்ளே கணகணவென்று தகிக்க, இரவே காய்ச்சல் வந்து விட்டது.

* * *

விடிய விடிய, ஏதேதோ பிதற்றியபடி அரற்றிக் கொண்டிருந்தவளையே பார்த்திருந்த ருக்மணிக்கு, எதுவுமே புரியவில்லை.

ஆனால், "நான் அப்படிப்பட்டவ இல்லை... உடம்பெல்லாம் எரியுதே... என்னாலத் தாங்க முடியலையே... நான் உங்களை எவ்வளவு நேசிச்சேன்..." துண்டு துண்டாகக் கோர்வையின்றி அவள் பிதற்ற, உடைந்து போனார் ருக்மணி.

விடியற்காலையில் வந்து பார்த்த டாக்டர், ஊசி ஒன்றைப் போட்ட பிறகு, ஓய்வெடுக்கும்படிக் கூறி விட்டு மாத்திரை, மருந்துகளைக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

மறுநாளே காய்ச்சல் குறைந்து, ஒரு முடிவுக்கு வந்து விட்டாள் அவள்.

மெதுவாகத் தன் தாயிடம் அதைப் பற்றிப் பேசினாள்.

''அம்மா! நான் லாங் லீவு போட்டிருக்கேன்... நாம மூணு பேரும், கொஞ்ச நாள் கிராமத்துக்குப் போய் நம்ம பண்ணை வீட்டில இருந்துட்டு வரலாமா?'' நடுங்கும் குரலில் கேட்டாள்.

''ஏம்மா இப்படி ஒரு முடிவெடுத்திருக்கே? உனக்கு கம்பெனியில ஏதாவது ப்ரச்னையா? எனக்கொண்ணும் கஷ்டம் இல்லை... நீ சொன்ன மாதிரியே செஞ்சிடலாம்''

''ம்... இப்ப என்னை எதுவும் கேக்காதீங்கம்மா! நான் அப்புறமா சொல்றேன்... இந்த வாரமே வீட்டைப் பூட்டிட்டு நாம கிளம்பலாம்... அதுக்கு உண்டான எல்லா ஏற்பாடும் செஞ்சிடுங்க! நான் டிராவல்ஸ்லே சொல்லி டிக்கெட் புக் பண்ணிடறேன்!'' கூறிவிட்டு கவிழ்ந்து படுத்து விட்டாள்.

எவ்வளவுதான் யோசித்தும், என்ன நடந்திருக்கு மென்றே யூகிக்க முடியாததால் ருக்மணிக்குள், பெரும் சோகமும், வேதனையுமே மிஞ்சின.

திடீரென்று குட்டி ப்ரஜன் அழுகின்ற சப்தம் கேட்டுத் தன் அறைக்குச் சென்றவருக்குள், பெரும் யோசனை!

இதுவரை ஒரு நாள் கூடத் தனியே படுத்திராத த்வனி, நேற்றிலிருந்து ப்ரஜனை அவருடைய அறையில் படுக்க வைத்துக் கொள்ளும்படிக் கூறி அனுப்பியதும், நினைவுக்கு வந்தது.

''என் குழந்தைக்கு இதுவரை நல்லவை எதையுமே நீ கண்களில் காட்டவில்லை... இனியாவது அது மாறி அவன் மகிழ்ச்சியுடனிருக்க அருள் செய்யேன் முருகா''



என்று வேண்டியபடி, ப்ரஜனைத் தட்டிக் கொடுத்து உறங்க வைத்தபடி அமர்ந்திருந்தார் அவர்.

தொடர்ந்து வந்த இரு நாட்களும், கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல் தவித்த த்வனி, பெரும் அலைப் புறுதலும் தவிப்புமாகவே இருந்தாள்.

மூன்றாவது நாள் இரவுக்கே டிக்கெட் கிடைத்துவிட, முக்கியமான பொருட்களை மட்டும் எடுத்துக் கொண்டு, வீட்டைப் பூட்டி விட்டு மூவரும் கிளம்பி விட்டனர்.

முதன் முறையாக, எதற்கோ பயந்து தோற்று ஓடு வதைப் போன்ற உணர்வில், துடித்துப் போனாள் அவள்.

இனி, சென்னைக்குத் தான் வருவோமா... வேறு வேலையில் சேர்ந்து எதிர்காலத்தை நிம்மதியுடன் கழிக்க முடியுமாவென்ற, பெரும் கேள்விக் குறி அவளுக்குள்!

வாழ்க்கைப் பாதையில், மூன்று வருடங்களாக தான் அனுபவித்த வேதனைகளும் கடந்து வந்த முட் பாதை களும் நினைவு வந்து, அவளை ரணமாய் தாக்கி பேதலிக்கச் செய்தன.

ஜன்னல் வழியே வெளியே பார்த்தபோது, தூரத்து இருட்டில் எங்கோ ஒளிர்ந்த விளக்குகள், தொலை தூர நம்பிக்கை ஒளியாய்!

ரயிலின் சப்தம் ஒரே ரிதத்தில் தாலாட்டுப் பாட, மெதுவாக உறங்க ஆரம்பித்தாள் அவள்.

வெளியே கருமை இருட்டை கனமாய் போர்த்தி யிருந்தது இரவு!

பொங்கிப் பெருகிய கனவு வெள்ளத்தில், சிறு சருகென விழுந்து காணாமல் போனது... ப்ரஜனின் நேச ஞாப கங்கள்!

சிவனது நெற்றிக் கண்ணாய், இன்று எரித்தன அவன் வார்த்தைகள்!

சபிக்கப்பட்ட இரவாய்... பொழுது நீண்டது.

திடீரென்று விழிப்பு வர, திடுக்கிட்டு எழுந்து அமர்ந்த போது, தன்னுடைய எதிர்காலம் பெரும் கேள்விக் குறியாய்!

மலர்கள்
மலரும்போதே
நிர்ணயிக்கப்பட்டதோ...
இந்தத் தீர்ப்பு!
சில பூக்களின்
சங்கமம்...
மணமேடையில்!
சில பூக்கள்...
பிணமேடையில்!
சில மலர்கள்...
காதல் பாதையில்!
சில மலர்கள்...
கல்லறைப் பாதையில்!
சில புஷ்பங்கள்...
தேவப் பிரசாதமாய்!
சில புஷ்பங்கள்
தேவரடியார் சீதனமாய்!
எத்தனை
வித்தியாசமான
சங்கமிப்பு...
ஒவ்வொரு
இனத்திற்கும்!
மலர்கள் மட்டுமல்ல...
மங்கையரும் அப்படித்தான்!
ஒரு தோட்டத்தில்



மலர்ந்து...
வேறு இடத்தில்
சங்கமித்து!
என் சங்கமிப்பு...
உன் மடியா...?
இல்லை...
இறைவன் மடியிலா... ப்ரஜு?

## 36

விடியலில் பெத்த நாயக்கன் பாளையம் ரயில் நிலையத்தில் இறங்கியபொழுது பழகிய இடமும், இது தன்னுடைய பூமியென்ற இதமான உணர்வும், அவளுள் சிறிய அமைதியை ஏற்படுத்தின.

காற்றில் குளிரின் தாக்கம் அதிகம் இருக்க, சுற்றிப் பார்த்தபோது, ஒவ்வொரு பெட்டியாகத் தேடியபடி, அவளுடைய சித்தப்பாவும் சித்தியும் வந்து கொண்டிருந்தனர்.

அவளைக் கண்டதும் ஓடி வந்து அணைத்துக் கொண்டவர்களைக் கண்டபோது, தன் மேல் பாசம் காட்டவும் இந்த உலகத்தில் சில ஜீவன்கள் இருக்கின்றனர் என்ற உண்மை புரிவதாய்!

சித்தப்பா ப்ரஜுனைத் தூக்கிக் கொள்ள, பண்ணையாள் மருதன் ஓடி வந்து நலம் விசாரித்தபடி லக்கேஜ்களை எடுத்துக் கொண்டார்.

சிறு பெட்டி, பைகளை பெண்கள் எடுத்துக் கொள்ள காருக்குச் சென்றபோது, த்வனியின் மனதிற்குள் ஏதுவோ அடைத்தது.

அவளையே கவலையுடன் ஏறிட்ட ஞானராஜுக்குள், பல விடை தெரியாத வினாக்களும்... பழைய நினைவு களும்!

அவளை, இனிமேல் இங்கிருக்கும் நாட்களிலாவது சந்தோஷப்படுத்தி இயல்பாக்க வேண்டும் என்ற உறுதி ஒரு பெருமூச்சாய் எழ, முன்புறம் ப்ரஜனுடன் உட்கார்ந்து கொண்டார்.

பின்புறம் மூன்று பெண்களும் அமர, கார் புறப்பட்டது.

வழியில் தெரிந்த பசுமையும், தூரத்து மலைத் தொடர் களும், பாக்குத் தோப்பும், வயல்களும், த்வனிக்குள் எந்த உணர்வையுமே ஏற்படுத்தவில்லை என்பதுதான் உண்மையாய்!

சலனங்களற்ற குளமாய், தனக்குள் வேதனைப் பாசிகளைப் படர விட்டிருந்த மனதை, இயற்கையின் அதிர்வுகள் கூடப் பாதிக்கவில்லை.

ஏதோ மரத்துப் போன உணர்வில் உறைந்திருந்த வளை, அவர்களும் தொந்தரவு செய்யவில்லை.

கிராமத்தில் அவர்களுடைய பண்ணைக்குள் கார் நுழைந்தபோது, சுற்றிலும் விரவித் தெரிந்த தென்னந் தோப்பும், பாக்கு மரங்களும், வெற்றிலைக் கொடிக் கால் களும் தம்மிடம் பசுமையை அழகாய் ஒளித்து வைத் திருந்தன.

பண்ணைக்குள்ளிருந்த அந்தப் பெரிய கிராமத்து வீட்டின் முன் சென்று கார் நின்றபோதுதான், சிறிது உயிர்ப்புடன் நிமிர்ந்து அமர்ந்தாள் அவள்.

முன்புற ரேழியைக் கடந்து தெரிந்த இரு பெரிய திண்ணைகளும், பெரிய ஹாலைக் கடந்து உள்ளே சென்றதும் நடுவில் கம்பிகளிட்ட முற்றமும், சுற்றிலும் தூண்கள் சூழ்ந்த தாழ்வாரங்களும், தம் இளமைப் பரு



வந்து விடுமுறை நாட்களை, மலரும் நினைவுகளாய் அவளுக்கு ஞாபகப்படுத்தின.

முன்புற அறைகள், அவர்களுக்கென்று ஒதுக்கப் பட்டிருந்தன.

பின்புறம் தளம் போடப்பட்ட டைனிங் ஹாலும் சமையல் அறையும், படுக்கை அறைகளும் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டு வருவது தெரிந்தது.

வேலைக்காரி பொன்னி ஓடி வந்து அவர்களை வாஞ்சையுடன் வரவேற்றாள்.

உள்ளே சமையல் செய்து கொண்டிருந்த நாராயணியம் மாவின் கை மணம், அந்த வீட்டையே நிறைத்துக் கொண்டிருந்தது.

மெதுவாகத் தோட்டத்திற்குச் சென்றபோது, பின்புறம் பெரிய தாழ்வாரத்திலிருந்த அந்த ஊஞ்சலும், கிணற்று மேடையும் அவளைப் பாசத்துடன் வரவேற்றன.

வேறு சமயமாயிருந்தால் ஓடிச் சென்று ஊஞ்சலில் தாவி அமர்ந்து கால்களை வீசி, சிறு குழந்தையாய் ஆர்ப்பரித்து ஆடியிருப்பாள்.

ஆனால் இன்று மனமும் உடலும் உறைந்து போய் எதற்குமே ஒத்துழைக்கவில்லை.

வேதனையில் மனம் விரக்தி வலை பின்ன, அதை குத்தீட்டியாய் கிழித்து மூர்க்கத்துடன் உட்புகுந்தன அவளுடைய மனம் கவர் மன்னவனின் ஞாபகங்கள்!

குட்டி ப்ரஜன் உற்சாகத்துடன் ஊஞ்சலருகில் ஓட அவனை அதில் அமர்த்தி ஆட்ட ஆரம்பித்தார் ருக்மணி

மெல்லச் சென்று கிணற்று மேடையில் அமர்ந் போது, அழையாத விருந்தாளியாய் ஓடி வந்தன, பால ஞாபகங்கள்!

எந்தக் கவலையுமின்றி பட்டாம் பூச்சியாய் சுற்றித் திரிந்த கவலையில்லாத காலங்கள், கண் முன் வந்து பெரும் ஏக்கத்தை விதைத்தன.

மனதிலிருந்த வண்ணக் கனவுகள், ப்ரஜனின் இழப்பிற்குப் பிறகு நிறமிழந்திருந்தாலும், அஷ்வந்தைப் பார்த்தவுடன், சிறு சிறு ரசனைத் தளிர்களாய் அது துளிர்த்தது தான் நிஜமாய்!

ஆனால், அவனுடைய சொற்கள் விளைவித்த மனப் புழுக்கம் உடல் முழுவதும் காட்டுத் தீயாய் பரவி அவளை கருகச் செய்திருந்தது.

தீயில் உருகும் மெழுகாய், அவள் தன்னையே கரைத்து உருக்கி அவனுக்கெனவே வாழ்ந்து, அவன் நினைவுகளையே சுவாசித்தபடி உயிர் வாழ்ந்து கொண்டிருந்த வேள்விக்கு பதிலாய்... அவனுடைய வார்த்தைகளும், நடத்தையும் தந்த ரணங்களும் வேதனைகளும் வடுக்களாய் காய்த்துப் போயிருந்தன.

உயிர்ப்பைத் தொலைத்து உலர்ந்து வாடியிருந்தவளிடமிருந்து எதையும் அறிய முடியாமல், தனக்குள்ளேயே நொந்து போயிருந்தார் ருக்மணி.

ஆனால், இந்த இடமாறுதலும், பழகிய ஊரும் அன்பான சுற்றமும் அவளை மாற்றி விடும் என்பதில், தீராத நம்பிக்கையுடனிருந்தார் அவர்.

நாட்கள் விரைவாகக் கடந்தாலும் த்வனி மட்டும் மாறவே இல்லை.. தினமும் கோவிலுக்கும், பண்ணையை சுற்றிப் பார்ப்பதற்கும், நண்பர்களின் வீட்டிற்கும் என்று ஞானராஜ் அவளை அழைத்துச் செல்ல ஆரம்பித்திருந்தார்.

அதிலாவது அவளிடம் ஏதாவது ஒருவித மாற்றம் தெரியாதாவென்ற தவிப்பும் எதிர்பார்ப்பும், அனைவரிடமும் குவிந்திருந்தன.



ஆனால், அவளோ ஒரு நடைப் பிணமாய்.. சாவி கொடுத்த பொம்மையாய்... ஒரு கடமைக்கென நடமாடி உயிர் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

**உன்**
**பார்வைகளை...**
**கவிதை என்று**
**எண்ணினேன்!**
**பின்னாளில்...**
**எனக்கு**
**சோகக் கவிதைகள்**
**மட்டுமே...**
**சொந்தமென்று**
**தெரியாமல்!**
**உன்**
**இதயம்...**
**ஒரு இன்பச் சிறை**
**என்றேன்!**
**வாழ்நாள் முழுதும்**
**எனை நீ**
**துன்பச் சிறையில்**
**தள்ளப் போவதை...**
**தெரியாமல்!**
**நீ**
**என்னுயிர்**
**என்றேன்!**
**எனை வெறும்...**
**உடல் கூடாக்கி**
**உயிர் பறித்து**
**சென்று விடுவாய்...**
**என்றறியாமல்!**

# 37

சென்னையில், அஷ்வந்த்தும் சிறிது அலைப்புறுதலுடனும், உறுத்தலுடனுமே இருந்தான்.

இதுவரை எந்தப் பெண்ணிடமும் அவன் இது போல் நடந்துகொண்ட பழக்கமில்லாததால், அந்தச் சம்பவத்தின் கரிய நிழல் அவனுள் படிந்து உணர்வுகளைப் பந்தாடியது.

சில நேரங்களில், எண்ணங்கள் விசித்திரமானவை!

தனக்குள்ளேயே மூழ்கி, தன்னை ஆழம் பார்க்கும் போது தன்னுடைய செயல்களையே சரியா என நியாயத் தராசில் இட்டுப் பார்க்கும் வல்லமை படைத்தவை!

எந்தவொரு செயலையும் முடிக்கும் முன்பு, அதன் விளைவுகளையும் யோசிக்கும் மனது, ஒரு கணம் தடுமாறியதால் வந்த விளைவுதான்.. அன்று தான் பேசியதும் நடந்து கொண்டதும் என இன்று யோசிக்க ஆரம்பித்த இதயத்தை, அடக்கினான் அவன்.

அன்று திறுவனத்திற்கு வந்திருந்த லிங்கேஷ்வரன், அவனிடம் இயல்பாக விசாரித்தார்.

''என்ன அஷ்வந்த்... பத்து நாளா ஹம்சத்வனி லீவா? அவளைப் பாக்கவே முடியலை...'' மெதுவாக வினவினார்.

''தெரியலைப்பா! உடம்பு சரியில்லையோ என்னவோ... லாங் லீவ் போட்டிருக்கா!'' அசுவாரசியமாகக் கூறினான்.

''ஓ! அது சரி.. அந்த ஜெர்மன் ப்ராஜெக்ட் முடியர மாதிரி இருக்கறதாலே எதுவும் லேங்வேஜ் ப்ராப்ளமில்லையே?''



''அதெல்லாம் இல்லைப்பா! எல்லாம் ஸ்மூத்தாதான் போயிட்டிருக்கு...''

''சரி! நாளைக்கு சில்வியாவும் அவினாஷும் ஹனிமூன்லேருந்து திரும்பி வராங்கலாம்! நீ போய் ஏர்போர்ட்லேருந்து ரிசீவ் பண்ணி அழைச்சிட்டு வந்திடறியா?''

''ம்.. ஓகேப்பா! அத்தையும் மாமாவும் இந்த வாரக் கடைசியிலதானே ஸ்டேட்ஸ் கிளம்பறாங்க?''

''ஆமாம்! அதனால அவங்க போறவரைக்கும், சில்வியாவும் மாப்பிள்ளையும் இங்கே நம்ம வீட்டிலதான் மறு வீட்டுக்கு வந்து தங்கப் போறதா, தாரா சொன்னா! சரி.. நான் கிளம்பறேன் அஷ்வந்த்'' என்றபடி விடை பெற்றார் அவர்.

இப்போதெல்லாம், அவன் வீட்டில் கூட யாரிடமும் சரியாகப் பேசுவதில்லை... ஒதுங்கியே இருக்கிறான் என்ற உண்மை அவருக்கு உரைத்தது.

சில்வியாவின் முடிவினால் வந்த குழப்பமாக இருக்கும்.. சிறிது நாட்களானால் சரியாகி விடும் என்று, தன்னையே தேற்றிக் கொண்டார் அவர்.

* * *

அன்று மாலையில், ஏர்போர்ட்டிற்கு சென்று புது மணத் தம்பதிகளை அவன் அழைத்து வந்தபோது, இருவரிடமும் தனி சோபையும் மலர்ச்சியும் வந்திருந்தன.

இருவரையும் கேலி செய்து சீண்டியபடி வந்தவனைப் பார்த்த சில்வியாவிற்குள், பெரும் ஆச்சர்யம்!

இவனுக்குக் கூட இப்படிப் பேச வருமாவென்ற வியப்பும், ஆராய்ச்சியும்!

வீட்டிற்கு வந்ததும் தான், அவனிடம் தனியே பேசி த்வனியைப் பற்றிக் கூற வேண்டுமென்ற நினைவே வந்தது.

மறுநாளே, அதற்குண்டான சந்தர்ப்பம் அவளுக்கு வாய்த்தது.

அவினாஷ், அன்றிலிருந்து மருத்துவமனைக்கு செல்ல ஆரம்பித்திருந்தான்.

அன்றிரவு, அஷ்வந்த் சீக்கிரமே வந்துவிட, இருவருமாகத் தோட்டத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

தேவராஜும், தாராவும், கோமளாவும், கோவிலுக்குச் சென்றிருந்தனர்.

லிங்கேஷ்வரனுக்கு நேற்றிரவிலிருந்து காய்ச்சல் என்பதால், தன் அறையில் படுத்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்.

அப்போது கிடைத்த தனிமையில், மெதுவாக ஆரம்பித்தாள் அவள்.

''அஷ்வந்த்! த்வனி எப்படி இருக்காங்க? நான் அவங்களைப் பத்தி உங்க கூடக் கொஞ்சம் பேசணும்...'' மெதுவாக நிறுத்தினாள்.

உடனே இடுங்கிய கண்களும், யோசனையில் உயர்ந்த புருவங்களுமாய், அவளைக் கூர்மையுடன் ஏறிட்டான் அவன்.

''ஏன்? என்னைப் பத்தி.. உன்கிட்டே ஏதாவது கம்ப்ளெய்ண்ட் பண்ணினாளா அவ?''

ஒருவிதத் தீவிரத்துடன் கேட்டான்.

ஒன்றும் புரியாமல், ''இல்லையே அஷ்வந்த்! அவங்களை, என் ரிசப்ஷன் அன்னிக்குப் பார்த்ததோட சரி! மறுநாள் தான், நாங்க ஹனிமூன் போயிட்டமே.. வந்ததிலேருந்து அவங்க கூடப் பேசக் கூட எனக்கு நேரமில்லை! ஏன் இப்படிக் கேக்கறீங்க? உங்க ரெண்டு பேருக்கும் நடுவிலே, ஏதாவது ப்ரச்சனையா?''



யோசனையுடன் விசாரித்தாள் சில்வியா.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை! சும்மாதான் கேட்டேன்!''

முகம் தீவிரமாக இறுகியிருக்க, மெல்லிய குரலில் முடித்தான்.

''அஷ்வந்த்... என்னோட ரிசப்ஷனுக்கு முதல் வாரம் அவங்க வீட்டுக்குப் போயிருந்தேன், நான்! அன்னிக்கு தான் அங்கே ஒரு பெரிய ஆச்சர்யம் எனக்குக் காத்திருந்தது... த்வனியோட பழைய காதலும் தெரிய வந்தது...''

''ஓ!'' என்றவன், ''பிரிஞ்சு போன புருஷன்.. பழைய காதலன்... அதைத் தவிர புதுசாத் தேடுற பணக்காரப் புளியங்கொம்பு. இதெல்லாம் அவ சொல்லலையா?'' நக்கலாகக் கேட்டான்.

''தப்பு அஷ்வந்த்! நீங்க சொல்ற எதுவுமே அவங்க வாழ்க்கையிலே இல்லை! பழைய காதலன்கிற ஒருத்தரைத் தவிர!'' என்றவள், தான் அன்று அவர்கள் வீட்டிற்குச் சென்றதிலிருந்து ருக்மணி தன்னிடம் கூறியது வரை, மடை திறந்தாற் போல் எல்லாவற்றையும் சொல்ல ஆரம்பித்தாள்.

அவனுடைய முகத்தில், முதலில் தெரிந்த நம்பிக்கையின்மை மாறி, குழப்பத்துடன் பல வகையான உணர்வுகள் கலவையாய்ப் பிரதிபலித்தன.

அவள் பேச ஆரம்பிக்கும்போதே அங்கு வந்து விட்ட ஒரு உருவம், அசைவின்றி தூண் மறைவில் நின்று, அவள் கூறுவதை கூர்மையாய் கவனிக்க ஆரம்பித்தது.

அதுவரை கூறியவள், ''அப்புறம் அவங்கம்மாவை சமாதானப்படுத்திட்டு இருந்தப்ப தான் த்வனி வந்தாங்க! அப்புறம் அவங்க தான் சொன்னாங்க...''

முடிக்கும் முன்பே லிங்கேஷ்வரனும் அங்கு வந்து விட்டார்.

''என்னப்பா.. உடம்பு பரவாயில்லையா? வெளியே சில்லுன்னு காத்தடிக்குது! ஏன் தோட்டத்துக்கு வந்தீங்க...? வாங்க உள்ளே போகலாம்...''

மெதுவாக எழுந்தான் அவன்.

''அதெல்லாம் வேண்டாம்ப்பா! நல்லா வேர்த்து விட்டுச்சி! அதான்... உங்கம்மா, தாரா எல்லாரும் வந்திட்டாங்களான்னு பாக்கறதுக்காக கீழே இறங்கி வந்தேன்...

''அப்பதான் த்வனியோட கதைய சொல்ல ஆரம்பிச்சா சில்வியா! தொந்தரவு பண்ண வேண்டாமேன்னு நின்னு கேட்டுட்டிருந்தேன்... எனக்கே இண்ட்ரஸ்டிங்கா இருக்கு! அப்புறம் என்ன ஆச்சம்மா?'' ஆவலுடன் ஊக்கினார் அவர்.

உடனே, மேலே தொடர ஆரம்பித்தாள் அவள்.

''த்வனி வந்தாங்க! அப்பதான் தெரிஞ்சது... ப்ரஜுனோட அத்தியாயமே 2004-ம் வருஷம் டிசம்பர் மாசம் 24-ம் தேதியோட, சுனாமியால முடிஞ்சு போன விஷயம்!

''அவங்களை தனியா தவிக்க விட்டுட்டுப் போக, அவருக்கு எப்படித்தான் மனசு வந்ததோ.. பாவம்!''

''அவ்வளவு அன்போடக் காத்திருந்தவங்களாலே, அவரை மறக்க முடியலை... அவரை நினைச்சே இன்னும் வாழ்ந்திட்டுருக்காங்க!

''எவ்வளவு காதல் இருந்தா, அவங்களாலே இப்படி இருக்க முடியும்? அவங்களை நினைச்சா, எனக்கு பிரமிப்பா இருக்கு!

''ஒரு மனைவிதான், கூடவே வாழ்ந்து சாகிற வரைக்கும் கணவனோட துணையா இருந்து, அவர் வாழ்க்கைக்



காலம் முடிஞ்சும், அவரை நினைச்சிட்டே தனிச்சிருப்பாங்க!

''ஆனா காதலுக்காக இப்படித் தன் வாழ்க்கையையே அழிச்சிக்கிறவங்களை, இப்பதான் முதன் முதலாப் பாக்கறேன்...''

உடனே விழிகள் சிவக்க, கோபத்துடன் அவளைத் தடுத்தவன், ''போதும் சில்வியா! இதை என்னை நம்ப சொல்றியா? அவளோட நிஜ முகம் எனக்குத் தான் தெரியும்!'' ரௌத்ரமாய் சீறினான்.

''அஷ்வந்த்! அதைத்தான் நான் சொல்ல வரேன்! அவங்க ஏன் உங்களைப் ''ப்ரஜு''ன்னு கூப்பிட்டாங்கன்ற கேள்விக்கு. அங்கே தான் எனக்கு பதில் கிடைச்சிது!''

''என்ன பதில்?''

அலட்சியமாகக் கேட்டான் அஷ்வந்த்.

''அவங்க கூடப் பேசிக்கிட்டே நான் அவங்க பெட்ரூமுக்குள்ளே போனப்பதான்.. அந்த அதிசயத்தைப் பாத்து நான் அதிர்ச்சியாயிட்டேன்...''

''அங்கே அப்படி என்னம்மா பார்த்தே?'' ஆவலுடன் கேட்டார் லிங்கேஷ்வரன்.

''அங்கே.. நம்ம அஷ்வந்த்தோட போட்டோ, பெருசா மாட்டியிருந்தது மாமா! அப்படியே இவரோட ஜெராக்ஸ் காப்பி மாதிரி ப்ரஜுன் இருந்தாரு!

அன்னிக்கு தான்,தான் ஏன் அஷ்வந்த்தைப் பாத்து ''ப்ரஜு''ன்னு கூப்பிட்டேன்ற உண்மையையும்... இவரைப் பார்த்தவுடனே பழைய ஞாபகம் எல்லாம் வந்து தான் தவிச்சிப் போறதையும், த்வனி சொன்னாங்க!''

அவள் கூறியதுமே, சட்டென்று லிங்கேஷ்வரனின் முகத்தில் சட்டென்று ஒரு திரை விழுந்தாற்போல் கரிய நிழல் படர்ந்தது.

அஷ்வந்த்தின் முகத்தில் குழப்பமும் ஆராய்ச்சியும் தெரிய, மறு கணமே எழுந்து இடைமறித்தார் லிங்கேஷ்வரன்.

"இப்பப் புரியுது அஷ்வந்த்! அவ மோசமானவன்னு ரங்கராஜ் சொன்னப்ப நான் நம்பலை! ஆனா அது உண்மைன்னு இப்ப நல்லா உணர்றேன்!

"அவ சரியான கை காரிப்பா! உன்னோட போட்டோவை எங்கேயோ ஸ்டுடியோவிலேருந்து வாங்கி மாட்டி வச்சி எல்லா ப்ளானும் பண்ணித்தான், உன்னை வளைக்க முயற்சி பண்ணியிருக்கா!

"பெரிய இடமாச்சே.. இது மாதிரி கதை விட்டா, பயந்து போய் தன்னை எத்துப்பாங்கன்னு சதிவலை பின்னி, அதிலே நம்ம குடும்பத்தையே மாட்டி வைக்க சில்வியாவை ஒரு பகடைக் காயா நல்லா பயன்படுத்தியிருக்கா!

"ஆரம்பத்திலிருந்து திட்டம் போட்டு நடிச்சி, உன் அம்மாவை கோவில்லே காப்பாத்தற மாதிரி பாவ்லா செஞ்சி, உன்னையும் மயக்க முயற்சி பண்ணி, இந்த சொத்துக்கு அதிபதியாகணும்னு இவ்வளவு செஞ்சிருக்கா பாரு!

"நான், இன்னிக்கே அவளை டிஸ்மிஸ் செய்ய ஆர்டர் போடறேன்" உச்சஸ்தாயியில் கத்தினார்.

"மாமா! நீங்க சொல்ற மாதிரியெல்லாம் சத்தியமா என்னால கற்பனை பண்ணிக் கூட பார்க்க முடியலை! த்வனி நல்லவங்க...!"

சில்வியாவின் குரல், ஆழிப் பேரலையின் இரைச்சலால் அமுக்கப்பட்ட மனிதர்களின் தீனக் குரலாய் மடிந்தது.

"ப்ச்! எல்லாம் வேஷம் சில்வியா! இனிமே அவளைப் பத்தி ஒரு வார்த்தை கூட இங்கே நீ பேசக் கூடாது..



எனக்கும் அவளோட குள்ள நரித்தனம் புரிஞ்சு போச்சு!" என்ற அஷ்வந்த் வேகமாகத் தந்தையிடம் திரும்பினான்.

"அப்பா! அவளை நீங்க டிஸ்மிஸ் செய்ய வேண்டிய அவசியமில்லை.. அவளே தன்னோட ரெசிக்னேஷன் லெட்டரைக் குடுத்திட்டா! நானும் அக்செப்ட் பண்ணிட்டேன்!" சலிப்புடன் முடித்தான்.

"ஏன்? என்னாச்சு? அவங்களை என்ன செஞ்சீங்க அஷ்வந்த்?" துடித்து எழுந்தபடி கேட்டாள் சில்வியா!

"ம்! தன்னோட வேஷம் கலைஞ்சிடுச்சேன்ற பயத்துல, அவளே அந்த முடிவெடுத்திருப்பா! நீ ஏம்மா இவ்வளவு பதட்டப்படறே? எல்லாத்தையும் மறந்துட்டு சனியன் ஒழிஞ்சுதேன்னு போய், அவங்கவங்க வேலையைப் பாருங்க... போங்க."

ஆணையிடும் குரலில் கத்திவிட்டு, உள்ளே செல்பவரையே பார்த்திருந்தவளுக்குள், எதையுமே நம்ப இயலவில்லை.

அஷ்வந்த்தை, லிங்கேஷ்வரனின் பேச்சு அமைதிப்படுத்தி இருந்தாலும், என்னைப் போல் ஒருவனா...? மனம் ஒரு கணம் யோசிக்கவே செய்தது.

அதற்குள் அவர் குரல், சில்வியாவை அழைத்தது.

"சில்வியா! எனக்கு ஒரு கப் காபி குடும்மா!" சப்தமாகக் கூப்பிட்டார்.

கடும் யோசனையுடன் அவள் உள்ளே செல்ல, அஷ்வந்தும் அவளைத் தொடர்ந்தான்.

* * *

அப்போது கோவிலுக்குச் சென்றிருந்த மூவரும் வந்துவிட, பிறகு அந்தப் பேச்சிறகே இடமின்றிப் போனது.

ஆனாலும், அஷ்வந்த்திற்கும் த்வனிக்குமிடையே, இடைப்பட்ட இந்த நாட்களில் ஏதோ நடந்திருப்பதை அவளால் உணர முடிந்தது.

உடனே அவளுடைய செல்லுக்குத் தொடர்பு கொண்டபோது, அந்த எண் உபயோகத்திலில்லை என்ற பதில் வந்தது.

யோசனையுடன், மறுநாள் அவள் வீட்டிற்கே சென்று பார்க்க வேண்டும் என்று முடிவு செய்தாள் அவள்.

ஆனால் இரு நாட்கள் கழித்து அங்கு சென்றபோதுதான் தெரிந்தது... அவர்கள் வீட்டைப் பூட்டிக் கொண்டு சொந்த ஊருக்குச் சென்ற விபரம்!

வாட்ச்மேனிடம் விசாரித்தபோதும், வேறு விபரம் எதுவும் அறிய முடியவில்லை.

சோர்வுடன் வீடு திரும்பியவளை, தாய் தந்தையின் பிரிவும், கூட்டுக் குடும்பமும் அவினாஷின் அன்பும் மாற்றிவிட, த்வனியின் ப்ரச்சனையை தற்காலிகமாக மறந்தே போனாள் சில்வியா.

* * *

அதே நேரம், தங்களுடைய பண்ணை வீட்டில் ஊஞ்சலில் அமர்ந்து, தனிமைத் தவமிருந்தாள் த்வனி.

அந்த நிமிடம், மாயவனை மனதில் நினைத்து உருக்குலைந்த ஆண்டாள் நாச்சியாரின் நிலையிலிருந்தாள், அவள்!

தன் நாயகனை நினைத்து வாடி வதங்கிப் போய், ''என் உள்ளம் உன்னை நோக்கியே ஓடுகிறதே... என் மீது இரக்கமே உண்டாகவில்லையா? என் சிந்தை சிதைக்கிறாயே...? இவை நீ மாலை சூடினால் மட்டுமே தணியும்!'' என்று உள்ளம் உருகிக் கசிந்து, படிப்போரை



நெஞ்சுருக வைக்கும் கோதை ஆண்டாளின் நினைவு வந்தது அவளுக்கு!

**''வண்ணம் திரிவும் மனம் துழைவும்...**
**மானமிலாமையும் வாய் வெளுப்பும்...**
**உண்ணலுறாமையும் உள் மெலிவும்...**
**தண்ணந் துழாயெனும் மாலை கொண்டு**
**சூட்டத் தணியும்!''**

என்று ஆண்டாள், அரங்கன் மேல் பாடிய காதல் குமுறல் பாடல்களே.. இன்று அவள் நிலை உரைப்பதாய்!

## 38

நாட்கள், காற்றைக் கிழித்து உயரும் காற்றாடியாய் விரைந்தன.

இப்போது, சில்வியா கருவுற்றிருந்தாள்.. அவினாஷிற்கும் அமெரிக்காவில் வேலை கிடைத்து இருந்தது.

அடுத்த வாரமே, இருவரும் கிளம்புவதாக இருந்தனர்.

அஷ்வந்த், அடுத்த ப்ராஜெக்டிற்கான வேலையில் தீவிரமாக ஆழ்ந்திருந்தான்.

லிங்கேஷ்வரனும் கோமளாவும், வடநாட்டிற்கு ஆன்மீகச் சுற்றுலா சென்றிருந்தனர்.

த்வனி மட்டும், மாறாமல் அப்படியே மனதால் ஊனமாகி இருந்தாள்.

குட்டி ப்ரஜன், இப்போது ஞானராஜுக்கும் அவரது மனைவி பங்கஜத்திற்கும் செல்லப் பிள்ளையாகியிருந்தான்.

பரணிக்குக் கூட இப்போதிருக்கின்ற தன் புது செல் நம்பரை அவள் தெரிவிக்கவில்லை.

அவனும் அவளிடம் பேச முயற்சி செய்து தொடர்பு கிடைக்காமல் போக, அலுவலகத்திற்குப் பேசியபோது தான், அவள் ராஜினாமா செய்த விபரத்தை அறிந்து கொண்டான்.

அவன் மனம், துடித்துப் போனது.

ரங்கராஜால்,அவளுக்கு மீண்டும் ஏதாவது ப்ரச்சனை வந்திருக்குமோவென்ற பயமும் கவலையும், அவனை ஆக்கிரமித்தன.

இன்னும் இரண்டு மாதங்களில், அவன் இந்தியாவிற் குச் செல்லவிருந்தான்.

தன் நண்பனிடம் கூறி அவளுடைய வீட்டிற்குச் சென்று விசாரிக்கும்படிச் சொன்னபோதுதான், அவள் வீட்டைப் பூட்டிக் கொண்டு குடும்பத்துடன் எங்கோ சென்றிருக்கும் விபரம் கிடைத்தது.

தான் ஊருக்கு சென்றால்தான் விபரம் புரியும் என்று எண்ணியவனுக்கு, ஏனோ மனம் அமைதியடைய மறுத்தது.

த்வனி மட்டும், ஒரு தீவிரமான முடிவிற்கு வந்திருந் தாள்.

இனி, தான் சென்னைக்கு சொல்லப் போவதில்லை என்று முடிவெடுத்திருப்பதாக அவள் ஒரு நாள் கூறி யதைக் கேட்டு, அந்தக் குடும்பமே மகிழ்ந்தது.

ஆனாலும், அதற்கு ஆணிவேராயிருந்த காரணத்தைப் பற்றி மட்டும் ஒருவராலும் அறிய முடியவில்லை.

* * *

எப்போதும்போல், அன்றும் தோப்பில் ஒரு தென்னை மரத்தடியில் சோர்வாக அமர்ந்திருந்தாள் அவள்.

முன்பெல்லாம், இசை மழை அவளை எப்போதுமே ஆக்கிரமித்திருக்கும்!



இப்போதெல்லாம், எப்போதாவது தப்பித் தவறி இசையை ரசிக்க நேர்ந்தாலும்... அந்த நிமிடம் கூட அவன் பிரிவையே உணர்த்தின.

முகவரி இல்லாத பல கடிதங்களை, சில நேரங்களில் தான் நள்ளிரவு நேரத்தில் எழுதுவதும்.. உள்ளே தான் உதிர்ந்ததையும்... சிதைந்ததையும்.. நொந்ததையும் கொட்டித் தீர்த்து கிழித்தெறிவதும் வழக்கமாகியிருப்பது, ஞாபகம் வந்தது.

அவளுக்குள் தன்னைத் தொலைத்துத் தேடி, பிறகு தனக்குள்ளேயே களைத்துப் போவதும் புரிவதாய்!

ஆனால்.. அவனா ப்ரஜன்...? ஒரு இமாலயக் கேள்வி அவள் முன்னால் சிகரம் தொட்டு நிற்கிறதே?

வெகுவாகக் களைத்து துவண்டிருந்தது மனது!

இப்போதெல்லாம், அவள் யாரிடமும் பேசுவதே யில்லை.

பொருளற்ற பார்வையும், உணர்ச்சிகளைத் தொலைத்த முகமுமாய், அவளைப் பார்க்கின்ற குட்டி ப்ரஜன் கூட, அவளிடமிருந்து விலகி ஒதுங்கத் துவங்கியிருந்தான்.

அஷ்வந்த்தைக் கண்டவுடன், தான் மீண்டும் உயிர்த் தெழத் துவங்கியதும், அழகாய் மாறிய காதல் கணங்களும் நினைவிற்கு வந்தன.

எல்லாம் ஒரு நொடியில் நாசமாகி, வடுக்களும் தழும்பு களும் இன்று இதயம் முழுவதும் நிறைந்து, உள்ளத்தை யும் உணர்வுகளையும் செல்லரிக்கத் துவங்கியிருந்தன.

ஊமை கண்ட கனவுகளாய், காட்சிகள் உள்ளேயே பதுங்கியிருந்தன.

அந்த நிமிடம், எங்கிருந்தோ காற்றில் மிதந்து வந்து ஒலித்த பாடல்.. அவள் இதயத்திற்குள் இதமாய் புகுந்து காட்சிகளாய் விரிந்தன.

"வெயிலோடு விளையாடி... வெயிலோடி உறவாடி... வெயிலோடு மல்லுக் கட்டி ஆட்டம் போட்டோமே!"

சிறு வயதில் தான் இங்கு வரும்போது, இங்கிருக்கின்ற கிராமத்துப் பிள்ளைகளுடன் பாண்டி ஆடியதும்.. பச்சைக் குதிரை தாண்டியதும்.. கண்ணாமூச்சி விளையாடியதும்.. தோட்டத்து மாமர ஊஞ்சலில் ஆடியதும்.. கூட்டாஞ்சோறு சமைத்ததும்.. கலைந்து போகின்ற பனிப் புகையாய் நினைவில் மிதந்தன.

அன்று, அந்தப் பாடலில் எழுதியிருக்கின்ற வரிகளை அழகிய கவிதைத் தொகுப்புகளாக்கி, எல்லோருடைய எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்த காட்சி அமைப்பை... தன் இளமைக் காலங்களில் அதுபோல் உண்மையாய் தான் வாழ்ந்து களித்தது, இன்று பசுமையுடன் கனத்த இழைகளாய் மனதில் பரவின.

அப்போது அவையெல்லாம் தான், எவ்வளவு சுகமாக இருந்தன...!

எதிர்காலம் பற்றிய எந்தக் கவலையுமின்றி நிர்மலமான மனதுடன், எந்த சோகங்களையும், சிலுவைகளையும் தோளில் சுமக்காமல்.. வெள்ளந்தியாய் சுற்றித் திரிந்த பால்ய காலத்தை நினைத்தால், மனதில் பெரும் ஏக்கம் பரவியது.

வாழ்க்கை.. எல்லாவித அனுபவங்களையும், சுமைகளையும், வேதனைகளையும், வளர வளர நம்முள் பதியன் போடுவதையும், அதற்குள் நாம் புதைந்து போய், நம்மைத் தொலைத்து இறுகி இயல்பை இழந்து விடுவதையும் இன்று புரிந்து கொள்ள முடிந்தது.

இவை எல்லாவற்றையும், உடல் மேல் படிந்த ஆற்று மணல் துகளாய் உதறி விட்டு, மீண்டும் பால்யத்திற்குள் செல்ல முடியாதாவென்ற பெரும் ஏக்கம் மனதில்



வருவதை. இன்று ஏனோ அவளால் தவிர்க்கவே முடியவில்லை.

ப்ரஜனையும் மறக்க முடியவில்லை!

* * *

## 39

அன்று, சில்வியாவும் அவினாஷும் அமெரிக்காவிற்குக் கிளம்பும் நாள்!

அவர்களை வழியனுப்புவதற்காக, அஷ்வந்த் ஏர் போர்ட்டிற்குச் சென்றிருந்தான்.

அவினாஷின் உறவினர்கள் பலரும் அங்கு வந்திருக்க, அவர்களுடைய வெளி நாட்டுப் பயணம் நன்றாக அமைவதற்காக, அனைவரும் வாழ்த்திக் கொண்டிருந்தனர்.

சில்வியா, அஷ்வந்த்துடன் பேசிக் கொண்டிருந்தாள்.

"அஷ்வந்த்! மாமா அத்தை வந்தவுடனே சொல்லுங்க... நானும் காலையிலப் பேசிட்டேன்! நீங்க எல்லாரும் அங்கே வரணும்!"

"ம்.. ஒரு நிமிஷம் இரு.. நீயே அவங்ககிட்டே பேசிடு" என்றபடி, தன் செல்லில் லிங்கேஷ்வரனுக்குத் தொடர்பு கொண்டான்.

அவர் எடுத்தவுடன் விபரம் கூறிவிட்டு, சில்வியாவிடம் கொடுத்தவனுடைய பார்வை, சோம்பலாய் சுற்றுப்புறத்தில் பதிந்தது.

சற்று நேரம் முன்பு ஒரு விமானம் தரையிறங்கி இருந்ததால், இமிக்ரேஷன் செக் முடிந்து டிராலியைத் தள்ளியபடி "இண்டர்நேஷனல் அரைவல்" வழியாகப் பல பயணிகள் வெளியே வந்து கொண்டிருந்தனர்.

திடீரென்று ''ப்ரஜன்...!'' என்று ஒரு உற்சாகக் குரல் தூரத்திலிருந்து அழைக்க, அலட்சியமாகத் திரும்பியவன், ஒரு வயதான மனிதர் விழிகளில் வியப்பும் மகிழ்ச்சியு மாய், தன்னருகே ஓடி வருவதைக் கண்டான்.

கூடவே ஒரு பெண்ணும் வர, குழப்பத்தில் அவன் முகம் சுருங்கினாலும், அவர் விடவில்லை.

அங்கிருந்து ஓடி வந்து, வாஞ்சையுடன் அவனை அணைத்துக் கொண்டார் அவர்.

ஒன்றும் புரியாமல் அவன் சட்டென்று விலக முயற் சிக்க, ''என்னப்பா! நீ உயிரோட இருக்கிற விஷயத்தை எங்க கிட்டே சொல்லியிருக்கக் கூடாது.. நாங்க எவ்வளவு தவிச்சிப் போயிட்டோம்! அம்மா இறந்தப்ப கூட நீ வர லையே? த்வனிதான் வந்திருந்தா'' ஆதங்கத்துடன் கேட்டார்.

''ஏன் ப்ரஜன்? நீ உயிரோடு இருக்கறது அவளுக்குத் தெரியுமா?''

அந்தப் பெண்மணி, ஆவலுடன் அவனுடைய கைகளைப் பற்றி விசாரித்தார்.

அப்போது சில்வியாவும் அங்கு வந்துவிட, சட்டென்று தன்னை விலக்கியபடி இறுகிப் போனான் அஷ்வந்த்.

''சாரி! நீங்க நினைக்கிற மாதிரி நான் ப்ரஜன் இல்லை... அஷ்வந்த்! எங்கம்மா சாகலை.. இன்னும் உயிரோடுதான் இருக்காங்க! உங்களை இது மாதிரிப் பேசச் சொல்லி ஹம்சத்வனிதான் அனுப்பி வச்சாளா?''

கோபமும் நக்கலுமாகக் கேட்டான் அவன்.

இருவருக்கும், ஒன்றுமே புரியவில்லை.

ஆனாலும், அந்தப் பெரியவர்தான் முதலில் சமாளித் துத் தொடர்ந்தார்.



''ஹம்சத்வனிக்கு நாங்க இந்தியா வரதே தெரியாதே? நீ என்னப்பா சொல்றே? அவ உனக்காகவே உயிர் வாழற வளாச்சே...? ஏன் அவளுக்கும் உனக்கும் ஏதாவது ப்ரச் சனையா? முதல்லே நீ சுனாமியிலேருந்து தப்பி எப் படிப்பா உயிர் பிழைச்சே...? இத்தனை நாள் எங்கிருந்தே? அதை முதல்லே சொல்லு!'' கலங்கிய விழிகளுடன் கேட்டார்.

''சார்! நீங்க யாரையோ தப்பா நினைச்சிட்டு, என்கிட்ட வந்து பேசறீங்க! நான் ப்ரஜன் இல்லை.. அஷ்வந்த்...

''சொன்னாப் புரிஞ்சிக்கங்க.. ஹம்சத்வனியை வேலைய விட்டே அனுப்பியாச்சி! கொஞ்ச நாளா நான் நிம்மதியா இருந்தேன்... ஆனா அவ என்னை இன்னும் விடாம துரத்தறதை நினைச்சா, அருவெறுப்பா இருக்கு...''

அவன் முடிப்பதற்குகள், ஹேமமாலினி இடைமறித் தாள்.

''சாரி சார்! நாங்களும் உங்களை ப்ரஜன்னு நினைச்சே பேசிட்டோம்... ஹம்சத்வனிக்கும், இப்ப நாங்க உங்களைப் பாத்ததுக்கும் சம்பந்தமே இல்லை.

''அஞ்சு மாசத்துக்கு முன்னாடி அப்பாவுக்கு உடம்பு சரியில்லாதப்ப அவங்க பேசினதுதான்...! எங்களுக்கே உங்களைப் பாத்தா இப்படி இருக்கே...? அவளுக்கு எப்படி இருந்திருக்கும்...?

''ப்ரஜனை உயிரா விரும்பி.. அவனுக்காகவே வாழ்ந்து.. அவன் இறந்திட்டான்னு தெரிஞ்சும், வேற யாரையுமே ஏத்துக்க முடியாம.. ஒரு குழந்தைய அடாப்ட் பண்ணி அவனுக்கு ப்ரஜன்னு பேர் வச்சி வளத்திட்டு வர்ற அந்த அன்பு மனுஷிக்கு, நிச்சயமா உங்களைப் பாத்தப்ப கஷ்டமாத்தான் இருந்திருக்கும்!''

''நினைச்சிப் பாக்கவே முடியலை... சுனாமியில இந்தோனேஷியாவில் ப்ரஜன் இறந்து போயிட்டதா தெரிஞ்சப்ப... நாங்க எல்லாருமே எப்படி பதறிப் போனோம்...! ஆனா இப்ப உங்களைப் பாத்தா அதிர்ச்சியா இருக்கு! நீங்க ப்ரஜனோட ஐடெண்டிகல் டிவின் மாதிரியே இருக்கீங்க... இட்ஸ் சர்ப்ரைசிங்!''

அவள் முடிக்கும்போதே சில்வியா சட்டென்று குறுக்கிட்டாள்.

''எங்க.. நீங்க என்ன சொன்னீங்க? ப்ரஜன் இறந்தது இந்தோனேஷியாவிலயா?'' என்றவள் வேகமாக அஷ்வந்திடம் திரும்பினாள்.

''அஷ்வந்த்! எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு! சுனாமி வந்தப்ப, நீங்க கூட இந்தோனேஷியாவிலதான் இருந்ததா அப்பா சொன்னாங்க! பிசினஸ் விஷயமா நீங்க அங்கே போனதாலே, உங்களைத் தேடி மாமாதான் அங்கே போய் உங்களை அழைச்சிட்டு வந்ததா, அப்பாவும் அம்மாவும் சொன்னாங்க!

''அந்த இடைப்பட்ட நாட்கள்லே... நீங்க இறந்திருப்பீங்களோன்னு எல்லோருமே ரொம்ப பயந்துதான் போயிருந்தோம்...

''சம்திங் ஃபிஷ்ஷி... எனக்கென்னவோ சந்தேகமா இருக்கு அஷ்வந்த்! அவங்க சொல்றதையும் நீங்க கன்சிடர் பண்ணிப் பாருங்களேன்!

''எப்பவுமே பாதிக்கப்பட்டவர்களுக்கு தானே தெரியும், உண்மை என்னன்னு!

''அவங்க நிரபராதியா என்னன்னு, ஒருத்தரைப் பத்தி விசாரிக்காமலே குற்றவாளியாக்கறது தப்பில்லையா? நீங்க த்வனிக்கு அளிச்ச தீர்ப்பு நியாயமா எனக்குப் படலை!



''மாமாவும் தேவையில்லாம அன்னிக்கு ரொம்பக் கோபப்பட்ட மாதிரித் தோணுச்சி... எதையோ மறைக்கறதுக்காக மத்தவங்க மேல பழியைத் தூக்கிப் போடற மாதிரிதான் அந்த ரங்கராஜ் கூட த்வனி மேலயும் வீண் பழி சுமத்தியிருக்கணும்.. யோசிங்க ப்ளீஸ்!'' என்றவள், அந்தப் பெரியவரிடம் திரும்பினாள்.

''நான் இன்னும் கொஞ்ச நேரத்துல 'செக் இன்'னுக்கு உள்ளே போயாகணும்! உங்களுக்குத் தெரிஞ்சு இவரைப் பத்தி வேற ஏதாவது அடையாளம்.. ஏதாவது பர்த் மார்க் மாதிரித் தெரியுமா?'' ஆவலுடன் கேட்டாள்.

''ம்... இவர் முகத்துல இருக்கற அந்த சின்ன வடு, எங்க ப்ரஜனுக்கும் இருக்கும்.. அதான் என்னை யோசிக்க வச்சிது!

''அப்புறம்.. இப்பதான் நினைவுக்கு வருது...! ப்ரஜனுக்கு நெஞ்சிலே பெரிய மச்சம் ஒண்ணு.. ப்ரவுனா படர்ந்த மாதிரி இருக்கும்.. அதை அவன் யாருக்குமே காட்ட மாட்டான்! சின்ன வயசிலிருந்தே ரொம்ப வெக்கப் படுவான்! குழந்தையிலேருந்து அவனோடப் பழகினதாலே எனக்கு அது தெரியும்!''

அவர் கூறும்போதே, அஷ்வந்த்தின் விழிகள் தெறித்து விடும்போல் விரிந்து சிவக்க, கை முட்டிகளிரண்டும் இறுக மூடி நரம்புகள் தெறித்து விடும்போல் தளைத்தன.

இதுவரை, யார்க்குமே காட்டாத, தான் மட்டுமே அறிந்த.. தன்னுடைய பரந்த மார்பில் படர்ந்திருக்கும் அந்த மச்சம் கேள்விக்குறியாய் விசுவரூபமெடுத்து, அவன் முன்னால் நின்றது.

* * *

அந்தக் கணம், அவனையே நோக்கிய மாலினியும் சில்வியாவும் அந்த மாற்றத்தைக் கண்டு, திகைத்து விழித்தனர்.

கைலாஷின் முகத்தில் மட்டும், தான் எதிர்பார்த்த விடை கிடைத்த இமாலய சந்தோஷம் தெரிவதாய்!

அப்போது, அவினாஷ் அருகில் வந்து மனைவியை அழைக்க, உடனே அஷ்வந்த்திடம் திரும்பினாள் சில்வியா.

''அஷ்வந்த்! அவங்க சொல்றது மட்டும் உண்மையா இருந்தா.. ப்ளீஸ் அவங்க சொல்றதை கொஞ்சம் நம்பறதுக்கு முயற்சி பண்ணிப்பாருங்க!''

''அன்னிக்கு நான் உங்க கிட்டே த்வனியோட கதையை சொன்னப்ப, திடீர்னு மாமா வயலெண்ட்டா மாறி வித்தியாசமா ரியாக்ட் பண்ணின மாதிரி தான் எனக்குத் தோணுச்சி.. ஆனா அப்ப அதை நான் பெரிசா எடுத்துக்கலை...

''இப்போ, மாமாவும் அத்தையும் ஊரிலே இல்லாததாலே, நீங்க இவங்க பக்க நியாயம் உண்மையான்னு பாக்கலாம் இல்லையா?

''எனக்கும் ரொம்ப க்யூரியாஸிட்டியா இருக்கு! நான் கிளம்பறேன் அஷ்வந்த்.. டேக் கேர்.. நான் அங்கே போனதும் கால் பண்றேன்.. வரேங்க'' என்றபடி விடை பெற்றாள் சில்வியா.

அவினாஷும், அஷ்வந்த்திடம் கை குலுக்கி விடை பெற்றுச் செல்ல, அப்போதுதான் அங்கு வந்தார் ஒருவர்.

''கைலாஷ் சார்! வெல்கம் டு இந்தியா! எப்படி இருக்கீங்க?'' என்றபடி அந்த வயதானவரை அணைத்துக் கொண்டவர், மாலினியையும் வரவேற்றார்.

பிறகு பரஸ்பரம் நலம் விசாரித்துவிட்டு தனக்குள்ளேயே உறைந்து போய் தீவிர யோசனையுடன் நின்றிருந்த அஷ்வந்த்தை, அவருக்கு அறிமுகப்படுத்தினார் கைலாஷ்.



''இவர் என் நண்பனோட மகன்! உனக்கு ஞாபகம் இருக்கா? மூணு வருஷத்துக்கு முன்னாடி ஒருநாள் இவரை அழைச்சிட்டு நான் உன்னோட வீட்டுக்கு வந்தேன்! இவருக்கு பெண் கேட்கப் போறதா சொல்லிட்டுப் போனோமே.. நினைவு வருதா?'' மெதுவாகக் கேட்டார்.

''ஓ! இப்ப தான் நினைவு வருது... ஹலோ சார் எப்படி இருக்கீங்க...?'' என்று அஷ்வந்த்தின் கைகளைப் பிடித்தபடிக் கேட்டார் அவர்.

கண்கள் கடும் தீவிரத்துடன் இடுங்கியிருக்க, குழம்பிய முகத்துடன் ''ம்... நல்லாருக்கேன்'' பிசிர் தட்டும் குரலில் கூறினான் அவன்.

''ப்ரஜன்! என் கூட வர்றியாப்பா? நம்ம வீட்டுக்குப் போகலாம்... அங்கே போய் எல்லாம் பேசலாம்!'' மெதுவாகக் கேட்டார் கைலாஷ்.

குழப்பத்துடன் சரியென்பது போல் தலையசைத்தவன், உடனே அவருடன் கிளம்பினான்.

மனம் குழம்பிய குட்டையாய் கலங்கியிருக்க, ஏதேதோ நினைவுகள் அவனை வதைத்தன.

## 40

கைலாசத்தின் வீட்டிற்கு சென்றபோது தான், பல அதிர்ச்சிகளை அவன் சந்திக்க நேர்ந்தது.

அந்த வீட்டை சுத்தம் செய்து வைத்தபடி, அங்கு ஒரு கேர் டேக்கரும் அவருடைய மனைவியும் காத்திருந்தனர்.

அங்கு சென்றவுடன் அனைவரும் சாப்பிட்டு விட்டு ஓய்வெடுக்கும்போது தான், மீண்டும் அவனுடன் பேச ஆரம்பித்தார் கைலாஷ்.

தன் மகளை அழைத்து பழைய ஆல்பங்களை எடுத்து வரச் செய்து, அவனிடம் காட்டினார்.

அதிலிருந்த புகைப்படங்களை ஒவ்வொன்றாக அவனிடம் காட்டி, நளினியையும் மேகநாதனையும் அவர் அறிமுகப்படுத்தியபோது, ஏனோ அவனறியாமலே இதயம் கசிந்தது.

சிறு பிராயத்தில் எடுக்கப்பட்ட ப்ரஜனுடைய புகைப் படங்களும், அதில் இருந்தன.

ஆரம்பத்திலிருந்து.. தான் மேகநாதனுடைய குடும்பத் துடன் பழக ஆரம்பித்தது... பிறகு பார்ட்னரானது... மாலினிக்குப் பிறகு ப்ரஜன் பிறந்தது... நளினி சைனீஸ் பெண்ணாக இருந்ததன் ரிஷி மூலம்.. பிறகு, தான் இந்தியா வந்தது... மேகநாதனின் இறப்பு.. ப்ரஜன் டிபார்ட் மெண்டல் ஸ்டோர்ஸ் பிசினஸை, தன் மருமகனிடம் ஒப்படைத்தது... சிறு வயதிலேயே தன் திறமையால் நிறுவனத்தின் உயர் அதிகாரியாக உயர்ந்தது... ஹம்ஸத் வனியை உயிராய் விரும்பியது... பெண் கேட்டு இந்தியா வந்து அங்கு அவரையும் அழைத்துச் சென்றது... அங்கு ஆதிராஜ் தன் பால்ய நண்பராய் இருக்க, ப்ரச்சனையின்றி திருமணம் முடிவானது...

இறுதியாக திருமண நாளுக்கு சரியாக ஒரு மாதம் முன்பு சுனாமியில் அவன் பலியானதாக செய்தி வந்தது... ஹோட்டல் நிர்வாகத்தினரால் ஒப்படைக்கப்பட்ட அவனுடைய பொருட்களுடன் நளினி உடைந்து போய் சிங் கப்பூர் திரும்பியது... த்வனியின் நிலை.. அவளுடைய தந்தையின் இழப்பு... அவள் ஒரு குழந்தையைத் தத் தெடுத்தது... ஏழெட்டு மாதங்கள் முன்பு நளினி இறந்தது... அதற்கு வந்திருந்த த்வனி எல்லாப் பொறுப்



பையும் மாலினியிடம் ஒப்படைத்தது... அந்த வீட்டின் மூலம் வருகின்ற வருமானத்தை அநாதை இல்லங் களுக்கு அனுப்ப செய்தது.. என்று எல்லா விபரங் களையும் ஆதியோடந்தமாக அவர் விவரிக்க, இறுகிப் போய் நாணேற்றிய வில்லின் விரைப்புடன் அமர்ந்திருந் தான் அவன்.

சமீபத்திய பல நினைவுகள், உள்ளே முட்டி மோதி நீர்க்குமிழிகளாய் உடைந்து சிதறின.

ஆனால்... ஏதோ புரிந்தும் புரியாதது போல் ஒருவிதக் குழப்ப உணர்வு!

கைலாசம் சொல்வது உண்மைதானென்பதை உணரத் துவங்கிய நேரத்தில்தான், பெரும் சஞ்சலங்களும் குழப்பங்களும் அவனை ஆக்ரமித்தன.

தான், ப்ரஜன் என்றால் லிங்கேஷ்வரனும், கோமளா வும் யார்... நெஞ்சம் முரண்பட்டு விட, அதில் பல கேள்விச் சரங்கள்!

இந்த நேரம், அவர்கள் ஊரிலில்லாததும் நல்லதாகவே பட, உடனே இதற்கு ஒரு முடிவு காண வேண்டுமென்ற உறுதி மனதில் வந்தது.

"அங்கிள்! எனக்கு நீங்க ஒரு உதவி செய்ய முடியுமா? நான் சிங்கப்பூருக்கு உடனே கிளம்பறேன்.. அங்கே ப்ரஜனோட வீட்டை நான் பாக்கணும்! எனக்கு அட்ரஸ் குடுக்க முடியுமா?" பரபரப்புடன் கேட்டான்.

"அதென்ன ப்ரஜனோட வீடு.. என்னோட வீடுன்னு சொல்லுப்பா!

"நான் எல்லா விபரத்தையும் இப்பவே என் மாப் பிள்ளைக்கு சொல்லிடுறேன்.. அவரே ஏர்போர்ட்டுக்கு வந்து உன்னை பிக்கப் பண்ணி வீட்டுக்கு அழைச்சிட்டுப்

போயிடுவாரு! அங்கேபோனா உனக்கு எல்லா உண்மை யும் புரிஞ்சிடும்!

''அப்புறம்.. எனக்கு ஒரு பெரிய சந்தேகம்.. எப்படிப்பா நீ எல்லாத்தையும் மறந்து அஷ்வந்த்தா மாறினே?'' யோசனையாகக் கேட்டார்.

''தெரியலை அங்கிள்! எனக்கு இப்போ பழைய ஞாப கமே கொஞ்சம் கூட இல்லை! ஒரு நாள் நான் ஹாஸ் பிடல்லே தான், முதன் முதல்லே கண்ணு முழிச்சேன்! அப்போ என் முன்னாடி இருந்த டாக்டர்கிட்ட தான், நான் யாருன்னே தெரியலைன்னு சொன்னேன்!

''அப்போ, மறுநாளே எங்கப்பா லிங்கேஷ்வரன் வந்தாங்க! என்னைத் தன் மகன்னு அடையாளம் காட்டி அழுதாங்க! ட்ரீட்மெண்ட் முடிஞ்சு வீட்டுக்குப் போனப் புறம், என்னோட தாய்நாடு இந்தியான்னும், வேலை விஷயமா நான் இந்தோனேஷியா வந்ததாகவும் அவங்க சொன்னாங்க!

''என்னோட பாஸ்போர்ட், திங்க்ஸ் எல்லாமே ஹோட் டலே தொலைஞ்சு போயிட்டதாவும் சொன்னாங்க!

''எனக்கு கையில மட்டும் லேசா ஃப்ராக்சர்.. அது சரி யாகி ரெண்டு மாசம் கழிச்சி தான் நான் ஊருக்கு வந்தேன்!

''அப்போதான், அம்மாகிட்டே பழைய நினைவுகள் மறந்த மாதிரி காண்பிக்க வேண்டாம்னு கெஞ்சிக் கேட் டுக்கிட்டாங்க.. நானும் அதே மாதிரி இயல்பா இருந்தேன்!

''ஆனாலும், ஒரு தடவை, எனக்கு எங்க சித்தப் பாவையே அடையாளம் தெரியாததாலே, அவங்களுக்குத் தெரிஞ்சிடுச்சி!

''அப்புறம், அப்பாதான் கம்ப்யூட்டர் சம்பந்தமா ரெண்டு வருஷம் எனக்கு ஸ்பெஷலா ட்ரெயினிங் குடுத்தாங்க!



எனக்கு படிச்சதெல்லாம் அவ்வளவா மறக்கலை.. சுலபமா ரீகலெக்ட் பண்ண முடிஞ்சுது!

''இது ஒரு வகையான செலக்டிவ் அம்னீஷியான்னு அப்புறமாத் தெரிஞ்சிக்கிட்டேன்...''

''அப்புறம், ஒரு ஆறு மாசம் முன்னாடிதான் எங்க நிறுவனத்துல பொறுப்பேத்துக்கிட்டேன்... அப்பதான் த்வனியை அங்கே பாத்தேன்...''

''இப்பவும் எனக்கு எதுவுமே ஞாபகம் வரலை! அவ என்னைப் பாத்து 'ப்ராஜு'ன்னவுடனே.. ஆசையா 'ஐ லவ் யூ'ன்னு சொன்னப்ப..'' இத்தனை நாளா என்னை விட்டுட்டு எங்கே போயிருந்தீங்க'ன்னப்ப... எனக்கு அது ஒரு நடிப்பாத்தான் பட்டது...

''ஒரு பணக்காரனைப் பாத்து வளைக்க முயற்சிக்கற வில்லியாதான் உடனே அவளைப் பத்தி கணிச்சேன்...!'' அதற்குள் குறுக்கிட்டார் கைலாஷ்.

''த்வனியா... அதுவும் பணத்தைப் பெரிசா மதிக்கிற வளா? தப்புப்பா.. உங்கம்மா குடுத்த கோடிக்கணக்கான டாலர் மதிப்புள்ள அந்த வீட்டையே தூக்கியெறிஞ்சவ அவ! பாவம்ப்பா அவ! நீ, உடனே போய் அவளைப் பாரு!''

ஆர்வத்துடன் அவர் கூற, ''இல்லை அங்கிள்! என்னைப் பத்தின ரிஷிமூலத்தை சிங்கப்பூருக்கு போய் நல்லாத் தெரிஞ்சப்புறம் தான் நான் அவளைப் பாக்கவே போகப் போறேன். உடனே டிக்கெட்டுக்கு ஏற்பாடு பண்றேன்.. தேங்க்ஸ் அங்கிள்!''

அவருடைய கைகளைப் பற்றி நெகிழ்ச்சியுடன் நன்றி கூறிவிட்டு அவன் கிளம்ப, மாலினியும் புன்னகையுடன் விடை கொடுத்தாள்.

* * *

வீட்டிற்கு செல்லும்போதுதான், த்வனியைப் பற்றிய நினைவுகள் அவனை அதிகமாய் வதைக்க ஆரம்பித்தன.

அவள் தன்னைப் பார்த்ததும் எவ்வளவு தவித்திருப்பாள்... தன் புறக்கணிப்பாலும் வெறுப்பாலும் எப்படித் துடித்திருப்பாள்... மனம் ஊமையாய் புழுங்கியது.

எதையுமே நம்ப முடியாமல்.. தான் யாரென்று உணர்ந்த அந்த நிலை, பெரும் மனச்சோர்வையே ஏற்படுத்துவதாய்!

உடனே ட்ராவல்ஸுக்கு போன் செய்து மறு நாளிரவே டிக்கெட்டை பதிவு செய்தவன், பயணத்திற்கான ஆயத்தங்களை செய்ய ஆரம்பித்தான்.

ஒரு ப்ராஜெக்ட் விஷயமாக, தான் சிங்கப்பூருக்கு செல்வதாக லிங்கேஷ்வரனிடம் தெரிவித்தவன், இரண்டு நாட்களில் திரும்பி விடுவதாகக் கூறிவிட்டு வைத்தான்.

மறுநாள் நள்ளிரவு விமானத்தில் கிளம்பினான் அவன்.

சிங்கப்பூருக்குச் சென்று, விடிகாலையில் 'சாங்கி' ஏர்போர்ட்டில் இறங்கிய போது, அங்கு அவனை ஆவலுடன் வரவேற்றார் மாலினியின் கணவர் வேலாயுதம்.

''ப்ரஜன்! உங்களை மறுபடியும் உயிரோடப் பாப்பேன்னு நான் கனவுல கூட நினைக்கலை! காட் இஸ் கிரேட்!

''உங்களுக்கு பழைய நினைவுகளெல்லாம் மறந்திட்டதா மாமாவும், மாலினியும் சொன்னாங்க... கேக்கவே ரொம்பக் கஷ்டமா இருக்கு!

''நளினி ஆன்ட்டி இருக்கும்போதே நீங்க வந்திருந்தா அவங்க எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பாங்க!

''ஹம்சத்வனியைப் பார்த்தீங்களா? இப்பதான் அவங்க வாழற வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் கிடைச்சிருக்கும்!''



உணர்ச்சிகள் நிறைந்த குரலில் அவர் முடித்ததும்,

''இல்லை! பாக்கலைங்க! இங்கிருந்து போய்த் தான் பாக்கணும்! உங்களை சந்தித்ததிலே எனக்கும் ரொம்ப சந்தோஷம்!'' என்றான் நெகிழ்ச்சியுடன்!

நேரே தன் வீட்டிற்கே அவனை அழைத்துச் சென்றார் அவர்.

அங்கு அவனை ஓய்வெடுக்கும்படிக் கூறிவிட்டு ஸ்டோருக்குச் சென்று சில வேலைகளை மேற்பார்வையிட்டுவிட்டுத் திரும்பினார்.

அதற்குள் அவன் குளித்துவிட்டு சாப்பிட்டு முடித்து அமர்ந்திருந்தான்.

''அதுக்குள்ளே எழுந்திரிச்சிட்டீங்களா? சாப்பிட்டாச்சா? கடைவரைக்கும் போயிட்டு வந்தேன்!'' இயல்பாக விசாரித்தபடி அமர்ந்தார்.

''ம்.. தூக்கம் வரலை! அதான் குளிச்சி சாப்பிட்டுட்டு ரெடியா இருக்கேன்... நாம வீட்டைப்பாக்கப் போகலாமா?'' ஆவலுடன் கேட்டான்.

அவரும் சரியென்று எழ, அவருடன் கிளம்பினான்.

## 41

பிஷானில் இருக்கும் அந்த வீட்டிற்குச் சென்றபோது, அவனை எந்த நினைவுகளுமே பாதிக்கவில்லை.

முதலில் கீழே குடியிருந்த சைனீஸ் குடும்பத்திடம் அவனை அறிமுகப்படுத்தினார் வேலாயுதம்.

பிறகு அவனை அழைத்துக் கொண்டு மாடிக்குச் சென்றவர், முதலில் அவனுடைய அறைக்கதவைத் திறந்தார்.

பெரிதாக மாட்டப்பட்டிருந்த ப்ரஜனின் புகைப்படத்தில் தோற்றம், மறைவு எழுதப்பட்டிருக்க, செயற்கை மாலையணிந்து அவன் குறும்பாகச் சிரித்துக் கொண்டிருந்தான்.

பேரதிர்ச்சியும், வியப்புமாய் அஷ்வந்த் வேகமாக அதனருகில் சென்று பார்த்த போது, கைலாஷ் கூறியது தான் உண்மையாய்!

வலது நெற்றியில் பிரதானமாய் தெரிந்தது, அந்த வடு!

தன் படத்திற்கே மாலை போட்டிருப்பதைக் காணுகின்ற துரதிர்ஷ்டம், தன்னைத் தவிர வேறு யாருக்கும் வாய்க்காது என்ற விரக்தியில் சுழித்தன, அவன் உதடுகள்!

வேகமாக உள்ளே சென்ற வேலாயுதம், அந்தப் படத்திலிருந்த மாலையைப் பிய்த்தெறிந்தார்.

அந்த அறையைச் சுற்றிப் பார்வையிட்டவனது விழிகள், ஒரு இடத்தில் நிலை குத்தி நின்றன.

படுக்கைக்கு அருகிலிருந்த டீப்பாயில் அவனும் ஹம்சத்வனியும், இணைந்து நின்றிருந்த புகைப்படம் அழகாக வீற்றிருந்தது.

பார்வை ஸ்தம்பித்துவிட, மெல்லச் சென்று அதைக் கையிலெடுத்துப் பார்த்த போது, தான் அதில் மிகவும் மகிழ்ச்சியுடனிருப்பது புரிந்தது.

அருகில் நின்றிருந்த த்வனியின் முகத்தில், வெட்கமும் பூரிப்பும் இணைந்து தெரிந்தன.

மனதிற்குள் எங்கோ, மௌனமாய் ஒரு வலி எழுந்தது.

பிறகு அந்த அறையை இருவரும் சுற்றிப் பார்த்த போதுதான், அவனுடைய பீரோவில் நிறைய ஆல்பங்கள் தெரிந்தன.

பல ஆல்பங்களில், அவனும் த்வனியுமே நிறைந்திருந்தனர்.



சி.டி.க்களில் எல்லாம் ''ஹனி அண்ட் மீ'' என்று எழுதப்பட்டிருந்தன.

அதில் ஒன்றை எடுத்து அங்கிருந்த டிவிடி ப்ளேயரில் போட்டு டிவியை உயிர்ப்பித்த போது, செண்டோசா தீவில் இருவரும் உற்சாகத்துடன் சுற்றித் திரிந்த காட்சிகள், காதலுடன் அதில் பதிவாகியிருந்தன.

ஒரு சிற்றிறகு மோதியதில், அவனுடைய இதயமே சுக்கு நூறாய் சிதறியதைப் போல்!

நேசம் சுமந்திருந்த அந்தக் கணங்கள், அவனுக்குள் பரவித் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன.

கண்களை இறுக மூடித் தவிப்புடன் நினைவுகளை வரிசைப்படுத்த, அவற்றில் எல்லாம்.. த்வனியின் முகவரியே!

அருகிலிருந்து வார்ட்ரோபைத் திறந்தபோது, அதில் பலவகையான உயர் ரக உடைகள் நிறைந்திருந்தன.

ஹேங்கர்களில் மாட்டியிருந்த கோட் சூட்களுக்கு கீழே ஒரு நீல நிற டைரி தெரிந்தது.

உடனே மனம் குறுகுறுக்க, தான் அதில் என்ன எழுதி இருக்கிறோம் என்ற பெரும் எதிர்பார்ப்புடன் அதைக் கையில் எடுத்தான்.

'2004' என்று மேலே தங்க நிறத்தில் எழுத்துக்கள் மின்ன, சுவாரசியமும் ஆவலுமாகப் பிரித்தான்.

ஆனால் முதல் பக்கமே அழகிய கையெழுத்தில் கவிதை ஒன்று தெரிந்தது... அடியில் 'ஹனி' என்று எழுதப்பட்டிருந்தது!

**ப்ரியமான**
**ப்ரஜு...!**
**என்**
**இதயக் கருவறையில்...**

நான்
இனிதாய் சுவாசித்த
முதல் மூச்சு
நீ!
என்
மனதின் பக்கங்கள்
முழுதும்..
எழுதி வைத்த
வரிகளாய்...
உன் நினைவுகள்!
என்
நேச நெஞ்சின்
நிழல் மூச்சு...
தினம்
சுவாசம் தேடி...
உன்
இதயம் தீண்டித்
தவிப்புடன்
திரும்புகிறது!
என்னையே...
எனக்கு
அறிமுகம் செய்தவனே!
என்
உயிரினும் மேலானவனே!
உனக்கெனக்
காத்திருப்பேன்...
உயிர்ப்பூவாய்
பூத்திருப்பேன்!

- ஹனி!

முதல் பக்கத்தைத் திருப்பியதும், அழகிய கையெழுத்தில் அன்றைய நிகழ்வுகள் எழுதப்பட்டிருந்தன.



மெதுவாகப் புரட்ட, மே மாதத்தில் ஹம்சத்வனி சிங்கப்பூருக்கு கிளம்பியதிலிருந்து பக்கங்கள் சுவாரசியத்தை சுமக்க ஆரம்பித்திருந்தன.

அவனை முதன் முதலில் சந்தித்த நாளிலிருந்து தொடங்கி... 'தான் உணர்வு பூர்வமாய் உருகியதை... அவன் மேல் வைத்திருந்த நேசத்தை.. தன்னை அவன் உயிராய் சுவிகரித்ததை... இருவருக்குமிடையே நடந்த இனிய இதயப் பரிமாற்றத்தை.. நளினி அதை இனிதாய் ஏற்றுக் கொண்டதை.. தங்களுக்குள் பொங்கிய காதல் வெள்ளத்தை.. ஒருவரை விட்டு ஒருவர் பிரிய முடியாமல் இணைந்திருந்ததை.. அவனுக்கு தான் பரிசளிக்க மறுத்த முதல் முத்தத் துளியை...' இப்படி எல்லாவற்றையும் பற்றி அழகிய கவிதை போல் எழுதியிருந்தாள்.

படிக்கப் படிக்க... அவனுக்குள் ஏதோ ஒரு இன்ப நதி ஊற்றாய்ப் பொங்கிப் பிரவகிப்பது போல்!

தான் இறப்பதற்கு முன்பு, இன்னும் ஒரு முறை அவளை முழுதாய்க் காதலித்து வாழ வேண்டும் போல்...!

தான் எவ்வளவு நேசிக்கப்பட்டிருக்கிறோம் என்ற உணர்வே, பெரும் சிலிர்ப்பாய்!

எந்த ஒரு எதிர்பார்ப்புமின்றி தன் உயிரினில் கலந்தவளை.. தனக்காக இன்றும் இளமையைத் தொலைத்துத் தனித்திருப்பவளை.. தன் இதய தேவதையை.. உடனே தரிசிக்க வேண்டும்போல்!

நெஞ்சில் காதல் வெள்ளம் பெருக, மலர்களின் மடலிற்குள் பெருகும் நறுமணமாய்.. நேசம் நறுமணமாய் பரவியது.

உடலும் உள்ளமும் தவிப்புடன் சிலிர்த்தன.

சூரியனைக் குளிர்வித்து இதமாக்க ஒற்றைப் பனித் துளி போதுமென்பது இன்று தெரிவதாய்!

தன் இதயத்தின் ரகசிய அலைப்புறுதல்... சங்கொலியாய் ஊருக்கே கேட்பது போன்ற ஒரு வித பிரமை வருவதாய்!

ஆனால், அவளைத் தான் எவ்வளவு அவமானப் படுத்தினோம் என்ற உணர்வு,அவள் இதயத்தை இறுகப் பிசைவதாய்!

தான், எவ்வளவு அதிர்ஷ்டம் செய்திருக்கிறோம் இப்படி ஒரு இணையை வாழ்க்கைப் பரிசாய் அடைவதற்கென்று நினைக்கும்போதே, தன்னால்அவள் மூர்க்கமாய் புறக்கணிக்கப்பட்ட கணங்கள், வலியுடன் நெஞ்சுக்குள் ரணமாய்ப் பரவின.

கடவுளே... அவள் என்னை மன்னித்து தன் துணையாக ஏற்றுக் கொள்வாளா என்ற கேள்வி பயப்பந்தாய் எழும்பி தொண்டைக்குள் அடைத்தது.

இறுக மூடிய விழிகளைத் திறந்தபோது, கண்களுக்குள் நுழைந்து இதயத்தை அடைந்தாள் அவள்.

"ஹனி!" மென்மையாய் ஒரு யாழின் மீட்டலைப் போல் அவள் பெயரை உச்சரித்தன அவனுடைய உதடுகள்!

உள்ளூர, உணர்வுகளில் தேன் பாய்ந்து உலகமே அழகாகியது!

உடனே இழப்பின் வலி கனமாய்ப் பரவி விட, என் சொர்க்கம் நீயென்று தோன்றியது.

"என்னவளே... விண்மீன்களைத் தொடுத்து விழிகளாய் விரித்தவளே! என் தனிமைத் துயர் துடைக்க வந்த தேவதையே.. சடுதியில் வருகிறேன்! காத்திரு என் கண்மணி!"

மனம் புதுக்கவிதையாய் புலம்பியது.

"உன் நேசம் புரிந்த இந்த நொடியில் மீண்டும் ஒருமுறை நான் ஜனனமெடுத்திருப்பதை நீ அறிவாயா?"



அவனுடைய ஒவ்வொரு அசைவையும், முக மாற்றத்தையும், பரிதவிப்பையும் கண்ட வேலாயுதம், வேகமாக வந்து வாஞ்சையுடன் அவனுடைய தோள் பிடித்து அணைத்துக் கொண்டார்.

"ப்ரஜன்! கவலைப்படாதே... மாலினி எல்லாம் சொன்னா! த்வனி உன்னைக் கட்டாயம் புரிஞ்சுப்பா!

"அவளால உன்னைப் புரிஞ்சிக்க முடியலைன்னா வேற யாராலப்பா உன்னை அறிய முடியும்! அவ ரொம்ப நல்லவ ப்ரஜன்! நான் ரொம்ப ஆச்சர்யப்பட்டிருக்கேன் இப்படி ஒரு ப்ரியமான்னு!

"கல்யாணம் முடிஞ்சவங்களே மாறிடறாங்க... ஆனா உனக்காக அவ தன்னுடைய ஐம்புலன்களையும் அடக்கி, ஒரு சந்நியாசி மாதிரி தவமிருக்காளே.. அதை எப்படிப் பாராட்டறது! நீ ரொம்பக் குடுத்து வச்சவன் ப்ரஜன்!" நெகிழ்ந்து போய்க் கூறினார் அவர்.

அவனுடைய இதயமும், இமைகளும் சட்டென்று நனைந்தன.

"இவ்வளவு நடந்தப்புறமும், அவ என்னை ஏத்துப்பாளா?"

நம்ப முடியாத தவிப்புடன் ஒரு குழந்தையைப் போல் கேட்டான் அவன்.

"நிச்சயமா! உனக்காகவே உயிர் சமக்கிறவப்பா அவ! உன்னை எப்படி அவளால நிராகரிக்க முடியும்? கவலைப் படாம வா.. உங்கம்மா ரூமுக்குப் போகலாம்!" என்றபடி அவனை மற்றொரு அறைக்கு அழைத்துச் சென்றார் அவர்.

அந்த அறையில் நளினியின் புகைப்படம் மாட்டப்பட்டிருக்க, அவருடைய பொருட்கள் எல்லாம் அந்த அறையில் அடுக்கப்பட்டிருந்தன.

'கடவுளே! என் தாயின் இறுதிச் சடங்கைக் கூட நடத்த முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு ஏன் நான் தள்ளப் பட்டேன்?'

பெரும் வருத்தத்துடன் அந்தப் புகைப்படத்திடம் சென்றவனுக்குள், இனம் புரியாத ஒரு இறுக்கம், இதயம் சூழ்வதாய்!

''அம்மா!'' உணர்வுகள் சிலிர்ப்பாய் ஓலமிட்டன... அவருடைய கருவறைக் கதகதப்பு அந்த விழிகளில் தெரிவதுபோல்...!

என்னை அளவுக்கதிகமாய் நேசித்த இரு பெண்களுக்குமே நான் துயரங்களையும் வலிகளையும் மட்டுமே பரிசாய் அளித்திருக்கிறேன் என்று எண்ணும்போதே.. தன் மீது அளவுக்கதிகமான கோபம் வந்தது அவனுக்கு!

தாய்மையின் முகவரியும், அதன் சுகவரியும் அவர் முகத்தில் தெரிவதை உணர முடிந்தது!

விழிகள், மௌனமாய்க் கசிந்தன!

பிறகு அந்த அறையிலிருந்த பொருட்களை எல்லாம் மெதுவாகத் தடவிப் பார்த்தவனுக்குள், முகம் மறந்து போன அந்தத்தாயின் மெல்லிய ஸ்பரிசம் தெரிவது போல்!

படபடத்த இதயக் கூட்டிற்குள், அவருடைய இறப்பு இயலாமையுடன் படர்வதாய்!

அப்படியே தலையில் கை வைத்து ஓய்ந்து போய் அமர்ந்தவனை, சமாதானப்படுத்தினார், வேலாயுதம்.

நளினியுடைய அறையிலிருந்த ஆல்பங்களில் கண்ட மேகநாதனுடைய புகைப்படங்கள்... தன்னையே அவனுக்கு அறிமுகப்படுத்தி, கண்ணாடியாய்ப் பிரதிபலித்தன.

மூச்சுக் காற்றுக்கு தவித்து திணறுவதைப் போல், தன்னுடைய கடந்த காலச் சுழற்சியின் வேகம் தாங்காமல், திணறித் தான் போனான் அவன்.

* * *



அன்று முழுவதும் அந்த அறைகளிலேயே சுற்றி சுற்றி வந்து அலைப்புறுதலுடன் இருந்தவனை, மெதுவாகத் தேற்றி தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார் அவர்.

த்வனி ஏற்க மறுத்துவிட்டுச் சென்ற பெரும் தொகை, ஃபிக்சட் டெபாசிட்டாய் வங்கியிலிருக்க, அதற்கான பாஸ்புக், வீட்டுக்கான பவர் உரிமைகளை அவனிடம் வழங்கினார் வேலாயுதம்.

''ஒரு நிமிஷம்! ப்ராஜன் உங்களை.. சாரி! நான் உங்களை எப்படிக் கூப்பிடுவேன்?''

மெதுவாக அவரிடம் வினவினான் அவன்.

''ம்! வேலு அண்ணான்னுதான் கூப்பிடுவே! அஷ்வந்த், ப்ராஜன்னு ரெண்டு பேரோட, உடலாலே ஒருத்தராவும், உணர்வுகளாலே வேறு ஒருத்தராகவும் வாழறது எவ்வளவு கஷ்டம்னு, எனக்கு நல்லாப் புரியுது ப்ராஜன்!

''கவலைப்படாதே! டாக்டர்கிட்டே கன்சல்ட் பண்ணலாம்! சரியாயிடும்.. உனக்குப் பழைய நினைவுகள் கட்டாயம் வந்துடும்ப்பா!'' அவனைத் தேற்றினார் அவர்.

ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்தவன், ''வேலுண்ணா.. வீட்டை மட்டும் அவங்களை காலி பண்ண சொல்லிடுங்க! ப்ளீஸ்! பழைய மாதிரியே எல்லாத்தையும் மாத்திடுங்க! இது கெஸ்ட் ஹவுஸா இருக்கட்டும்! நானும் த்வனியும் இங்கே வரப்ப, உபயோகப்படுத்திக்கறோம்!

''அப்புறம் அந்த ஆர்ஃபனேஜுக்கு அனுப்ப வேண்டிய அமௌண்ட்டை பாங்லேருந்து மாசா மாசம் அனுப்ப ஏற்பாடு செஞ்சிடலாம்.

''வீட்டுக்கு ஒரு கேர்டேக்கரையும், சமையல்காரங்களையும் பர்மனெண்ட்டா போட்டுடலாம்'' என்றான் யோசனையுடன்.

"உங்க வீட்டில இருந்த ஜோதி தான் இப்ப இங்கே
வேலை செய்யறாங்க! மாலினி ஊருக்குப்போனதால
நான்தான் ஒரு வாரம் லீவு குடுத்து அவங்க சிலோனுக்
வீட்டுக்கு அனுப்பி வைச்சேன்.

"அவங்களுக்கு உடனே போன் பண்றேன்... ஒரு சந்
ரைசா இருக்கட்டும்! உன்னைப் பாத்தாஅவங்க அவ்வளவு
தான்" என்றவர் உடனே போன் செய்து அவரை வரும்படி
அழைத்தார்.

பிறகு வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பும்
போது அவளுடைய டயரியையும், மேகநாதன் - நளினி
யுடைய புகைப்படத்தையும், சிடிக்களையும் மறக்காமல்
எடுத்துக் கொண்டான் அவன்.

இனி, லிங்கேஷ்வரனையும் கோமளாவையும் எப்படி
எதிர்கொள்ளப் போகிறோம் என்ற புதிர்க் கேள்வி, அவன்
மனதில்!

## 42

இருவரும் வேலாயுதத்தின் வீட்டிற்கு சென்றபோது
கனத்திருந்த மனதை எவ்வளவுதான் முயன்றாலும்,
அவனால் லேசாக்கவே இயலவில்லை.

சாப்பிட்டு சிறிது நேரம் ஓய்வெடுத்த பிறகுதான்,
அவனை அழைத்தார் வேலாயுதம்.

அவன் ஹாலுக்கு வந்ததுமே, எதிரே நின்றிருந்த அந்த
மத்திய வயதுப் பெண்மணியின் விழிகள் விரிந்து மலர்
வதையும், மறுகணமே தாங்க முடியாமல் கண்ணீர் சொரி
வதையும் கண்டவனுக்கு, அவர்தான் ஜோதி என்று
அறிமுகப்படுத்தாமலே தெரிந்து போயிற்று.



ஓடிவந்து அவனுடைய கைகளைப் பிடித்து அழ
ஆரம்பித்தவரால், தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்
ளவே முடியவில்லை.

"தம்பி..தம்பி.. அம்மா இறந்தப்ப எங்கேப்பா போயி
ருந்தீங்க...? நீங்க காணாமப் போனவுடனே அம்மாவும்
த்வனியும் பட்ட பாடு...! அப்பப்பா நினைக்கவே
முடியலையே?" தாங்க முடியாமல் கதறினார்.

பிறகு அவரை சமாதானப்படுத்திய வேலாயுதம்,
எல்லா விபரங்களையும் கூறினார்.

உடனே பதறித் திரும்பியவர், "தம்பி! அப்ப த்வனியை
இன்னும் நீங்க பாக்கலையா? நீங்க.. திரும்பி வர
மாட்டீங்கன்னு தெரிஞ்சும் உங்களுக்காகவே வாழற ஒரு
அற்புதமான ஜீவன்ப்பா அந்தப் பொண்ணு! அவங்களை
முதல்ல பாருங்க!" கைகளைக் கும்பிட்டபடி இறைஞ்
சினார்.

அவருடைய கைகளைப் பிடித்து மெல்ல அழுத்
தியவன், "நாளைக்கே நான் கிளம்பறேன்மா! உடனே
போய் அவளைத்தான் பாக்கப் போறேன்! நீங்க நம்ம
வீட்டிலேயே இருக்கலாம்! ஒரு கேர் டேக்கரையும்
அப்பாயிண்ட் பண்ணிடலாம்..."

அவன் முடிப்பதற்குள், செல்லக் குழந்தையாய் செல்
அவனை அழைத்தது.

லிங்கேஷ்வரன்தான் அவனை அழைத்திருந்தார்..
இங்கு வந்து சேர்ந்தவுடன் காலையில்தான் அவன்
அவருடன் பேசியிருந்தான்.

யோசனையுடன் எடுத்தபோது, "அஷ்வந்த்! எப்படிப்பா
இருக்கே? எப்போ வேலை முடிஞ்சு கிளம்பி வரே?
நானும் அம்மாவும் இன்னிக்கு நைட் ஃபிளைட்டிலே
கிளம்பிடுவோம்..." என்றார் ஆர்வம் சுமந்த குரலில்!

"நான் நாளைக்கு ஈவினிங் ஃபிளைட்டிலே வரேன்!" கூறிவிட்டு சட்டென்று இணைப்பைத் துண்டித்தான் அவன்.

* * *

மறுநாள் முழுவதும், அவன் முடிப்பதற்கு பல வேலைகள் இருந்தன.

அவை எல்லாவற்றையும் முடித்துவிட்டு, வேலாயுதத்திடமும் ஜோதியிடமும் விடைபெற்றான்.

ஏனோ, மனம் இனம் புரியா பாரத்தை சுமந்து கனத்திருந்தது.

"ப்ரஜன் தம்பி! நீங்களும் த்வனியும் கூடிய சீக்கிரமே கல்யாணம் முடிஞ்சு இங்கே வரணும்!" என்றார் ஜோதி எதிர்பார்ப்புடன்!

"நிச்சயமா! உடனே வருவோம்!" என்றபடி விடைபெற்றான் ப்ரஜன்.

பாசத்துடன் அவனை அணைத்து, இங்கு எல்லாவற்றையும் தான் பார்த்துக் கொள்வதாக உறுதியளித்து, அனுப்பி வைத்தார் வேலாயுதம்.

விமானத்தில் ஏறி அமர்ந்ததும், த்வனியை எண்ணி வண்டாய்க் குடைந்த நினைவுகளை அடக்க முயன்றபடி கண்மூடிச் சாய்ந்து கொண்டான் அவன்.

ஒரு பார்வை இன்று நீ பார்த்தால், என் மனவலிகள் மாயமாகிவிடும் என்று தோன்றியது.

தான், அவளைத் தவறாக எண்ணி இழைத்த கொடுமைகளும், கொட்டிய வார்த்தைகளும், நீறு பூத்த நெருப்பாய் உள்ளே கனன்று தகித்தன.

தன்னுடைய அன்பு ஒன்றை மட்டுமே யாசகம் பெற அவள் தன்னையே உருக்கி நின்றது புரிந்தது.



எவ்வளவு தவறு செய்திருக்கிறோம் என்று, உள்மனது இடித்துரைத்தது.

அவளுடைய ஞாபகச் சுவடுகள்.. மனதில் பூத்த நல்வயிரமாய் பிரகாசித்தன.

தன் புறக்கணிப்புகள் அத்தனையையும் தாங்கிக் கொண்டு, காலைச் சுற்றும் பூனைக் குட்டியாய் அவள் தன்னையே சுற்றி வந்த தருணங்கள், ரணமாய் இதயத்தில் பரவி பெரும் வேதனையைத் தந்தன.

'உன்னை எண்ணி என் உள்ளம் இன்று ஏங்கித் தவிக்கிறது பெண்ணே! என் முகவரி தொலைத்து உன் ஓரவிழிப்பார்வைக்கு தூதுவிட்டுக் காத்திருக்கிறேன்.

'நீ எவ்வளவு காயப்பட்டிருப்பாய் என்று எண்ணும் போதே, இயலாமையின் விளைவால் என் மீதே கடும் கோபம் வருகிறது, எனக்கு!

'என் மனத்தோட்டத்து மலரே! உன்னைக் காணாமல் என் உள்மூச்சிலே உயிர் நீங்குதே'' பெருமூச்சுடன் அமர்ந்திருந்தான்.

சாப்பிட்ட பிறகு மீண்டும் கண்மூடிச் சாய்ந்தவன், "என் கண்மணி! வருகிறேன்... இதுநாள் வரை உனக்குச் செய்த தீங்கிற்கு பதிலாக, என்னையே பரிசாய்த் தருகிறேன்... என் அன்பெனும் மழையில் உனை அற்புதமாய் நனையச் செய்கிறேன்.. இனி உன்னையும் என்னையும் பிரிக்க ஒருவராலும் முடியாது."

தனக்குள்ளேயே பேசியபடி உறங்கிப் போனான்.

திடீரென்று ஆழ்மனதில் ஏதோ ஒரு எச்சரிக்கை உணர்வும், யாரோ எழுப்புவது போன்ற ஒரு பதட்ட நிலையும் பரவக் கண் விழித்தான்.

அருகிலிருந்த மனிதர்தான், பயத்துடன் அவனை எழுப்பிக் கொண்டிருந்தார்.

"ப்ளேன்லே திடீர்னு ஏதோ கோளாறாம்! தரையிறக்க முயற்சி பண்றாங்க.. சீட் பெல்ட்டைப் போட்டுக்கங்க!" என்றவரின் விழிகளில், பெரும் மரண பயம் தெரிந்தது.

இதயம் வாய் வரை வந்து துடிக்க, தொண்டை உலர்ந்து தவித்துப் போனான் ப்ரஜன்.

"கடவுளே! என் ஹனியை நான் பார்க்க வேண்டும்.. அவளிடம் நான் அறியாமல் செய்த பிழைகளுக்காக பாவ மன்னிப்பு கேட்க வேண்டும்.. அதுவரை என் உயிரை என்னிடமிருந்து நீக்கி விடாதே!"

இறைஞ்சியது அவன் இதயம்!

முதன்முறையாக உயிர் பயம் அவனுக்குள் பரவ, மெல்லத் தரையிறங்கத் துவங்கியது விமானம்.

அங்கிருந்த அனைவரின் முகமும் மரண பீதியில் வெளுத்திருக்க, எல்லோர் இதயமும் வாழ்க்கையின் இறுதி நிமிடப் பிரார்த்தனையிலிருந்தன.

அவனுக்குள் மட்டும் இணை பிரியாக் கேள்வி!

"தான் ஒவ்வொரு முறையும் அவளுடன் சேரப் பாகும் இனிய தருணத்தை எதிர் பார்த்துக் காத்திருக் ம்போதெல்லாம் இப்படி ஒரு விபத்தும் இயற்கைச் றமும் பெரும் தடையாய் வருவது மட்டும் ஏனென்று ரியவில்லை."

ஒரு வேளை தாங்களிருவரும் சேர முடியாமல் போய் ட்டால் என்ன செய்வதென்ற கடும் வேதனையும் சஞ் மும், அவனைப் பெரிதும் அலைக் கழிக்க ஆரம்பித்தன.

நெஞ்சிற்குள் பலத்த சூறைக் காற்று ஒன்று அடிக்க ம்பிக்க, ஆழ் மனதில் அதையும் தாண்டி விசுவரூப டுத்தது த்வனியின் உருவம்.

தயம் கட்டுக் கடங்காமல் துடிக்க, நரம்புகளில் மின் பாய்ந்தது போல் ஒரு உணர்வு!



அவளுக்காகவாவது தான் எந்த சேதமுமின்றி உயிர் பிழைத்து விடுவோமென்ற நம்பிக்கைத் துளி ஒற்றைத் தனிராய் உள்ளே ஜனித்தது.

* * *

அதே நேரம் உறக்கத்திலிருந்த த்வனி திடுக்கிட்டு விழித்தாள்.

யாருக்கோ... அதுவும் மிகவும் நெருங்கியவருக்கு ஏதோ ஒரு ஆபத்து என்பதைப் போல் உள்ளம் கனத்திருக்க, படபடவென்றிருந்தது.

ஏதோ கெட்ட கனவாக இருக்குமென்று எண்ணும் போதே, நா வறண்டு உலர்ந்து போனது.

மெதுவாக எழுந்து தண்ணீரைப் பருகிவிட்டு படுத்தவளால், உறங்கவே முடியாமல் இதயத்தை இறுகப் பிசைவது போல் ஒருவித உணர்வு!

அன்றிரவு, அனைவருக்குமே உறங்கா இரவாய்!

ஏர்போர்ட்டில் காத்திருந்த லிங்கேஷ்வரனுக்கோ, விபரம் அறிந்தபோது மயக்கமே வந்துவிட்டது.

கடவுளே.. என்னிடமிருந்து ஒரு மகனைத்தான் பறித்துக் கொண்டாய்.. இவனையாவது வாழவிடு என்று மானசீகமாகக் கதறியது மனது.

அஷ்வந்த் பயணித்த விமானம் வேகமாகத் தரையிறங்க, பூமியில் தன் கால் பதித்த மறுவினாடியே ஒரு பக்க டயர் படாரென்ற சப்தத்துடன் பயங்கரமாக வெடித்தது.

மறுகணமே விமானம் ஒரு புறமாக சாய்ந்தபடி இழுத்துச் செல்லப்பட, இறக்கைகள் தரை தட்டி ஒருபுறம் சட்டென்று தீப்பிடிக்க ஆரம்பித்தது.

உடனே தீயணைப்புப் படையினரும், விமான நிலைய சிப்பந்திகளும் விரைந்து செயல்பட்டனர்.

பயணிகளை அமைதிப்படுத்தி மறுபுறக் கதவின் வழியாக இறக்குவதற்கு, ஏர்ஹோஸ்டஸ்களும் மற்ற சிப்பந்திகளும் பெரிதும் உதவினர்.

ஒரு வழியாக அனைவரையும் காப்பாற்றிவிட்டு, பைலட் கோபைலட் எல்லோரும் வெளியே வரும்போது, தீயும் அணைக்கப்பட்டிருந்தது.

நலமாக இறங்கிய அனைவரிடமும், பெருத்த நிம்மதியும் பரவசமும் தெரிந்தன.

பிறகு அனைவரும், வேன்களில் விமான நிலையத்துக்குள் அழைத்து வரப்பட்டனர்.

த்வனியால், தான் மறுமுறை உயிர் மீண்ட அனுபவத்தை சுகமாய் சுவாசித்தபடி வெளியே வந்தான் ப்ரஜன்!

## 43

விமான நிலையத்தில் அடுத்து என்ன நடக்குமோவென்று இறுக்கத்துடன் காத்திருந்த உறவினர்களின் முகங்களில் எல்லாம், தீபமேற்றியது போல் ஒரு மகிழ்ச்சி பரவியிருந்தது.

ப்ரஜனைக் கண்டதும் ஓடிவந்த லிங்கேஷ்வரன் "அஷ்வந்த்!" என்றபடி வேகமாக அணைத்துக் கொண்டார்.

'அஷ்வந்த்' என்ற பெயரில் சட்டென்று ஒருவித இறுக்கம் அவனுள் பரவ, ஒரு கணம் உறைந்து போய் நின்று விட்டான் அவன்.

"எப்படிப்பா இருந்தது ஜர்னி? நாங்க பயந்தே போயிட்டோம்! அம்மா ஒரே அழுகை... போன்லே பேசிட்டே இருந்தா!"



படபடவென்று தன் இதய பாரத்தைக் கொட்டினார்.

ஏனோ, இன்று அவரைப் பார்த்தபோது, பாசத்தை விட பெரும் யோசனையும் ஆராய்ச்சியுமே வந்தன.

"என்னப்பா அப்படிப் பாக்கறே... என்னமோ புதுசா ஒருத்தரைப் பாக்கற மாதிரி..."

அவருடைய கேள்வியில் சட்டென்று கலைந்தான் அவன்.

"ஒண்ணுமில்லை! ஒரு நிமிஷம் இருங்க... நான் போய் லக்கேஜ் வந்திடிச்சான்னு பாத்துட்டு வரேன்..." என்று கிளம்பினான்.

சிறிது நேரம் கழித்து தன்னுடைய பொருட்களை ட்ராலியில் தள்ளியபடி அவன் வர, இவ்வளவு பொருட்கள் ஏதென்ற நெருடல் கேள்வி, லிங்கேஷ்வரனின் மனதில்!

இருவரும் வீட்டுக்கு வந்தபோது, திருஷ்டி கழித்த பிறகே உள்ளே விட்ட கோமளா அவனை அணைத்துக் கொண்டு அழுது விட்டார்.

"இது உனக்கு ரெண்டாவது பிறவிப்பா!" கம்மிய குரலில் கூற, "இல்லம்மா! இது மூணாவது பிறவி!" என்றான் ப்ரஜன்.

"என்னப்பா சொல்றே?" அவர் புரியாமல் கேட்டார்.

"ம்.. எல்லாம் சொல்றேன்! நீங்க ரெண்டு பேரும் என் ரூமுக்கு கொஞ்சம் வாங்க!"

அவன் அழைத்ததுமே பின் தொடர்ந்த லிங்கேஷ்வரனுடைய முகத்தில், கவலையும் பயமும் அப்பட்டமாய் தெரிந்தன.

இருவரையும் கட்டிலில் அமர்த்தியவன், உடனே தன் பெட்டியைத் திறந்து, தன் பழைய ஆல்பங்கள் எல்லாம் எடுத்து, இருவரிடமும் அளித்தான்.

இருவருமே பதட்டத்துடன் அதைப் பிரித்துப் பார்க்க,
லிங்கேஷ்வரனுடைய முகம் பேயறைந்தது போல
மாறியது.

"அஷ்வந்த்... இது உனக்கு எப்படி?"

அவர் முடிப்பதற்குள் "அப்பா! நான் அஷ்வந்த்
இல்லை.. ப்ரஜன்!" ஆழ்ந்த குரலில் கூறினான் அவன்.

அவன் அளித்த புகைப்படங்களையும், அவனுடைய
பெற்றோரையும் பார்த்த கோமளா ஒன்றும் புரியாமல்
நிமிர, "உனக்கு பழைய ஞாபகமெல்லாம் வந்துடுச்
சாப்பா?" தவிப்புடன் கேட்டார் லிங்கேஷ்வரன்.

"இல்லைப்பா! ஆனா எல்லா உண்மையும் தெரிஞ்
சிடுச்சி.. ஆனா, நான் எப்படி உங்க மகனா.. அஷ்வந்த்தா
மாறினேன்? அதான் புரியலை!"

அவன் கேட்டதுமே பதறி எழுந்த கோமளா, "என்
னங்க... இவன் என்னென்னவோ பேசறான்? நம்ம
பையனுக்கு பழைய நினைவுகள் மறந்திருக்குன்னு தானே
சொன்னீங்க? இப்போ இவன் நம்ம பையனே இல்
லைன்னு சொல்றான்...?"

கேட்ட மறுகணமே, பிடிப்பின்றி மயங்கிச் சரிந்தார்.

உடனே பதறிப் போன இருவரும் ஓடிச் சென்று
தாங்கி, அருகிலிருந்த சோபாவில் அவரைக் கிடத்தினர்.

உடனே, தங்களுடைய குடும்ப டாக்டருக்கு அவன்
போன் செய்ய, முகத்தில் சிறிது தண்ணீர் தெளித்து மனை
வியை எழுப்ப முயன்று கொண்டிருந்தார் லிங்கேஷ்வரன்.

ஒரு நாளிலேயே, பல வயதுகள் கடந்த மூப்பும்
கவலை வரிகளும், அவர் முகத்தில் தெரிந்தன.

டாக்டர் வந்து பார்த்துவிட்டு, ரத்தக் கொதிப்பு அதிக
மாகி இருப்பதாகவும், ஓய்வெடுக்கும் படியும் கூறிவிட்டு,
மாத்திரை அளித்து விட்டுச் சென்றார்.



சிறிது நேரத்தில் மெதுவாகக் கண்விழித்த கோமளா
வின் விழிகளில் சரம் சரமாய் கண்ணீர் வழியத் துவங்கின.

"அப்போ.. நம்ம அஷ்வந்த் எங்கேங்க?" பதட்டத்
துடன் கேட்டார்.

உடனே அவரை ஆதரவாக அணைத்துக் கொண்டு
கண்ணீர் விட்டார் லிங்கேஷ்வரன்.

"நம்ம பையன் சுனாமியில காணாமப் போயிட்
டான்மா!"

"இந்நேரம் அவன் உயிரோட இருந்தா நம்மைத் தேடி
வந்திருக்கணுமே! அவனை.. கடல் தனக்குள்ளே எடுத்
துக்கிச்சு.. இந்த உண்மை உனக்குத் தெரியக் கூடாது... நீ
உடைஞ்சிடுவேன்னுதான் இதுவரைக்கும் நான் சொல்
லவேயில்லை...

"அதனாலதான் தன் பழைய நினைவுகளை இழந்
திருந்த ப்ரஜனை நம்ம மகனா மாத்தினேன்... இது சுயநல
மாக் கூட இருக்கலாம்.. ஆனா அப்போ எனக்கு வேற வழி
தெரியலை!" குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தார்.

"கடவுளே! எங்களுக்குன்னு இருந்த ஒத்தைப்
பிள்ளையையும் எங்கிட்டருந்து பிரிச்சு அநாதையாக்
கிட்டியேப்பா!"

தீனமான குரலில் கோமளா அரற்ற, மெதுவாக அவ
ருகே சென்று அவரின் கைகளை உறுதியாகப் பற்றிக்
கொண்டான் ப்ரஜன்.

"அம்மா! ப்ளீஸ்.. அழாதீங்க.. அதான் உங்க பிள்
ளைக்கு பதிலா நான் இருக்கேனே.. கடவுள் என்னைத் த
திருக்காரே!" என்று கூறியதும், உடைந்து போனா
லிங்கேஷ்வரன்.

அவசரமாக அவனிடம் திரும்பி, "என்னை மன்னி
சிடுப்பா! அப்போ எவ்வளவு சுயநலமா நான் செயல்ப

டிருக்கேன்.. எனக்கு, என் மனைவி, என் சுகம் தான் பெரிசா தெரிஞ்சிருக்கு... உனக்கும் ஒரு குடும்பம் இருக்கும்.. அவங்க இதனால பாதிக்கப்படுவாங்கன்னு நான் நினைச்சிக் கூடப் பார்க்கலை பாரு.''

கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு தலையிலறைந்து கொண்டு அழ ஆரம்பித்தார்.

உடனே அவரைத் தடுத்தவன், ''அப்பா.. எனக்குத் தான் பழைய நினைவுகள் இல்லியே? நீங்க என்ன செய்வீங்க? அழறதை விட்டுட்டு, அம்மாவை சமாதானப் படுத்துங்க...'' சோர்வுடன் கூறினான்.

தன் மனைவியிடம் திரும்பியவர், ''உனக்கு ப்ளட் ப்ரஷர் இருக்கு கோமளா! நான் எல்லா உண்மையையும் சொல்ல வேண்டிய நேரம் இப்ப வந்துடிச்சி! ஆனா அதை எல்லாம் அதிர்ச்சியடையாமக் கேக்கணும்! சரியா?'' கவலையுடன் கேட்டார்.

''சரி.. சொல்லுங்க!''

கலக்கத்துடன் அவரையே பார்த்தபடிக் கூறினாலும், அவருக்குள் பெரும் வேதனை!

''ம்... எப்படி ஆரம்பிக்கிறது? நம்ம பையன் அஷ்வந்த் இந்தோனேஷியா போயிருந்தப்ப அங்கே சுனாமி வந்ததும், உடனே நான் அவனைத் தேடிப் போனேன் இல்லையா? அங்கே நம்ம பையன் கிடைக்கலை... அவனோட பொருட்களும், கடலுக்குப் பக்கத்திலிருந்த பீச் ரிசார்ட்டுங்கறதாலே அடிச்சிட்டுப் போயிடுச்சு!''

''அப்போ நம்ம அஷ்வந்த்...?'' கேட்டபடி கோமளா மீண்டும் மயங்கி சரிந்துவிட்டார்.

உடனே அவரை எழுப்பி சாய்ந்தாற்போல் அமர வைத்துவிட்டு தண்ணீர் தெளித்து இருவரும் மெதுவாக எழுப்பினர்.



அவர் மெதுவாகக் கண் திறந்ததும், ''இதைப் பத்தி நாம் அப்புறமாப் பேசலாம்! நீ ரெஸ்ட் எடு!'' லிங்கேஷ்வரன் மெல்லிய குரலில் கூறினார்.

''இல்லை.... முடியாது.. எனக்கு இப்பவே தெரியணும்! இல்லைன்னா என்னாலே நிம்மதியாவே இருக்க முடியாது.. ப்ளீஸ் சொல்லுங்க.''

கண்ணீருடன் அவர் இறைஞ்ச, மீண்டும் தொடர ஆரம்பித்தார் லிங்கேஷ்வரன்.

''நான் ஒவ்வொரு ஹாஸ்பிடலா தேடிட்டிருந்தப்ப தான், இந்தப் பையனைப் பாத்தேன்... அசப்பில கொஞ்சம் நம்ம பையன் மாதிரியே உடல் வாகிலயும் ஜாடையிலயும் இருந்ததாலே, கவலையா பக்கத்துல போய்ப் பார்த்தேன்.

''அப்பதான் டாக்டர் வந்தாரு.. நல்ல வேளையா அவர் தமிழரா இருந்தாரு...''

''என்னைப் பாத்ததும், ''வந்துட்டீங்களா சார்? நல்ல வேளை! இவருக்கு தான் யாருங்கறதே மறந்துடிச்சி.. சுனாமியிலே சிக்கி மணல்லே சொருகி இருந்தவரை மீட்டுக் கொண்டு வந்து இங்கே சேத்தாங்க...கை ஃப்ராக் சர்.. நேத்துதான் கண் முழிச்சாரு... ஆனா தான் யாரு என்னன்ற விபரமெல்லாம் மட்டும் மறந்து போயிடுச்சி! எவ்வளவு கேட்டாலும் தெரியலை...

''இவர் உங்களுக்கு என்ன வேணும் சார்... இவரோட பெயர் என்னன்னு கொஞ்சம் சொல்ல முடியுமான்னு கேட்டார்...

''என்னவோ அந்த நிமிஷம், தொலைஞ்சு போன நம்ம பையனே திரும்பக் கிடைச்ச மாதிரி ஒரு ஃபீலிங்!''

''அந்தக் கடவுள் தான் இவனை நம்மகிட்டே அனுப்பி வச்ச மாதிரித் தோணிச்சு!''

உடனே என்னையறியாமலே சொல்லிட்டேன். "இவன்
என் மகன்.. பெயர் அஷ்வந்த்! தமிழ் நாட்டிலிருந்து படிப்பு
விஷயமா வந்து, இங்கே ரிசார்ட்சிலே தங்கி இருந்தான்!
நல்ல வேளை கண்டுபிடிச்சிட்டேன்"னுட்டு பக்கத்தி
லேயே உக்காந்திட்டேன்...

"அப்பதான் நீ போன் பண்ணினே! நம்ம பையன்
கிடைச்சிட்டான்னு பொய் சொன்னேன்.. உடனே
அழைச்சிட்டு வாங்கன்னு நீ கதறினப்பதான் எனக்கு ஒரு
யோசனை வந்தது...

"இப்ப உடனே அழைச்சிட்டு வர முடியாது.. முகத்துல
கொஞ்சம் அடிபட்டிருக்கறதாலே ப்ளாஸ்டிக் சர்ஜரி
பண்ணனும்னு உன்கிட்ட பொய் சொன்னேன்..."

"நீ பயந்து போயிட்டே! என்னதான் அசப்பில நம்ம
பையன் போலத் தெரிஞ்சாலும் உண்மையா இவன் வேற
மாதிரித் தானே இருக்கான்! அதுக்கு என் மனசில வந்த
திட்டம் அதுதான்!

"இவன் கண் முழிச்சப்ப, என்னை அப்பான்னு
அறிமுகப்படுத்தி வச்சாரு டாக்டர்!"

"ஒரு மாசம் அங்கேயேயிருந்து அவனை ஓய்வெடுக்க
...ச்சேன்... நம்ம குடும்பத்தைப் பத்தி எல்லாம் சொல்லி,
...ன் கூட போன்லே பேச வச்சு, நம்ம பையனாவே
...சளவில அவனை மாத்தினேன்...

"அப்புறமா, ஒரு ப்ளாஸ்டிக் சர்ஜன் கிட்டே அவனுக்கு
...த்திலே ப்ளாஸ்டிக் சர்ஜரி பண்ணின மாதிரி, என்
...பர் மூலமா ஒரு சர்டிபிகேட் வாங்கினேன்.
...பாஸ்போர்ட் தொலைஞ்சு போயிருந்ததாலே அந்த
...பிகேட்டை வெச்சி புதுசா போட்டோ எடுத்து, வேற
...போர்ட் வாங்கினோம்.



"யாருக்கும் எந்த சந்தேகமும் வரலை.. உன்கிட்டயும்
ப்ளாஸ்டிக் சர்ஜரி பண்ணி அவனோட முகத்தை மாத்தி
இருக்கறதா பொய் சொன்னேன்!

"நல்லவேளை, நம்ம பையனும் இவனும் ஒரே மாதிரி
உயரம், நிறம், உடம்பு வாகு எல்லாம் இருந்ததாலே,
உனக்கு வித்தியாசம் தெரியலை!

"ஆனா, இவன் இளைச்சிப் போயிட்டதா மட்டும் நீ
அப்போ கண்டு பிடிச்சி சொன்னே!

"எங்கே அவனோட மச்சத்தை நீ பாத்துடுவியோன்னு
மனசுல ஒரு கலக்கம்! ஆனா அவன் எப்பவுமே டீ சர்ட் போட்
டிருக்கறதாலே அந்தப் ப்ரச்சனையும் வராதுன்னு தோணிச்சி!

"நான் ஹாஸ்பிடல்லே பாத்தப்ப தான் அதை கவனிச்
சேன்... வெற்றுடம்போட இதுவரைக்கும், அவன் வெளி
யில வந்ததில்லை! அதனால இது வரைக்கும் அந்த
மச்சம் ஒரு பெரிய பிரச்சனையாவும் ஆகலை!

"நம்ம பிசினஸ் சர்க்கிள்லே அவனை யாருக்கும்
முன்னாடியே நான் அறிமுகப்படுத்தாததாலே அங்கேயும்
ப்ராப்ளம் இல்லாமப் போச்சு.

"இவனும் நான் சொன்னதை அப்படியே நம்பி,
என்னைத் தன் அப்பாவா ஏத்துக்கிட்டான்...

"ரெண்டு மாசம் கழிச்சி ஒரு மினிஸ்டரோட உதவி
யோட புது பாஸ்போர்ட் எடுத்து எந்தப் பிரச்சனையும் இல்
லாம அவனை இந்தியாவுக்கு அழைச்சிட்டு வந்தேன்...

"இங்கே வந்தவுடனே லீகலா அவனை அடாப்ட்
பண்ணிக்கிட்டேன்...

"எனக்கும் நம்ப லாயருக்கும் மட்டும்தான் இந்த
உண்மை தெரியும்...

"உனக்குத் தெரிஞ்சா நீ தாங்கமாட்டேன்னு நினைச்
சேன்... அதான் சொல்லலை. அப்புறமா, என் தம்பியை
இவனுக்கு அடையாளம் தெரியாம போனப்பதான், இவ

னுக்கு பழைய ஞாபகம் இல்லைன்னு உன்கிட்டே சொன்னேன்!

"இதிலே எந்தக் கெட்ட எண்ணமும் எனக்கு இல்லை.. நானும் பையனைத் தொலைச்சிட்டு அநாதையா நின்னேன்.. இவனும் தன் உறவுகளை, பழைய நினைவுகளை இழந்துட்டு தனிச்சி இருந்தான்!

"அதனால என் மகனா இவனை சுவீகரிச்சிட்டேன்.. ஆனா, இடையில இவனைப் பத்தி நம்ம ஆபீஸிலே வேலை பாக்கற த்வனி, வேற மாதிரி சொன்னதா நம்ம சில்வியா சொன்னா! உடனே எனக்கு பயம் வந்தது.. அதைப் பொய்யின்னு சொல்லி அந்த எண்ணமே இவனைப் பாதிக்க விடாமப் பாத்துக்கிட்டேன்.

"ஏன்னா, இவனை நம்ம கிட்டயிருந்து யாருமே பிரிச்சிடக்கூடாதுன்ற சுயநலமும் பொஸஸிவ் நெஸ்ஸும் தான் அதுக்குக் காரணம்!

"புதுசாக் கிடைச்ச என் மகனை யாரோடவும் பங்கு போட எனக்கு விருப்பமில்லை...

"கடவுளே இந்த மகனையும் என்கிட்டயிருந்து பிரிச்சிடாதேன்னு, தினம் பிரார்த்தனை செஞ்சுட்டிருந்தேன்! இவனை என்னால விட்டுத்தர முடியலை..."

"நான் அப்படி மிருகத்தனமா நடந்திருக்கக் கூடாது தான்... என்னை மன்னிச்சிடுப்பா வாழ்க்கையில நாம ஒண்ணு நினைக்கிறோம்.. ஆனா விதி யாரை விட்டுது?"

"அஷ்வந்த்.. சாரி.. ப்ரஜன்! உனக்கு எப்படிப்பா எல்லா உண்மையும் தெரிய வந்தது?" சோர்வுடன் கேட்டார் அவர்.

எல்லாவற்றையும் கேட்டுவிட்டு கண்கள் நீரைச் சொரிய, ஒரு பொம்மையைப் போல் உறைந்து அமர்ந்திருந்தார் கோமளா.

அவருடைய விழிகளில், பெரும் போராட்டமும், நிராசையும் பயமும் தெரிந்தன.



மெதுவாக எழுந்து வந்து அவர் அருகே அமர்ந்தவன், "அம்மா.. பயப்படாதீங்க.. உங்க ரெண்டு பேரையும் விட்டுட்டு நான் எங்கேயும் போக மாட்டேன்! ஏன்னா, எனக்கும் இப்ப த்வனியைத் தவிர, உறவுன்னு சொல்லிக்க, ஒருத்தரும் இல்லை! என்னோட அம்மாவும் எட்டு மாசம் முன்னாடி இறந்திட்டாங்களாம்!" கம்மிய குரலில் கூறினான்.

அப்படியே தாவி அவனை அணைத்துக் கொண்ட கோமளா, "இது போதும்பா எனக்கு! உங்கம்மா சாகலை.. என் உருவில அவங்க இருக்கறதா நினைச்சிக்கப்பா!" என்றபடி கண்ணீர் விட ஆரம்பித்தார்.

* * *

பிறகு லிங்கேஷ்வரன் இருவரையும் சமாதானப் படுத்த, தன்னைப் பற்றிய ரிஷிமூலத்தை தான் எப்படி அறிந்து கொண்டேன் என்பதைப் பற்றிக் கூற ஆரம்பித்தான் ப்ரஜன்.

ஏர்போர்ட்டில் ஆரம்பித்த அந்தக் கதை, மெதுவாக சிங்கப்பூருக்கு பயணித்து பிறகு இந்தியா வரும்வரை தொடர்ந்தது.

அவன் முடித்ததும் குறுக்கிட்ட கோமளா, "த்வனியைப் பத்தி ஏதோ சொன்னியேப்பா அது என்ன? அவ உனக்கு என்ன உறவு?" மெலிந்த குரலில் கேட்டார்.

தான் தங்களுடைய நிறுவனத்தில் பொறுப்பேற்றதி லிருந்து, சில்வியா த்வனியைப் பற்றிக் கூறியவரை விவரித்தவனின் முகம், இருண்டிருந்தது.

உடனே அவனுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்ட கோமளா, அவனை அணைத்து சமாதானப்படுத்தினார்.

"கவலைப்படாதேப்பா! உன்னைக் கட்டாயம் த்வனி புரிஞ்சிப்பா!"

''பழைய ஞாபகங்கள் இல்லாததாலே தானே நீ அவளைப் புறக்கணிச்சி கோபமா நடத்தியிருக்கே!''

''நீ காலையில உடனே கிளம்பி அவளைப் போய்ப் பாரு! நான் வேணாலும் வரேன்! எல்லாருமா போய் உண்மையச் சொல்லுவோம்!''

''இந்தக் காலத்துல இப்படி ஒரு பொண்ணான்னு எனக்கு பிரமிப்பா இருக்கு! அவ தான் எனக்கு மருமக! ஏங்க.. விடிஞ்சதும் நாம கிளம்பறோம்!'' உறுதியான குரலில் முடித்தார்.

* * *

அன்று மாலைதான், த்வனியின் பெயருக்கு அந்தக் கடிதம் வந்திருந்தது.

யாரிடமிருந்து வந்திருக்குமோவென்று பார்த்தால் ''கைலாசம்'' என்று போடப்பட்டிருந்தது.

அக்கடிதத்தை ஆவலுடன் அவள் பிரித்தபோது, உள்ளே புதையலாய் பல விபரங்கள் நிறைந்திருந்தன.

கைலாசம், அஷ்வந்த்தைப் பார்த்ததிலிருந்து, தான் அவனிடம் பேசியது.. அவனுக்கு பழைய நினைவுகள் மறந்தது வரை, அதில் குறிப்பிட்டிருந்தார்.

அவனுக்குப் பழைய ஞாபகங்கள் இல்லாததாலேயே, அவளை யாரென்று உணர முடியவில்லை என்று அவர் எழுதியிருந்ததைப் படித்தபோது, நெகிழ்ந்து போனாள் அவள்.

அந்த நிமிடம், இதயத்தால் ஸ்பரிசிக்கப்பட்டு.. உணர்வுகளால் உணரப்பட்டது.. அவனுடைய உண்மையான நேசம்!

ப்ரஜனுடைய இடத்தில் தான் இருந்திருந்தால் கூட, முகமறியா ஒருவரின் செய்கையை இப்படித்தான் தவறாகக் கணித்திருப்போமோ என்று, முதன் முதலாக அவனுக்காகப் பரிந்து வந்தது இதயம்!



அவன் தன்னைப் பார்க்க வருவானா.. பழைய நினைவுகள் அவனிடம் மீண்டு வந்து சேருமா.. அவனுக்கு தன் மேல் நம்பிக்கை வருமா.. மனதிற்குள் பல கேள்விக் கணைகள்!

அன்றையப் பொழுது... நகராத மணித் துளிகளாய் மற.. இரவும் உறங்கா இரவாய்த் தொடர்ந்தது.

அன்றிரவே, பரணிக்கு எல்லாவற்றையும் பற்றி ஒரு நீண்ட கடிதம் எழுதினாள் அவள்... ஒவ்வொரு வார்த்தைகளும் பரவசத்தையும், சிலிர்ப்பையும் சுமந்திருந்தன.

'என்னைத் தேடி.. என் ப்ரஜு வருவானா?' மனம் ஏக்கத்தில் தவித்தபடித் தனித்திருந்தது.

'பழைய ஞாபகங்கள் இல்லாமல், எப்படி அவனால், இயல்பாக என்னை ஏற்றுக்கொள்ள முடியும்? இடையில் வந்த வெறுப்பும் கசப்பும் மாறுமா?'

இதயச் சுரங்கத்துள் பல கேள்விகள் வைரமாய் மின்னின.''

'தான் யாரென்றே அறிய முடியாதவனுக்கு என் காதலை... என் காத்திருப்பை.. என் ஏக்கத்தை.. நான் உருகித் தவிப்பதை.. எப்படி உணர முடியும்?'

இதயம் கேள்விச் சரங்களுடன் உறங்க மறுத்தது.

## 44

அன்றைய இரவு, உறங்கக் கிடைத்த சில மணித் துளிகளிலும், த்வனியின் ஆதிக்கமே, ப்ரஜனின் கனவுகளில் நிறைந்திருந்தன.

விடிவதற்குள்ளேயே விழிப்பு வந்துவிட, சோம்பல் விலகாமல் எழுந்து சென்று திரைச் சீலையை விலக்கிய

போது, புள்ளினங்கள், திருப்பள்ளி எழுச்சி பாடி அனைவரையும் எழுப்ப முயன்று கொண்டிருந்தன.

உடனே உற்சாகத்துடன் குளித்துவிட்டு வந்தால், கோமளாவும் லிங்கேஷ்வரனும் தயாராக இருந்தனர்.

டிபன் சாப்பிட்டு விட்டு மூவரும் வெற்றிலை, பாக்கு பழங்கள் பட்டுப் புடவையுடன் கிளம்பி, த்வனியின் வீட்டிற்குச் சென்றனர்.

ஆனால் அனைவருக்கும் பெரும் அதிர்ச்சியாய், வீடு பூட்டியிருந்தது.

பக்கத்து வீட்டில் விசாரித்தபோதுதான், அவர்கள் சொந்த ஊருக்கு சென்று விட்ட விபரமே தெரிந்தது.

உடனே கைலாசத்தின் வீட்டிற்கு இருவரையும் அழைத்துச் சென்றான் ப்ரஜன்.

அங்கு சென்றதும் இருவரும் அவனை ஆவலுடன் வரவேற்க, விமானம் தீப்பிடித்த விபரமறிந்து, அப்போது தான் பதட்டத்துடன் போனில் விசாரித்தார் வேலாயுதம்.

பிறகு எல்லோரும் பழைய விஷயங்களைப் பேச ஆரம்பிக்க, ப்ரஜன்தான் பெரிதும் தவித்துப் போனான்.

அவனையே ஓரக்கண்ணால் கவனித்துக் கொண்டிருந்த மாலினிக்குள் அவன் உணர்வுகள் புரிந்தன.

"அப்பா! நம்ம பழைய கதையெல்லாம் இருக்கட்டும்.. ப்ரஜன் பாவம்! உடனே த்வனியைப் பாக்கணும்னு துடிச்சிட்டிருக்கான் பாருங்க! த்வனியோட அட்ரஸைக் குடுங்கப்பா.. விட்டா அங்கேயே பறந்து போனாலும் போயிடுவான்னு நினைக்கிறேன்" குறும்புடன் கூறினாள்.

அவனுடைய பரிதவிப்பும், இறுக்கமும் அவளுடைய பேச்சினால் பாதியாகக் குறைய, உடனே முகவரியை எழுதி அவனிடம் கொடுத்தார் கைலாசம்.

"நான் உடனே த்வனியைப் பாக்கப் போனேனப்பா! அப்பதான் அவ ஊரோட போயிட்டது தெரிஞ்சது" என்றார்.



லிங்கேஷ்வரனிடம் திரும்பியவர், "ப்ரஜன் உடனே கிளம்பட்டும்! த்வனிக்கு நான் ஒரு லெட்டர் போட்டிருக்கேன்! ப்ரஜனுக்கு பழைய நினைவுகள் தொலைஞ்சு போச்சு.. அவனைப் பாத்து நான் பேசியிருக்கேன்னு மட்டும் அதில எழுதி இருக்கேன்!

"வேற எந்த விபரமும் சொல்ல வேண்டாம்! ப்ரஜன் போறது சர்ப்ரைஸா இருக்கட்டும்! நாம எல்லாரும் இன்னிக்கு ராத்திரி ரயில்லே கிளம்பலாம்!" உற்சாகத்துடன் கூறினார்.

"ஆமாம்! எனக்கும் அதுதான் சரின்னு படுது.. நம்ம குறுக்கீடு இல்லாம... அஷ்வந்த்... ப்ச்... ப்ரஜன் முதல்லே போய் த்வனியோட பேசட்டும்.. நாம நாளைக்கே போய் முறையா பொண்ணு கேட்கலாம்" குதூகலத்துடன் ஆர்ப்பரித்தார் கோமளா.

"தேங்க்யூம்மா! நான் வரேன்ப்பா! அங்கிள் - மாலினி.. நான் கிளம்பறேன்" வேகமாக எழுந்தான் ப்ரஜன்.

"ப்ரஜன்.. நம்ம காரை எடுத்துக்கப்பா! டிரைவரையும் அழைச்சிக்க.. பத்திரம்! பாத்து போ... அவசரம் வேண்டாம்! உன் திங்க்ஸ் எல்லாம்,நாளைக்கு காலையில நாங்க வரும்போது பேக் பண்ணி எடுத்துட்டு வரோம்...

"போய் சேர்ந்த உடனே ஒரு போன் பண்ணு.. என்ன?" வாஞ்சையுடன் விடை கொடுத்தார் லிங்கேஷ்வரன்.

உடனே மூவரும் கிளம்ப, வீட்டிற்கு வந்து ஒரு செட் உடையுடன் தன்னுடைய எண்டோவரில் டிரைவருடன் அவன் மட்டும் கிளம்பினான்.

வழியில் ஒரு ஓட்டலில் சாப்பிடுவதற்கு மட்டும் நிறுத்தியவனுக்கு, இடையிலிருந்த தூரத்தை, இரு சிறகுகளிருந்தால் பறந்தே கடந்து விடலாமென்றிருந்தது!

பதினோரு மணிக்கு கிளம்பியவன், பெத்த நாயக்கன் பாளையத்தை அடையும்போது, நாலரை மணியாகி விட்டது.

... த்வனியின் கிராமத்திற்கு ஐந்து மணிக்கெல்லாம் சென்று விட்டனர்.

அவளுடைய முகவரியைத் தேடிக் கண்டுபிடித்து சென்றபோது, பெரிய செழிப்பான தோப்பின் நடுவே அவர்களுடைய பண்ணை வீடு தெரிந்தது.

* * *

காலையிலிருந்தே ஏதோ வானத்தை வசப்படுத்திய உணர்வும்.. இன்று புதிதாய் பிறந்த பிரமிப்பும், த்வனியிடம் நிறைந்திருந்தன.

ப்ரஜனைப் பற்றிய நினைவுகளும், கனவுகளும் அவளை வெகுவாய் ஆட்படுத்தியிருக்க, உனை மட்டுமே என் உயிர் தொட அனுமதிப்பேன் என்ற உறுதி அவளுக்குள்!

காலையிலிருந்து மனதிற்குப் பிடித்த பாடலொன்றை "காற்றின் மொழி.. ஒலியா.. இசையா? பூவின் மொழி நிறமா.. மணமா?" என்று முணுமுணுத்தபடி வளைய வந்தவளை அனைவரும் வியப்புடன் கவனித்தனர்.

ஆனால், அந்தக் கடிதத்தில் என்ன இருந்ததென்று கேட்டு அவளை தர்ம சங்கடத்தில் ஆழ்த்துவதில், அவர்களுக்கு உடன்பாடில்லை.

அவள் மகிழ்ச்சியாக இருந்தாலே, போதுமென்றிருந்தது.

அன்று மாலையில், முகம் கழுவி உடை மாற்றிக் கொண்டு கோவிலுக்கு செல்லத் தயாராகிக் கொண்டிருந்தாள் த்வனி!

ப்ரஜன் ஞானராஜுடன் வெளியில் சென்றிருக்க, சித்தியும் அவளுடன் கிளம்பினார்.

"அம்மா! நானும் சித்தியும் முருகன் கோவிலுக்குப் போய்ட்டு வந்திடறோம்.. ப்ரஜன் வந்தா பாத்துக்கங்க.. அவன் இன்னும் எதுவுமே குடிக்கலை... மைலோ போட்டுக் குடுத்துடுங்க! நாங்க போயிட்டு வரோம்மா!"

ருக்மணியிடம் உற்சாகமாக விடைபெற்று, இருவரும் கோவிலுக்குக் கிளம்பிச் சென்றனர்.

குறுக்கு வழியில் நடந்து, அந்த சிறு குன்றின் மேல் ஏறி முருகனை தரிசித்ததும் பெரும் நிம்மதி வந்தது. மனம் முழுவதும், ப்ரஜீவே நிறைந்திருந்தான்.

'எனை மறந்தாலும்.. அவன் நீடூழி வாழவேண்டு'மென்று உருகிப் பிரார்த்தித்தது இதயம்!

## 45

த்வனி, உள்ளம் உருகிக் கண் மூடி தனக்காகவும், அவனுடைய நலனிற்காகவும் வேண்டியபடி, சிறிது நேரம் அசையாமல் சந்நிதியின் முன்னால் நின்றிருந்தாள்.

உண்மை அறிந்த பிறகு, அவன் எவ்வளவுதான் தன்னைக் காயப்படுத்தி இருந்தாலும், தன்னால் அவனை வெறுக்க முடியாதென்பது மட்டும் புரிவதாய்!

விழிகள் மெலிதாய் கசிய, அவனுக்கான வேண்டுதலை இதயம் உருகிப் பிரார்த்திக்க, மெல்ல இமை திறந்தாள்.

நேர் எதிரே, குறும்புப் புன்னகையுடன் அவளுடைய ப்ரஜு~வே நிற்பது போல்!

மெல்லிய நீர்ப்படலம் பார்வையை மறைக்க, அதைத் தடுக்க விழிகளை இறுக மூடி, நீர்த்துளிகளை ஓரத்தில் சிதற வைத்தாள்.

மீண்டும் கண்களைத் திறந்த போதும், அதே குறுகுறுத்த பார்வையுடன், ப்ரஜு~ எதிரில் நின்றிருந்தான்.

எத்தனை முறை கண்மூடித் திறந்தாலும், அவன் உருவம் எதிரே புலப்பட, அவளுக்குள் மெலிதாய் சிறு அதிர்வு!

ஒரு வித விதிர்ப்புடன் அவள் நிமிர, அவனுடைய உருவம் மெல்ல அசைந்தது.

அப்போதுதான், இது கனவில்லை.. நிஜம் என்பது உறைக்க, துடிப்புடன் அவனையே ஊடுருவினாள் அவள்.

முன்பு, அவனில்லாத நேரங்களில் எங்கு திரும்பினாலும் அவனே தெரிவது போல்!

இன்று அவன் எதிரே வந்ததும், ஒரு கணம் அசையாது நின்று விட்டது அவளுடைய உலகம்!

மரணம் கைக்கெட்டும் தூரத்திலிருந்து அவனைப் பார்க்கும் முன்பு.. இன்று சொர்க்கமே தாழ் திறந்தது போல் ஒரு உணர்வு!

அந்த நேரம், அவளுடைய சித்தி பங்கஜமும் நிலைமையை உணர்ந்து அங்கிருந்து மெதுவாக விலகிச் சென்று பிரகாரத்தில் அமர்ந்தார்.

அவர்கள் இருவரும் இணைய வேண்டுமென்ற பெரும் மௌனக் குமுறல் அவர் மனதில்...!

மெதுவாக அவளருகில் வந்தவனுடைய முகத்தில், அவளை... அவளுடைய காதலை, தான் நன்கு உணர்ந்து கொண்ட பரிதவிப்பும், ப்ரியமும்!

"ஹனி...!"

அவனுடைய குரல் பூஞ்சிறகாய் வருடி இதயம் நுழைய, சிலிர்த்துப் போனாள் த்வனி!

முன்பு அவனுடைய இருவிழியசைவில் தன் இதயம் தொலைத்ததும், இமயத்தையே தொட்ட பரவசம் வந்ததும்... பூக்களின் புன்னகைகள் பெரும் இலக்கியங்களானதும்.. மழை தரும் முகிலாய் தன் வாழ்வில் அவன் அன்புச் சாரலாகப் பரவியதும்.. கலையாத நேசக்கனவுகளாய்.. சடசடவென்று அவளுள் பரவின.

அதன் தாக்கத்தினால், அதுவரை அவன் தனக்கிழைத்த ...மைகளும், பேசிய கடுஞ் சொற்களும், ஆதவனைக் ...ண்ட பனியாய் மறைய ஆரம்பிக்கும்போதே, விழித்துக் ...கொண்டாள் அவள்.

ஆனாலும், ஒரு வித பயமும் அலைப்புறுதலுமாய் திரும்பி நடக்க ஆரம்பித்தவளை, குறுக்கே வந்து வழிமறித்தான் அவன்.

"ப்ளீஸ்! ஹனி! நான் உன்னை முன்னாடி நடத்தின விதம் தப்பு தான்! சாரி சாரி கோடி சாரி! ஆனா, அப்ப எனக்கு பழசெல்லாம் எதுவுமே நினைவில்லை... தெரியவும் தெரியாது..."

அவன் முடிக்கும் முன்பே பரவசத்துடன் அவனையே ஊடுருவியவள், "அப்போ... இப்ப எல்லாம் நினைவு வந்துடுச்சா ப்ராஜ்?" கூர்மையாகக் கேட்டாள்.

உடனே அவன் முகம் சுருங்கி இறுகியது.

மறுகணமே மலர்ச்சியுடன் அவளிடம் திரும்பி, "ம்... தெரிஞ்சிடுச்சு.. ஆனா நினைவு வரலை ஹனி! நம்மைப் பத்தி எல்லாமே புரிஞ்சிக்கிட்டேன்!" ஆவலுடன் திருத்தினான் அவன்.

அவள் முகம் குழம்பி, விழிகள் அவனையே ஊடுருவின.

தன் முகவரி அவனுக்குள் பதிந்திருக்கிறதாவென்ற அலைப்புறுதலுடன், தேட ஆரம்பித்தாள் அவள்.

"ஹனி...! எனக்கு, பழசெல்லாம் ஞாபகம் வரலைன்னு தான் சொன்னேன்... உன்னை நம்பலைன்னு நான் சொல்லலையே?"

மென் குரலில் அவன் கூற, "முன்னாடி என்னைப் பத்தி தப்பா நினைச்சவரு, இப்ப மட்டும் எப்படி.. அதுவும் பழைய ஞாபகங்கள் எல்லாம் வராமலே...?" தயங்கியபடிக் கேட்டாள்.

இதயம் கூண்டுக்கிளியாய் தடதடத்தது.

"ம்.. எல்லாம் சில்வியா ஆரம்பிச்சி வச்சது..." என்று ஆரம்பித்தவன், தான் கைலாசத்தை சந்தித்ததிலிருந்து, பிறகு நடந்த விபரங்களை எல்லாம் ஆச்சர்யத்துடன் விவரித்தான்.

இடையில் குறுக்கிட்டவள், "அப்போ.. நீங்க சிங்கப்பூருக்கு உங்க வீட்டுக்குப் போயிருந்தீங்களா ப்ராஜு"?" வியப்புடன் வினவினாள்.

"ஆமாம்! அங்கே போனப்புறம் தான் தெரிஞ்சுது! நீயும் நானும் எவ்வளவு விரும்பி இருக்கோம்னு..." கண்களில் கனவுகள் கசிய நிறுத்தினான் அவன்.

"எப்படித் தெரிஞ்சது ப்ராஜு? போட்டோ, சிடியெல்லாம் பாத்தீங்களா?"

"ம்! அதை விடப் பெரிசா ஒரு பொக்கிஷம் கிடைச்சது.. உன்னோட 2004ம் வருஷத்து டைரி! அது சொல்லிச்சி.. நீ என் மேல வச்சிருந்த அற்புதமான நேசத்தை!

"போட்டோஸ், சிடிஸ் எல்லாம் நம்ம பிரியத்தை, அன்யோன்யத்தை அழகா விஷுவலா வெளிப்படுத்தி, எனக்குள்ளே பெரிய மாற்றத்தை உண்டு பண்ணுச்சு!

"நான், உன்னையும் நம்ம காதலையும் இப்ப நல்லாப் புரிஞ்சிக்கிட்டேன் ஹனி!"

"சாரி! உன்னைத் தப்பா நினைச்சி நான் பேசின வார்த்தைகளுக்கும்.. உன்னைக் காயப்படுத்தின என் செய்கைகளுக்கும்.. எத்தனை தடவை உன்கிட்டே மன்னிப்புக் கேட்டாலும் பத்தாது! என்னை மன்னிச்சி, உன் இணையா ஏத்துக்கணும்!

"இனிமே நீ இல்லாம ஒரு நிமிஷம் கூட என்னால இருக்க முடியாதுன்றதை நான் பரிபூர்ணமா உணர்ந்துட்டேன்!

"என் வாழ்க்கை, நீ இல்லாம முழுமை பெறாதுன்னு நல்லாப் புரியுது! எனக்கு நீ வேணும் ஹனி... பழைய மாதிரியே பிரியத்தோடவும், உயிர்ப்போடயும்...!"

அவள் முகத்தில் சட்டென்று ஒருவித வெளிச்சம் பரவ, உயிர்ப்பூவாய் மலர்ந்தாள்.

"நான்.. என்னைப் பத்தி தெளிவா சொல்லணும் ஹனி...! அப்பதான் உன்னால எந்த உறுத்தலும் இல்லாம



இருக்க முடியும்" என்றபடி பேச ஆரம்பித்தான் ப்ராஜன்.

"...னாமிக்கப்புறம், ஹாஸ்பிடல்லே அப்பான்னு, ...ங்கேஷ் அப்பா தன்னை அறிமுகம் செஞ்சுக்கிட்டப்ப, அதை அப்படியே நான் நம்பினேன்...

"என்னோட இறந்த காலத்தைத் தேட வேண்டிய அவசியமே எனக்கு அப்போ வரலை...

"ரெண்டு வருஷம் கழிச்சி எங்க நிறுவனத்தில பொறுப்பேத்துக்க வந்தப்ப உன்ன சந்திச்ச உடனே ஏதோ ஒரு சலனம்!

"ஆனா முதன் முதலா நீ என்னைப் பார்த்தவுடனே தெரிஞ்ச மாதிரி ப்ராஜுன்னு கூப்பிட்டு 'ஐ லவ் யூ' சொன்னப்ப, என்னால உன்னைப் பத்தி தப்பாதான் கணிக்க முடிஞ்சதுடா!

"பணத்துக்காக என்ன வேணா செய்யத் துணியற ஒருத்தியாதான் நான் உன்னை நினைச்சேன்.. ஒரு மோசமானவளா கணிச்சேன்!

"அறிமுகமே இல்லாத ஒருத்தனை, அதுவும் முதன் முதல்லே பார்த்தவுடனே அப்படி சொன்னதினாலே ஆரம்பிச்ச ப்ரச்சனை, ரங்கராஜுவாலே தொடர்ந்தது.

"அவன்தான் நீ மோசமானவன்னு என்கிட்டே பொய் சொன்னான்... சாரிடா! அந்தப் பொய்யாலே நானும் உன்னைப் பத்தி தப்பான ஒரு எண்ணத்தை மனசுல அந்தக் கணமே ஆழமாப் பதிச்சிட்டேன்...

"அப்புறம் ஒவ்வொரு தடவையும், நீ காதலோட என்னை நெருங்கினப்பல்லாம், அது எனக்கு தப்பாவே பட்டுது.. பாவம் நீ! என்னைப் பார்த்தவுடனே எவ்வளவு தவிச்சு துடிச்சிருப்பே!"

"என்னாலதான் உன்னைப் புரிஞ்சிக்கவே முடியலை... மனசு முழுக்க வன்மமா, உன்னை ரொம்பவே வெறுக்க ஆரம்பிச்சேன்..."

என்னை சக்தி பணத்துக்காக வட்டம் போட்டு வளைக்க முயற்சி செஞ்ச சில மோசமான பெண்களோட லிஸ்டில, உன்னையும் சேர்த்தேன்!

''நாளாக ஆக, உன்னைப் பார்க்கும்போதே ஒருவித கறுப்பு வர்ணம் பூசிப் பார்த்ததாலே, நீ செஞ்ச எல்லாமே தப்பாத்தான் தெரிஞ்சுது...

''குட்டி ப்ரஜனோட உன்னைப் பாத்தப்ப, ஒரு குழந்தை இருக்கிறவளாலே இப்படியும் நடந்துக்க முடியுமான்னு எனக்குள்ளே கடும் வெறுப்பு!

''அப்புறம் பூஜை அன்னிக்கு சில்வியா கிட்டே நீ சொன்னதை நான் கேட்டேன்.. உன் கணவர் உன்கூட இல்லைன்னு!

''அப்பதான் மனசு எரிமலையாச்சு! இப்படி ஒருத்தியை.. எவனால சகிச்சுக்க முடியும்னு கொதிச்சுப் போனேன்...

''அதுக்கப்புறம்தான் உன்னை இன்னும் அதிகமா வதைக்க ஆரம்பிச்சேன்! இந்த மாதிரி தவறான பெண்களுக்கு பாடம் புகட்டுற ஒரு நீதிபதியா, என்னையே நான் கற்பனை பண்ணிக்கிட்டதாலே வந்தவினை.. உன்னை ரொம்பவே காயப்படுத்திட்டேன்!

''சாரிடா...! லட்சம் கோடி சாரி! என்னை மன்னிச்சி ஏத்துப்பியா?''

''உனக்கும், நடந்ததெல்லாம் தெரியும்.. என் நிலைமையில் பழைய ஞாபகம் எல்லாம் இல்லாம என் இடத்துல நீ இருந்திருந்தா, எப்படி ரியாக்ட் பண்ணியிருப்பேன்னு கொஞ்சம் யோசிச்சிப்பாரு! நான் சொல்றதெல்லாம் உனக்குப் புரியும்!

''அப்பா, அம்மா, கைலாஷ் அங்கிள், மாலினி எல்லாரும் நாளைக்கு வராங்க... கூடிய சீக்கிரமே ஒரு நல்ல முகூர்த்தத்துல நம்ம கல்யாணத்தை முடிவு செய்யப் போறாங்க...''

''ப்ளீஸ்டா! எனக்கு பழைய நினைவுகள் எப்ப வேணா வரட்டும்.. இல்லை வராமலே போகட்டும்.. அதைப்பத்தி நான் கவலைப்படலை...''



''ஆனா இனி வர்ற காலங்கள்லே என் துணையா என் கூடவே நீ இருக்கணும்... அதுக்கு சம்மதம் சொல்வியா ஹனி?''

உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கண்ணோரங்கள் கசியக் கேட்டான் ப்ரஜன்!

உடலும், உள்ளமும் உருக, ஒரு கணம் உறைந்து நின்றாள் அவள்.

மறு நிமிடமே அவனைக் காதலுடன் ஏறிட்டவள், ''ம்...! சம்மதம் ப்ரஜு!'' என்றாள் சீறலான குரலில்!

இவன் என்னுடைய இணை.. இனி ஒரு கணமும் இவனை விட்டுப் பிரிய மாட்டேன் என்ற உறுதி தெரிந்தது... அவள் விழிகளில்!

அந்த நிமிடம் அவளை இறுக அணைத்து, தான் முன்பு டயரியில் ஏக்கத்துடன் கேட்டிருந்த அந்த ஆசை முத்தத்தை, பரிசாகக் கேட்க வேண்டும் போல்!

ஆனால், அந்த இடம் கோவிலென்ற உணர்வும், சுற்றிலும் ஆட்கள் இருக்கிறார்களென்ற எண்ணமும், அவனை அடக்கின.

''ப்ரஜு.. நேத்து தான் கைலாஷ் அங்கிள் கிட்டருந்து லெட்டர் வந்தது.. படிச்சதும் ஆச்சர்யமா இருந்தது... அப்பதான் உங்களுக்கு பழைய நினைவுகள் இல்லைன்ற உண்மையும் தெரிஞ்சுது!''

''பரணிக்கு எல்லாத்தையும் பத்தி ஒரு லெட்டர் எழுதி இருக்கேன்!''

கூறிவிட்டு சட்டென்று ஒருவித அலைப்புறுதலுடன் நிமிர்ந்து அவனையே நோக்கியபோது, அவனுடைய முகத்தில் இதமான முறுவலொன்று அழகாய் ஜனித்தது.

''பயப்படாதே ஹனி! நீயும் பரணியும் எவ்வளவு நல்ல நண்பர்கள்னு இப்ப நான் புரிஞ்சிக்கிட்டேன்...

''நாளைக்கே அவரோட நம்பரைக் கேட்டு வாங்கி, நாம ரெண்டு பேருமே அவரோட பேசி இந்த குட் நியூஸை சொல்லலாம் ஓகே!''

"ம்.. தேங்க் யூ ப்ரஜு! என்னைப் புரிஞ்சிக்கிட்டதுக்கு!" மெல்லக் கூறினாள் அவள்.

உடனே அவளிடம் குனிந்தவன், "ஹனி! நாம உடனே உங்க வீட்டுக்குப் போகணும்.. எனக்கு உன் கூடத் தனியா இருக்கணும் போலருக்கு! உன் மடியில தலை சாய்க்கத் தூங்கணும்னு ஏக்கமா இருக்கு! போலாமா?" தவிப்புடன் கேட்டான்.

உடனே, சரியென்று அவனுடன் கிளம்பியவளையும், பங்கஜத்தையும் அழைத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்றான்.

செல்லும் வழியில் மூவருமே எதுவும் பேசவில்லை. அர்த்தச் செறிவு நிறைந்த ஒரு வித மௌனம் அனைவரையும் ஆக்கிரமித்திருந்தது.

## 46

வீட்டிற்குச் சென்று கார் நின்றபோது, ருக்மணியும், ஞானராஜும், குட்டி ப்ரஜனுடன் வாசலிலேயே பதட்டமாகக் காத்திருந்தனர்.

அவர்களைக் கண்டதும், ருக்மணி ஓடிவந்து மகளை அணைத்துக் கொள்ள, ஞானம் வாஞ்சையுடன் ப்ரஜனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டார்.

பிறகு அனைவரும் வீட்டிற்குள் நுழைந்தபோது, மாப்பிள்ளைக்கான விருந்து சாப்பாட்டின் நறுமணம், அந்த இல்லத்தையே நிறைத்திருந்தது.

ப்ரஜன், இங்கு வந்து விசாரித்த பிறகு, விபரம் கூறிவிட்டுத்தான் கோவிலுக்குச் சென்றிருந்தான்.

அனைவரும், நாளை பெண் கேட்டு சம்மந்தி வீட்டிலிருந்து வரப்போவதையும், மற்ற எல்லா விஷயங்களையும் பற்றி கூடிப் பேசியபடி உற்சாகமாக இணைந்திருந்தனர்.



அவனைக் கண்டதுமே முதலில் தயங்கிய குட்டி ப்ரஜன், சிறிது நேரம் அவனையே கூர்ந்த பிறகு, 'அப்பா' என்றழைத்தபடி ஓடிவந்து, அவன் கால்களைக் கட்டிக் கொண்டான்.

பிறகும் ப்ரஜனை விட்டுவிலகாமல் அவன் அட்டையாய் ஒட்டிக் கொள்ள, அதை உள்ளூர ரசித்தபடி அமர்ந்திருந்தாள் த்வனி.

இரவு சாப்பாட்டிற்குப் பிறகு, குட்டி ப்ரஜனைத் தூங்க வைப்பதற்காக, பங்கஜமும் ஞானராஜும் செல்ல, அவர்களிருவரும் எதிர்பார்த்த தனிமை இருவருக்கும் கிடைத்தது.

சாப்பிட்டு முடித்த பிறகு, "அத்தை! நான் த்வனியோட கொஞ்ச நேரம் தனியா இருக்கணும்னு ஆசைப்படறேன் உங்க பர்மிஷனோட!

"நாளைக்கு காலையில அப்பா, அம்மா, அங்கிள், மாலினி எல்லாரும் வந்திட்டா அப்புறம் நான் விரும்பின அந்தத் தனிமை கிடைக்காமலே போனாலும் போகலாம்.. அதான்!" தயங்காமல் கேட்டான்.

"இதுக்கு ஏன் என் பர்மிஷனைக் கேக்கறீங்க மாப்பிள்ளை? அவ உங்க சொத்து.. அழைச்சிட்டுப் போங்க" என்றார் அவர்.

உடனே நன்றி கூறிவிட்டு அவளிடம் திரும்பியவன், "ஹனி! எங்கே போகலாம்?" குறும்புடன் கேட்டான்.

"இந்த வீட்டிலேயே எனக்கு ரொம்பப் பிடிச்ச ஒரு இடம்.. அங்கே இந்த நேரத்துக்கு யாருமே வரமாட்டாங்க! போகலாமா?"

குறுகுறுத்த விழிகள் பட்டாம் பூச்சியாய் படபடக்கக் கேட்டபடி, அவனை பின்புறத்திலிருந்த ஓடுகள் வேயப்பட்ட வெராந்தாவிற்கு அழைத்துச் சென்றாள் அவள்.

* * *

முழுநிலவின் கிரணங்கள் கிணற்று முற்றத்தில் மஞ்சளாய் வண்ணம் தீட்டியிருக்க, அந்த அழகிய தேக்கு மர ஊஞ்சலில் இருவரும் அமர்ந்தனர்.

இரவின் சீதளமான குளிர்ந்த பூந்தென்றல் காற்று, சில்லென்று சரசமாய் வருட, அங்கு வார்த்தைகள் தொலைந்து போய் நிசப்தமாகின.

இதுவரை அனுபவித்த வேதனைகளும், பிரிவுத் துயரும் மனதை நிறைக்க அவனுடைய தோள் சாய்ந்தவளின் விசும்பலும் அழுகையுமாக முதலில் சில நிமிடங்கள்.. தன் தவறுகள் அனைத்தும் உணர்ந்த அவனுடைய மன்னிப்பும் கெஞ்சலுமாய் அடுத்த சில நிமிடங்கள்.. பிறகு தவிப்பும் ஆக்ரோஷமுமான அணைப்பில் தொடர்ந்த சில நிமிடங்களுக்குப் பின்பு மெதுவாக மடை திறந்தன அவனுடைய உணர்வுகள்!

"ஹனி! கோடி யுகமாகக் காத்திருந்த மாதிரி இருக்கு! நான் கேட்ட அந்தப் பரிசை எனக்கு எப்போ தரப்போறே?" ஏக்கத்துடன் வந்தது ப்ரஜனின் குரல்!

அடுத்தது என்ன.. உன்னிடம் என்னைத் தருவது எப்போதென்ற பல கேள்விகளுடன் நாணமும் தவிப்புமாக அமர்ந்திருந்தவளுக்குள், ஆயிரம் வண்ணத்துப் பூச்சிகள் சடசடவென்று சிறகடித்தன.

மெல்ல நிமிர்ந்து அவன் முகத்தருகே தன் முகத்தைக் கொண்டு செல்லும்போதே தேகம் சிலிர்த்து விட, கிறக்கமாகக் கண் மூடினாள் அவள்.

மறு கணமே இரு இதழ்களும் இணைந்து கவிதை படிக்க, சட்டென்று உரசிய அந்த மெல்லிய உதடுகள், மலரிதழ்களின் மென் ஸ்பரிசத்தை அவனுக்கு நினைவு படுத்தின.

அவர்களுக்கிடையே இத்தனை நாட்கள் இருந்த பிரிதலின்... இடைவெளியின் மௌன சாட்சியாய்.. தேகங்களிரண்டும் காற்றுப் புகவும் இடமின்றி இணைந்தன.

மறுகணமே, வார்த்தைகள் ஊமையாகி, செல்களனைத்தும் மொட்டு விட்டு மலர, கடிவாளம் போட முடியாமல் இருவரின் உணர்வுகளும் அலைபாய்ந்தன.

அதன் விளைவால் அவளுடைய பாதங்கள் அந்தரத்தில் பிடிப்பின்றிப் பறந்தபோது, கால் கொலுசுகள் பெரும்



அலைப்புறுதலுடன் சப்தமிட ஆரம்பித்தன... சிறிது வன்மையான சலங்கைகளின் ஒலி!

ஒரு முத்தத்திற்கு இத்தனை சக்தியா என்று வியந்தவளின் மனதை, காதல் தலை கீழாகப் புரட்டிப் போட்டது.

அந்த கம்பீரமான ஆண்மகனின் அத்தனை பலத்தையும், ஒட்டு மொத்தமாய் சரித்து பலவீனமாக்கியது, ஈரம் உலராத அந்த ஒற்றைத் தொடுகை!

இதுவரை உணர்வுகளால் தன் வசமின்றி இருந்த ப்ரஜுவை, ஒரே நொடியில் வீழ்த்தி தன் வசமாக்கியிருந்தாள் த்வனி.

"இந்த நிமிடம்.. இந்த நிமிடம்
இப்படியே உறையாதா?
இந்த நெருக்கம்.. இந்த நெருக்கம்
இப்படியே தொடராதா?
இந்த மௌனம்.. இந்த மௌனம்
இப்படியே உடையாதா?
இந்த மயக்கம்.. இந்த மயக்கம்
இப்படியே நீளாதா?"

சமீபத்தில் பார்த்து ரசித்து மனதில் பதிந்த திரைப்படப் பாடல்தான் அந்த நிமிடம் அவளுக்குள் நிறைந்தது.

'சோ'வென்ற மழைக்குப் பின் வருகின்ற அடர்த்தியான நிசப்தத்தையும் மீறி... மெல்லிசையாய், சிற்றிரைச்சலாய் மனதில் நேசச்சாரலுடன் பரவின, அந்த அழகிய கவிதை வரிகள்!

அந்த நிமிடம், அவளுக்குள்ளே சென்று, நுரையீரல் வரை தீண்டி, சிலிர்த்துத் திரும்பியது அவன் சுவாசம்!

அவளுடைய நெடுங்காலத் தவம் மெய்ப்பட்டது போல்...!!

இதயப் பள்ளத்தாக்கு முழுவதும் இறைவனின் பரிசளிப்பாய்... புதிதாய் பூத்த பல வர்ணப் பூக்களாய்.. ப்ரஜுவே நிறைந்திருந்தான்.

மேகங்கள் பொழிகின்ற நீர், சிறிதும் நனைக்காத அதிசயமாய்.. அவனுடைய சீண்டல்கள், தவனியின் ஆழ்மன வெளி வரை திடீரென்று குளிரச் செய்தன.

அவர்களிருவரும் உலகம் மறந்திருந்த அந்த வேளையில், அவளுடைய முதல் ஸ்பரிசம் ஏற்படுத்திய பரவசமும் கிளர்ச்சியும், ப்ரஜுனின் உணர்வுகளைத் தீப்பிடித்தாற் போல் தகிக்கச் செய்தன.

அந்த பனிச் சிற்பத்தை, உக்ரமான கதிர்களால் உருக்கி சிதறடித்த இரவுச் சூரியனாய் அவன்!

சிறிது நேரத்தில்.. மழையின் முகவரியாய்.. மண் வாசனையை உலகுக்கு அறிமுகப்படுத்தியபடி, மெல்லிய பளிச்சிடலாய் மின்னல் ஒன்று ஒளிர... இடியோசை அதை வழி மொழிந்தது.

பிறகு வல்லின யுக்தியுடன் பூமியில் பரவ ஆரம்பித்த நீர்த் தாரைகளுக்கு அஞ்சி அந்த வெராந்தாவிற்குள் தஞ்சம் புக வந்த இரு தேன் சிட்டுக்கள், அவர்களின் ஆலிங்கன நிலை கண்டதும் வெட்கத்துடன் சிறகடித்து உத்தரத்தில் சென்று கண் மூடி அமர்ந்தன.

அந்த மெல்லிய சிறகுகளின் சடசடப்பு சப்தம் அங்கு உணரப்படாமலே போனது.

அக்கம் பக்கம் யாருமில்லாத ஒரு தனிமை ஏகாந்தத்தில், அந்த தேக்கு மர ஊஞ்சல், பிறர் ஆட்டி விடத் தேவையின்றி மெல்லிய கம்பிச் சத்தத்துடன் தானாகவே ஆட ஆரம்பித்தது.

ப்ரஜுனுக்குள் தொலைந்த நினைவுகள் மீண்டு வருமா? காலம்தான் அதற்கான விடையைப் பரிசாகத் தர வேண்டும்.

மெல்ல மெல்லக் குறைந்த மழையால், வானம் தெளிந்து. மேகத்துள் ஒளிந்திருந்த மழை நிலவு பளிச்சென்று ஒளிர். எதிர்காலம் இருவரையும் நம்பிக்கையுடன் நோக்கி. தூரத்து வெள்ளித் தகடாய் பிரகாசித்துப் புன்னகைத்தது